Copies can be had from the
Assistant Director,
Government Publication Depot,
110, Anna Salai,
Chennai-600 002.

©
Published under Rules 280 and 283 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the Director of Stationery and Printing, Chennai-600 002.

*வெளியீடு :* 20-1-2014 Issued : 20-1-2014

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
# செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT

**செவ்வாய்க்கிழமை, மார்ச் 26, 2013—தொகுதி 39—எண் 3**

**Tuesday, the 26th March 2013—Volume 39-No. 3**

*சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009*

**Legislative Assembly Secretariat, Chennai - 600 009**

விலை ரூ. **3.00]** **[Price Rs. 3.00**

# 26–3–2013

## உள்ளடக்கம்


| | பக்கங்கள் |
|---|---|
| **1. வினாக்கள்–விடைகள்—** | |
| உடுக்குறியிட்ட வினாக்கள் | 223-268 |
| **2. சிறப்புக் கவன ஈர்ப்பு—** | |
| தமிழக மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரால் தாக்கப்படுதல் | 268-277 |
| *திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன் | 269 |
| *திரு. வீ.பி. நாகைமாலி | 270 |
| திரு. கே. உலகநாதன் | 270-271 |
| திரு. அ. கணேஷ்குமார் | 271 |
| முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா | 272-273 |
| மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா | 273-277 |
| **3. தகவல் கோரல்—** | |
| தே.மு.தி.க. உறுப்பினர்கள் ஆறு பேருக்கு வழங்கப்பட்ட தண்டனையைக் குறைத்தல் | 278-287 |
| முனைவர் செ.கு. தமிழரசன் | 278-282 |
| மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா | 282,283,287 |
| முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா | 282-283 |
| திரு. சு. குணசேகரன் | 283-284 |
| திரு. என்.ஆர். ரெங்கராஜன் | 284 |
| *திரு. அ. சவுந்தரராசன் | 284 |
| *திரு. மு.க. ஸ்டாலின் | 285-286 |
| *திரு. ஏ.கே. போஸ் | 286 |

பக்கங்கள்


**4. அரசினர் தீர்மானம்—**

தே.மு.தி.க. உறுப்பினர்கள் ஆறு பேருக்கு வழங்கப்பட்ட தண்டனையைக் குறைத்தல் 287-290

*மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம் 288-289

**5. வரவு–செலவுத் திட்டம், 2013–2014, பொது விவாதம்**—தொடர்ச்சி

*திரு. ஆர். மனோகரன் 296-306

*திரு. எ.வ. வேலு 296-306 314-316, 325-326

*மாண்புமிகு திருமதி பா. வளர்மதி 298-299

*திரு. நயினார் நாகேந்திரன் 299

*மாண்புமிகு திரு. பி.வி. ரமணா 302-303

*மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம் 317,318 338-339, 346-349, 350,352, 354-355, 371-372

*மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி 305-307,

*மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன் 300,308 317, 319-325, 379-384,388

*திரு. மு.க. ஸ்டாலின் 310-311, 318-319

*மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி 313,317, 376,377-379

திரு. துரைமுருகன் 322,323,326




பக்கங்கள்


**5. வரவு–செலவுத் திட்டம், 2013–2014, பொது விவாதம்**—தொடர்ச்சி

மாண்புமிகு திரு. பி. தங்கமணி 326-327, 361-362,389

திரு. எஸ்.எஸ். ரமணீதரன் 316,327-333

திரு. கே. தங்கவேல் 333-336 339,341-343

மாண்புமிகு திரு. ப. மோகன் 335-336

*மாண்புமிகு திரு. பி. பழனியப்பன் 336-337

திரு. சு. குணசேகரன் 337,338, 344-348 351,353-357 360-364

*மாண்புமிகு முனைவர் வைகைச்செல்வன் 338,340

*திருமதி எஸ். விஜயதரணி 339-340 349,351

*திரு. க. பாலகிருஷ்ணன் 340-341, 377-378

*மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு 345-346

திரு. ஜே.ஜி. பிரின்ஸ் 349

*திரு. அ. சவுந்தரராசன் 350

*மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம் 354,368

மாண்புமிகு திரு. என்.டி. வெங்கடாச்சலம் 357-360

மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம் 361

திரு. இரா. துரைக்கண்ணு 363,364-375

திரு. அர. சக்கரபாணி 367

திரு. ம. கலை அரசு 375-379, 381-385

திரு. எஸ். ஜாண் ஜேக்கப் 385-390

**6. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்** 391

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## நந்தன, பங்குனி 13, திருவள்ளுவர் ஆண்டு–2044

## 2013 மார்ச் 26, செவ்வாய்க்கிழமை

*சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர்* **திரு. ப. தனபால்** *அவர்கள் தலைமையில் காலை 10–00 மணியளவில் பேரவை கூடியது.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

"இன்சொலால் ஈத்துஅளிக்க வல்லார்க்குத் தன்சொலால்
தான்கண் டனைத்துஇவ் வுலகு."

எளிய மக்களிடம் இனிமையாகப் பேசி தேவையானதைக் கொடுத்து உதவி செய்யும் ஆட்சியாளருக்குப் புகழ் தானாக வந்து சேரும். அவர் விருப்பம்போல் குடிமக்களும் அமைவார்கள்.

## 1. வினாக்கள்–விடைகள்

### உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா வரிசை எண் 61, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.எஸ். ரமணீதரன், மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

**61—**

### மின் உற்பத்தி

***8491—திரு. எஸ்.எஸ். ரமணீதரன்:**

*மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*ஈரோடு மாவட்டம், பர்கூர் மலைப் பகுதியில் மணியாச்சி திட்டத்தின்மூலம் மின் உற்பத்தி செய்ய அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?*

[2013 மார்ச் 26

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஈரோடு மாவட்டம், பர்கூர் மலைப் பகுதியில் மணியாறுஹல்லா நீரோடைமூலம் மின் உற்பத்தி செய்ய புலனாய்வுப் பணிகள் மேற்கொண்டதில் தொழில்நுட்ப ரீதியாகவும், பொருளாதார ரீதியாகவும் மின் உற்பத்தி செய்வதற்கான சாத்தியக்கூறுகள் குறைவாகவே உள்ளன. ஆகவே, இத்திட்டம் தற்போது எடுத்துக்கொள்ளப்பட இயலவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.எஸ். ரமணீதரன் அவர்கள்.

**திரு. எஸ்.எஸ். ரமணீதரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவேரி கண்ட கற்பக விருட்சம், எங்கள் தாய், புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதங்களில் எனது பணிவான வணக்கத்தை சமர்ப்பிக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தொகுதியிலுள்ள பர்கூர் மலைப் பகுதியானது 30 கிராமங்களை உள்ளடக்கிய பகுதியாகும். இங்கே சுமார் 15,000–க்கும் மேற்பட்ட மலைவாழ் மற்றும் பழங்குடியின மக்கள் வசிக்கின்றனர். இவர்கள் அனைவரும் விவசாயத்தையே நம்பியிருக்கின்றனர். பெரும்பாலான விவசாயக் கிணறுகளுக்கு மின் இணைப்பே இல்லாமல் மிகவும் கஷ்டப்படுகின்றனர். மேலும், இப்பகுதிக்கு 40 கிலோ மீட்டர் தொலைவிலுள்ள அந்தியூரிலிருந்துதான் மின்சாரம் செல்கிறது. வனப் பகுதிகளின் வழியாக மின் கம்பிகள் செல்வதால், பல நேரங்களில் வன விலங்குகள் மின் கம்பங்களைச் சேதப்படுத்தி விடுகின்றன. அடர்ந்த வனப் பகுதியில் மின் கம்பங்கள் சேதப்படுத்தப்படுகின்ற நேர்வில் உடனடியாக சரி செய்ய முடியாத காரணத்தினால், இப்பகுதி மக்கள் 10 தினங்களுக்கு மேலும்கூட மின்சாரம் இல்லாமல் தவிக்கின்ற சூழ்நிலை உள்ளது. இப்பகுதியிலுள்ள மணியாச்சிப்பள்ளம் என்ற காட்டாற்று ஓடையில் வருடம் முழுவதும் நீர்வரத்து உள்ளது. தமிழ்நாட்டை மின் மிகை மாநிலமாக உருவாக்கப் பல்வேறு திட்டங்களை நிறைவேற்றிக் கொண்டிருக்கும் மாண்புமிகு புரட்சித் தலைவி



2013 மார்ச் 26]

அம்மா அவர்களின் அரசு இந்த மலைவாழ் கிராமங்கள் பயன்பெறும் வகையில் மின் உற்பத்தித் திட்டத்தை உருவாக்க எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்குமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ரமணீதரன் அவர்கள் கேட்டுக்கொண்டதைப்போல அவருடைய தொகுதியிலே அந்தப் பணிகளுக்காக ஆய்வு மேற்கொண்டபோது மின் உற்பத்தி செய்வதற்கான சாத்தியக்கூறுகள் மிகக் குறைவாகவே உள்ளன என்பது தெரிய வந்தது. காரணம், மணியாறுஹல்லா நீரோடைப் பகுதியில் 0.75 மெகா வாட் அளவிற்குத்தான் மின் உற்பத்தி செய்யமுடியும். 1 மெகா வாட் மின்சாரம்கூட கிடைப்பதற்கு வாய்ப்பு இல்லை. 0.75 மெகா வாட் அளவிற்கு மின் உற்பத்தி செய்ய முடியும் என்றாலும், அக்டோபர், நவம்பர் மற்றும் டிசம்பர் ஆகிய மூன்று மாதங்களுக்குத்தான் அந்த மின்சாரம் கிடைக்கும் வாய்ப்பு இருக்கிறது. ஆண்டு முழுவதும் மின்சாரம் கிடைப்பதற்கு வாய்ப்பு இல்லை. 0.75 மெகா வாட் அளவிற்கு மின் உற்பத்தி செய்வதற்கே ஏறத்தாழ ரூ.20 கோடிக்குமேல் செலவாகும் என மதிப்பிடப்பட்டிருக்கிறது. எனவே பொருளாதார ரீதியாகவும், இது சாத்தியம் இல்லை.

மேலும், இப்பகுதி பாதுகாக்கப்பட்ட வனப் பகுதிக்கு உட்பட்ட பகுதியில் இருப்பதால், மத்திய அரசின் வனப் பாதுகாப்புச் சட்டத்தின்கீழ் அனுமதி பெற்று, 10 கிலோ மீட்டர் தூரத்திற்கு பாதுகாக்கப்பட்ட அடர்ந்த வனப் பகுதியில் சாலை அமைக்கப்பட வேண்டியிருக்கிறது. இதற்கு வனத் துறைச் சட்டத்தின் அடிப்படையில் மத்திய அரசின் அனுமதி கிடைப்பதிலும் சட்டச் சிக்கல் இருக்கிறது. ஆகவே, சட்ட விதிகளின்படியும், பொருளாதார ரீதியின்படியும், நடைமுறைகளின்படியும் அது சாத்தியம் இல்லாமல் இருப்பதால்தான், இந்தத் திட்டத்தை எடுத்துக்கொள்ள முடியவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஓரளவிற்கு சாத்தியக்கூறு இருக்கிற இடங்களாக இருந்தால், வாய்ப்பு இருக்கின்ற அத்துணை இடங்களிலும் நாம் மின் உற்பத்தி செய்யவேண்டும் என்பதுதான் மாண்புமிகு அம்மா அவர்களுடைய

[2013 மார்ச் 26

அரசின் கொள்கை. இருந்தாலும்கூட, இதிலே வாய்ப்பு இல்லை என்பதால்தான் இத்திட்டம் மறுபரிசீலனை செய்ய முடியாத நிலையிலிருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*முற்பகல் 10–05*

பிற வசதிகளைப்பற்றி இங்கே சொன்னார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டிருக்கின்ற அந்தப் பகுதியின் மின் தேவையைக் கணக்கிலே கொண்டு, மின் விநியோகத்தைச் சீரமைத்து, தடையில்லாத மின்சாரம் வழங்குவதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு படிப்படியாக எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.எஸ். ரமணீதரன் அவர்கள்.

**திரு. எஸ்.எஸ். ரமணீதரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மலைவாழ் மக்களுக்குத் தடையில்லாமல் மின்சாரம் வழங்கப்படும் என்று அறிவித்தமைக்கு, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. திராவிடமணி அவர்கள்.

**திரு. மு. திராவிடமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தொகுதிக்குட்பட்ட கூடலூரில் 110 கிலோ வாட் திறன் கொண்ட துணை மின் நிலையம் அமைக்க நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு நான்கு ஆண்டுகளாகியும் இதுவரையிலும் பணி முடிக்கப்படாமலிருக்கிறது. இதனால் அப்பகுதியிலுள்ள பள்ளி மாணவர்கள் படிப்பதற்குக்கூட மிகவும் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். எனது தொகுதிக்குட்பட்ட கூடலூரில் 110 கிலோ வாட் திறன் கொண்ட துணை மின் நிலையம் அமைப்பதற்கு கடந்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, நடைபெற்றுக் கொண்டிருந்த பணிகள் தற்பொழுது நிறுத்தப்பட்டிருப்பதாக அறிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. திராவிடமணி, கேள்வியைக் கேளுங்கள்.



2013 மார்ச் 26]

**திரு. மு. திராவிடமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இப்பணியை மீண்டும் துவங்கி விரைந்து முடிப்பதற்கு நடவடிக்கை எடுப்பார்களா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட அந்தப் பகுதியில் 110 கிலோ வாட் திறன் கொண்ட துணை மின் நிலையம் அமைப்பதற்கு கருத்துரு பெறப்பட்டு, நடவடிக்கை எடுக்கப்பட்டதாகத் தெரிவித்திருக்கிறார்கள். அந்தப் பணியில் காலதாமதம் ஏற்பட்டிருக்கிறது; தொய்வு ஏற்பட்டிருக்கிறது; தொடர்ந்து பணிகள் நடைபெறவில்லை என்றும் குறிப்பிடுகிறார். அதிலே என்னென்ன இடையூறுகள் இருக்கின்றன என்பதை உடனடியாகக் கண்டறிந்து, அவற்றை நீக்கி, அந்தப் பகுதியிலே புதிய துணை மின் நிலையம் அமைப்பதற்கான நடவடிக்கைகளை மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 62, மாண்புமிகு உறுப்பினர் திரு. ந. நஞ்சப்பன், மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

**62—**

## பேருந்து நிலையம்

***6512—திரு. ந. நஞ்சப்பன்:**

மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பெண்ணாகரம் பேருந்து நிலையத்தை விரிவுபடுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கிறேன்.*

*பெண்ணாகரம் பேரூராட்சிப் பேருந்து நிலையத்தில் தற்பொழுதுள்ள இரும்புத் தகட்டினாலான பயணியர் நிழற்கூடத்தினை மாற்றி 25 மீட்டர் X 20 மீட்டர் அளவுக்கு ஆர்.சி.சி. தகட்டினால் பயணியர் நிழற்கூடத்தினை அமைக்கவும், பேருந்து நிலையம் முன்புறம் 150 மீட்டர் நீளத்திற்கு மழைநீர் வடிகால் கட்டவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. ந. நஞ்சப்பன் அவர்கள்.*

**திரு. ந. நஞ்சப்பன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய பதிலுக்கு நன்றி. அந்தப் பேருந்து நிலையம் பழைய பேருந்து நிலையமாக இருக்கிறது. இப்போது அதிகரித்திருக்கிற போக்குவரத்து வளர்ச்சிக்குத் தகுந்தமாதிரி பேருந்துகளை நிறுத்துவதற்கு இடம் போதாமல் இருக்கிறது. அதனை விரிவுபடுத்துவதற்கான நிலமும் இருக்கிறது. எனவே, பெண்ணாகரம் பேரூராட்சிப் பேருந்து நிலையத்தை விரிவுபடுத்துவதற்கான நடவடிக்கைகளை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எடுப்பார்களா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கைகள் பரிசீலிக்கப்பட்டுத்தான் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. அந்தப் பேருந்து நிலையத்தினுடைய மொத்தப் பரப்பளவு 1.5 ஏக்கராக உள்ளது. அங்கே கிட்டத்தட்ட ஒரு நாளைக்கு 90 பேருந்துகள் வந்து செல்கின்றன. அந்தப் பேருந்து நிலையம், 10 பேருந்துகள் மட்டுமே நிறுத்துகின்ற அளவிலே இருக்கின்ற காரணத்தாலும், ஏற்கெனவே இருக்கின்ற நிழற்கூடம் பழுதடைந்திருப்பதாலும், அதனை மாற்றி புதிய நிழற்கூடம் அமைப்பதற்கு 20 இலட்சம் ரூபாயும், அங்கே மழை நீர் தேங்குகின்ற காரணத்தினால், மழை நீரை உடனடியாக வெளியேற்றுவதற்காக, மழை நீர் வடிகாலுக்காக 10 இலட்சம் ரூபாயும் ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் நடைபெறவிருக்கின்றன என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தங்கள்வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. ந. நஞ்சப்பன் அவர்கள்.*

**திரு. ந. நஞ்சப்பன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் பணிகளை மேற்கொள்வதாக அறிவித்தமைக்கு மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. க. அன்பழகன் அவர்கள்.*

**திரு. க. அன்பழகன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கும்பகோணம் பேருந்து நிலையம் கட்டப்பட்டு 25 ஆண்டுகள் ஆகியுள்ளன. அதனை விரிவுபடுத்துவதாகத் தெரிவித்து, பகுதி–1, பகுதி–2, பகுதி–3 என பிரிக்கப்பட்டது. தற்போது அவற்றில் இரண்டு பகுதிகள் பயன்பாட்டில் உள்ளன. 25 ஆண்டுகள் கடந்த நிலையிலும், பேருந்துகளுடைய எண்ணிக்கை மற்றும் மக்கள்தொகை அதிகமாகியுள்ள நிலையிலும், வரவிருக்கின்ற உலகப் பிரசித்தி பெற்ற மகாமகம் திருவிழாவிற்கு வரவிருக்கும் இலட்சக்கணக்கான பக்தர்கள் பயன்பெறும் வகையிலும், கும்பகோணத்திலுள்ள மக்கள் பயன்பெறும் வகையிலும், கும்பகோணம் பேருந்து நிலையத்தின் மூன்றாவது பகுதியினை விரிவாக்கம் செய்வதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

*முற்பகல் 10–10*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.*

[2013 மார்ச் 26

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கும்பகோணம் நகரம் பிரசித்திப் பெற்ற கோயில் ஸ்தலங்களைக் கொண்ட ஒரு நகரம். மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் முதலமைச்சராகப் பொறுப்பேற்ற காலத்திலிருந்து கும்பகோணம் நகரத்தினுடைய வளர்ச்சியில் அக்கறை கொண்டு பல்வேறு திட்டங்களைத் தீட்டி செயல்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். தற்போது, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வைத்த கோரிக்கையையும் பரிசீலனை செய்து, அதற்கேற்றவாறு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா அவர்கள்.

**முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இராமநாதபுரம் நகரத்திலே புதிய பேருந்து நிலையம் இருக்கின்றது. பெயர்ப் பலகையில் மட்டும்தான் “புதிய பேருந்து நிலையம்” என்ற அடைமொழி இருக்கிறதே தவிர, பல ஆண்டுகளாக அடிப்படை வசதி இல்லாமல் அது பயன்பாட்டிலே இருந்து வருகிறது. மக்கள்தொகை பெருக்கத்திற்கேற்ப அந்தப் பேருந்து நிலையத்தில் வசதிகள் இல்லை. அதை விரிவுபடுத்துவதற்கான இடமும் அந்தப் பேருந்து நிலையத்தின் அருகிலேயே இருக்கின்றது. எனவே, இராமநாதபுரம் நகர புதிய பேருந்து நிலையத்தை விரிவுபடுத்துவதற்கு இந்த அரசு முன்வருமா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபோன்ற நிகழ்வுகள் சில நகரங்களில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. காரணம், ஏற்கெனவே இருக்கின்ற பேருந்து நிலையங்கள் மக்கள் நடமாட்டம் அதிகமாக உள்ள பகுதியிலே இருக்கின்ற காரணத்தினாலே, புதிய பேருந்து நிலையங்களுக்குப் பேருந்துகள் வராமல் பழைய பேருந்து நிலையத்திற்குச் சென்றுவிடுவது இயற்கையாகவே நடந்துகொண்டிருக்கிறது. இப்போது புதிய பேருந்து நிலையம்



2013 மார்ச் 26]

அமைக்கப்பட்டு அங்கே பேருந்துகள் வரவில்லையென்று சொன்னால், அங்கு பேருந்துகள் வருவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். அங்கே அனைத்து அடிப்படை வசதிகளும் குறைவாக இருக்கின்றபட்சத்தில், அவை முறையாக நிறைவேற்றப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள்வாயிலாக மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 63, மாண்புமிகு உறுப்பினர் திரு. வே. குணசீலன், மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

**63—**

## தொழிற்பேட்டை

***21836—திரு. வே. குணசீலன்:**

மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வந்தவாசி தொகுதியில் தொழிற்பேட்டை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. ப. மோகன், ஊரகத் தொழில் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) வந்தவாசி தொகுதி, வந்தவாசியில் தொழிற்பேட்டை அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். எனினும், தேவையான அரசுப் புறம்போக்கு நிலங்கள் கிடைக்கும்பட்சத்தில், போதுமான நிதி ஆதாரங்களுடனும், தொழில் திட்டங்களுடனும், தொழில் துவங்க ஆர்வமுள்ள 20 தொழில் முனைவோர்கள் முன்வந்தால், வந்தவாசி தொகுதியில் புதிய தொழிற்பேட்டை அமைப்பதற்கு சிட்கோ நிறுவனம் மூலமாக மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு தேவையான நடவடிக்கைகளை எடுக்கும் என்பதைத் தங்கள்வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[2013 மார்ச் 26

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வே. குணசீலன் அவர்கள்.

**திரு. வே. குணசீலன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதல்வர் அம்மா அவர்களின் பொற்பாதங்களை வணங்குகிறேன். திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி தொகுதி மிகவும் பின்தங்கிய தொகுதி. அந்தத் தொகுதியிலே இதுவரை எந்த ஒரு தொழிற்பேட்டையும் இல்லை. அதனால், தெள்ளார் ஊராட்சி ஒன்றியத்தில் அரசுக்குச் சொந்தமான சர்வே எண் 386–ன்கீழ் 145 ஏக்கர் நிலம் உள்ளது. அந்த இடத்தில் தொழிற்பேட்டை அமைக்க அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ப. மோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவண்ணாமலை மாவட்டம், பின்தங்கிய மாவட்டம் என்றாலுங்கூட, அந்த மாவட்டத்தில் போளூர் வட்டம், பாப்பாம்பாடி மற்றும் முருகப்பாடி கிராமங்களில் 60.83 ஏக்கர் நிலப்பரப்பும் மற்றும் செங்கம் வட்டம், கட்டமடுவு கிராமத்தில் 83.78 ஏக்கர் நிலப்பரப்பும் கண்டறியப்பட்டு, தமிழ்நாடு அரசின் மூலமாக இன்றையதினம் அங்கு புதிய தொழிற்பேட்டை அமைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. மேலும், திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி தொகுதியில் தொழிற்பேட்டை அமைக்க நிலம் வேண்டுமென்று மாவட்ட வருவாய் அலுவலரிடம் கேட்கிறபோது, அந்தப் பகுதியிலே 20 ஏக்கர் நிலமோ அல்லது 50 ஏக்கர் நிலமோ இல்லையென்று எங்களுக்குத் தகவல் சொல்லியிருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். அதேநேரத்தில், தொழிற்பேட்டை அமைக்க தகுதியுடைய நிலம் இருக்கிறது என்று வந்தவாசி தொகுதியினுடைய சட்டமன்ற உறுப்பினர் சொல்லியிருக்கிறார்கள். அதையும் அரசு அலுவலர்களிடத்திலே சொல்லி உடனடியாக அந்த இடங்களைப் பார்வையிடச் செய்து, தகுந்த முறையில் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு



2013 மார்ச் 26]

தொழிற்பேட்டை அமைப்பது குறித்து பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வே. குணசீலன் அவர்கள்.

**திரு. வே. குணசீலன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், என்னுடைய தொகுதி மக்களின் சார்பாகவும், என் சார்பாகவும் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.எஸ். சிவசங்கர் அவர்கள்.

**திரு. எஸ்.எஸ். சிவசங்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பின்தங்கிய தொகுதியான குன்னம் தொகுதியில், ஆலத்தூர் ஒன்றியத்தில் அரசுக்குச் சொந்தமான இடங்கள் இருக்கின்றன. இது திருச்சி–சென்னை நெடுஞ்சாலையையொட்டி அமைந்திருக்கின்ற பகுதி. அங்கே ஒரு தொழிற்பேட்டை கொண்டுவந்தால் எங்கள் பகுதி வளர்ச்சிபெற மிகவும் உதவிகரமாக இருக்கும். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்தக் கோரிக்கையை ஏற்க முன்வருவார்களா எனத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10–15

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ப. மோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக எந்த மாவட்டமாக இருந்தாலும் தகுதியுடைய நிலங்கள் இருக்குமேயானால், அதிலே 20 தொழில் முனைவோர்கள் திட்டங்களுடன் முன்வருவார்களேயானால், அரசு அதனைப் பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 64, மாண்புமிகு உறுப்பினர் திரு. ரா. சரத்குமார், மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.

[2013 மார்ச் 26

**64—**

**நல வாரியம்**

*__7239—திரு. ரா. சரத்குமார்:__*

*மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) தமிழ்நாட்டில் மூத்த குடிமக்களுக்கு நல வாரியம் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*(அ) மற்றும் (ஆ) 2007 ஆம் ஆண்டின் பெற்றோர் மற்றும் மூத்த குடிமக்கள் பராமரிப்பு மற்றும் நலச் சட்டத்தினை மாநில அளவிலும் மாவட்ட அளவிலும் சிறப்பாகவும், இணைந்து செயல்படுத்தவும் ஆலோசனை வழங்குவதற்காகவும், கண்காணிப்பதற்காகவும் மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி, மாநில அளவில் அரசு தலைமைச் செயலரைத் தலைவராகக் கொண்டு 15 அலுவல்சார் உறுப்பினர்கள் மற்றும் 7 அலுவல்சாரா உறுப்பினர்களையும் கொண்ட உயர்மட்டக் குழு ஒன்றும், மாவட்ட அளவில் ஒவ்வொரு மாவட்டத்திலும் மாவட்ட ஆட்சியரைத் தலைவராகக் கொண்டு 3 அலுவல்சார் உறுப்பினர்கள் மற்றும் 2 மூத்த குடிமக்கள் உட்பட 4 அலுவல்சாரா உறுப்பினர்களைக் கொண்ட மாவட்ட அளவிலான குழு ஒன்றும் அமைக்கப்பட்டு மூத்த குடிமக்களின் நலன் பேணப்படுகிறது. எனவே, மூத்த குடிமக்களுக்கு நல வாரியம் அமைக்கும் அவசியம் எழவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. நாராயணன் அவர்கள்.*

**திரு. ஆ. நாராயணன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களது சமத்துவ மக்கள் கட்சியினுடைய தலைவர் அவர்களால் எழுப்பப்பட்ட வினாவிற்குப் பேச அனுமதி அளித்த தங்களுக்கு நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய பதிலுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். எங்களது சமத்துவ மக்கள் கட்சியின் சார்பாக சில கருத்துகளை அவையில் பதிவு செய்ய விரும்புகின்றேன். இன்றைய சமூகச் சூழ்நிலையில் கூட்டுக் குடும்பம் தனிக் குடும்பமாக மாறிவிட்டது. வயது முதிர்ச்சி, வருமானம் குறைவு, பாதுகாப்பு இல்லாமை ஆகிய காரணங்களால் துன்பப்படும் முதியோர்களின் கவலைகளைத் தீர்க்க இருக்கும் சட்டத்தினை அடிப்படை உரிமைச் சட்டமாக மாற்றிட மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு ஆவன செய்யுமா எனத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.*



2013 மார்ச் 26]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதியோர்களைப் பாதுகாக்க வேண்டும் என்கிற எண்ணத்தோடுதான் அவர்களை ஆதரவற்றவர்களாக யாரும் கருதக் கூடாது என்பதற்காக, அரசாங்கமே அவர்களுக்குப் பாதுகாவலராக இருக்கும் என்பதை மனதிலே வைத்துத்தான், ஓய்வூதியத் திட்டத்தின்கீழ் முதியோர்களுக்கு வழங்கப்படும் ஓய்வூதியத் தொகையினை 500 ரூபாயிலே இருந்து 1,000 ரூபாயாக உயர்த்தி ஆணை வழங்கியவர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) முதன்முதலில் முதியோர் ஓய்வூதியத் திட்டம் என்பது 1962 ஆம் ஆண்டு வெறும் 20 ரூபாய் ஓய்வூதியத் தொகையுடன்தான் துவங்கப்பட்டது. அதற்குப் பிறகு படிப்படியாக அது 400 ரூபாய், 500 ரூபாய் என்று உயர்த்தப்பட்டு, 500 ரூபாய் என்ற அளவோடு நிறுத்தப்பட்டதை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 2011 ஆம் ஆண்டு 8 ஓய்வூதியத் திட்டங்களைக் கொண்டுவந்து, அது 1,000 ரூபாயாக உயர்த்தி வழங்கப்பட வேண்டுமென்று ஆணை வழங்கி, அதனடிப்படையிலே முதியோர்கள் பயன்பெற்று வருகிறார்கள் என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.*

*அதுமட்டுமல்ல, மாநில அளவிலே தீர்ப்பாயங்கள், மாவட்ட அளவிலே மற்றும் வட்டார அளவிலே அமைக்கப்பட்டிருக்கிற குழுக்கள் மூலமாக வைக்கப்படக்கூடிய பரிந்துரைகளின் அடிப்படையிலே பல்வேறு நடவடிக்கைகள்*

[2013 மார்ச் 26

மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. இந்தச் சட்டத்தின் மூலமாக யாராவது ஒரு முதியவர் தனக்குப் பாதுகாப்பு இல்லையென்று புகார் தருவாரேயானால், உடனடியாக 90 நாட்களுக்குள் அவருடைய புகாருக்குத் தீர்வு காணப்பட வேண்டுமென்பது குறித்தும் அறிவுறுத்தப்பட்டிருக்கிறது. அதுமட்டுமல்ல, மூத்த குடிமக்கள் அவர்களுடைய பிள்ளைகள், உறவினர்கள் தீர்ப்பாயத்தின் ஆணையைச் செயல்படுத்தத் தவறினால், அபராதம் மற்றும் சிறை தண்டனை முழுவதுமாகவோ அல்லது ஒவ்வொரு மாத பராமரிப்புச் செலவிற்கு ஏற்றாற்போன்றோ வழங்கத் தீர்ப்பாயம் ஆணையிடலாம் அல்லது ஒரு மாதம் வரை அல்லது அத்தொகையைச் செலுத்தும் காலம் வரையோ சிறை தண்டனை அளிக்கப்படலாம்.

அதுமட்டுமல்ல, பராமரிப்புத் தொகை ஒரு மாதத்திற்கு 10,000 ரூபாய்க்குக் குறையாமல் இருக்க வேண்டுமென்று தீர்ப்பாயத்திற்கு அறிவுறுத்தப்பட்டிருக்கிறது. விசாரணை நிலுவையில் இருக்கும்பட்சத்தில், மூத்த குடிமக்களைப் பராமரிப்பதற்காக மாதாந்திர பராமரிப்புத் தொகையினை அளிக்கக் கோரி அவர்களின் பிள்ளைகள் அல்லது உறவினர்களுக்குத் தீர்ப்பாயம் இடைக்கால உத்தரவிடலாம் என்பது போன்ற பல்வேறு ஆலோசனைகள் அந்தத் தீர்ப்பாயத்திற்கு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசால் அறிவுறுத்தப்பட்டிருக்கிறது. ஆகவே, முதியோர்களைப் பாதுகாப்பதில் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு உறுதியாக இருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) மேலும், முதியோர்களுக்கும், ஆதரவற்ற குழந்தைகளுக்கும் பாதுகாப்பாக இருக்க வேண்டுமென்று சொல்லி, மாண்புமிகு அம்மா அவர்களால் முதியோர் ஒருங்கிணைந்த வளாகம் என்று தொடங்கப்பட்டு, இன்றைக்கு மிகச் சிறப்போடு, அதுவும் முதியோர்களுக்குப் பாதுகாப்பான ஓர் இல்லமாக தமிழ்நாட்டின் பல இடங்களிலே நடத்தப்பட்டு வருகிறது என்பதை நான் இந்த அவையிலே மாண்புமிகு பேரவைத் தலைவர்மூலமாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10–20

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 65, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர்.என். கிட்டுசாமி, மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.



2013 மார்ச் 26]

**65—**

## கல்லூரி

***14807—திரு. ஆர்.என். கிட்டுசாமி:**

மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மொடக்குறிச்சி தொகுதியில் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. பி. பழனியப்பன், உயர் கல்வித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) ஈரோடு மாவட்டத்தில் இதுவரையில் அரசு சார்ந்த ஒரு கலை மற்றும் அறிவியல் கல்லூரி இல்லாமல் இருந்தது. இவற்றை அறிந்து, மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், கடந்த 2012–2013 ஆம் நிதியாண்டில், ஈரோடு மாவட்ட மக்களின் நீண்ட நாள் கோரிக்கையினை நிறைவேற்றுகின்ற வகையிலும், மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் கேட்டுக் கொண்டதன்பேரிலும், அங்கு ஒரு புதிய பாரதியார் பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரியைத் தொடங்கி வைத்தார்கள் என்பதை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அந்தக் கல்லூரி மொடக்குறிச்சியிலிருந்து 12 கிலோ மீட்டர் தொலைவிலுள்ள சிவகிரி அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் தற்போது சிறப்பான முறையில் நடைபெற்று வருகிறது. அந்தக் கல்லூரியில் 76 ஆண்களும், 152 பெண்களும் சேர்ந்து, 228 மாணவ, மாணவியர் தற்போது படித்து வருகிறார்கள். ஆங்கிலப் பாடம், கணிதப் பாடம், Computer Science, B.Com., (C.A.), B.B.A., (C.A.) போன்ற பாடப் பிரிவுகள் தொடங்கப்பட்டு, மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய நல்லாசியோடு தற்போது அந்தக் கல்லூரி நல்லமுறையில் செயல்பட்டு வருகிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின்வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[2013 மார்ச் 26

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர்.என். கிட்டுசாமி அவர்கள்.*

**திரு. ஆர்.என். கிட்டுசாமி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே வரலாறு காணாத அளவிற்குக் கல்விப் புரட்சியைச் செய்து வருகிற மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பாதம் பணிந்து வணங்குகிறேன். ஈரோடு மாவட்ட மக்களுடைய 40 ஆண்டுக் காலக் கோரிக்கையினை ஏற்று, மொடக்குறிச்சி தொகுதியில் ஒரு கலை மற்றும் அறிவியல் கல்லூரியைக் கொடுத்த மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு மொடக்குறிச்சி தொகுதி மக்களின் சார்பாகவும், என் சார்பாகவும் மனமார்ந்த நன்றியினை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். இன்றைக்கு 228 மாணவ, மாணவியருடன் தற்போது செயல்பட்டு வருகின்ற அந்தக் கல்லூரிக்கு நடப்பு நிதியாண்டிலேயே ஓர் இடத்திலே புதிதாக நிரந்தரக் கட்டடம் கட்டுவதற்கு அனுமதி கொடுக்கப்படுமா என்று தங்களின்வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டுக் கொண்டதற்கிணங்க, மொடக்குறிச்சி தொகுதியில் அந்தக் கல்லூரிக்கு நிரந்தரக் கட்டடம் கட்டுவதற்காக மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் இரண்டு இடங்களைத் தேர்வு செய்து அனுப்பி வைத்திருக்கிறார்கள். ஒன்று, மொடக்குறிச்சி தொகுதிக்குட்பட்ட வேலம்பாளையம் கிராமத்தில் 139 ஹெக்டேர் பரப்பளவில் விஸ்தீரணம் செய்யப்பட்ட தரிசு நிலம் இருப்பதாகக் கண்டறியப்பட்டு, அதிலே 10.50 ஹெக்டேர் நிலத்தை, பாரதியார் பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரிக்கான கட்டடம் கட்டுவதற்காக, ஆட்சேபணை இல்லாமல்,* Enter Upon Permission *கொடுத்து, ஒரு முன்மொழிவினை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் அனுப்பி வைத்திருக்கிறார். மேலும், தற்போது இந்தக் கல்லூரி சிவகிரியிலே நடைபெற்று வருகிறது. ஆகவே, சிவகிரியிலேயே இந்தக் கல்லூரி இருக்க வேண்டுமென்று சிவகிரி பேரூராட்சியைச் சேர்ந்த சந்தைப்பேட்டைக்குட்பட்ட சந்தைப் புறம்போக்கு நிலத்தில், 5.06 ஹெக்டேர் பரப்பளவிலான நிலத்தில் அங்கேயே கட்டடம் கட்ட வேண்டுமென்று இரண்டு கோப்புகளை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் அனுப்பி வைத்திருக்கிறார்கள். எந்த இடத்தில் கட்டடம் கட்டினால் அங்கேயிருக்கக்கூடிய மாணவ, மாணவியருக்குப் பயன்தரும் என்பது குறித்து மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்களோடு கலந்து பேசி, அங்கே ஆய்வு செய்து, கூடிய விரைவில், மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கனிவான பார்வைக்கு இதனை எடுத்துச் சென்று, விரைவில் அந்தக் கல்லூரிக்குக் கட்டடம் கட்டப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள்வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*



2013 மார்ச் 26]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர்.என். கிட்டுசாமி அவர்கள்.*

**திரு. ஆர்.என். கிட்டுசாமி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது தற்காலிகமாக அந்தக் கல்லூரி சிவகிரி ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் அரச்சலூர் உள் வட்டத்தைச் சார்ந்த 60–வேலம்பாளையம் கிராமத்திலே 25 ஏக்கர் நிலத்தைத் தேர்வு செய்து அந்தக் கல்லூரிக்காக ஒதுக்கிக் கொடுத்திருக்கிறார்கள். அதேநேரத்தில், தற்போது சிவகிரியில் செயல்பட்டுக் கொண்டிருக்கின்ற அந்தக் கல்லூரிக்குக் கட்டடம் கட்டி, தொடர்ந்து அங்கேயே செயல்பட வேண்டுமென்று சிலர் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். சிவகிரி பேரூராட்சிக்குச் சொந்தமான வாரச் சந்தைக்கு 12.40 ஏக்கர் நிலப்பரப்பு இருக்கிறது. அதிலே ஏற்கெனவே காவலர் குடியிருப்புக்கென ஒரு ஏக்கர் நிலத்தைக் கொடுத்திருக்கிறார்கள். அந்த இடத்தில் வரலாற்றுச் சிறப்புமிக்க மாட்டுச் சந்தை கூடிக் கொண்டிருக்கிறது; அதிக அளவிலே வாழைத் தார்கள் அங்கே கொண்டுவரப்பட்டு ஏலம் விடப்படுகின்ற சந்தையாக அது விளங்கிக் கொண்டிருக்கின்றது. 500 ஆண்டுகளுக்கு மேலாக இருக்கின்ற அந்தச் சந்தையை மாற்றக் கூடாது என்று அந்தப் பகுதியிலே இருக்கின்ற பொதுமக்கள் கூறிக் கொண்டிருக்கிறார்கள்.*

*முற்பகல் 10–25*

*அதேநேரத்தில், திடக் கழிவு மேலாண்மைக்காக அந்நிலத்திலிருந்து 3 ஏக்கர் நிலம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. தற்போது அந்தப் பேரூராட்சி ஏறத்தாழ 18 ஆயிரம் வாக்காளர்களைக்*

[2013 மார்ச் 26

கொண்ட பேரூராட்சியாக இருக்கிறது. எதிர்காலத்திலே அந்தப் பேரூராட்சி, நகராட்சியாக மாறக்கூடிய வாய்ப்பு இருப்பதால், அங்கு இருக்கின்ற சந்தையை மாற்றுவதற்கு பேரூராட்சியினுடைய நிருவாகம் அனுமதி கொடுக்குமா என்பது வினாவாக இருக்கின்றது. அப்படியிருக்கின்றபோது, இது காலத்தை கடத்துவதாக அமைகின்றது. நிரந்தரக் கட்டடம் இல்லாத நிலையில், வரும் ஆண்டுகளில் அந்தக் கல்லூரியைத் தொடர்ந்து நடத்துவதற்கு மிகப்பெரிய கஷ்டம் இருக்கும். எனவே, இதனைக் கருத்தில் கொண்டு, மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் முன்மொழிவு அனுப்பப்பட்ட 60–வேலம்பாளையம் கிராமத்திலே, உடனடியாக நடப்பு நிதியாண்டிலேயே கட்டடம் கட்டுவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவாரா என்பதை அறிய ஆசைப்படுகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே சொன்னதைப்போல மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் இரண்டு இடங்களிலும் கல்லூரி கட்டுவதற்கு வாய்ப்பு இருக்கிறது என்று அதற்கான நிலத்தைத் தேர்வு செய்து கருத்துரு அனுப்பி வைத்து இருக்கிறார். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒரு குறிப்பிட்ட இடத்தைச் சொல்லி, அந்த இடத்தில் உடனடியாக கல்லூரி கட்ட வேண்டுமென்று கோரிக்கை வைத்திருக்கிறார். மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை ஏற்று, மாவட்ட ஆட்சியருடன் நேரில் சென்று ஆய்வு செய்து, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட இடம் கல்லூரி அமைப்பதற்கு ஏதுவாக இருக்கும்பட்சத்தில், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அனுமதியைப் பெற்று கூடிய விரைவில் அங்கே கட்டடம் கட்டப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்கள், 2011–2012 ஆம் ஆண்டில் 11 கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளையும், 2012–2013 ஆம் ஆண்டில் 11 கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளையும், ஆக மொத்தம் 22 கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளைத் துவங்குவதற்கு அனுமதி வழங்கியதோடு மட்டுமல்லாமல், கட்டடம் கட்டுவதற்கு ஒவ்வொரு கல்லூரிக்கும்



2013 மார்ச் 26]

தலா 7.25 கோடி ரூபாய் நிதியும் ஒதுக்கித் தந்திருக்கிறார்கள். எனவே, நிலம் அடையாளம் காணப்பட்டு, தேர்வு செய்யப்பட்டவுடனேயே கட்டடம் கட்டுவதற்கான நடவடிக்கையை மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு மேற்கொள்ளும் என்பதைப் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 66, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.ஆர். பார்த்திபன், மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

**66—**

## உயிரியல் பூங்கா

***8845—திரு. எஸ்.ஆர். பார்த்திபன்:**

மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம், குருமப்பட்டி உயிரியல் பூங்காவை மேம்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. கே.டி. பச்சைமால், வனத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், குருமப்பட்டி உயிரியல் பூங்காவை மேம்படுத்த மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.ஆர். பார்த்திபன், இருக்கையில் இல்லை.

வினா வரிசை எண் 67, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. அஸ்லம் பாஷா, மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள்.

**67—**

## நியாய விலைக் கடை

***13038—திரு. அ. அஸ்லம் பாஷா:**

*மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) வேலூர் மாவட்டம், பேரணாம்பட்டு ஒன்றியம், சின்ன வெங்கடசமுத்திரம், பாட்டூர் மற்றும் இந்திரா நகர் ஆகிய பகுதிகளுக்கென பகுதி நேர நியாய விலைக் கடை அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவுத் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*(அ) மற்றும் (ஆ) அரசு நிபந்தனைகளைப் பூர்த்தி செய்யாத நிலையில், வேலூர் மாவட்டம், பேரணாம்பட்டு ஒன்றியம், சின்ன வெங்கடசமுத்திரம், பாட்டூர், இந்திரா நகர் பகுதிகளை உள்ளடக்கி மூன்றாவதாக ஒரு பகுதி நேர நியாய விலைக் கடை அமைத்திட சாத்தியக்கூறுகள் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. அஸ்லம் பாஷா அவர்கள்.*

**திரு. அ. அஸ்லம் பாஷா:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆம்பூர் தொகுதிக்குட்பட்ட பேரணாம்பட்டு ஒன்றியத்திலுள்ள சின்ன வெங்கடசமுத்திரம் என்ற பஞ்சாயத்து மிகப் பெரிய பஞ்சாயத்து. அதில், சிறிய, சிறிய குக்கிராமங்கள் இருக்கின்றன. அதிலே குறிப்பாக சின்ன வெங்கடசமுத்திரம், பாட்டூர் மற்றும் இந்திரா நகர் போன்ற மூன்று குக்கிராமங்களும், பக்கத்து, பக்கத்திலே இருக்கக்கூடிய கிராமங்கள். இந்த மூன்று கிராமங்களிலும் ஏறத்தாழ 290 குடும்ப அட்டைகள் இருக்கின்றன. அவர்கள் பொருட்களை வாங்க வேண்டுமென்றால் 1½ கி.மீ. தூரத்திலுள்ள பெரிய வெங்கடசமுத்திரத்திலுள்ள நியாய விலைக் கடைக்குத்தான் செல்ல வேண்டும். போக்குவரத்து வசதியும்,*



*சாலை வசதியும் இல்லாத அந்தப் பகுதியில், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நான் குறிப்பிட்ட சின்ன வெங்கடசமுத்திரம், பாட்டூர் மற்றும் இந்திரா நகர் பகுதிகளில் ஒரு பகுதி நேர நியாய விலைக் கடை அமைத்துத் தர வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள்வாயிலாகக் கேட்டுக்கொள்கின்றேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. இரா. காமராஜ்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலூர் மாவட்டம், ஆம்பூர் தொகுதி, தீவலாபுரம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுச் சங்கம் நடத்தும் வெங்கடசமுத்திரம் முழுநேர நியாய விலைக் கடை 1,093 குடும்ப அட்டைகளைக் கொண்டு செயல்பட்டு வந்திருக்கிறது. இந்த நியாய விலைக் கடையிலிருந்து 232 குடும்ப அட்டைகளைப் பிரித்து ஒரு பகுதி நேர நியாய விலைக் கடை கோவிந்தபுரம் என்ற கிராமத்தில் தொடங்கப்பட்டுள்ளது. கோவிந்தபுரம் முதல் பகுதி நேர நியாய விலைக் கடைக்கு குடும்ப அட்டைகளைப் பிரித்த பிறகு, தாய்க் கடையான வெங்கடசமுத்திரம் கூட்டுறவு நியாய விலைக் கடையில் 861 குடும்ப அட்டைகள் இருந்துள்ளன. பின்னர், மேற்படி தாய்க் கடையான வெங்கடசமுத்திரம் நியாய விலைக் கடையிலிருந்து 313 குடும்ப அட்டைகளைப் பிரித்து வெங்கடசமுத்திரம்–2 என்ற இரண்டாவது பகுதி நேர நியாய விலைக் கடை தொடங்கப்பட்டுள்ளது. தாய்க் கடையான வெங்கடசமுத்திரம் நியாய விலைக் கடையிலிருந்து ஏற்கெனவே பிரிக்கப்பட்ட இரண்டு பகுதி நேர நியாய விலைக் கடைகள் செயல்பட்டு வரும் நிலையில், ஒரு தாய்க் கடையிலிருந்து இரண்டு பகுதி நேர நியாய விலைக் கடைகள் மட்டுமே திறக்க முடியும் என்கிற விதி இருப்பதால், மூன்றாவதாக பகுதி நேர நியாய விலைக் கடை திறப்பதற்கு வாய்ப்பு இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவிக்க விரும்புகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. அஸ்லம் பாஷா அவர்கள்.*

*முற்பகல் 10–30*

**திரு. அ. அஸ்லம் பாஷா:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராம மக்களின்மீது மிகுந்த அக்கறை கொண்ட*

[2013 மார்ச் 26

இந்த நல்லாட்சியிலே தயவுசெய்து காரணங்களைப் பார்க்காமல், 'மனம் இருந்தால் மார்க்கம் உண்டு' என்ற அடிப்படையிலே விதிகளைத் தளர்த்தி இந்தப் பகுதியிலே மேலும் ஒரு பகுதி நேர நியாய விலைக் கடையை அமைத்துத் தர வேண்டுமென்று மீண்டும் தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. இரா. காமராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு கடையில் குடும்ப அட்டைகள் அதிகமாக இருந்தால் முழு நேரக் கடையாகக்கூட மாற்றிவிடலாம். மாற்றிவிட்டு, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தங்களுடைய பகுதியில், அவர் தொகுதியில் கேட்கிற அந்தக் கோரிக்கையை நிறைவேற்றித் தரலாம். ஆனால் குடும்ப அட்டைகள் மிகக் குறைவாக இருக்கின்றன. இருந்தாலும், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு ஆட்சிப் பொறுப்பை ஏற்றதற்குப் பின்னால், 28–2–2013 வரை 300 புதிய முழு நேர அங்காடிகளைத் திறந்திருக்கிறது. அதேபோல, அத்தியாவசியப் பொருட்களை அனைவரும் எளிதில் பெறும் வகையில் 1–6–2011 முதல் 28–2–2013 வரை 591 புதிய பகுதி நேரக் கடைகளைத் மாண்புமிகு இதய தெயவம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு திறந்திருக்கிறது (மேசையைத் தட்டும் ஒலி) மக்களின் கோரிக்கைகள் ஏற்கப்பட்டு, அந்தப் பகுதிகளில் தேவைகளுக்கேற்ப கடைகள் திறக்கப்பட்டிருக்கின்றன. எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையையும் மாண்புமிகு அம்மா அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் சென்று நிறைவேற்றுவதற்கு பரிசீலனை செய்யப்படும் என்பதனைத் தங்கள்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. உலகநாதன் அவர்கள்.

**திரு. கே. உலகநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருத்துறைப்பூண்டி தொகுதி, பாமனி ஊராட்சியில் 900 கார்டுகளைக் கொண்ட ஒரு நியாய விலைக் கடை இருக்கிறது. இந்த நியாய விலைக் கடையில், திருத்துறைப்பூண்டி நகரத்தின்



2013 மார்ச் 26]

அருகிலிருந்து அறிவான் தெரு, நெடுந்திடல், தோப்படி தெரு ஆகிய 3 பகுதிகளைச் சேர்ந்த சுமார் 400 குடும்ப அட்டைதாரர்கள் 3 கிலோ மீட்டர் தூரம் சென்று பொருட்களை வாங்கி வரக்கூடிய சூழல் இருக்கிறது. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தோப்படித் தெருவில் ஒரு பகுதி நேர அங்காடியைத் திறக்க ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. இரா. காமராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை, நிபந்தனைகள் பூர்த்தி செய்யப்படும்பட்சத்தில், மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களிடத்திலே அதற்குரிய கருத்துரு பெற்று பரிசீலனை செய்து ஆவன செய்யப்படும் என்பதைத் தங்கள்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வீ.பி. நாகைமாலி அவர்கள்.

**திரு. வீ.பி. நாகைமாலி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கீழ்வேளூர் தொகுதி, ஒக்கூர் ஊராட்சி, கடம்பங்குடியில் ஒரு பகுதி நேர நியாய விலைக் கடையும், அக்கரைப்பேட்டையில் ஒரு முழு நேர நியாய விலைக் கடையும் திறப்பதற்கு முன்மொழிவுகள் அனுப்பப்பட்டு, ஓராண்டுக்கு மேல் ஆகிறது. இந்த நியாய விலைக் கடைகளை விரைவில் திறக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. இரா. காமராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை பரிசீலிக்கப்பட்டு, அது ஆய்விலே இருக்குமேயானால், விதிகளுக்கு உட்பட்டு அந்தக் கடை நிச்சயமாக திறந்து வைக்கப்படும் என்பதனையும் மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாலகிருஷ்ணன் அவர்கள்.

**திரு. க. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பகுதி நேர நியாய விலைக் கடைகளைத் திறப்பது என்கிற நிலை வருகிறபோது, சில விதிகளுக்கு உட்பட்டு, மாவட்ட ஆட்சித் தலைவரிடமிருந்து கருத்துரு பெறப்பட்டு, மாநில உணவுத் துறை கமிஷனர் அவர்களாலே அது மீண்டும் ஆய்வு செய்யப்பட்டு, அதன் பிறகுதான் அந்தப் பகுதி நேரக் கடைகள் திறக்கப்பட வேண்டும் என்ற நிலை இருக்கிறது. இதனால் ஒரு கடை திறப்பதற்கு சற்றேறக்குறைய 1½ ஆண்டுக் காலம் அல்லது 2 ஆண்டுக் காலத்திற்கு மேல் ஆகிறது. இப்படி பகுதி நேரக் கடைகள் திறப்பதனாலே, அரசுக்கு ஒன்றும் கூடுதலான செலவு ஏற்படுவதில்லை. தாய்க் கடையைச் சேர்ந்த அதே ஊழியர்தான் இன்னொரு இடத்திற்குச் சென்று பகுதி நேரக் கடையை இயக்குகிறார். எனவே, அப்படிப்பட்ட மிக மிக அவசியமான, அத்தியாவசியமான தேவை ஏற்படுகிற சூழ்நிலையில், மாவட்ட ஆட்சித் தலைவர்களே அங்கே இருக்கிற நிலைமைகளை ஆய்வு செய்து, விதிகளைத் தளர்த்தி பகுதி நேரக் கடைகளைத் திறந்துகொள்ள அனுமதி அளித்தால், இந்தப் பகுதி நேரக் கடைகள் திறப்பதற்கு ஏற்படுகிற காலதாமதத்தைத் தவிர்க்க முடியும். மக்களுக்கு உடனடியாக அத்தியாவசியப் பொருட்கள் கிடைப்பதற்கு உரிய வசதிகளைச் செய்வதற்கு வாய்ப்பு ஏற்படும். ஆகவே, அரசு இதை செய்வதற்கு முன்வருமா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10—35

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. இரா. காமராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியிலேதான் இதுவரையில் இல்லாத அளவிற்கு, அதிக எண்ணிக்கையில் 1—6—2011 முதல் 28—2—2013 வரையில் 300 புதிய பகுதி நேர நியாய விலைக் கடைகள் திறந்துவைக்கப்பட்டுள்ளன என்பதனை இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)





மேலும், மக்கள் அத்தியாவசியப் பொருட்களைப் பெறுகின்ற வகையில் 1—6—2011 முதல் 28—2—2013 வரையில் 591 புதிய பகுதி நேர நியாய விலைக் கடைகள் இதுவரையில் இல்லாத அளவில், அதிக எண்ணிக்கையில் திறக்கப்பட்டுள்ளன என்பதையும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுக்கு என்று சில அதிகாரங்கள் வழங்கப்பட்டிருக்கின்றன. கிராமங்களைப் பொறுத்தவரையில், குறைந்தபட்சம் 500 குடும்ப அட்டைகளும், அதிகபட்சம் 800 குடும்ப அட்டைகளும் இருக்க வேண்டும். அதுபோன்ற நிலையில் 500—க்கும், 800—க்கும் இடையில் 150 குடும்ப அட்டைகள் இருக்குமேயானால் 1½ கிலோ மீட்டர் தூரத்தில் அந்தக் கடைகள் அமைக்கப் பெறுகிற சூழ்நிலையில், மாவட்ட ஆட்சித் தலைவரே அந்தக் கடையை அமைத்துக்கொள்ளலாம் என்கிற அதிகாரம் அவருக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதற்குமேலாக வருகின்றபோதுதான், ஆணையர் அவர்களுக்கு கருத்துரு அனுப்பப்படுகிறது. எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோருகிற கடை எந்த இடத்திற்குத் தேவை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் என்னிடத்தில் குறிப்பிட்டுச் சொன்னார் என்றால், தேவையின் அடிப்படையில், விதிகளுக்கு உட்பட்டு நிச்சயமாக அந்தக் கடை திறந்து வைக்கப்படும்; மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு உடனடியாக ஆவன செய்யும் என்பதை இந்த நேரத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 68, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. கணேஷ்குமார், மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள்.

**68—**

## மாசு தடுப்பு

***9704—திரு. அ. கணேஷ்குமார்:**

மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

*செஞ்சி தொகுதி, ராஜ்ஸ்ரீ சர்க்கரை ஆலையில் இருந்து வெளியேறும் கழிவு நீரால் சுற்றுப்புறப் பகுதிகளிலுள்ள ஏரிகள் பாதிக்கப்படுவதைத் தடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?*

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கிறேன்.*

*செஞ்சி வட்டம், செஞ்சி சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட ராஜ்ஸ்ரீ சுகர்ஸ் & கெமிக்கல்ஸ் லிமிடெட் தொழிற்சாலையிலிருந்து வெளியேறும் கழிவு நீர் முதல் கட்டமாக ஆவியாக்கப்பட்டு வெளியேற்றப்படுகிறது. எஞ்சியுள்ள பொருட்கள் அந்நிறுவனத்தால் மின்சாரம் தயாரிக்க கொதிகலனுக்கு எரிபொருளாகப் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. இந்நிறுவனத்திலிருந்து கழிவு நீர் வெளியேற்றப்படவில்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. கணேஷ்குமார் அவர்கள்.*

**திரு. அ. கணேஷ்குமார்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செஞ்சி தொகுதி, பாலப்பாடியில் அமைந்துள்ள ராஜ்ஸ்ரீ சுகர்ஸ் & கெமிக்கல்ஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தின் மூலமாக ஏற்கெனவே மத்திய சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறையின்மூலம் பெறப்பட்ட அனுமதியின்படி, அந்த நிறுவனத்திற்குத் தேவையான தண்ணீர் முழுமையாக அருகில் அமைந்துள்ள வராக நதியிலிருந்து மட்டும்தான் எடுக்கப்பட வேண்டும். மேலும், தினசரிப் பயன்பாட்டிற்கு எந்தவித காரணத்திற்காகவும் நிலத்தடி நீரைப் பயன்படுத்தக்கூடாது என்ற விதிமுறை இருக்கிறது. ஆனாலும்கூட நிலத்தடி நீர் எடுக்கப்படுவதாகக் கூறப்படுகிறது. மேலும், எவ்வித காரணங்களுக்காகவும் அந்த சர்க்கரை ஆலையிலிருந்து கழிவுகள் வெளியேற்றப்படக்கூடாது, கழிவுகள் அந்த நிறுவனத்தின் வளாகத்திற்குள்ளேயே பயன்படுத்தப்பட வேண்டும் என்றும் மழைக் காலங்களில்கூட, மழை நீரும் அந்தக் கழிவு நீரும் கலக்கக்கூடாது என்றும் விதிமுறை இருந்தபோதிலும், மழைக் காலங்களில், அந்தக் கழிவுகள் மழை நீருடன் கலந்து அருகில் இருக்கக்கூடிய செம்மேடு, தென்பாலை, சொக்கனந்தல் போன்ற*





*ஏரிகளில் கலந்து, அந்த ஏரி நீர் முற்றிலுமாக மாசுப்படக்கூடிய ஒரு சூழ்நிலை, அதாவது நீரின் நிறம் கருமையாக மாறக் கூடிய சூழ்நிலை இருக்கிறது. ஆடு, மாடுகள்கூட அந்த நீரை உட்கொள்வதற்கு இயலாத சூழ்நிலை அங்கு அமைந்துள்ளது. எனவே, மழைக் காலங்களில் அந்தக் கழிவுகளும், மழை நீரும் கலக்காமல் இருப்பதற்கு நடவடிக்கை எடுக்க அரசு முன்வர வேண்டுமென்று கேட்க விரும்புகிறேன். அதேபோல், அந்த* co–generation plant–*ல். . .*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. கணேஷ்குமார், கேள்வியை மட்டும் கேளுங்கள்.*

**திரு. அ. கணேஷ்குமார்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேள்வியை மட்டும்தான் கேட்கிறேன். கரும்பிலிருந்து எடுக்கப்படும் பகாஸை மட்டுமே எரிபொருளாகப் பயன்படுத்த வேண்டுமென்ற விதியும் இருக்கிறது. பகாஸை மட்டும் பயன்படுத்தினால், அங்கிருந்து அதிகப்படியாக சாம்பல் வந்து படியாது. ஆனால், சுற்றியிருக்கக்கூடிய கிராமங்களான தென்பாலை, செம்மேடு, தேவந்தாங்கல், கலத்தம்பட்டு, பாலப்பாடி, புதுப்பாளையம் போன்ற பத்து கிராமங்களில் அதிகப்படியாக சாம்பல் படிவதாக அந்த ஊர் மக்கள் புகார் கூறியிருக்கின்றனர்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. கணேஷ்குமார், கேள்வியை மட்டும் கேளுங்கள். விளக்கமாகப் பேசிக் கொண்டிருக்காதீர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள்.*

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ராஜ்ஸ்ரீ சுகர்ஸ் தொழிற்சாலையின் செயல்பாட்டில் விதிமீறல்கள் எதுவும் இருப்பது நிரூபணமானால், இந்த அரசு, விதிகளின்படி கடுமையான நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. கணேஷ்குமார் அவர்கள்.*

**திரு. அ. கணேஷ்குமார்:** *மாண்புமிகு தமிழக முதல்வரின் பதிலுக்கு பணிவான நன்றியினைத் தெரிவித்து அமர்கிறேன். நன்றி.*

[2013 *மார்ச்* 26

*முற்பகல் 10–40*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா வரிசை எண் 69, மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. பவுன்ராஜ், மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

**69—**

## கடைமடை ரெகுலேட்டர்

***7182—திரு. சு. பவுன்ராஜ்:**

*மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*பூம்புகார் தொகுதி, காலமநல்லூர் ஊராட்சி, அம்மனாற்றின் குறுக்கே கடைமடை ரெகுலேட்டர் அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

**மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம், பொதுப் பணித் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*நாகப்பட்டினம் மாவட்டம், பூம்புகார் தொகுதி, காலமநல்லூர் ஊராட்சியில் மஞ்சளாறு கடைமடைப் பகுதி, அன்னப்பன்பேட்டை ரெகுலேட்டருக்குக் கீழே அம்மனாறு என்ற பெயரிலே ஓர் ஆறு சுமார் 6.5 கிலோ மீட்டர் தூரம் சென்று வங்காள விரிகுடா கடலிலே கலக்கிறது. கடல் உயரும் காலங்களில் கடல் நீர் அம்மனாற்றின் வழியாக உட்புகுந்து விளைநிலங்களைப் பாதிப்படைய வைக்கின்றது. இதனைத் தவிர்ப்பதற்காக,*

*"வருமுன்னர்க் காவாதான் வாழ்க்கை எரிமுன்னர்*
*வைத்தூறு போலக் கெடும்"*

*என்ற வள்ளுவரின் வாய்மொழி வழி நடக்கின்ற மாண்புமிகு காவேரித் தாயினுடைய அரசு, ஆசிய மேம்பாட்டு வங்கி நிதியுதவியுடன் பூம்புகார் தொகுதி, காலமநல்லூர் ஊராட்சி, அம்மனாற்றின் குறுக்கே கடல்நீர் உட்புகாமல் தடுக்க கடைமடை ரெகுலேட்டரைக் கட்டுவதற்கு உத்தேசித்துள்ளது என்பதை இந்த நேரத்திலே தங்கள்வாயிலாக தெரிவித்துக்கொண்டு, ஆசிய வங்கி நிதியுதவி கிடைக்கப் பெற்றவுடன் இதேபோல 31 இடங்களில் பணிகள் நடைபெறும் என்பதைத் தங்கள்வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*



2013 *மார்ச்* 26]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. பவுன்ராஜ் அவர்கள்.*

**திரு. சு. பவுன்ராஜ்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழ்நாட்டினுடைய முதலமைச்சர் அம்மா அவர்கள் நீதியின் துணை கொண்டு காவேரியிலிருந்து நாம் பெறவேண்டிய உரிமையைப் பெற்றெடுத்த பொன்னியின் செல்வி அம்மா அவர்களை வணங்குகிறேன். கடைக்கோடிப் பகுதியாக இருக்கிற என்னுடைய தொகுதியின் காலமநல்லூர் ஊராட்சியிலே ஏறக்குறைய 3,000 ஏக்கர் நிலப்பரப்பு கொண்ட அந்தப் பகுதியிலே வெள்ளக் காலத்திலே உப்பு நீர் புகாமல் தடுப்பதற்கு மாண்புமிகு அம்மா அவர்கள் தாயுள்ளத்தோடு சென்ற ஆண்டு 2012–2013 இல், 1,200 கோடி ரூபாய் நிதியை அந்த மாவட்டத்திற்கு ஒதுக்கீடு செய்து, அதன்மூலம் இன்றைக்கு என்னுடைய பகுதியிலே அந்த ரெகுலேட்டர் அமைப்பதற்கு வழங்கப்படும் என இந்த நேரத்திலே அறிவித்த மாண்புமிகு அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய மனமார்ந்த நன்றியைக் கூறி அமர்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா வரிசை எண் 70, மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாலகிருஷ்ணன், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

**70—**

## கால்நடை கிளை நிலையம்

***21537—திரு. க. பாலகிருஷ்ணன்:**

*மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) சிதம்பரம் தொகுதி, குமராட்சி ஒன்றியம், சிவபுரி கிராமத்தில் கால்நடை கிளை நிலையம் அமைக்க அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

[2013 மார்ச் 26

(அ) மற்றும் (ஆ) திட்டங்களுக்காக மக்கள் அல்ல, மக்களுக்காகத் திட்டங்கள் என்கின்ற (மேசையைத் தட்டும் ஒலி) அம்மா அவர்களுடைய தாரக மந்திரத்திற்கேற்ப தேவைப்படுகின்ற இடங்களிலே அரசின் விதிமுறைக்கேற்ப கால்நடை கிளை நிலையங்களை அமைத்து வருகின்றோம். ஆனால், நம்முடைய உறுப்பினர் திரு. பாலகிருஷ்ணன் அவர்கள் குறிப்பிடுகின்ற சிவபுரி கிராமத்திலே அரசின் விதிமுறைகளுக்கேற்ப அங்கே 3,000 கால்நடைகள் இருக்க வேண்டும். அங்கே அந்த அளவுக்கு இல்லாத காரணத்தினால் தற்சமயம் அமைக்க முடியாது. எனினும், வருங்காலத்திலே கால்நடைகள் அதிகமாகின்ற நேரத்திலே அமைக்க மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு பரிசீலிக்கும் என்பதைத் தங்கள்வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாலகிருஷ்ணன் அவர்கள்.

**திரு. க. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குமராட்சி ஒன்றியம், சிவபுரி கிராமம் என்பது 10 கிராமங்களுக்கு மையமான கிராமமாக இருக்கின்றது. அந்த 10 கிராமங்களிலே இருக்கக்கூடிய கால்நடைகள் அனைத்தும் இங்கே தான் வந்து செல்ல வேண்டியிருக்கிறது. ஏற்கெனவே அங்கு வாரத்திற்கு இரண்டு முறை கால்நடை கிளை நிலையம் செயல்பட்டது. வாரத்திற்கு இரண்டு முறை மருத்துவர் வந்து வைத்தியம் செய்துவிட்டுச் சென்றார். ஆனால், மருத்துவர்கள் பற்றாக்குறையின் காரணமாகவோ என்னவோ தற்சமயம் மருத்துவர்கள் வராமல் விட்டுவிட்டார்கள். ஆகவே, அங்கே மருத்துவர்களும் இல்லை. கால்நடை கிளை நிலையமும் இல்லை என்ற நிலைதான் ஏற்பட்டிருக்கிறது. எனவே, பக்கத்திலே ஒரு பெரிய பகுதியாக இருக்கின்ற அண்ணாமலை நகர் பேரூராட்சியும் இருக்கின்ற காரணத்தினாலே அதிகமான கால்நடைகள் இருக்கின்றன. எனவே, மீண்டும் அந்தக் கால்நடை கிளை நிலையத்தைத் துவக்குவது அந்தப் பகுதி மக்களுக்குப் பயனுள்ளதாக இருக்குமென்று கருதி, இதை நிறைவேற்றித் தரவேண்டுமென்று கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.



2013 மார்ச் 26]

**மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய கால்நடைப் பராமரிப்புத் துறை ஆய்வு செய்து பார்த்ததில் அங்கே 591 கால்நடை அலகுகள்தான் இருப்பதாகத் தெரிய வருவதால், அங்கே தற்சமயம் தொடங்க முடியவில்லை. சிவபுரி கிராமத்திற்கு அருகிலேயே திருவக்குளத்தில் ஒரு கால்நடை கிளை நிலையமும், கவரப்பட்டிலே ஒரு கால்நடை மருந்தகமும், அம்மாப்பேட்டையிலே ஒரு கால்நடை மருந்தகமும் செயல்பட்டு வருகின்றன. அங்கே அளிக்கின்ற சிகிச்சைகளே போதுமானது என்பது என்னுடைய கருத்தாக உள்ளது. இருந்தாலும், எதிர்காலத்திலே அங்கு கால்நடை கிளை நிலையம் அமைக்க மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆணையைப் பெற்று பரிசீலனை செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாலகிருஷ்ணன் அவர்கள்.

**திரு. க. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குறைந்தபட்சம் வாரத்திற்கு இரண்டு முறையாவது மருத்துவர்கள் வந்து அங்கே கால்நடைகளுக்கு வைத்தியம் செய்வதற்கு ஏற்பாடு செய்தால் அந்த மக்களுக்கு உதவியாக இருக்குமென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாவட்டந்தோறும் நடமாடும் கால்நடை மருத்துவமனைகள் வேன்களின்மூலமாக நடைபெற்று வருகின்றன. அந்த அடிப்படையிலே உறுப்பினர் கோருகின்ற கிராமத்திற்கு நடமாடும் கால்நடை மருத்துவமனையை வாரத்திற்கு இரண்டு முறை அனுப்ப ஆய்வு செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10—45

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. டி.ஆர்.பி. ராஜா அவர்கள்.

**திரு. டி.ஆர்.பி. ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களது மன்னார்குடி சட்டமன்றத் தொகுதியைச் சார்ந்த எடக்கீழையூர், செருமங்கலம் உள்ளிட்ட பெரிய கிராமங்களில் கால்நடை மருத்துவமனைகள் இல்லாததால் மக்கள் பெரும் அவதிக்குள்ளாகின்றார்கள். கால்நடைகளின் சிகிச்சைக்காக தொலைவில் உள்ள மருத்துவமனைகளுக்குச் செல்ல வேண்டியிருப்பதால் மக்கள் மிகவும் சிரமப்படுகின்றார்கள். மக்களின் இந்தக் கோரிக்கையை ஏற்று அரசு புதிய கால்நடை மருத்துவமனைகளை அங்கே உருவாக்க முன்வந்தால் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து மருத்துவமனை கட்டுவதற்கான நிதியை அளிக்கத் தயாராக இருக்கிறேன் என்று நான் உறுதியளிக்கிறேன். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அங்கு புதிய கால்நடை மருத்துவமனை அமைக்க ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் கோருகின்ற பகுதிகளிலே அரசின் விதிகளுக்கு உட்பட்டு அங்கே போதுமான அளவுக்கு கால்நடை அலகுகள் இருக்குமென்று சொன்னால், நிச்சயமாக அங்கே கால்நடை கிளை மருத்துவமனை அமைக்க மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு பரிசீலனை செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 71, மாண்புமிகு உறுப்பினர் திரு. கடம்பூர் ராஜு, மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.

**71—**

## சொந்தக் கட்டடம்

*__6449—திரு. கடம்பூர் ராஜு:__

மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—





கோவில்பட்டி வட்டம், கடம்பூர் சார் பதிவாளர் அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. பி.வி. ரமணா, வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

நூறு ஆண்டுகள் பழமை வாய்ந்த அரசு கட்டடங்கள், பழுதடைந்த அரசு கட்டடங்கள் மற்றும் தனியார் கட்டடங்களில் இயங்கி வரும் 52 சார் பதிவகங்களுக்குச் சொந்தக் கட்டடங்கள் கட்டுவதற்கு அரசாணை (நிலை) எண் 57, வணிக வரி மற்றும் பதிவுத் துறை, நாள் 12–4–2012–ல் நிருவாக அனுமதியும், ஒரு சார் பதிவகத்திற்கு ரூ.50 இலட்சம் வீதம் ரூ.26 கோடி நிதி ஒப்பளிப்பும் செய்து மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதலமைச்சர் அம்மா அவர்களின் அரசால் ஆணையிடப்பட்டுள்ளது. அவ்வாறு அரசு கட்டடம் கட்ட தெரிவு செய்யப்பட்ட 52 சார் பதிவகங்களின் பட்டியலில் பாளையங்கோட்டை பதிவு மாவட்டம், கடம்பூர் சார் பதிவாளர் அலுவலகமும் அடங்கும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு தங்கள்வாயிலாக தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கடம்பூர் ராஜு அவர்கள்.

**திரு. கடம்பூர் ராஜு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

'கொடைஅளி செங்கோல் குடியோம்பல் நான்கும்
உடையானாம் வேந்தர்க்கு ஒளி'

என்ற குறளின் வழியில் வாரி வழங்கும் வள்ளலாகவும், எல்லோரிடத்திலும் பரிவு காட்டுபவராகவும், நடுநிலை தவறாமல் ஆட்சி செய்பவராகவும், குடிமக்களைப் பேணிக்காப்பவராகவும் விளங்கும் ஆட்சியாளரே, (மேசையைத் தட்டும் ஒலி) ஆட்சியாளர்களுக்கெல்லாம் தலைசிறந்த ஆட்சியாளர் என்ற புகழோடு விளங்குபவராவார் என்ற குறளின் அடிப்படையில், அப்புகழுக்குரிய இதய தெய்வம், தமிழகத்தின் பொற்கால முதல்வர் மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்பாதம் வணங்கி, கடம்பூர் பேரூராட்சியில் புதிய சார் பதிவாளர் அலுவலகமும், கோவில்பட்டியில் ஒரு புதிய சார் பதிவாளர் அலுவலகமும் கட்டித் தந்த மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின்

[2013 மார்ச் 26

அரசுக்கு தொகுதி மக்களின் சார்பாக நெஞ்சார்ந்த நன்றிகளை பொற்பாதங்களில் காணிக்கையாக்கி அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. டில்லி பாபு அவர்கள்.

**திரு. ப. டில்லி பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தருமபுரி மாவட்டம், அரூர் தொகுதியில் 43 கிராமப் பஞ்சாயத்துகளை உள்ளடக்கிய மொரப்பூர் பகுதியில் ஏறக்குறைய 30 ஆண்டுகளுக்கு மேலாக வாடகைக் கட்டத்தில் சார் பதிவாளர் அலுவலகம் செயல்பட்டு வருகிறது. அதற்குத் தேவையான இடம் அங்கு இருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அங்கு புதிய அலுவலகக் கட்டடம் கட்ட அனுமதி வழங்குவார்களேயானால், உடனடியாக அப்பணிகளைத் துவங்குவதற்குத் துறையினர் முன் வருகிறார்கள். ஆகவே, இந்த ஆண்டிலாவது மொரப்பூரில் சார் பதிவாளர் அலுவலகம் கட்டுவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள்வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி.வி. ரமணா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிய பகுதியில் இடம் இருப்பின் நிச்சயமாக மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் தலைமையிலான அரசு இதனை ஆய்வு செய்து நடவடிக்கை எடுக்கும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு அம்மா அவர்களின் இந்த அரசு பொறுப்பேற்றதிலிருந்து தமிழகத்தில் இருக்கின்ற தனியார் மற்றும் அரசுக் கட்டடங்களில் இயங்குகின்ற அத்தனை சார் பதிவாளர் அலுவலகங்களுக்கும் புதிய கட்டடங்கள் கட்டுவதற்கு ஆணையிட்டுள்ளார்கள். அதன்படி 2011–2012 ஆம் ஆண்டு தனியார் கட்டடங்களில் செயல்பட்ட 33 அலுவலகங்களுக்கும், அரசுக் கட்டடங்களில் செயல்பட்ட 19 அலுவலகங்களுக்கும், 2012–2013–ல் தனியார் கட்டடங்களில் செயல்பட்ட 38 அலுவலகங்களுக்கும், அரசுக் கட்டடங்களில் செயல்பட்ட 10 அலுவலகங்களுக்கும் புதிய கட்டடங்கள் கட்ட ஆணையிடப்பட்டுள்ளது.



2013 மார்ச் 26]

முற்பகல் 10–50

அதேபோல, ஒருங்கிணைந்த பதிவுத் துறை வளாகங்கள் தனியார் கட்டடங்களிலே 18 இடங்களிலும், அரசு இடங்களிலே 11 கட்டடங்களிலும் இருந்தவற்றிற்கு மொத்தம் 29 கட்டடங்கள் கட்டுவதற்கு ஆணையிட்டுள்ளார்கள் என்பதை இந்த நேரத்திலே மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 72, மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவி. சம்பத்குமார், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**72—**

### பேருந்து பணிமனை

***21030—திரு. கோவி. சம்பத்குமார்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வாணியம்பாடி தொகுதி, ஆலங்காயம் பகுதியில் பேருந்து பணிமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவையின் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கிறேன்.

(அ) மற்றும் (ஆ) அரசு போக்குவரத்துக் கழகம், விழுப்புரம் கோட்டம், வேலூர் மண்டலத்தைச் சேர்ந்த திருப்பத்தூர், ஆம்பூர் மற்றும் கொணவட்டம்–2 ஆகிய பணிமனைகள்மூலம் ஆலங்காயத்திற்கு 6 பேருந்துகள் மட்டுமே முழுமையாகவும், 12 பேருந்துகளும் பல்வேறு இடங்களிலிருந்து குறுநடைகளாகவும் மற்றும் அரசு போக்குவரத்துக் கழகம், சேலம் கோட்டம், தருமபுரி மண்டலம்மூலம் 4 பேருந்துகளும் இயக்கப்பட்டு வருகின்றன. எனவே, மிகக் குறைந்த எண்ணிக்கையிலான பேருந்துகளுக்காக ஆலங்காயத்தில் தனியாகப் பணிமனை அமைக்க தற்சமயம்

[2013 மார்ச் 26

சாத்தியக்கூறுகள் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவி. சம்பத்குமார் அவர்கள்.

**திரு. கோவி. சம்பத்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'மக்களுக்காக திட்டங்களே தவிர, திட்டங்களுக்காக மக்கள் இல்லை' என்ற தெய்வவாக்காக விவசாயிகளுடைய வாழ்வாதாரத்தைப் பாதுகாக்கின்ற வகையில் சங்கே முழங்கு என்று சரித்திரம் படைக்கின்ற தாயே, காவேரி நடுவர் மன்றத்தின் தீர்ப்பை அரசிதழில் வெளிவரச் செய்து தமிழக விவசாயிகளின் வாழ்க்கையில் ஒளியேற்றிய பொன்னியின் செல்வியே, புரட்சித் தலைவி அம்மா அவர்களே, (மேசையைத் தட்டும் ஒலி) சாதாரண மக்களையும் சாமான்ய மக்களாய் மாற்றிப் பார்க்கும் சாதனைத் தாயே, தாய் மண்ணிலிருந்து புறப்பட்ட விதை நன்றி பாராட்ட பூமியின் திசை நோக்கி தலை சாய்ப்பதுபோல, தாயே உங்கள் பொற்பாதங்களில் நன்றி மலர்களைக் காணிக்கையாக்குகின்றேன் அம்மா.

வாணியம்பாடி, ஆலங்காயம், ஒடுக்கத்தூர் பேரூராட்சி, ஜவ்வாது மலை ஆகிய பகுதிகளிலேயிருந்து மலையடிவாரத்தில் அமைந்துள்ள ஆலங்காயம் பேரூராட்சியிலிருந்து திருப்பத்தூர் பணிமனைக்கு 25 கிலோ மீட்டர் தூரமும், ஆம்பூர் பணிமனைக்கு 35 கிலோ மீட்டர் தூரமும் பேருந்து காலியாகச் செல்வதால் டீசல் விரயமாகிறது. தற்போது மத்திய அரசு நிமிடத்திற்கு நிமிடம் பெட்ரோல், டீசல் விலையை உயர்த்தும் இந்தக் காலக்கட்டத்தில், பண விரயத்தை மிச்சப்படுத்தும் விதத்தில் மலைவாழ் மக்கள் நலன் கருதி ஆலங்காயம் பேரூராட்சிப் பகுதியில் அரசுப் பேருந்து பணிமனை அமைக்க அரசு ஆவன செய்ய வேண்டுமாய் மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், தமிழகத்தில் இருக்கின்ற 8 அரசுப் போக்குவரத்துக் கழகங்களில், எந்த அரசுப் போக்குவரத்துக் கழகப் பேருந்தாக இருந்தாலும்சரி, எந்தப் பணிமனையைச் சேர்ந்த பேருந்தாக இருந்தாலும்சரி, எந்தப் பேருந்தையும் சாலை ஓரத்தில் நிறுத்தக்கூடாது என்று உத்தரவிட்டு, 2 ஆண்டுகளில் மட்டும் தமிழகத்தில் 43 புதிய பணிமனைகளைத் தொடங்குவதற்கு உத்தரவிட்டு, இப்போது அந்தப் பணிகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. (மேசையைத் தட்டும் ஒலி) இந்த 43 பணிமனைகளோடு சேர்ந்து இன்னும் பல்வேறு இடங்களிலும், எங்கெல்லாம் பேருந்துகளுக்குண்டான டீசல் செலவினங்கள் அதிகமாகிறதோ அந்த இடங்கள் எல்லாம் ஆய்வு செய்யப்பட்டு, அதைச் குறைப்பதற்குண்டான சாத்தியக்கூறுகள் ஆய்வு செய்யப்பட்டு வருகின்றன.



2013 மார்ச் 26]

முந்தைய 5 ஆண்டுகளில் குறிப்பாகச் சொல்லவேண்டுமென்று சொன்னால் 2006–2011 ஆம் ஆண்டு வரை தமிழகத்தில் புதிதாக 10 பணிமனைகள் மட்டுமே தொடங்கப்பட்டிருக்கின்றன. பணிமனைகள் கூடுதலாக தொடங்கப்பட்டு, பேருந்துகள் சுத்தம் செய்யப்பட்டு, மக்களுக்கு நல்லமுறையில் சேவைகளைச் செய்யவேண்டுமென்ற மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களுடைய உத்தரவிற்கிணங்க, 43 பணிமனைகள் அமைப்பதற்குண்டான பணிகள் நடைபெற்று வருகின்றன. (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுகின்ற அந்த இடத்தில் பேருந்துகள் எண்ணிக்கை, பயணிகளுக்கு சர்வீஸ் வசதி கூடுதலாகத் தேவைப்படுகின்ற பட்சத்தில் அந்த இடத்திலே நிலத்தினைக் கையகப்படுத்தி மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களுடைய உத்தரவு பெற்று பணிமனைத் தொடங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவி. சம்பத்குமார் அவர்கள்.

**திரு. கோவி. சம்பத்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும் என் தொகுதி மக்கள் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. சுரேஷ்குமார் அவர்கள்.

**திரு. டி. சுரேஷ்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது செங்கம் தொகுதிக்குட்பட்ட பகுதியில் பணிமனை அமைப்பதற்குத் தங்களிடத்திலே ஏற்கெனவே சொல்லியிருந்தேன். அதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு முதற்கண் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஏனென்றால் அதற்கு இடம் தேர்வு செய்யப்பட்டுவிட்டது. அந்தப் பணிமனையை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எப்போது கட்டிமுடித்துக் கொடுப்பார்கள் என்பதைத் தங்கள்வாயிலாக அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட அந்த இடத்தில் பணிமனைத் தொடங்க இப்போது திட்ட மதிப்பீடு தயார் செய்யப்பட்டு வருகிறது. திட்ட மதிப்பீடு தயார் செய்யப்பட்டவுடன் மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களுடைய உத்தரவு பெற்று, டெண்டர் விடும் பணிகள் முடிக்கப்பட்டு, விரைவில் அந்தப் பணிமனை தொடங்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10—55

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 73, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ.கே.டி. ராஜா, மாண்புமிகு தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் அவர்கள்.

**73—**

## தகவல் தொழில்நுட்பப் பூங்கா

***3676—திரு. ஏ.கே.டி. ராஜா:**

மாண்புமிகு தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—





(அ) திருப்பரங்குன்றம் தொகுதி, வடபழஞ்சியில் ஒருங்கிணைந்த தகவல் தொழில்நுட்பப் பூங்காவை விரைவில் செயல்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. ந. சுப்பிரமணியன், தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர்:** மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்களுடைய பாதம் பணிந்து பேரவைத் தலைவர் அவர்களின் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கிறேன்.

(அ) மற்றும் (ஆ) ஆம். மதுரை மாவட்டம், திருப்பரங்குன்றம் தொகுதி, வடபழஞ்சி கிராமத்தில் அமைந்துள்ள தகவல் தொழில்நுட்ப சிறப்புப் பொருளாதார மண்டலம் மொத்தம் 245.17 ஏக்கர் நிலப்பரப்பில் அமைந்துள்ளது. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியில் பொது உள்கட்டமைப்பு வசதிகள் ரூ.14 கோடி செலவில் முடிவடைந்துள்ளன. இச்சிறப்புப் பொருளாதார மண்டலத்தின் தமிழ்நாடு மின்னணு நிறுவனத்தின் முதலீடு ரூ.45 கோடி இருக்கும். மேலும், இச்சிறப்புப் பொருளாதார மண்டலத்தில் 60 ஏக்கர் நிலம் திருவாளர்கள் எச்.சி.எல். நிறுவனத்திற்கும் 50 ஏக்கர் நிலம் திருவாளர்கள் சத்தியம் நிறுவனத்திற்கும், 5 ஏக்கர் நிலம் திருவாளர்கள் சதர்ன்லேன்டு நிறுவனத்திற்கும், 5 ஏக்கர் நிலம் திருவாளர்கள் காலிபர் பாயிண்ட் நிறுவனத்திற்கும் மற்றும் 2 ஏக்கர் நிலம் திருவாளர்கள் ஹெல்த் பிளான் சிஸ்டம் இந்தியா லிமிடெட் நிறுவனத்திற்கும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. மேலும், இந்த எல்கோசெஸ்சில் மீதம் உள்ள நிலத்தின் பரப்பளவு 66.15 ஏக்கர் ஆகும். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியில் 2013 ஆம் ஆண்டுக்குள் பல்வேறு தொழில்நுட்ப நிறுவனங்கள் அமைய வாய்ப்புகள் உள்ளன. அதன்மூலம் சுமார் 20 ஆயிரம் நபர்களுக்கு நேர்முகமாகவும், 40 ஆயிரம் நபர்களுக்கு மறைமுகமாகவும் வேலைவாய்ப்புகள் ஏற்பட வாய்ப்புகள் உள்ளன என்பதையும் மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ.கே.டி. ராஜா, இருக்கையில் இல்லை.

[2013 மார்ச் 26

*வினா வரிசை எண் 74, மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.பி.எஸ். சிவசுப்பிரமணியன், மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

**74—**

## விடுதி

**5422*—**திரு. எம்.பி.எஸ். சிவசுப்பிரமணியன்:**

*மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*நெய்வேலி தொகுதி, பண்ருட்டி ஒன்றியம், காடாம்புலியூரில் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறையின் மூலமாக மாணவ, மாணவியர் விடுதி கட்ட அரசு ஆவன செய்யுமா?*

**மாண்புமிகு திரு. அ. முஹம்மத்ஜான், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*வாழும் வள்ளல், அனைத்துத் தரப்பு மக்களுக்கும் உயிர்நாடியாக, ஒளிவிளக்காகத் திகழும் மனிதநேயம் மிக்க தலைவி மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தமிழ்நாட்டிலுள்ள அனைத்து பிற்படுத்தப்பட்டோர் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினருக்கான அனைத்து விடுதிகளும் சொந்தக் கட்டடத்தில் இயங்க வேண்டுமென்று ஆணை பிறப்பித்து, இன்றுள்ள சூழ்நிலையில் மொத்தம் உள்ள 1,294 விடுதிகளில் ஆயிரம் விடுதிகள் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கருணையால் சொந்தக் கட்டடத்தில் இயங்கி வருகின்றன. (மேசையைத் தட்டும் ஒலி) மீதம் உள்ள 294 விடுதிகளில் 226 விடுதிகளுக்குச் சொந்தக் கட்டடம் கட்ட மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி கட்டுமானப் பணிகள் நடை பெற்று வருகின்றன. இந்த விடுதிகளும் விரைவில் பணி முடிந்து மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களால் துவங்கப்படும் என்பதை இந்த நேரத்தில் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொண்டு, இது மாண்புமிகு அம்மா அவர்களின் மிகப்பெரிய வரலாற்றுச் சாதனையாகும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.*



2013 மார்ச் 26]

*பண்ருட்டி ஒன்றியம், காடாம்புலியூரில் பிற்படுத்தப்பட்டோர் நல பள்ளி மாணவியர் விடுதி அரசுக் கட்டடங்களில் இயங்கி வருகின்றது. ஆகவே, காடாம்புலியூரில் மாணவியர் விடுதி கட்டும் வினா எழாது. மேலும், காடாம்புலியூரில் மாணவ–மாணவியர் விடுதி துவங்குவது குறித்து கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை என்பதைத் தங்களின்மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.பி.எஸ். சிவசுப்பிரமணியன் அவர்கள்.*

**திரு. எம்.பி.எஸ். சிவசுப்பிரமணியன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடலூர் மாவட்டம், நெய்வேலி தொகுதியில் 'தானே' புயலால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு 270 சமுதாய ஆழ்குழாய்க் கிணறுகள் (Community Borewells) அமைப்பதற்கு ரூ.11 கோடி வழங்க ஆணையிட்ட மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் பொற்பாதங்களைப் பணிந்து என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

*நெய்வேலி தொகுதி, காடாம்புலியூர் பிற்படுத்தப்பட்ட மக்கள் அதிகம் வாழ்கின்ற பகுதியாகும். இந்தப் பகுதியில் அரசு மேல்நிலைப் பள்ளியில் சுமார் 1,200 மாணவ மாணவியர்கள் படித்து வருகின்றார்கள். இந்தப் பகுதிகளில் இருக்கின்ற மாணவர்களின் நலன் கருதி அரசு ஆண்கள் விடுதி அமைத்துத் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகின்றேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. அ. முஹம்மத்ஜான்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கேட்கும் இடத்தில் மாணவர் விடுதி கண்டிப்பாகத் தேவைப்படுமென்றால், எதையும் கேட்காமலே மக்களின் தேவைகளை அறிந்து திட்டங்களைத் தீட்டும் எங்கள் பொன்மனத் தாய் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கவனத்திற்கு எடுத்துச்சென்று பரிசீலனை செய்யப்படும் என்பதைத் தங்கள்மூலமாக தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.பி.எஸ். சிவசுப்பிரமணியன் அவர்கள்.

**திரு. எம்.பி.எஸ். சிவசுப்பிரமணியன்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பரிசீலனை செய்யப்படும் என்று அறிவித்தமைக்கு மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 75, மாண்புமிகு உறுப்பினர் முனைவர் கோவி. செழியன், மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

**75—**

## தங்கும் அறைகள்

***3961—முனைவர் கோவி. செழியன்:**

மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவிடைமருதூர் தொகுதி, கஞ்சனூர் அருள்மிகு அக்னீஸ்வரசுவாமி திருக்கோயிலுக்கு வரும் பக்தர்களுக்கு தங்கும் அறைகள் கட்டித் தர அரசு ஆவன செய்யுமா?

முற்பகல் 11–00

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன்னனுமதியுடன் வினாக்கள்–விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**மாண்புமிகு திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன், இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கிறேன்.

தஞ்சாவூர் மாவட்டம், திருவிடைமருதூர் வட்டம், கஞ்சனூர் அருள்மிகு அக்னீஸ்வரசுவாமி திருக்கோயில் இந்து சமய அறநிலையத் துறையின் கட்டுப்பாட்டில் உள்ள திருக்கோயிலாகும். இத்திருக்கோயில் மூன்றாம் நிலை செயல் அலுவலராலும், மதுரை ஆதீனம் அவர்களைப் பரம்பரை அறங்காவலராகக் கொண்டும் நிருவாகம் செய்யப்பட்டு வருகிறது. இத்திருக்கோயில் நவக்கிரக ஸ்தலங்களின் சுக்கிரன் பரிகார ஸ்தலமாக விளங்கி வருவதால், இந்தியாவிலுள்ள பல மாநிலங்களிலிருந்தும் பக்தர்கள் இத்திருக்கோயிலுக்கு வருகை புரிகின்றனர். இந்தத் திருக்கோயிலுக்கு வரும் பக்தர்கள் தங்குவதற்கு வசதியாக பக்தர்கள் ஓய்வு மண்டபம் சுமார் 1,400 சதுர அடி பரப்பளவில், சுமார் 14 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் ஏற்கெனவே கட்டப்பட்டு, தற்போது பயன்பாட்டில் உள்ளது.





மேலும், தமிழக முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய மேலான ஆணைப்படி, ஏற்கெனவே இத்திருக்கோயிலிலுள்ள பக்தர்கள் ஓய்வு மண்டபத்தில் 5 இலட்சத்து 10 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில், கூடுதலாக வசதிகள் ஏற்படுத்தவும் இதைத் தவிர கூடுதலாக 4,160 சதுர அடி பரப்பளவில் பக்தர்கள் தங்கும் புதிய விடுதி கட்ட ரூ. 66,25,000/– மதிப்பீட்டில் முன்மொழிவுகள் சுற்றுலாத் துறைக்கு அனுப்பப்பட்டுள்ளன. சுற்றுலாத் துறையின் அனுமதி பெற்றவுடன் பணிகள் மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் முனைவர் கோவி. செழியன் அவர்கள்.

**முனைவர் கோவி. செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டம், திருவிடைமருதூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட கஞ்சனூரில் இருக்கக்கூடிய சுக்கிரன் திருத்தலமாக விளங்குகிற அருள்மிகு அக்னீஸ்வரசுவாமி ஆலயம் தினசரி ஆயிரக்கணக்கான பக்தர்கள் வந்து போகிற திருக்கோயில் ஆகும். வெள்ளி, சனி, ஞாயிறு போன்ற விடுமுறை நாட்களில் ஐந்தாயிரத்திற்கும் மேற்பட்ட பக்தர்கள் வந்து போகிறார்கள். ஆனால், அவர்களுக்கு உரிய தங்கும் வசதி இல்லாத சூழ்நிலையில் 1,400 சதுர அடி மட்டுமே உள்ள அந்தத் திருக்கோயிலினால், ஆயிரக்கணக்கான பக்தர்கள் தங்குவதற்கு வாய்ப்பு வசதி ஏற்படுத்தித் தர இயலவில்லை. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தங்கும் விடுதியைக் கட்டித் தர முன்வருவார்களா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

[2013 மார்ச் 26

**மாண்புமிகு திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"எல்லோரும் எல்லாமும் பெறவேண்டும் – இங்கு
இல்லாமை இல்லாத நிலை வேண்டும்"

என்கின்ற அடிப்படையில் (மேசையைத் தட்டும் ஒலி) தமிழகத்திலே ஆட்சி புரிந்து வரும் இதய தெய்வம் அம்மா அவர்களுடைய ஆட்சியிலே இல்லையென்று சொல்ல முடியாத அளவுக்கு தமிழகத்திலே இருக்கின்ற திருக்கோயில்களுக்கு வருகின்ற பக்தர்கள் தரிசனம் செய்வதற்கேற்ப, அனைத்து பகுதிகளிலும் அனைத்து ஏற்பாடுகளையும், செய்து கொடுத்துக் கொண்டிருக்கின்றார்கள். அந்த வகையிலே இந்தத் திருக்கோயிலில் மீண்டும் கூடுதலாக 4,160 சதுர அடி பரப்பளவில் பக்தர்கள் தங்குவதற்கு புதிய விடுதி கட்ட ரூ.66,25,000/– மதிப்பீட்டில் சுற்றுலாத் துறையின் மூலமாக அனுமதியைப் பெறுவதற்கு கோப்புகள் அனுப்பப்பட்டிருக்கின்றன. அதற்கு அனுமதி வரப் பெற்றவுடன், மாண்புமிகு அம்மா அவர்களுடைய அனுமதியோடு அங்கு பக்தர்கள் தங்கும் விடுதி கட்டப்படும் என்பதைத் தங்கள்வாயிலாகத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் முனைவர் கோவி. செழியன் அவர்கள்.

**முனைவர் கோவி. செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கும் விடுதி கட்டுவதற்கு அக்கோவிலுக்கு சற்று காலதாமதமாகும். ஆசிய வளர்ச்சி வங்கி நிதியை எதிர்பார்ப்பதால் வந்து போகிற பெண்கள், சிறுவர்கள், சிறுமியர்கள் சிறுநீர், மலம் கழிப்பதற்குக்கூட வயல் காடுகளுக்கு, கோயிலைச் சுற்றி அலைகிற ஒரு **சூழ்நிலை இருக்கிறது. 'மக்களுக்காகத்தான் திட்டம், திட்டத்திற்காக மக்கள் அல்ல' என்று சொல்லும் இந்த அரசு, கழிப்பறை வசதியை உடனடியாக அமைத்து பொது சுகாதார வளாகம். . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் பேசும்போது **என்று சொன்ன வார்த்தை அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



2013 மார்ச் 26]

**முனைவர் கோவி. செழியன்:** சுகாதாரமற்ற முறையில் அவர்கள் மலம் கழிக்கிற சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. எனவே, 'மக்களுக்காகத்தான் திட்டம், திட்டங்களுக்காக மக்கள் அல்ல' என்று சொல்லும் இந்த அரசு, பொது சுகாதார வளாகத்தையாவது உடனடியாக அமைத்துத் தருமா என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைத் தங்கள்வாயிலாகக் கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஐந்தாண்டு கால மைனாரிட்டி திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்சி (மேசையைத் தட்டும் ஒலி) எந்தவொரு திருக்கோயிலையும் கண்டுகொள்ளாத ஆட்சியாக, செயல்பட்டுக் கொண்டிருந்தது. மாண்புமிகு. . . (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். உறுப்பினர் கேட்டதற்குத்தானே அமைச்சர் பதில் சொல்கிறார்? (குறுக்கீடுகள்) அவர் கேட்டார், அமைச்சர் அவர்கள் பதில் சொல்கிறார்கள். (குறுக்கீடுகள்) சரி, உட்காருங்கள். மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

முற்பகல் 11–05

**மாண்புமிகு திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன்:** மாண்புமிகு இதய தெய்வம் கேட்காமலேயே அள்ளி அள்ளிக் கொடுத்துக் கொண்டிருக்கின்ற பாரி வள்ளல் (மேசையைத் தட்டும் ஒலி) புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்கால ஆட்சியில்தான் தமிழகத்திலே இருக்கின்ற அனைத்துக் கோயில்களுமே இப்போது புனரமைக்கப்பட்டு, பக்தர்களினுடைய தேவைக்கேற்ப அனைத்து வசதிகளையும் உடனடியாகச் செய்வதற்கு ஆணையும் பிறப்பித்து, (மேசையைத் தட்டும் ஒலி) பல்வேறு கோயில்களிலே அனைத்து பக்தர்களுக்கும் அனைத்து வசதிகளும் செய்து கொடுக்கப்பட்டிருக்கின்றன என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

[2013 மார்ச் 26

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்—விடைகள் முடிவுற்றன. (குறுக்கீடு)

**[குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 2. சிறப்புக் கவன ஈர்ப்பு

### தமிழக மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரால் தாக்கப்படுதல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சிறப்புக் கவன ஈர்ப்பு. தமிழக மீனவர்கள்மீது இலங்கைக் கடற்படையினர் நடுக் கடலில் தொடர்ந்து தாக்குதல் நடத்தி வருவதால் மீனவ மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள நிலை குறித்து திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. சுப. தங்கவேலன் அவர்களும், திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன் அவர்களும், பேரவை விதி 56—ன்கீழ் அறிவிப்புக் கொடுத்துள்ளார்கள். இந்திய கம்யூனிஸ்டு (மார்க்சிஸ்ட்) கட்சியைச் சார்ந்த திரு. அ. சவுந்தரராசன், செல்வி கே. பாலபாரதி, திரு. க. பாலகிருஷ்ணன், திரு. வீ.பி. நாகைமாலி ஆகியோரும், இந்திய கம்யூனிஸ்டு கட்சியைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. எம். ஆறுமுகம், திரு. சு. குணசேகரன், திரு. ந. நஞ்சப்பன், திரு. கே. உலகநாதன், திரு. பி.எல். சுந்தரம், திரு. வெ. பொன்னுப்பாண்டி ஆகியோரும், பாட்டாளி மக்கள் கட்சியைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. ம. கலை அரசு, திரு. அ. கணேஷ்குமார் ஆகியோரும், மனித நேய மக்கள் கட்சியைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா அவர்களும், புதிய தமிழகம் கட்சியைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி அவர்களும் சட்டமன்றப் பேரவை விதி 55—ன்கீழ் அறிவிப்புக்கு கொடுத்துள்ளார்கள். இதனை சிறப்புக் கவன ஈர்ப்பாக எடுத்துக்கொள்கிறேன். இதுகுறித்து அறிவிப்புக் கொடுத்தவர்கள், கட்சிக்கு ஒருவர் என்ற முறையில் சுருக்கமாக மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வரலாம். முதலில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் மாண்புமிகு உறுப்பினர் திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன் அவர்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள், அமைதியாக இருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர்கள் அமைதியாக



2013 மார்ச் 26] [பேரவைத் தலைவர்]

இருக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்) உட்காருங்கள், எல்லோரும் அமைதியாக இருக்கும்படி சொல்லிவிட்டேன் அல்லவா? (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர் திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், பேசுங்கள்.

***திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரால் தொடர்ந்து தாக்கப்படுவதால் ஒட்டுமொத்தமாகத் தமிழக மீனவர்களிடையே பதட்டமான ஒரு சூழ்நிலை இன்றைக்கு ஏற்பட்டு இருக்கின்றது. குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், இலங்கைக் கடற்படையினரால் ஏறக்குறைய 500 மீனவர்கள் தொடர்ந்து துப்பாக்கியால் சுடப்பட்டும், தாக்கப்பட்டும், அடித்தும் கொல்லப்பட்டிருக்கிறார்கள். தங்கச்சிமடத்தைச் சேர்ந்த 5 மீனவர்கள்மீது இலங்கைக் கடற்படையினர் பொய்யான வழக்கைத் தொடர்ந்ததால் ஏறக்குறைய 10 மாத காலமாக அவர்கள் இலங்கை சிறையில் துயரப்படுகின்ற நிலை ஏற்பட்டிருக்கிறது. எங்களுடைய தூத்துக்குடி மாவட்டம், தருவைக்குளத்தைச் சேர்ந்த 5 படகில் சென்ற மீனவர்களை இலங்கைக் கடற்படையினர் சிறைபிடித்து, கொடுமைப்படுத்தியபோது, எங்களுடைய தலைவர் கலைஞர் அவர்கள் மத்திய அரசாங்கத்தை வலியுறுத்தியதன் காரணமாக தருவைக்குளத்தைச் சேர்ந்த அந்த மீனவர்கள் விடுதலை செய்யப்பட்டார்கள். அதேபோல் இராமேஸ்வரம் பகுதியிலிருந்து 9 படகில் சென்ற மீனவர்கள் 53 பேரை சிறைபிடித்ததில் 19 பேர் இன்றுவரை சிறையில் இருக்கக்கூடிய நிலைமைக்குத் தள்ளப்பட்டு இருக்கின்றார்கள். குறிப்பாகச் சொல்லவேண்டுமென்று சொன்னால், கடற்கரைப் பகுதிகளில் இருக்கின்ற மீனவர்கள் அத்தனை பேரும் பல்வேறு நிலைகளில் இலங்கைக் கடற்படை வீரர்களால் தாக்கப்பட்டு, கொலை செய்யப்பட்டு, தவிக்கின்ற நிலைகளெல்லாம் இருக்கின்றன. இந்த நிலைகளை மாற்றுகின்ற வகையில் கச்சத் தீவை மீண்டும் மீட்டு, அந்தப் பகுதியில் மீனவர்கள் எந்த அச்சமும் இல்லாமல் மீன் பிடிப்பதற்கான நிலைகளை உருவாக்குகின்ற வகையிலே, மத்திய அரசாங்கமும், மாநில அரசாங்கமும் இணைந்து கச்சத் தீவை மீட்டுத் தருகின்ற பணிகளைச் செய்வதோடு, மீனவர்களுடைய அச்சத்தைப் போக்க வேண்டுமென்ற வேண்டுகோளை திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வருகின்றோம். நன்றி.

[2013 மார்ச் 26

*முற்பகல் 11–10*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இந்திய கம்யூனிஸ்டு (மார்க்சிஸ்ட்) கட்சியைச் சார்ந்த மாண்புமிகு உறுப்பினர் திரு. வீ.பி. நாகைமாலி அவர்கள்.

***திரு. வீ.பி. நாகைமாலி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக மீனவர்களை இலங்கைக் கடற்படையினர் தொடர்ந்து தாக்கி வருகின்றனர். குறிப்பாக, நாகப்பட்டினம் பகுதி மீனவர்களை இலங்கைக் கடற்படையினர் தொடர்ந்து கொடூரமான முறையில் தாக்கி வருகின்றனர். இதைக் கண்டித்து கடந்த 20–3–2013 முதல் நாகப்பட்டினம் தாலுகா மீனவர்கள் தொடர்ந்து வேலை நிறுத்தப் போராட்டத்திலே ஈடுபட்டு வருகின்றனர். நேற்றுகூட நாகப்பட்டிணத்திலே ஆயிரம் பெண்கள் உட்பட ஆயிரக்கணக்கான மீனவர்கள் இரயில் மறியல் போராட்டத்தை நடத்தி தங்களது எதிர்ப்பினைத் தெரிவித்திருக்கிறார்கள். இலங்கைக் கடற்படையினரின் கொடூரமான தாக்குதல் நாகப்பட்டினம் பகுதி மீனவ மக்களிடம் ஒரு பதற்றத்தையும், பீதியையும் உருவாக்கியுள்ளது. இதுகுறித்து நமது மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் கவனத்தையும், இந்தச் சபையினுடைய கவனத்தையும் ஈர்த்து அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இந்திய கம்யூனிஸ்டு கட்சியைச் சார்ந்த மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. உலகநாதன் அவர்கள்.

**திரு. கே. உலகநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த காலத்திலிருந்து தொடர்ந்து இதுவரை 600–க்கும் மேற்பட்ட தமிழக மீனவர்கள் கொல்லப்பட்டுள்ளார்கள். இந்த நிலையில் தொடர்ச்சியாக பாதிக்கப்படுகிற மீனவர்கள் தங்களுடைய உயிரையும் பொருட்படுத்தாது கடலுக்குச் சென்று மீன் பிடித்து வாழ்க்கை நடத்திக்கொண்டிருக்கிறார்கள். இலங்கைக் கடற்படையினர் தொடர்ச்சியாக மீனவர்களது வலையை அறுப்பதும், பிடிக்கும் மீனை அள்ளிக்கொண்டு செல்வதும், மீனவர்களைக் கொன்று குவிப்பதுமாக உள்ளார்கள். மத்தியிலே இருக்கக்கூடிய ஆட்சியாளர்கள் பாதிக்கப்படுவது தமிழக மீனவர்கள்தானே என்று நினைக்கிறார்களோ என்னவோ தெரியவில்லை. தமிழகத்தை இந்தியாவில் இருக்கிற மாநிலமாகக் கருதுவதாகத் தெரியவில்லை, கண்டு கொள்ளாத போக்கைதான் மத்திய அரசாங்கம் இதுவரை எடுத்துக்கொண்டு வருகிறது. தமிழக



2013 மார்ச் 26] [திரு. கே. உலகநாதன்]

முதலமைச்சர் மாண்புமிகு அம்மா அவர்களும் தொடர்ச்சியாக மாண்புமிகு பாரதப் பிரதமருக்கு கடிதம் எழுதினாலும்கூட கண்டு கொள்ளாத போக்குதான் உள்ளது. ஆகவே, மத்திய அரசாங்கம் இந்த விஷயத்தில் கண்டிப்பாக, கறாராக தனக்கு இருக்கக்கூடிய அதிகாரத்தைப் பயன்படுத்தி தமிழக மீனவர்கள் பாதிக்கப்படுவதைத் தடுத்து நிறுத்த உறுதியான நடவடிக்கையை எடுக்க வேண்டுமென்று இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பில் கேட்டு அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. கணேஷ்குமார் அவர்கள்.

**திரு. அ. கணேஷ்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1983 முதல் துவங்கி இன்றுவரை தமிழக மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரால் தாக்கப்படுவது தொடர்கதையாக நிகழ்ந்து கொண்டிருக்கிறது. தமிழக அரசு பொறுப்பேற்றதிலிருந்து இதுவரை மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் 10–க்கும் மேற்பட்டமுறை மத்திய அரசுக்குக் கடிதம்மூலம் வலியுறுத்தியும் மத்திய அரசு இதைக் கண்டுகொள்ளாத போக்குதான் தமிழகத்தில் நிலவிக் கொண்டு வருகிறது. மேலும், சமீபத்தில் நாகப்பட்டினம் மீனவர்கள் நான்கு பேர் கொடூரமான முறையில் வெட்டப்பட்டு காயங்களுடன் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுக்கொண்டிருக்கிறார்கள். இத்தகைய போக்கைப் பார்க்கும்போது தமிழக சட்டமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றி அனுப்பியதையும் மத்திய அரசு கண்டுகொள்ளாத ஒரு சூழ்நிலையில் தமிழக மீனவர்களை இந்திய மீனவர்களாக மத்திய அரசு பாவிக்கவில்லையோ என்கிற ஐயம் ஏற்படுகிறது. எனவே, தமிழக மீனவர்கள் மத்தியில் இருக்கக்கூடிய இந்த நிலையைப் போக்குவதற்கும், இந்தியா–ஸ்ரீலங்கா Joint Working Commission மூலம் இதற்கு ஒரு தீர்வு காணப்பட வேண்டுமென்று வலியுறுத்தியும் எந்தவிதமான நடவடிக்கையும் மேற்கொள்ளப்படாத ஒரு சூழ்நிலையில், தமிழக மீனவர்களின் பாதுகாப்பை உறுதி செய்வதற்கு Tamil Nadu Coastal Security Group–ன் மூலமாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று வலியுறுத்தி இந்த அவையின் கவனத்தை ஈர்த்து அமைகிறேன், நன்றி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா அவர்கள்.

[2013 மார்ச் 26

**முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே the most hazardous job to do is fishing, அதாவது மீன் பிடித்தல்தான் மிகவும் அபாயகரமான ஒரு தொழில் என்கிற நிலை இன்றைக்கு உருவாகியிருக்கிறது. இதற்கு முழுமுதற் காரணம் மத்திய அரசாங்கத்தினுடைய கையாலாகாத்தனம் என்று சொல்வதா அல்லது இலங்கை அரசுக்கு விசுவாசமாக இருப்போம், தமிழக மீனவர்களுக்கு விசுவாசமாக இருக்க மாட்டோம் என்கிற போக்கா. . . (குறுக்கீடு)

முற்பகல் 11–15

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கவன ஈர்ப்புத் தீர்மானத்தின்மீது பேசுங்கள்.

**முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த நவம்பர் 28, 2011–ல் தங்கச்சிமடத்தைச் சேர்ந்த 5 மீனவர்கள் கைது செய்யப்பட்டு, பொய் வழக்கு போடப்பட்டு, அவர்களை விடுதலை செய்வதற்காக தமிழக அரசு பணம் கொடுத்து வழக்கு நடத்துகின்றது. ஆனால், அங்கே கடற்படைக்கும், நீதித் துறைக்குமிடையே இருக்கக்கூடிய மோதலின் காரணமாக அவர்கள் இதுவரை விடுதலை பெறவில்லை. சென்ற மாதம் கைது செய்யப்பட்ட 53 மீனவர்களிலே 19 இராமேஸ்வரம் மீனவர்கள் இன்னும் இலங்கைச் சிறையிலே வாடிக்கொண்டிருக்கக்கூடிய அவலத்தை நாம் பார்க்கின்றோம்.

அதேபோல, நாகப்பட்டினம் மாவட்டம் நம்பியூரைச் சேர்ந்த மீனவர்கள் 4 பேரை அரிவாளால் வெட்டிய பாதக நிலையையும் நாம் படக்காட்சிகளாகப் பார்த்தோம். சர்வதேச கடலியல் சட்டத்தின்படி மீனவர்கள் கடல் எல்லையைத் தாண்டினால் அவர்களைக் கைது செய்வதற்கு உரிமை இருக்கின்றது. ஆனால், இலங்கைக் கடற்படையினர் நம்முடைய மீனவர்களை அடிக்கின்றார்கள்; உதைக்கின்றார்கள்; சுட்டுக் கொல்கின்றார்கள்; வலைகளை அறுக்கின்றார்கள். படகிலே இருக்கக்கூடிய டீசல் இன்ஜினில் சர்க்கரையைப் போட்டு அதைச் செயலிழக்க வைக்கக்கூடிய கொடூரத்தைத் தொடர்ச்சியாக அவர்கள் செய்துகொண்டிருக்கின்றார்கள்.

இந்தியாவுக்கும், பாகிஸ்தானுக்கும் இடையிலேயும்தான் கடல் எல்லை இருக்கின்றது. இந்தியாவுக்கும் பங்களாதேஷுக்கும் இடையிலேயும்தான் கடல் எல்லை இருக்கின்றது. எல்லை தாண்டக்கூடிய மீனவர்களை இரண்டு நாடுகளும் கைது செய்து, அதற்குப் பிறகு பேச்சுவார்த்தைகளை நடத்தி அவர்களை விடுதலை செய்கின்றார்கள். அது இலங்கை விஷயத்தில் இல்லாத ஒரு சூழலைப் பார்க்கின்றோம். இன்று இராமேஸ்வரத்திலே தொடர்ந்து 10 நாட்களாக மீனவர்கள் வேலை நிறுத்தத்திலே ஈடுபட்டிருக்கிறார்கள். நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தொடர்ந்து மத்திய அரசுக்கு கடிதங்கள் எழுதினாலுங்கூட மத்திய அரசு அதைக் கண்டு கொள்ளாத அவலமான ஒரு சூழல்தான் இருக்கின்றது. இந்த நிலையை மாற்றுவதற்கு தமிழக அரசாங்கம் உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று வலியுறுத்தி, இந்தத் தீர்மானத்திலே என்னுடைய கருத்துகளைத் தெரிவித்து, அரசினுடைய கவனத்தை ஈர்த்து அமர்கின்றேன். நன்றி.



2013 மார்ச் 26] [முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக மீனவர்கள் தொடர்ந்து இலங்கைக் கடற்படையினரால் அடித்துத் துன்புறுத்தப்படுவது குறித்து மாண்புமிகு உறுப்பினர்கள் இந்த அவையினுடைய கவனத்திற்குக் கொண்டு வந்து, தங்களது ஆதங்கத்தை வெளிப்படுத்தி இருக்கிறார்கள். தங்களது கருத்துகளை எடுத்துரைத்து இருக்கிறார்கள். இந்தப் பிரச்சினை குறித்த எனது விரிவான விளக்கத்தை இந்த மாமன்றத்திற்குத் தெரிவிக்க விரும்புகிறேன்.

இந்தியாவின் ஒரு பகுதியாக கச்சத் தீவு இருந்தபோது இந்தப் பிரச்சினை எழவில்லை. தமிழக மீனவர்கள் கச்சத் தீவின் அருகில் மீன் பிடித்து தங்களது அன்றாட வாழ்க்கையை நடத்தி வந்தனர். 1974 ஆம் ஆண்டு இந்தியாவின் ஒரு பகுதியாக இருந்த கச்சத் தீவு இலங்கைக்குத் தாரை வார்க்கப்பட்டது. அப்போது தமிழ்நாட்டின் முதலமைச்சராக இருந்தவர் திரு. கருணாநிதிதான். அப்போதைய காங்கிரஸ் தலைமையிலான இந்திய அரசுக்கும், இலங்கை அரசுக்கும் இடையே ஏற்பட்ட உடன்பாட்டின்படி, இரு நாடுகளும் பரம்பரை பரம்பரையாகத் தங்கள் நாட்டிற்குச் சொந்தமான கடல் எல்லைகளில் எந்தெந்த உரிமைகளை அனுபவித்து வந்தனவோ, அந்தந்த உரிமைகளைத் தொடர்ந்து

அனுபவிக்கலாம் என்று குறிப்பிடப்பட்டிருந்தது. ஆனால், இதையெல்லாம் இலங்கை அரசு மதிப்பதாகத் தெரியவில்லை. மாறாக, தமிழக மீனவர்கள் மீதான இலங்கைக் கடற்படையின் தாக்குதல்கள் அதிகரித்துக் கொண்டே செல்கின்றன.

1991 ஆம் ஆண்டு நான் முதன்முறையாக முதலமைச்சராகப் பொறுப்பேற்றவுடன், தமிழக மீனவர்களை இலங்கைக் கடற்படையிடம் இருந்து காப்பாற்ற கச்சத் தீவினை மீட்பதைத் தவிர வேறு வழியில்லை என்று முடிவெடுத்து, இதனை மீட்பதற்கான நடவடிக்கைகளை எடுக்குமாறு பாரதப் பிரதமரை நேரிலும், கடிதம் மூலமாகவும் வற்புறுத்தினேன். குறைந்தபட்சம் நிரந்தரமான குத்தகை அதாவது, Lease in perpetuity என்ற முறையிலாவது தமிழக மீனவர்கள் கச்சத் தீவிற்குச் சென்று மீன் பிடிக்கும் உரிமையையாவது பெற்றுத் தர வேண்டுமென்று பாரதப் பிரதமரை பலமுறை வற்புறுத்தி இருக்கிறேன். இருப்பினும், மத்திய அரசு எந்தவிதமான நடவடிக்கையையும் எடுக்கவில்லை.

2006 முதல் 2011 வரை தமிழகத்தின் முதலமைச்சராக இருந்தவர் திரு. மு. கருணாநிதி. திரு. கருணாநிதி தயவில்தான் மத்திய அரசும் இருந்தது. தன் நலத்திற்காக பல மிரட்டல்களை மத்திய அரசுக்கு விடுத்த திரு. கருணாநிதி, தான் செய்த பாவத்திற்குப் பரிகாரமாக கச்சத் தீவினை மீட்டுத் தருமாறு மத்திய அரசை வலியுறுத்தியிருக்கலாம். ஆனால், அதைச் செய்யவில்லை. ஆட்சிக்கு வந்தவுடன் (மேசையைத் தட்டும் ஒலி) கச்சத் தீவு பற்றிய எண்ணமே திரு. கருணாநிதிக்கு இல்லாமல் போய்விட்டது.

முற்பகல் 11–20

ஆனால், 12–8–2012–ல் நடைபெற்ற, புத்துயிரூட்டப்பட்ட டெசோ மாநாட்டில், ''கச்சத் தீவை இந்தியா மீண்டும் தனது ஆளுகையின்கீழ் கொண்டு வருவதோடு, தனுஷ்கோடி அல்லது மண்டபம் முகாமில் இந்திய கடற்படைத் தளம் ஒன்றை இந்திய அரசு நிறுவ வேண்டும்" என்று தீர்மானம் நிறைவேற்றியுள்ளார்.

1974 ஆம் ஆண்டு கச்சத் தீவு இலங்கைக்குத் தாரை வார்க்கப்பட்டபோது, அப்போது முதலமைச்சராக இருந்த திரு. கருணாநிதி அதைத் தடுக்கத் தவறிவிட்டார். மேற்கு வங்காளத்தில் உள்ள பெருபாரி பகுதியை 1960–க்கு முன்பு கிழக்கு பாகிஸ்தானுக்கு இந்திய அரசு தாரைவார்க்க முயன்றபோது,





அதனை எதிர்த்து அப்போதைய மேற்கு வங்க அரசு உச்ச நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்தது. இதனை விசாரித்த உச்ச நீதிமன்றம், "இந்திய நாட்டுக்குச் சொந்தமான ஒரு பகுதியை அந்நிய நாட்டிற்குக் கொடுப்பது தொடர்பான உடன்பாட்டை, நாடாளுமன்றத்தின் இரு அவைகளின் ஒப்புதலோடு இந்திய அரசமைப்புச் சட்டத் திருத்தத்தின்மூலம் மட்டுமே நடைமுறைப்படுத்த முடியும்" என (மேசையைத் தட்டும் ஒலி) 1960 ஆம் ஆண்டு தீர்ப்பளித்தது. மேற்கு வங்க அரசின் இந்த நடவடிக்கையை 1974 ஆம் ஆண்டு அன்றைய தமிழக முதல்வர் திரு. கருணாநிதி பின்பற்றி இருப்பாரேயானால், கச்சத் தீவு இலங்கைக்குத் தாரைவார்க்கப்பட்டு இருக்காது. (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால் அன்றைய தமிழ்நாடு முதலமைச்சராக இருந்த திரு. மு. கருணாநிதி இதைச் செய்யத் தவறிவிட்டார்.

கச்சத் தீவு தாரைவார்க்கப்பட்டதன் காரணமாக, தமிழக மீனவர்கள் மீதான இலங்கைக் கடற்படையின் தாக்குதல் இன்றளவும் தொடர்கிறது. தமிழக மீனவர்களின் வலைகளை அறுத்தெறிவதையும்; அவர்களை ஆயுதங்களால் துன்புறுத்துவதையும்; இலங்கைக் கடற்படையினர் வாடிக்கையாகக் கொண்டு இருக்கிறார்கள். தமிழக மீனவர்களுடைய வாழ்வாதாரமே கேள்விக்குறியாகியுள்ளது. தங்களது உயிரைப் பணயம் வைத்து மீன் பிடித் தொழிலை தமிழக மீனவர்கள் மேற்கொண்டு வருகிறார்கள்.

தமிழக மீனவர்கள் ஒவ்வொரு முறையும் இலங்கைக் கடற்படையினரால் சிறை பிடிக்கப்படும்போதும்; பாரதப் பிரதமரை வலியுறுத்தியும்; தமிழக அரசு அதிகாரிகள்மூலம் இலங்கையில் உள்ள இந்தியத் தூதரக அதிகாரிகளைத் தொடர்புகொண்டும் அவர்களை மீட்டெடுத்து இருக்கிறேன். தமிழக மீனவர்களும் இந்திய நாட்டு குடிமக்கள்தான் என்பதை பாரதப் பிரதமருக்கு உணர்த்தி; வலுவான, உறுதியான, ஆக்கப்பூர்வமான, ராஜதந்திர நடவடிக்கைகளை எடுத்து இந்தப் பிரச்சினைக்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும் என்று பல முறை வலியுறுத்தி இருக்கிறேன். பரம்பரை பரம்பரையாக, மீன்பிடித்து வரும் அப்பாவித் தமிழக மீனவர்களைத் துன்புறுத்தும் நடவடிக்கைகளை நிறுத்திக்கொள்ள இலங்கை அரசுக்கு அறிவுரை கூற வேண்டும் என்றும் வற்புறுத்தி இருக்கிறேன். ஆனால், மத்திய அரசோ தமிழக மீனவர்கள் என்றால் இந்திய நாட்டிற்கு

அப்பாற்பட்டவர்கள் என்று நினைத்தோ என்னவோ, தொடர்ந்து மவுனம் சாதித்து வருகிறது. மத்திய அரசின் கையாலாகாத்தனம் காரணமாக தமிழக மீனவர்கள் மீதான இலங்கைக் கடற்படையின் தாக்குதல் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

தமிழக மீனவர்கள் மீதான இலங்கை அரசின் தாக்குதல், கடந்த ஒரு மாதத்தில் மட்டும் நான்கு முறை நடைபெற்று இருக்கிறது. இது உண்மையிலேயே கவலை அளிக்கக்கூடியது.

தமிழக மீனவர்களின் பிரச்சினை நிரந்தரமாகத் தீர்க்கப்பட வேண்டும் எனில், கச்சத் தீவு மீண்டும் நமது நாட்டுடன் இணைக்கப்பட வேண்டும். கச்சத் தீவுப் பகுதியில் மீன் பிடிக்கும் உரிமை தமிழக மீனவர்களுக்குக் கிடைத்திட வேண்டும். எனவேதான், நாடாளுமன்றத்தின் இரு அவைகளின் ஒப்புதலோடு இந்திய அரசமைப்புச் சட்டத் திருத்தத்தின்மூலம், உச்ச நீதிமன்றத் தீர்ப்பிற்கிணங்க, கச்சத் தீவு இலங்கைக்குத் தாரைவார்க்கப்படவில்லை என்பதைச் சுட்டிக்காட்டி; இது குறித்த இந்தியா—இலங்கை உடன்படிக்கை செல்லாது எனத் தீர்ப்பளிக்க வேண்டும் என்று 2008 ஆம் ஆண்டு உச்ச நீதிமன்றத்தில் நான் வழக்கு தொடுத்துள்ளேன். (மேசையைத் தட்டும் ஒலி) இந்த வழக்கில், தமிழக அரசின் வருவாய்த் துறையும் தன்னை இணைத்துக் கொண்டுள்ளது. இந்த வழக்கை விரைவில் எடுத்து விசாரிக்கும் வகையில், உச்ச நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இதில் நமக்கு நிச்சயம் வெற்றி கிடைக்கும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

இது மட்டுமல்லாமல், இந்திய அரசின் ராஜதந்திர நடவடிக்கைகள்மூலம் இந்தப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காணவும் நான் நடவடிக்கை எடுத்து வருகிறேன்.

முற்பகல் 11–25

அப்பாவித் தமிழக மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரால் சிறைபிடிக்கப்படும்போது, அவர்களை மீட்டு வருவதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் எனது அரசு எடுத்துவருகிறது. மீனவர்களின் இன்னல்களை உணர்ந்து, அவர்களுக்கென பல்வேறு சலுகைகளை எனது அரசு அளித்து வருகிறது. இராமேஸ்வரத்தைச் சேர்ந்த ஐந்து மீனவர்கள் கடற்பகுதியில் மீன்பிடித்துக் கொண்டிருந்தபோது, போதைப் பொருள் கடத்தியதாகக் கூறி, இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டு, சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர். இந்த ஐந்து மீனவர்கள் சார்பாக இலங்கை நீதிமன்றத்தில் வாதாடி, அவர்கள் விடுதலை செய்யப்படுவதற்கான நடவடிக்கையை எனது அரசு எடுத்துள்ளது. அந்த வழக்கிற்கான செலவுகளையும் எனது தலைமையிலான அரசு ஏற்றுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) இந்த ஐந்து மீனவர்களின் குடும்பங்களுக்கு நிவாரண உதவித் தொகையாக தலா இரண்டு இலட்சம் ரூபாய் எனது தலைமையிலான தமிழக அரசால் வழங்கப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) இது மட்டுமல்லாமல், அவர்களது குடும்பங்கள் அன்றாட வாழ்க்கை நடத்திடும் வகையில், மாதந்தோறும் 7,500 ரூபாய் தமிழக அரசின் சார்பில் வழங்கப்பட்டு வருகிறது. (மேசையைத் தட்டும் ஒலி)



இவர்கள் தவிர, அண்மையில் இலங்கைக் கடற்படையினரால் சிறைபிடிக்கப்பட்ட 19 தமிழக மீனவர்கள் இலங்கை சிறைச்சாலைகளில் உள்ளனர். தமிழக மீனவர்கள் மீதான இலங்கைக் கடற்படையின் தொடர் தாக்குதல்களை இந்திய அரசு கடுமையாகக் கண்டிக்க வேண்டும் என்றும், தமிழக மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்படுவதற்கும், கொடூரமாகத் துன்புறுத்தப்படுவதற்கும் முற்றுப்புள்ளி வைக்கும் வகையில் வலுவான நடவடிக்கைகளை ராஜதந்திர முறையில் இனிமேலாவது மேற்கொள்ள வேண்டும் என்றும், டெல்லியில் உள்ள இலங்கை நாட்டுத் தூதரக அதிகாரியை நேரில் வரவழைத்து, இந்தியாவின் வலுவான எதிர்ப்பைத் தெரிவிக்கவேண்டும் என்றும், இந்தத் தருணத்தில் மத்திய அரசைக் கேட்டுக்கொள்வதோடு, இந்திய அரசமைப்புச் சட்டத்திற்கு எதிராக ஏற்படுத்தப்பட்ட இந்தியா—இலங்கை நாடுகளுக்கு இடையேயான கச்சத் தீவு உடன்படிக்கையை இந்தியா திரும்பப் பெற்றுக் கொள்ளவேண்டும் என்றும் வலியுறுத்துகிறேன். இல்லையெனில், காவேரி நடுவர் மன்ற இறுதி ஆணையை மத்திய அரசிதழில் வெளியிடச் செய்ய உச்ச நீதிமன்றத்தை அணுகி வெற்றி பெற்றதைப்போல், கச்சத் தீவு பிரச்சினையிலும் (மேசையைத் தட்டும் ஒலி) என்னால், உச்ச நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்ட வழக்கு விசாரணைக்கு வரும்போது, வலுவான வாதங்களை முன்வைத்து சட்ட ரீதியாக இந்தப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காணப்படும் என்பதைத் தெரிவித்துக்கொண்டு அமர்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

[2013 மார்ச் 26

## 3. தகவல் கோரல்

### தே.மு.தி.க. உறுப்பினர்கள் ஆறு பேருக்கு வழங்கப்பட்ட தண்டனையைக் குறைத்தல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் முனைவர் செ.கு. தமிழரசன் அவர்கள்.*

**முனைவர் செ.கு. தமிழரசன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களின் அனுமதியோடு சில கருத்துக்களை முன்வைக்க விரும்புகிறேன். நேற்றையதினம் இந்த மாமன்றத்தில் உரிமைக் குழுவின் பரிந்துரைகளை ஏற்று, கடந்த கூட்டத் தொடரின்போது கேள்வி நேரத்திலே துணைக் கேள்வி எழுப்பிய ஒரு சட்டமன்ற உறுப்பினரை, சில உறுப்பினர்கள் சேர்ந்து தாக்கியது குறித்து உரிமைக் குழுவின் பரிந்துரைகளின்பேரிலே சம்பந்தப்பட்ட 6 உறுப்பினர்களையும் இனி ஓராண்டு காலத்திற்கு இந்த அவையிலிருந்து நீக்கம் செய்வது என்று நீங்கள் நடவடிக்கை எடுத்திருக்கின்றீர்கள், அதுகுறித்த சில கருத்துக்களை நான் முன்வைக்க விரும்புகிறேன்.*

*சீர்மிகு ஜனநாயகம் என்பது, சமூக ஒழுங்கை நிலைநிறுத்துவதும், அனைத்துத் தரப்பு மக்களுக்கும் சம வாய்ப்பை உருவாக்குவதும்தான் என்று அரசியல் நிர்ணயக் குழுவிலே, அரசியல் நிர்ணயச் சட்டத்தின் தந்தை பாபா சாகேப் அம்பேத்கர் அவர்கள் குறிப்பிட்டார்கள். எதற்குமே ஒரு ஒழுங்கு இருக்கிறது. சமூக ஒழுங்கு இருக்கிறது, சட்டம்–ஒழுங்கு இருக்கிறது. இந்த அவையின் ஒழுங்கை, மாண்பை, மாட்சிமையைக் காப்பாற்றுவதற்காகப் பேரவைத் தலைவராகிய நீங்கள் எடுத்த இந்த நடவடிக்கை என்பது மிகச் சரியானது என்பதிலே எந்த ஜனநாயகவாதிக்கும் சந்தேகம் இருக்க முடியாது. கேள்வி நேரத்திலே துணைக் கேள்வி கேட்டதற்காக ஒடுக்கப்பட்ட சமூகத்தைச் சார்ந்த ஓர் உறுப்பினர், அந்த உறுப்பினர் நன்றி சொல்கிற அந்தச் சந்தர்ப்பத்திலே அவரைத் தடுத்து நிறுத்தி, வாய்க்கு வந்ததுமாதிரிப் பேசி, இழி சொல்லால் அவரை இடித்துரைத்து, அதோடு மட்டுமல்லாமல், 234 பேர் கூடியிருக்கிற இந்த அவையிலே அனைவரின் கண் முன்னாலேயே அவரைத் தாக்கியது என்பது கொஞ்சமும்கூட மரபுக்கு உகந்த செயல் அல்ல என்பதை நாமெல்லாம் உணர்ந்திருக்கிறோம். இத்தகைய நடவடிக்கைகளை மேற்கொள்கிறபோது, இதை ஒன்றும் புதிய நடவடிக்கையாக யாரும் கருதிவிட முடியாது.*





*முற்பகல் 11–30*

*கடந்த சில மாதங்களுக்கு முன்னாலே மராட்டிய மாநிலத்திலே, அவைக்கு வெளியே வாயிற் காவலர் ஒருவரைத் தாக்கியதற்காக 4 சட்டமன்ற உறுப்பினர்களை அங்கே ஆண்டுகொண்டிருக்கிற காங்கிரஸ் கூட்டணி அரசு ஓராண்டு காலத்திற்குப் பணி நீக்கம் செய்திருக்கிறது. ஏன், இந்த அவையிலேயே ஒரு அவைக் காவலருடைய தொப்பி கடந்த ஆட்சியின்போது கீழே விழந்தது. அது தள்ளப்பட்டதா, சரிந்து விழுந்ததா, தவறி விழுந்ததா, அவருடைய தடுமாற்றத்திலே விழுந்ததா என்பதை யாரும் சரியாகப் பார்த்திருக்க முடியாது. ஆனால், இந்த அவையிலே இப்போது இருக்கிற அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர் திரு. ஏ.கே. போஸ் அவர்கள் 3 மாதங்கள் பணி நீக்கம் செய்யப்பட்ட அந்த வரலாறும் இந்த அவையிலே இருக்கிறது. (குறுக்கீடு) 4 மாதங்கள் பணி நீக்கம் செய்யப்பட்ட அந்த மரபும் இந்த அவையிலே இருந்திருக்கிறது. ஆகவே, நான் அதுகுறித்து ஒன்றை இங்கே குறிப்பிட விரும்புகிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவருடைய தீர்ப்பு என்பது இறுதியானது. சட்டமன்றப் பேரவைத் தலைவருக்கு இருக்கிற அதிகாரம், அது முழுமையான, ஜனநாயகத்தின்படி வழங்கப்பட்டிருக்கிற அதிகாரம். அதிலே யாரும் தலையிட முடியாது. அது இறுதியான தீர்ப்பு என்பதிலே யாருக்கும் மாறுபட்ட கருத்து இருக்க முடியாது. ஆனால், இந்த அவையின் பெரும்பான்மை உறுப்பினர்களுடைய, ஆளுங்கட்சியினுடைய தலைவராக இருக்கக்கூடிய மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பார்வைக்கும், கவனத்திற்கும் நான் சிலவற்றைப் பரிசீலிக்க வேண்டுமென்பதற்காகக் குறிப்பிட விரும்புகிறேன்.*

*புரட்சித் தலைவி அம்மா அவர்களைப் பொறுத்தவரையிலே, நம்முடைய போற்றுதலுக்குரிய முதலமைச்சர் அவர்களைப் பொறுத்தவரையிலே, அவர்களுக்கு எதிரிகள் என்று யாருமே கிடையாது. எதிரிகள் என்று எவருமே கிடையாது. எதிரி என்று அவர்களாகவே நினைத்துக்கொண்டால்தான் உண்டு. (மேசையைத் தட்டும் ஒலி) இவருக்கென்று யாரும் எதிரிகளே கிடையாது. அப்படிப்பட்ட உணர்வும் அவருக்குக் கிடையாது. எதிரிகளைச்*

[முனைவர் செ.கு தமிழரசன்] [2013 மார்ச் 26

சந்திப்பதிலேகூட அவருக்கு எந்தத் தருணத்திலும் கொஞ்சம்கூட சலனமோ, தடுமாற்றமோ கிடையாது. (மேசையைத் தட்டும் ஒலி) எந்தக் கட்டத்திலும் எதிரிகளைக் களமாடுவதிலே அவருக்கு இருக்கிற அந்தத் துணிவு, (மேசையைத் தட்டும் ஒலி) அது அவர் பிறந்தபோதே, அவர் உடன் பிறந்த துணிவு. அப்படிப்பட்ட இயல்பைப் பெற்றவர்கள் நம்முடைய போற்றுதலுக்குரிய தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள்.

அதே நேரத்திலே அவர்களுக்கு இரண்டு உள்ளம். அல்லவற்றை அகற்றுகிறபோது அது இரும்பு இதயமாக இருக்கும். (மேசையைத் தட்டும் ஒலி) நல்லவற்றிற்குத் துணை நிற்கிறபோது அது கரும்பு இதயமாக இருக்கும். (மேசையைத் தட்டும் ஒலி) அல்லவற்றை அகற்ற வேண்டுமென்று நினைக்கிறபோது அவர்களுக்கு இரும்பு இதயம்; நல்லவற்றிற்குத் துணை நிற்க வேண்டுமென்று நினைக்கிறபோது அவர்களுக்குக் கரும்பு இதயம். அப்படிப்பட்ட உணர்வு படைத்தவர்கள் நம்முடைய முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். எனக்குத் தெரிந்தவரையில், அவர்களுக்குத் தெரியாத ஒன்றே ஒன்று, அச்சப்படுவது. அந்த ஒன்றைத் தவிர, வேறேதுவும் கிடையாது. (மேசையைத் தட்டும் ஒலி) அச்சம் என்பது அவர்களுடைய அகராதியிலேயே கிடையாது. (மேசையைத் தட்டும் ஒலி) கம்பநாடன் சொல்வானே, அதைப்போல, மணிமகுடம் என்றபோதும் அன்றலர்ந்த செந்தாமரைபோல் அமைதி பூத்தான் ஸ்ரீராமன். காடேக வேண்டுமென்று சொன்னபோதும், அப்போதும் அன்றலர்ந்த செந்தாமரைபோல் அமைதி பூத்தான் ஸ்ரீராமன் என்று கம்பநாடன் சொல்வான் கம்ப இராமாயணத்திலே. அதைப்போல, எதற்கும் கலங்காமல், (மேசையைத் தட்டும் ஒலி) ஸ்ரீராமச்சந்திரன், மக்கள் திலகம், புரட்சித் தலைவர் எம்.ஜி. இராமச்சந்திரன் அவர்கள் உருவாக்கிய, மாசற்ற மங்கையர் திலகம், அந்த மக்கள் திலகம் உருவாக்கிய (மேசையைத் தட்டும் ஒலி) மாசற்ற மங்கையர் திலகமான நம்முடைய புரட்சித் தலைவி அவர்கள் எப்போதும் அதே அமைதியோடு, அதே துணிவோடு எதையும் எதிர்கொள்கிற மனப்பாங்கைப் பெற்றவர்கள்.

*முற்பகல் 11–35*

அதேநேரத்திலே, மாற்றான் தோட்டத்து மல்லிகைக்கும் மணம் உண்டு என்று சொன்னாரே பேரறிஞர் அண்ணா, அப்படி மதிப்பதிலும் அவருக்கு நிகர் அவர்தான். 80 வயது நிரம்பப்பெற்ற தோழமைக் கட்சித் தலைவர், எவ்வளவோ அவர்களை விமர்சித்த காலமும் உண்டு, ஆதரித்த காலமும் உண்டு. எண்பது வயது நிரம்பியதை முன்னிட்டு கம்யூனிஸ்டு கட்சித் தலைவருடைய வீடு தேடிச் சென்று திரு. தா. பாண்டியனை வாழ்த்தியவர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதைப்போலவே, மாலையிலே அலுவலகத்திலிருந்து வீட்டுக்குப் போகிற அந்தப் பாதையிலே–போராட்டப் பாதையிலே ஒரு தலைவர் நடந்து போய்க் கொண்டிருக்கிறார் என்கிறபோது, வண்டியை விட்டு இறங்கி, வருகிறீர்களா (மேசையைத் தட்டும் ஒலி) தேனீர் அருந்துகிறீர்களா என்று கேட்கிற, அப்படிப்பட்ட ஒரு மனப்பாங்கு, அந்த உணர்வு தமிழக அரசியலிலே புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு உண்டு. இந்திய அரசியலிலேயே உள்ளொன்று, உதடொன்று பேசுகிற அந்த உணர்வே இல்லாமல், சூழ்ச்சிகளே நிறைந்த அரசியலிலே (மேசையைத் தட்டும் ஒலி) நம்பகத்தன்மையும், வெளிப்படைத் தன்மையும் நிரம்பப் பெற்ற ஒரு தலைவி இன்றைய அரசியலிலே தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களைப்போல வேறு ஒருவர் இருக்க முடியாது. (மேசையைத் தட்டும் ஒலி) சூழ்ச்சிகளே நிறைந்த அரசியலிலே உள்ளொன்று, உதடொன்று பேசும் அப்படிப்பட்ட அரசியலிலே நம்பகத் தன்மையும், வெளிப்படைத் தன்மையும் நிரம்பப் பெற்ற ஒரு அரசியல் தலைவராக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் விளங்கிக் கொண்டிருக்கிறார்.



2013 மார்ச் 26] [முனைவர் செ.கு தமிழரசன்]

ஒடுக்கப்பட்ட சமூகத்தைச் சார்ந்த ஓர் உறுப்பினர் இங்கே நன்றி சொல்வது என்பது காலம் காலமாக இருந்து வருகிற மரபு. எதிர்க்கட்சித் தலைவர்கள், எதிர்க்கட்சி பிரமுகர்கள் ஆளும் கட்சியை விமர்சித்து கடுமையாகப் பேசினாலும்கூட தங்கள் தொகுதிப் பிரச்சினைகளுக்காகக் கோரிக்கை வைப்பதும், அதை அமைச்சர்கள் நிறைவேற்றுகிறபோது அதற்கு நன்றி சொல்வதும் 75 ஆண்டுக்கால இந்தச் சட்டமன்ற மரபிலே ஒரு மரபாக இருந்திருக்கிறது. வெளி அரசியலிலே, பொதுக் கூட்டங்களிலே மிகக் கடுமையாகப் பேசினாலும்கூட, இங்கே வந்து தொகுதி பிரச்சினைகளுக்காகக் கோரிக்கைகளை வைப்பதும், அதை அமைச்சர் பெருமக்கள் நிறைவேற்றுகிறபோது நன்றி சொல்வதும் சிறந்த தமிழரின் பண்பாடாக, மரபாக இருந்திருக்கிறது. அதைத்தான் ஓர் ஒடுக்கப்பட்ட சமூகத்தைச் சேர்ந்த திட்டக்குடி சட்டமன்ற உறுப்பினர் திரு. தமிழழகன் இங்கே செய்தார். இதுவே

[முனைவர் செ.கு தமிழரசன்] [2013 மார்ச் 26

*வேறு வகையாக இருந்திருந்தால் எவ்வளவு சாதிய அரசியல் சாயம் பூசப்பட்டு இருக்கும் என்பதை ஓர் ஒடுக்கப்பட்ட சமூகத்தின் பிரதிநிதியாக நான் உணர்ந்திருக்கிறேன். ஆக, நீங்கள் எடுத்திருக்கிற அந்த நடவடிக்கை எல்லா வகையிலும் நம்முடைய மரபுகளை, மாட்சிமையை, சட்டம்—ஒழுங்கை, சட்டத்தின் சிறப்பை, ஜனநாயகத்தின் தன்மையைக் காப்பாற்றுவதாக இருந்தாலும்கூட மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களே பகைவனுக்கும் பரிந்து சலுகை அளிக்கிற பண்பு பெற்றவர்கள்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள்.*

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அன்பார்ந்த சகோதரர் மாண்புமிகு உறுப்பினர் முனைவர் செ.கு. தமிழரசன் அவர்கள் தங்களது அனுமதியைப் பெற்று எந்தக் கோரிக்கையை வைப்பதற்காக இந்த உரையைத் துவங்கினாரோ அந்த விஷயத்திற்கு வருமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் முனைவர் செ.கு. தமிழரசன், நீங்கள் சப்ஜெக்ட்டுக்கு வாருங்கள்.*

**முனைவர் செ.கு. தமிழரசன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அந்தக் கனிவான பார்வைக்கு, தாய் உள்ளத்திற்கு ஒன்றைத் தெரிவிக்க விரும்புகிறேன் ஓராண்டு தண்டனை என்பது சரியானது என்றாலும்கூட, நீங்கள் பாரபட்சமற்றவர், எப்போதுமே எது சரி என்று தோன்றுகிறதோ அதைச் செய்கிற அப்படிப்பட்ட ஓர் இலக்கணம் தெரிந்தவர் என்பதனாலும் அந்தத் தொகுதி, மக்களுடைய உணர்வுகளுக்காக, நீங்கள் அன்புகூர்ந்து பரிசீலித்து அந்தத் தண்டனையை குறைந்தபட்ச தண்டனையாக உருவாக்க வேண்டுமென்கிற அந்த உணர்வை நான் இங்கே எடுத்துரைத்து அமர்கிறேன். நன்றி, வணக்கம்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா அவர்கள்.*

**முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவை உரிமைக் குழுவிலே விரிவாக விவாதித்து தேசிய முற்போக்கு திராவிட கழகத்தைச் சேர்ந்த 6*



2013 மார்ச் 26] [முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா]

*உறுப்பினர்களை ஓராண்டுக் காலம் நீக்கி வைத்து நீங்கள் உத்தரவிட்டிருக்கின்றீர்கள், அந்த உத்தரவை மதிக்கின்றோம். இருந்தபோதிலும்கூட இந்த சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் ஜனநாயகரீதியான கடமைகளைத் மக்களுக்கு ஆற்ற வேண்டிய நிலை இருக்கின்றது. எனவே, அன்புகூர்ந்து உச்சபட்சமாக வழங்கப்பட்ட இந்த ஓராண்டுக் கால தண்டனையைக் குறைத்து, இந்தக் கூட்டத் தொடர் முடியும் வரை மட்டும் அவர்களை நீக்கி வைக்கிற வகையில் உங்கள் உத்தரவை மறுபரிசீலனை செய்யுமாறு தாழ்மையுடன் கேட்டு அமர்கின்றேன். (குறுக்கீடு)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன், எல்லாம் பேசியாகிவிட்டது. அதையேதான் நீங்களும் திரும்பத் திரும்பச் சொல்ல வேண்டி வரும். (குறுக்கீடு) மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள். (குறுக்கீடு)*

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** *சரி சொல்லட்டும். சுருக்கமாக சொல்லச் சொல்லுங்கள்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *சுருக்கமாகச் சொல்லுங்கள் திரு. சு. குணசேகரன்.*

*முற்பகல் 11—40*

**திரு. சு. குணசேகரன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 8—2—2013 ஆம் தேதியன்று நடைபெற்ற விரும்பத்தகாத சம்பவத்தின்மீது அவை உரிமைக் குழு தீர்க்கமாக ஆய்ந்து ஒரு சிபாரிசை நமது மன்றத்திற்கு அறிவித்து, நேற்றையதினம் மாண்புமிகு பேரவைத் தலைவராகிய நீங்கள் அந்தத் தீர்மானத்தை நிறைவேற்றியிருக்கிறீர்கள். அந்தத் தீர்மானத்தில் தே.மு.தி.க. உறுப்பினர்கள் 6 பேர் ஓராண்டுக்கு பதவி நீக்கமும், அதற்கு உட்பட்ட காலத்தில் சட்டமன்ற உறுப்பினர்களுக்கான எந்தவிதமான உரிமைகளும் இல்லாத நிலை என்ற அடிப்படையில் அந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. நடந்த சம்பவத்தை இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பில் நாங்கள் ஆதரிக்கவில்லை. சட்டமன்றத்தில் ஒவ்வொரு உறுப்பினருக்கும் ஜனநாயகக் கடமைகளை ஆற்றுவதற்குப் பாதுகாப்பைத் தருகிற பெரும் பொறுப்பு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு இருக்கிறது என்பதை நாங்கள் அறிவோம், உணர்கிறோம். ஆனாலும், நடந்துவிட்ட சம்பவத்தில் ஈடுபட்ட உறுப்பினர்கள்*

*புதியவர்கள் என்கிற காரணத்தால், அவர்களுடைய நடவடிக்கைக்கு வழங்கப்பட்ட தண்டனையை மறுபரிசீலனை செய்து நமது மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் குறைந்தபட்ச தண்டனையை வழங்கவேண்டுமென்று இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பாக நான் கேட்டுக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.ஆர். ரெங்கராஜன் அவர்கள்.*

**திரு. என்.ஆர். ரெங்கராஜன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 8–2–2013 அன்று நடைபெற்ற அந்தச் சம்பவத்தின் தொடர்ச்சியாக அவை உரிமைக் குழுவினுடைய பரிந்துரையை ஏற்று தாங்கள் அவர்களுக்கு ஒரு தண்டனையை வழங்கியிருக்கிறீர்கள். மக்கள் பணி ஆற்றக்கூடியவர்கள், அவர்களுடைய தொகுதிகளின் வளர்ச்சி பாதிக்கப்படக்கூடாது. குறிப்பாக அந்த இயக்கத்தைச் சார்ந்த பல நண்பர்கள் புதிதாக இந்த அவைக்கு வந்தவர்கள். எனவே, அவற்றையெல்லாம் கருத்தில்கொண்டு குறைந்தபட்ச தண்டனையாக அதை மாற்றி அமைக்கவேண்டுமென்று தங்களை காங்கிரஸ் கட்சியின் சார்பாக வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன் அவர்கள்.*

***திரு. அ. சவுந்தரராசன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 8–2–2013 அன்று நடந்த விரும்பத்தகாத அந்தச் சம்பவம் குறித்து அவை உரிமைக் குழுவின் முன் வைக்கப்பட்டு, வழங்கப்பட்ட அந்தத் தண்டனை அதிகபட்சமானது என்று நேற்றே நாங்கள் சொல்ல முற்பட்டோம். இப்பொழுதும் இந்த அவையில், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களை, மாண்புமிகு முதல்வர் அவர்களை நான் கேட்க விரும்புவது மிக அதிகமாக வழங்கப்பட்டிருக்கிற அந்தத் தண்டனையைக் குறைத்து குறைந்தபட்ச தண்டனையாக அதை மாற்றுங்கள் என்பதுதான். அவர்களுக்கு ஊதியம் போன்ற சலுகைகளை நிறுத்தக்கூடாது என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள்.*





***திரு. மு.க. ஸ்டாலின்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதே அவையில் நடைபெற்ற ஒரு சம்பவத்தையொட்டி அவை உரிமைக் குழு கூடி அதற்காக ஒரு முடிவை எடுத்து, நேற்றையதினம் நீங்கள் அறிவித்திருக்கிறீர்கள். அது பெரும் தண்டனையாக இருக்கிறது என்பதை நேற்றையதினம் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் எங்களுடைய உணர்வை வெளிப்படுத்தக்கூடிய வகையிலே வெளிநடப்புச் செய்து, அதை நாங்கள் வெளிப்படுத்தியிருக்கிறோம். இன்று இதுகுறித்து பல்வேறு கட்சிகளினுடைய தலைவர்கள் தங்களுடைய கருத்துகளையெல்லாம் இங்கே எடுத்து வைத்திருக்கிறார்கள். அதிலே குறிப்பாக மாண்புமிகு உறுப்பினர் திரு. செ.கு. தமிழரசன் அவர்கள் இங்கு பேசுகிற நேரத்தில் ஒரு தகவலைச் சொல்லியிருக்கிறார்கள். திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பில் இருந்தபோது, அன்றைக்கு அ.தி.மு.க.வின் உறுப்பினராக இருந்த, இன்றைக்கும் இருந்துகொண்டிருக்கக்கூடிய மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ.கே. போஸ் அவர்களுக்கு 4 மாத காலம் அன்றைக்கு அவையிலிருந்து வெளியேற்றக்கூடிய வகையில் தண்டனை வழங்கப்பட்டது என்ற ஒரு கருத்தைச் சொல்லியிருக்கிறார். அது தவறாக அவைக் குறிப்பில் பதிவாகி விடக்கூடாது என்பதற்காக நான் அதற்கு ஒரு விளக்கம் தர விரும்புகிறேன். அன்றைக்கு வழங்கப்பட்ட தண்டனை 4 மாதம் அல்ல, 10 நாட்கள்தான். அது அவைக் குறிப்பிலும் இடம் பெற்றிருக்கிறது. அவை உரிமைக் குழுவின் அறிக்கையிலும் இடம்பெற்றிருக்கிறது.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *அது 10 நாட்கள்தான், ஆனால் 2 கூட்டத் தொடருக்கு மத்தியிலே* announce *செய்ததனால், அந்தத் தண்டனை 4 மாத காலம் ஆனது.*

**திரு. மு.க. ஸ்டாலின்:** *அது அவைக்குறிப்புப் புத்தகத்தில் இருக்கிறது. நீங்கள் அதைப் பார்த்துவிடுங்கள்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *திரு. ஏ.கே. போஸ் அவர்களுக்கு, அந்த மாதிரி தண்டனைதான் வழங்கப்பட்டது.*

**திரு. மு.க. ஸ்டாலின்:** *தவறாக அவைக் குறிப்பில் பதிவாகி விடக்கூடாது என்பதற்காகத்தான் அதை நான் குறிப்பிடுகிறேன். எந்த உள்நோக்கமும் இல்லை. இருந்தாலும் ஓராண்டுக் காலம் தே.மு.தி.க.வைச் சார்ந்த. . .*

[2013 மார்ச் 26

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ.கே. போஸ் அவர்கள்.

***திரு. ஏ.கே. போஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதாவது, ஒரு சட்டமன்றக் கூட்டத் தொடரிலிருந்து அடுத்த சட்டமன்றக் கூட்டத் தொடர் கூடும் வரைக்கும் சட்டமன்ற உறுப்பினர் பதவி இரத்து என்று சொன்னார்கள். அப்படிப் பார்க்கும்போது, 4 மாதம் எனக்கு சம்பளம் கிடைக்கவில்லை. என்னுடைய அறையைப் பூட்டி சீல் வைத்துவிட்டார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) எந்தவிதமான உரிமையும் கொடுக்கவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மு.க. ஸ்டாலின், சப்ஜெக்ட்டுக்கு வாருங்கள்.

*முற்பகல் 11–45*

**திரு. மு.க. ஸ்டாலின்:** புத்தகத்திலே தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. “திரு. ஏ.கே. போஸ் அவர்களை அன்றிலிருந்து, சட்டமன்றக் கூட்டம் தொடங்கி முதல் 10 நாட்கள் வரை நீக்கி வைக்கவும்” என்றுதான் இதில் இடம் பெற்றிருக்கிறது. நான் அதைத்தான் குறிப்பிட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்த சட்டமன்றக் கூட்டம் தொடங்கி 10 நாட்கள் வரை என்றுதான் இருக்கிறது. அதைத்தான் திரு. ஏ.கே. போஸ் சொல்லிவிட்டார், அனுபவித்தவரே சொல்லிவிட்டார்.

**திரு. மு.க. ஸ்டாலின்:** சரி. எது எப்படியிருந்தாலும், நீங்கள் நேற்றையதினம் வழங்கிய அந்தத் தண்டனையை (குறுக்கீடு). . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான்கு மாதங்களாக சம்பளம் கொடுக்கவில்லையென்பதையும் அவரே தெளிவாகச் சொல்லிவிட்டார். அதுகுறித்து திரும்பத் திரும்பப் பேச வேண்டியதில்லை.

**திரு. மு.க. ஸ்டாலின்:** நேற்றையதினம் இங்கு வழங்கியிருக்கக்கூடிய தண்டனையை தயவுகூர்ந்து மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்று திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் கேட்டு அமர்கிறேன். (குறுக்கீடு)



2013 மார்ச் 26]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான்கு மாதங்களாக அவர் சம்பளம் வாங்கவில்லையென்று தெளிவாக individual–லே சொல்லிவிட்டார், அது குறித்துப் பேச வேண்டியதில்லை. நான்கு மாதங்கள் அறை பூட்டியிருந்ததையும், சீல் வைத்திருந்ததையும், சம்பளம் கொடுக்கவில்லையென்பதையும், அவர் சட்டமன்ற உறுப்பினராகச் செயல்படவில்லையென்பதையும் மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ.கே. போஸ் சொல்லிவிட்டார். திரும்பவும் அதுகுறித்துப் பேசவேண்டாம். மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அவையில் அனைவரும் பார்த்துக் கொண்டிருக்க நடைபெற்ற ஒரு தவறுக்காக, ஒழுங்கீனமான நடவடிக்கைக்காக தாங்கள் நேற்று சம்பந்தப்பட்ட சட்டமன்ற உறுப்பினர்களுக்கு ஓராண்டுக் காலம் வரை நீடிக்கக்கூடிய ஒரு தண்டனையை வழங்கியிருக்கிறீர்கள். இன்று எதிர்க்கட்சிகளைச் சார்ந்த பல மாண்புமிகு உறுப்பினர்கள் அந்தத் தண்டனைக் காலத்தைக் குறைக்க வேண்டுமென்று வைத்த கோரிக்கைக்கிணங்க, தாங்கள் “ஓர் ஆண்டு என்பதை ஆறு மாதங்கள் என்று குறைத்துக்கொள்ளலாம்” என்று தங்களுக்குப் பரிந்துரை செய்கிறேன்.

## 4. அரசினர் தீர்மானம்

### தே.மு.தி.க. உறுப்பினர்கள் ஆறு பேருக்கு வழங்கப்பட்ட தண்டனையைக் குறைத்தல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எதிர்க்கட்சிகளுடைய உணர்வுகளுக்கு மதிப்பளித்து, தவறு செய்பவர்களை மன்னிக்கும் விசால இதயம் கொண்ட மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி)

“கடிதோச்சி மெல்ல எறிக நெடிதாக்கம்
நீங்காமை வேண்டு பவர்”

என்ற குறளுக்கேற்ப பலமுறை தவறு செய்தவர்களும் திருந்துவதற்கு வாய்ப்பளிக்கும் வகையில் தே.மு.தி.க. கட்சி உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்ட தண்டனையை ஆறு மாதங்களாகக் குறைக்குமாறு கூறியுள்ளார்கள். அதன் அடிப்படையில் மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள் தீர்மானத்தினை முன்மொழிவார்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

[2013 மார்ச் 26

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . .

***மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு) நீங்கள் கொஞ்சம் அவசரப்படாமல் நிதானமாக இருங்கள். உட்காருங்கள். தீர்மானம் கொண்டுவரப் போகிறோம். (குறுக்கீடு) ஜனநாயக மாண்புகளை இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் எவ்வாறு மதிக்கிறார்கள் என்பதை அவர் விளக்கமாகச் சொல்லிக் கொண்டிருக்கிறார். அதற்குள் ஏன் நீங்கள் அவசரப்படுகிறீர்கள்? ஒரு சின்ன உதாரணத்தை மட்டும் சொல்கிறேன், கேளுங்கள். சட்டமன்றத்தினுடைய நடைமுறை, மாண்பு, விதி எங்களுக்கும் தெரியும் என்பதை நீங்கள் கவனத்தில் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 8–2–2013 அன்று மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவரும் நேரடியாக, கண்கூடாகப் பார்த்து, அவர்களால் அன்றைக்குத் தாங்கிக்கொள்ள முடியாத அளவுக்கு அந்தச் சம்பவம் நடந்தது. ஆனால், மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியான, உங்களுடைய ஆட்சிக் காலத்தில், சில பிரச்சினைகள் ஏற்பட்டபோது ஒரு காவலருடைய தொப்பி அதுவாகவே நழுவி கீழே விழுந்தது. மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ.கே. போஸ் அவர்கள் மனிதப் பண்போடு அன்றையதினம் அதை எடுத்து அப்போதைய சட்டமன்றப்பேரவைத் தலைவருடைய மேஜையில் வைத்தார். இதை ஒரு பெரிய குற்றமாக நீங்கள் கருதி, உடனடியாக, அன்றைக்கே, அப்போதே 10 நாட்கள் பேரவைப் பணிகளிலிருந்து நீக்க வைக்கிறோம் என்று நீங்கள் தீர்ப்பு சொன்னது, சரியாக அடுத்த சட்டமன்றக் கூட்டம் தொடங்கி, 10 நாட்கள் இருக்கும்வரை அந்தத் தீர்ப்பு வழங்கப்பட்டு, அந்தச் சட்டமன்ற உறுப்பினர் தங்கும் அறையும் சீல் வைத்துப் பூட்டப்பட்டது. நான்கு மாதங்கள் வரை அவர் சம்பளம் வாங்கவில்லை. சட்டமன்ற உறுப்பினருக்குரிய ஆதாயத்தையும் அவர் பெறவில்லை. இதுதான் உண்மை நிலை என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். நீங்கள் வழங்கியதுபோல அன்றைக்கே மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத் தலைவர் அவர்கள்



2013 மார்ச் 26] [திரு. ஓ. பன்னீர்செல்வம்]

உடனடியாக அவராகவே தீர்ப்பை வழங்கியிருக்கலாம். ஆனால், மாண்புமிகு அம்மா அவர்களுடைய நல்லாட்சியில் ஜனநாயகத்தை எந்த அளவுக்கு மதித்து நடந்து கொண்டிருக்கிறோம் என்பதற்கு இதுதான் சிறந்த உதாரணம். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 11–50

அன்றைக்கு அவையில் நடந்த நிகழ்வை, பிரச்சினையை அவை உரிமைக் குழுவிற்கு அனுப்பி, தீர விசாரித்து, அவை உரிமைக் குழு தருகின்ற பரிந்துரைகளை இங்கே அறிக்கையாக சட்டமன்றத்தில் வைத்து, அதற்குப் பின்னாலே இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் தெரிந்து, அறிந்து, மாண்புமிகு அம்மா அவர்களுடைய பெருந்தன்மையை இனிமேலாவது புரிந்துகொள்ளவேண்டும் என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

“தவறு செய்பவர்களை மன்னிக்கும் மாண்பும், கருணை உள்ளமும் கொண்ட மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இவ்வுறுப்பினர்களுக்கு நேற்று வழங்கப்பட்ட தண்டனையை ஆறு மாத காலமாகக் குறைக்கவேண்டும் என்று பெருந்தன்மையுடன் தெரிவித்த கருத்திற்கிணங்க (மேசையைத் தட்டும் ஒலி) தே.மு.தி.க. கட்சியைச் சேர்ந்த திரு. வி.சி. சந்திரகுமார், திரு. ப. பார்த்தசாரதி, திரு. து. முருகேசன், திரு. கு. நல்லதம்பி, திரு. ஆர். அருள்செல்வன், திரு. எஸ். செந்தில்குமார் ஆகிய உறுப்பினர்கள் சட்டமன்ற உறுப்பினர் என்ற வகையில் ஊதியத்தையும், எந்தவிதமான பிற ஆதாயங்களையும், சலுகைகளையும், தகுதிகளையும் பெற இயலாதவகையில் ஆறு மாத காலம் அவை நடவடிக்கையிலிருந்து நீக்கம் செய்யப்படலாம்” என்னும் தீர்மானத்தை மொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ‘ஆம்’ என்க. (ஆம்)

மறுப்போர் ‘இல்லை’ என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

*ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு)*

*(திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்தனர்)*

தே.மு.தி.க. கட்சியைச் சேர்ந்த திரு. வி.சி. சந்திரகுமார், திரு. ப. பார்த்தசாரதி, திரு. து. முருகேசன், திரு. கு. நல்லதம்பி, திரு. ஆர். அருள்செல்வன், திரு. எஸ். செந்தில்குமார் ஆகிய உறுப்பினர்கள் பேரவை நடவடிக்கைகளிலிருந்து ஆறு மாத காலம் நீக்கி வைக்கப்படுகிறார்கள். இக்காலத்தில் அவர்கள் சட்டமன்ற உறுப்பினர் என்ற வகையில் வழங்கப்படுகிற ஊதியம், எந்தவிதமான பிற ஆதாயங்களையும், சலுகைகளையும், தகுதிகளையும் பெற இயலாது என ஆணையிடுகிறேன்.

## 5. வரவு–செலவுத் திட்டம், 2013–2014, பொது விவாதம்–தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *2013–2014 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையின்மீது பொது விவாதம். முதலிலே மாண்புமிகு திரு. ஆர். மனோகரன் அவர்கள், அரசு தலைமைக் கொறடா.*

***திரு. ஆர். மனோகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

“பச்சை மாமலை போல் மேனி,
பவளவாய் கமலச் செங்கண்
அச்சுதா அமரர் ஏறே,
ஆயர் தம் கொழுந்தே என்னும்
இச்சுவை தவிர யான்போய்
இந்திர லோகம் ஆளும்
அச்சுவை பெறினும் வேண்டேன்,
அரங்கமா நகருளானே”

என திருவரங்கத்தில் பள்ளிகொண்ட பெருமானைத் தொண்டரடிப்பொடி ஆழ்வார் போற்றிப் பாடினார். அப்புனிதத் திருவரங்கம் தந்த மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களே! (மேசையைத் தட்டும் ஒலி)



பன்மொழி வித்தகராகத் திகழும் பண்பாட்டின் பெட்டகமாக மிளிரும் நன்னூல் அறிந்த தொன்னூல் அறிவாக ஒளிரும் தங்கத்தாரகை மாண்புமிகு அம்மா அவர்களே! ஆட்சியில் நேர்மையாக, காட்சியில் எளிமையாக, அனைவருக்கும் உதவும் அபிராமி அன்னையாக, இந்தியத் திருநாட்டின் இன்றைய சிந்தனையாக, (மேசையைத் தட்டும் ஒலி) இறைவன் தந்த காலத்தின் பரிசாக, இமயம் தகர்ந்தாலும் இடியாத மெய்யன்பாக, எங்கள் தீபகற்ப இந்தியாவின் எதிர்காலமாக, (மேசையைத் தட்டும் ஒலி) உலகெங்கும் வாழும் தமிழர்களின் வாழ்வுக்குக் கேடயமாகத் திகழும் எங்கள் புரட்சித் தலைவி மாண்புமிகு அம்மா அவர்களே!

டெல்டா விவசாயிகளின் வாழ்வாய், கரிகாலன் கட்டி வைத்த கல்லணையில், காணும் இடம் எல்லாம் தாவிப் பெருகிவந்து தஞ்சை வளநாட்டைத் தாயாகி காப்பவளாம் எங்கள் காவேரி குடகு முதல் பூம்புகார் வரை மடை திறந்த நாட்கள் போய், (மேசையைத் தட்டும் ஒலி) அன்று ஒருநாள் காவேரி என்று தமிழக மக்கள் கண்ணீர் வடிய பேசிடுவாரோ எனக் கவலையோடு இருந்த தமிழக மக்களுக்கு தங்களின் 65–வது பிறந்தநாள் பரிசாக, ‘உணவளிக்கும் உழவர்க்கெல்லாம் கண்ணாக! (மேசையைத் தட்டும் ஒலி) பண்பு உயர்ந்த தமிழ்நாட்டின் செல்லப் பெண்ணாக! புலவரெல்லாம் பாராட்டும் பொன்னாக, இருக்கும் காவேரி நதிநீரைத் தாயுருவப் போராளியாய், தனி மனித இராணுவமாய் நின்று நதிநீர்ப் பங்கீடு சம்பந்தமாக நீதிமன்றம் அளித்த தீர்ப்பை சட்டப் போராட்டம் நடத்தி மத்திய அரசிதழில் வெளியிட வைத்து, அன்பு பொங்கி வரும் காவேரியை தமிழகத்திற்கு அழைத்து வந்த பொன்னியின் செல்வி மாண்புமிகு அம்மா அவர்களே! தங்கள் பொற்பாதம் பணிந்து வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

எளியவனாகிய எனக்கு இம்மாமன்றத்து உறுப்பினராகவும், அரசு தலைமைக் கொறடாவாகவும் உயர வைத்த உயிரினும் மேலான என் அன்னையே! என் நெஞ்சுநிறை நன்றியினை இவ்வுலகம் நிலைக்கும் வரை நிறைவாக நினைத்திருப்பேன்; தங்களின் கடைக்கோடித் தொண்டனாய் நிலைத்திருப்பேன்!

இந்த நிதிநிலை அறிக்கையின் மீதான விவாதத்தில் பேசுவதற்கு வாய்ப்பளித்த மாண்புமிகு அம்மா அவர்களுக்கு முதற்கண் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*முற்பகல் 11–55*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுதந்திரக் கவிஞன் பாரதி கூறுவான், நிமிர்ந்த நன்னடையும், நேர்கொண்ட பார்வையும், நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகளும், திமிர்ந்த ஞானச்செருக்கும் இருப்பதால் செம்மை மாதம் திறம்புவதில்லையாம்.

'பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும் பாரினில் பெண்கள் நடத்த வந்தோம்' எனும் வரிகளின் வடிவமே! வீரத் திருமகளே! வேலு நாச்சியாரே! மனிதனை அணி செய்யும் குணங்களில் தலையாயது 'துணிச்சல்' என்றார் டேனியல் வெப்ஸ்டர் என்கிற அறிஞர். அந்தத் துணிச்சலின் பிறப்பிடமே! 'எல்லாரும் எல்லாமும் பெற வேண்டும்–இங்கு இல்லாமை இல்லாத நிலை வேண்டும்' இதுதான் தன்னுடைய இலட்சியம் என்று மாண்புமிகு அம்மா அவர்கள் நிமிர்ந்து சொன்ன இலட்சியங்கள்தான் இந்த நிதிநிலை அறிக்கையில் இன்று வார்ப்பாக உள்ளது. அதுதான் உண்மை.

யானையென்ன, சிறுத்தையென்ன, ஆயிரம் நரிகள் என்ன? கூனிக் குறுக வைக்கும் மாபெரும் 'சிம்மம்' நீங்கள். ஆம், சிம்மத்தில் பிறந்தவரே! எதிலும் அகரமிட்டு சிகரம் தொடும் அன்னையே! உங்களது சிந்தையில் உதித்து, செயலில் நிறுத்தி, மக்கள் போற்றும் மகத்தான மலிவு விலை உணவகத் திட்டத்தை தமிழக மக்கள் நன்றியோடு வாழ்த்துகிறார்கள். தரணியும் தானே வியக்கிறது; இந்த வியப்போ, இங்கே சிலர்க்கு வியர்க்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆலய பக்தர்களுக்கு அன்னதானத் திட்டம். இல்லத்தில் எதுவும் இல்லாள் எனும் பெண்ணுக்கு என்றைக்கும் உண்டாம் இருபது கிலோ விலையில்லா அரிசி; கல்யாணமாகா பெண்ணுக்கும் தங்கத் திருத்தாலி; கல்யாணமான பெண்ணுக்கோ ஆடும், மாடும்; குடும்பத்திற்கு கிரைண்டர், மிக்சியுடன் மின்விசிறி; சர்வதேச அளவில் வெற்றிப் படியேற மாணவர்க்கோ விலையில்லா மடிக்கணினி; ஓய்வூதியதாரர்களுக்கோ குடும்பப் பாதுகாப்பு நிதி உயர்வு; இதுமட்டுமா, மக்கள் நலன் காக்கும் இவ்வரசில் பட்டி தொட்டியிலே எங்கும் பசுமை வீடுகள்; பட்டணத்திலே எங்கும் அடுக்குமாடி வீடுகள் என ஆட்சிக் கட்டிலில் ஏறிய நாள் முதல் அடுக்கடுக்காய் மக்கள் நலப் பணிகள். 'மக்களால் நான்,



மக்களுக்காக நான்' எனும் மகராசியின் மாண்பினை பல மாநிலங்கள் போற்றுகின்றன.

மக்கள் நலனில் அக்கறை கொண்ட அம்மாவின் அரசு, மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மற்றும் காவல் துறை அதிகாரிகள் மாநாட்டில் அறிவித்த அறிவிப்புகள் ஏராளம், ஏராளம். இந்த அறிவிப்புகளுடன் நில்லாமல் அவற்றை ஆணையிட்டு செயல்படுத்தி வருவதும் தாராளம், தாராளம். அறிவித்த வாக்குறுதிகளையே நிறைவேற்றாமல், 'இரண்டு ஏக்கர் நிலம் தருவேன்' என்று ஏமாற்றியவர்களை நாடு ஏளனமாய்ப் பார்த்தது, ஆட்சியை விட்டு அகற்றியது. வருங்கால சந்ததியினரின் வளமைக்கும் 'தொலைநோக்குத் திட்டம் தமிழ்நாடு–2023' எனும் சீரிய திட்டம் மாண்புமிகு அம்மா அவர்களின் பார் போற்றும் திட்டம், இதுவே தமிழர்களின் வாழ்வில் முக்கிய கட்டம்; தமிழகம் விரைவில் வளர்ச்சியடைந்த முதல் மாநிலமாவது திண்ணம்.

'பூலோக வைகுண்டம்' அளித்த புண்ணியத் தாயே! புதுயுகம் காண புறப்பட்ட புரட்சித் தலைவி மாண்புமிகு அம்மா அவர்களே, புதிய வரி மற்றும் வரி உயர்வு ஏதுமில்லாமல் வறியவர்களுக்குப் பயன்படும் வரியில்லாத நிதிநிலை அறிக்கை, இந்த நிதிநிலை அறிக்கை. இது மக்கள் வாழ்த்தும் நிதிநிலை அறிக்கை. உண்ணும் உணவிலே உலை வைக்கும் விலைகளைக் கட்டுப்படுத்த உணவு மானியத்திற்கு ரூ.4,900 கோடி. கூட்டுறவு அங்காடிகள்மூலம் ஒரு கிலோ அரிசி ரூ.20/–க்கு விற்பனை செய்ய திட்டம். வேளாண்மைத் துறை முன்னேற்றத்திற்கு ரூ.5,189 கோடி. கூட்டுறவு அமைப்பின்மூலம் பயிர்க் கடன் வழங்க இலக்காய் ரூ.4,500 கோடி. 'வானம் பொய்த்தாலும் தன்னரசு பொய்க்காது' என குடிநீர் வசதிகளுக்கு ரூ.1,190 கோடி. வீடில்லா மனிதர்களில் நலிந்த பிரிவினருக்கு வரும் நிதியாண்டில் 60,000 பசுமை வீடுகள். 2 இலட்சம் பேருக்கு வீட்டுமனைப் பட்டாக்கள். ஊரக வளர்ச்சித் திட்டத்தின்கீழ் 100 நாள் வேலைத் திட்ட ஊதியமாக ரூ.132/– லிருந்து ரூ.148/–ஆக உயர்வு. பணி ஓய்வு பெற்றாலும் குடும்பத்தினைப் பாதுகாக்க, தனி மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்திலும் ஏற்றம். முத்துக் குளிக்கும் தூத்துக்குடியிலே முத்தான புதிய கப்பல் கட்டும் தளம். மாணவர்களின் கல்வித் தரம் சர்வதேச அளவிற்கு உயர்வதற்கு பிற துறைகளைக் காட்டிலும் கல்வித் துறைக்கு சுமார் 17,000 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு.

தமிழகத்தின் தலைநகராம் சென்னையிலே, 'மெட்ரோ இரயில்' திட்டத்திற்கு ரூ.750 கோடி நிதி ஒதுக்கீடு. சென்னை மற்றும் மதுரையிலே புதிதாக மேம்பாலங்கள். 10 பாலிடெக்னிக்குகள், 2 பொறியியல் கல்லூரிகள் துவங்க முடிவு. மாமல்லபுரத்தில் ரூ.250 கோடியில் ஓர் உயிரின காட்சியகம்; அரசின் சமூக நலத் திட்டங்களுக்கு ரூ.43,449 கோடி நிதி ஒதுக்கீடு என அறிவித்ததன்மூலம் வளர்ச்சிப் பாதையில் மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு சென்று கொண்டிருக்கிறது.

நண்பகல் 12–00

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சாதனைகளைத் தாராளமயமாக்கி, தரணியிலே தனக்கென ஒரு முத்திரையைப் பதித்து வர, சித்திரையைத் தொலைத்து, கூடவே தனது நித்திரையையும் தொலைத்து வரும் ஒரு தலைவர், 'இந்த நிதிநிலை அறிக்கை ஏமாற்றம் அளிக்கிறது' என்று சொல்கிறார். ஆம்! மக்களை ஏமாற்றிய இவருக்கோ என்றுமே ஏமாற்றம்தான். அடுத்து ஒருவர், 'இந்த பட்ஜெட் வளர்ச்சிக்கு உதவாது' என்று சொல்கிறார். தமிழகத்திற்கு உதவாதவர், மயக்கத்தில் பேசுகிறார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அன்னையின் அளவில்லா சாதனைகள் தன்னலம் அறியாது பொது நலம் கொண்டது; அம்மாவின் சாதனைகளைக் கண்டு சில்லறை சத்தங்களில் தமிழ்ச் சிந்தனையைத் தொலைத்தவர்கள்; அலைபேசி ஊழலால் அழகாய்ச் சிரித்தவர்கள்; தமிழர் வாழ்வைச் சரித்தவர்கள்; தமிழால், தமிழ் மக்களால் வாழ்ந்தவர்கள்; தமிழை மறந்தவர்கள்; உலக கோடீஸ்வரர்களின் பட்டியலில் முதலிடம் பிடிக்க கொள்ளையடிக்க முயற்சிப்பவர்கள்; மத்திய அரசில் அங்கம் வகித்து, மாநில நலனுக்குத் தடையாக இருந்தவர்கள் பொறாமைப்படுகிறார்கள்; பொல்லாங்கு பேசுகிறார்கள். இவர்களைப் பார்த்து தமிழகம் கேலியாகச் சிரிக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கரங்களை உயர்த்தி இரு விரல்களைக் காட்டினால், இமயத்திற்கு அப்பாலுள்ள மக்கள்கூட ஓட்டுப் போடத் தயங்காத கம்பீரம் மிக்கவர் நம் மாண்புமிகு அம்மா!" என்றார் ஓர் எழுத்தாளர். (மேசையைத் தட்டும் ஒலி) அந்த வாக்கியம் விரைவில் நிச்சயம் நிகழப் போகிறது; இது சத்தியம். 'உள்ள உறுதி, மதிநுட்பம், அரசியல் தெளிவு, பழமைக்கும் புதுமைக்கும் பாலமான பழுத்த



சிந்தனை, சமுதாய உணர்வு, சமநோக்கு, சான்றாண்மை, இவற்றிற்காக மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு சென்னைப் பல்கலைக்கழகம் டாக்டர் பட்டம் அளித்துச் சிறப்பிக்கிறது' என்று 19–12–1991–ல் மாண்புமிகு அம்மா அவர்களுக்கு டாக்டர் பட்டம் வழங்கியபோது சென்னைப் பல்கலைக்கழகம் வாசித்தது; அந்த வாசகங்கள் அத்தனையும் உண்மை. அந்த உண்மைதான் இந்த நிதிநிலை அறிக்கை.

பரணிபோல் தரணி வென்று பாராளும் முதல்வரே! தஞ்சமெனப் புகுவோர்க்கும் தாயாகும் தாயே! சிறுபான்மை இனத்தவர்க்கும் பெரும்பான்மை அளிக்கும் எங்கள் நல்லரசியே! மாற்றாந்தாய் மனப்பான்மையுடன், இரக்கமின்றி மத்திய அரசு இழைக்கும் கொடுமைகளுக்கு அஞ்சாது எதிர்நிற்கும் தாயே! தேசிய வளர்ச்சிக் குழுக் கூட்டத்தில் 2012, டிசம்பர் 27–ல் உரையாற்றியபோது, உரிய நேரம் கொடுக்காமல் சதிசெய்து தடுத்தவர்கள் தலைகுனிய, தமிழர்களின் சுயமரியாதை காத்து, சிம்மமாய் வெளியேறிய தாயே! வானமும் உங்களுக்கு வணக்கம் தெரிவித்தது; இமயமும் உங்களை இனிதாய் வாழ்த்தியது.

அன்று மத்தியிலும், மாநிலத்திலும் ஆட்சி; ஆனாலும், தமிழர்களுக்கு இல்லை மகிழ்ச்சி. ஆண்ட காலத்தில் தமிழர்களுக்கு எதிராய் இருந்து, ஈழத் தமிழர்களை அழித்தவர்கள், டெசோ என்னும் நாடக மன்றத்தினை இன்றைக்கு நடத்துகிறார்கள்; மக்களோ அவர்களைத் துரத்துகிறார்கள். 'மான் ஆடவேண்டும்; மயில் ஆடவேண்டும்' என்று நினைத்தவர்கள், (மேசையைத் தட்டும் ஒலி) தமிழன் மடிய வேண்டும்; (குறுக்கீடுகள்) அதில் தன் குடும்பம் வாழ வேண்டுமென நினைத்தார்கள்.

தமிழினம் காக்க, ஈழத் தமிழர் வாழ்வு சிறக்க எத்தனையோ நல்ல திட்டங்கள் வழங்கிய தாயே! இனப் படுகொலை செய்தவர்களை, போர்க் குற்றவாளியாக அறிவிக்க வேண்டுமென்ற தீர்மானத்தை நிறைவேற்றியும், பொருளாதாரத் தடை விதிக்க வேண்டுமென்றும் முழக்கமிட்ட புண்ணியத் தலைவி மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களே! உமது முழக்கம் தடைகளை வென்ற முழக்கம்; அதைக் கேட்டு பகைவர்கள் கூட்டம் கலக்கம்! (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தண்ணீர் இருக்குமிடம், தாழை சிறக்குமாம்; நன்னீர் இருக்குமிடம், பயிர்கள் சிறக்குமாம்! தண்ணீர் இருக்குமிடம், தாழை சிறக்குமாம்; நன்னீர் இருக்குமிடம், பயிர்கள் சிறக்குமாம்! அம்மா, நீங்கள் இருக்குமிடம் எல்லாம் சிறக்குமாம் (மேசையைத் தட்டும் ஒலி) இந்த குறுகிய காலத்திலேயே ஆயிரம் ஆண்டு சாதனைகள் புரிந்த மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், தமிழக மக்களுக்கு அளித்த தரமான நிதிநிலை அறிக்கை மக்கள் போற்றும் மகத்தான அறிக்கை, இந்த 2013–2014 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கை. அள்ள அள்ளக் குறையாத அட்சய பாத்திரம்; மக்கள் நினைத்ததைக் கொடுத்த கற்பக விருட்சம்.

இந்த நிதிநிலை அறிக்கையில் எனக்குப் பேச வாய்ப்பளித்தமைக்காக கலைமகளாய், அலைமகளாய், மலைமகளாய்த் திகழும், நாளைய இந்தியாவின் தலைமகளாம், நாடாளும் மாண்புமிகு அம்மாவை (மேசையைத் தட்டும் ஒலி) நாடாளுமன்றம் ஆளப்போகும் மாண்புமிகு அம்மாவை (மேசையைத் தட்டும் ஒலி) நாளெல்லாம் வணங்கி, எனது உரையை நிறைவு செய்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எ.வ. வேலு அவர்கள்.

பிற்பகல் 12–05

***திரு. எ.வ. வேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மாமன்றத்திலே பேசுகின்ற வாய்ப்பை உருவாக்கிய எங்கள் தலைவர் கலைஞர் அவர்களுக்கும், (மேசையைத் தட்டும் ஒலி) இந்த மாமன்றத்திலே நான் பேசுவதற்குப் பரிந்துரைத்த திராவிட முன்னேற்றக் கழக சட்டமன்றக் கட்சித் தலைவர், அன்பிற்குரிய அண்ணன் தளபதியார் அவர்களுக்கும், (மேசையைத் தட்டும் ஒலி) எனக்குப் பேச வாய்ப்பளித்த மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும் எனது நெஞ்சார்ந்த நன்றியை முதலிலே நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

"இடிப்பாரை இல்லாத ஏமரா மன்னன்
கெடுப்பா ரிலானுங் கெடும்"

என்பது வள்ளுவர் வாக்கு. "ஓர் அரசு, நல்ல அரசாக இருக்க வேண்டுமென்று சொன்னால், குறைகளை உணர்த்துபவர்கள்



இருந்தால்தான் அது நல்ல அரசாக அமையும்" என்று வள்ளுவர் சொல்கிறார். ஆனால், இந்த அரசைப் பொறுத்தளவிற்கு போற்றுவதற்கு, புகழ் பாடுவதற்கு நிறைய சட்டமன்ற உறுப்பினர்கள், அமைச்சர் பெருமக்கள் இருக்கிறார்கள். ஆனால், இந்த ஆட்சியினுடைய குறைகளைக் சுட்டிக்காட்டுவதற்கு எங்களைப் போன்ற குறைந்த அளவு சட்டமன்ற உறுப்பினர்களே இருக்கிறார்கள். நாங்கள் பேசுவதற்கு, நீங்கள் ஜனநாயக ரீதியாக வாய்ப்பளித்தால்தான் நாங்கள் இந்த ஆட்சியினுடைய குறைகளைச் சுட்டிக்காட்ட முடியும். ஆனால், மானியக் கோரிக்கையாக இருந்தாலும், நிதிநிலை அறிக்கையாக இருந்தாலும், அதிலே நாங்கள் பேசுவதைத் தடுக்க வேண்டுமென்ற உள்நோக்கத்தோடு பேசி, எங்களை வெளியே அனுப்புவதிலேயே குறியாக இருந்தால் அது ஒரு நல்ல அரசாக அமைய முடியாது என்று வள்ளுவர் சொல்கிறார். நான் சொல்லவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஜனநாயத்தைப் பற்றி திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்தவர்கள் இந்த அவையிலே பேசக் கூடாது; அதற்குத் தகுதியும் இல்லை. அனைந்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய நிறுவனத் தலைவர் மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களை, செருப்பை எடுத்து வீசி, விரட்டி அடித்தவர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்தவர்கள்; அதற்குப் பிறகு, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களிடம் இதே அவையில், மார்ச் மாதம் 25 ஆம் தேதியன்று கேவலமான முறையிலே, அருவருக்கத்தக்க வகையிலே நடந்து கொண்டவர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்தவர்கள்; ஜனநாயகத்தைப் பற்றி பேசுவதற்கு தி.மு.க.–வுக்கு உரிமை கிடையாது என்பதை இந்த அவையிலே தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எ.வ. வேலு, பேசுங்கள். (குறுக்கீடு) இல்லை. (குறுக்கீடு) உங்கள் உறுப்பினர்தான் பேசுகிறார். (குறுக்கீடு) உங்கள் உறுப்பினர்தானே பேசுகிறார். (குறுக்கீடு) திரு. எ.வ. வேலு, பேசுங்கள். (குறுக்கீடு)

**திரு. எ.வ. வேலு:** மூத்த உறுப்பினர்கள் பேசுவதற்கு வாய்ப்புக் கொடுக்க வேண்டுமா, இல்லையா? (குறுக்கீடு) முன் வரிசையில் உள்ளவர்களுக்கு வாய்ப்புக் கொடுக்க வேண்டுமா, இல்லையா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள்தானே பேசுகிறீர்கள், பேசுங்கள். (குறுக்கீடு)

**திரு. எ.வ. வேலு:** எதிர்க்கட்சிகள் பேசுவதற்கு வாய்ப்புக் கொடுக்க வேண்டுமா, இல்லையா? (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள்தானே பேசுகிறீர்கள், பேசுங்கள். (குறுக்கீடு) நான் அனுமதி கொடுக்காதபோது, இதுபோன்று குறுக்கே பேசக் கூடாது. (குறுக்கீடு)

**திரு. எ.வ. வேலு:** மாண்புமிகு . . . (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜெ. அன்பழகன், நான் உங்களுக்குப் பேச அனுமதி கொடுக்கவில்லை. இப்படி நீங்கள் பேசினால் என்ன அர்த்தம்? (குறுக்கீடு) உட்காருங்கள், உட்காருங்கள். குறுக்கே, குறுக்கே பேசக் கூடாது (குறுக்கீடு) உங்கள் உறுப்பினர்தான் பேசுகிறார். இதுபோன்று குறுக்கே, குறுக்கே பேசக் கூடாது. (குறுக்கீடு) உங்கள் உறுப்பினர்தான் பேசுகிறார். (குறுக்கீடு) இதற்கு மேல் பேசினால், நான் நடவடிக்கை எடுக்க வேண்டி வரும். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. எ.வ. வேலு அவர்கள்.

**திரு. எ.வ. வேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இல்லாததையும், பொல்லாததையும் கற்பனையாக எப்படி வேண்டுமானாலும் பேசலாம். அதிலும் குறிப்பாக மாண்புமிகு அமைச்சர் திருமதி வளர்மதி அவர்கள் பேசுவதில் எனக்கு ஒன்றும் ஆச்சரியம் இல்லை. காரணம், அவர் எப்படியெல்லாம் இன்றைய முதலமைச்சரை ஒருகாலத்திலே பேசினார் என்பதெல்லாம் நாடு அறிந்த உண்மை; அவர் பேசுகிறார், அதுதான், ஒரு பெரிய ஆச்சரியம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இவர் பேசக் கூடாது. மாண்புமிகு உறுப்பினர்



பேசக் கூடாது. (மேசையைத் தட்டும் ஒலி) எங்களுக்கு ஒரே ஒரு தலைவர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள், அவருக்குப் பிறகு, நாங்கள் ஏற்றுக்கொண்டிருக்கின்ற தலைவர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) தன்னுடைய பேச்சின் ஆரம்பத்திலேயே, மாண்புமிகு உறுப்பினர் பேசுகிறபோது, 'இந்த அவைக்கு அனுப்பி வைத்த தலைவர் கலைஞர்' என்று சொன்னார். 1984 ஆம் ஆண்டில் இந்த அவைக்கு அவரை அனுப்பி வைத்த தலைவர் யார்? அவர் இதை இங்கே விளக்க வேண்டும். 1984 ஆம் ஆண்டிலே இதே அவைக்கு அவரை அனுப்பி வைத்த தலைவர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் என்பதை மறந்துவிட்டுப் பேசுகிறார். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எ.வ. வேலு (குறுக்கீடு) திரு. ஜெ. அன்பழகன், உங்கள் உறுப்பினர்தானே பேசுகிறார். (குறுக்கீடு) நீங்கள் ஏன் எழுந்திருக்கிறீர்கள்? (குறுக்கீடு) அவர் பேசுகிறார், நீங்கள் ஏன் எழுந்திருக்கிறீர்கள், உட்காருங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. எ.வ. வேலு, நீங்கள் பேசுங்கள்.

**திரு. எ.வ. வேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டினுடைய முதலமைச்சராக இருந்த மக்கள் திலகம், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களுக்கே தலைவராக இருந்த தலைவர் கலைஞரைத்தான் நான் தலைவராகப் பெற்றிருக்கிறேனேயொழிய, வேறொன்றுமில்லை. அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு தாய்க் கழகமே திராவிட முன்னேற்றக் கழகம் என்பது நாடறிந்த உண்மை. எனவே, அது ஒன்றும் புதிது அல்ல. (குறுக்கீடுகள்) ஆனால், நான் என்ன கருத்தைச் சொல்கிறேன் என்றால், (குறுக்கீடு)

பிற்பகல் 12–10

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. நயினார் நாகேந்திரன் அவர்கள்.

***திரு. நயினார் நாகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. எ.வ. வேலு அவர்கள் பேசுகின்றபோது, 'புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களுக்கே தலைவர் கலைஞர்' என்று சொன்னதை அவைக் குறிப்பிலிருந்து நீக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)

**திரு. எ.வ. வேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, . . . (குறுக்கீடு)

***மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள்தான் எல்லோருக்கும் தலைவராக இருந்தாரே தவிர, உங்கள் தலைவர் ஒரு குரூப்புக்குத் தலைவராக இருந்தார். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள், உட்காருங்கள்.

**திரு. எ.வ. வேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைத் தலைவர் அவர்களுக்கே தெரியும். அவரே ஒரு காலத்திலே மாணவரணியிலே திராவிட முன்னேற்றக் கழகத்தில் இருந்தார். இங்கிருப்பவர்களில் பெரும்பாலானவர்கள் அப்படித்தான். பரங்கிமலை தொகுதியில் 2 முறை சட்டமன்ற உறுப்பினராக இருக்கிறபோது தலைவராக இருந்தவர் கலைஞர் அவர்கள். அதுவெல்லாம் வரலாறு. வரலாற்றில் இல்லாததை நான் சொல்லவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எ.வ. வேலு, பேசுங்கள். தேவை இல்லாத சப்ஜெக்ட்டை எதற்குப் பேசுகிறீர்கள்? தேவை இல்லாமல் பேசாதீர்கள். பட்ஜெட்மீது மட்டும் பேசுங்கள்.

**திரு. எ.வ. வேலு:** தேவை இல்லாததை நான் பேசவில்லை. தேவையின் அடிப்படையிலே பேசுகிறேன். எனவே, எங்களுக்குப் பேசுவதற்கு ஜனநாயக ரீதியாக வாய்ப்பளிப்பதன் மூலமாகத்தான் பல்வேறு கருத்துக்களை நாங்கள் சொல்ல முடியும். அந்த வகையில் இந்த நிதிநிலை அறிக்கையை நான் படித்துப் பார்த்தேன். எங்கள் ஊரிலே ஒரு பழமொழி உண்டு. எதுவும் இல்லை என்று சொன்னால், 'உப்பு சப்பு இல்லை' என்று சொல்வார்கள். எனவே, இந்த நிதிநிலை அறிக்கையிலே எந்த உப்பும் இல்லை, எந்த சப்பும் இல்லை. அப்படித்தான் இந்த நிதிநிலை அறிக்கை அமைந்திருக்கிறதே தவிர, வேறு ஒன்றும் இல்லை.

அதேநேரத்திலே, மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு நான் கொண்டுவர விரும்புவது, பக்கம் 82–லே 2012–2013 ஆம் ஆண்டிற்கான திருத்திய மதிப்பீட்டில் மாநில அரசின் சொந்த வரிவருவாய் ரூபாய் 73,560.17 கோடிதான்.



2013–2014 ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்ட மதிப்பீட்டில் 86,065.40 கோடி ரூபாய் அதிகரிக்கும். இது எதைக் காட்டுகிறது என்று சொன்னால், 17 சதவிகிதம் கூடுதலாக, அதாவது, சுமார் 12,495 கோடி ரூபாய் வருவாய் வரும் என்று நம்முடைய நிதியமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். ஆனால், என்னைப் பொறுத்தவரைக்கும் நாடு இருக்கிற சூழ்நிலையில் வரி வருவாய் வருவதற்கு வாய்ப்பு இல்லை என்று நான் கருதுகின்றேன். காரணம், இன்றைக்கு நாட்டிலே சிறு, பெரும் தொழில்கள் எல்லாம் முடங்கிப் போய் இருக்கின்றன. உற்பத்தியே இல்லை. விற்பனையும் குறைவு. மின் பற்றாக்குறை. மாநிலம் முழுவதும் வறட்சி இருக்கிறது. இப்படிப்பட்ட நிலையிலே வருவாய் வரி–Sales Tax வரும் என்று நம்முடைய நிதியமைச்சர் கருதுவாரேயானால், அது வருவதற்கு வாய்ப்பு மிகக் குறைவாகத்தான் இருக்கிறது.

இன்னொன்று, பத்திரப் பதிவின் மூலமாக பணம் வரும் என்று கருதுகிறார்கள். பத்திரப் பதிவைப் பொறுத்த அளவிற்கு, முன்பே நீங்கள் ஏற்படுத்திய வழிகாட்டிக் கட்டணம் உயர்ந்திருக்கிற காரணத்தினால், பல இடங்களிலே பத்திரப் பதிவு அலுவலகங்கள் காற்றாடிக் கொண்டிருக்கின்றன. பதிவே நடைபெறவில்லை. காரணம், கைடுலைன் மதிப்பு ஏற்கெனவே ஏற்றப்பட்டு இருக்கிறது. அதனால், அதிலே வருவதற்கு வாய்ப்பு இல்லை.

இன்னொன்று, நம்முடைய நிதி அமைச்சர் அவர்கள் அளித்த 2011–2012 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கை பத்தி 18–ல், பொருளாதார வளர்ச்சி 7.80 சதவிகிதம் என இருந்தது. அதாவது, நீங்கள் இந்த முறை ஆட்சிக்கு வந்த 2011–2012 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையிலே நம்முடைய நிதியமைச்சர் அவர்கள் சொல்கிறபோது, "உங்களுடைய ஆட்சியிலே, கலைஞர் ஆட்சியிலே 7.80 சதவிகிதம்தான் பொருளாதார வளர்ச்சி இருக்கிறது. நாங்கள் ஆட்சிக்கு வந்திருக்கிறோம். இரண்டு ஆண்டு காலத்திலே 10 சதவிகிதமாகக் கொண்டு வருவோம்" என்று சொல்லி இருக்கிறார்கள். அது 2011–2012 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையிலே பத்தி 18–லே இருக்கிறது. ஆனால், இப்பொழுது கொடுக்கப்பட்டிருக்கிற 2013–2014 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கை பக்கம் 5–ல் பொருளாதார வளர்ச்சி 4.61 சதவிகிதம் மட்டுமே இருக்கும் என்று நீங்களே சொல்லி இருக்கிறீர்கள். 10 சதவிகிதம் வரும் என்று கருதினீர்கள். ஆனால், நீங்களே இப்பொழுது சொல்லி இருப்பது 4.61 சதவிகிதம் மட்டுமே இருக்கும் என்று

கணக்கிடப்படுகிறது என்று சொல்கிறபோது, பொருளாதார வளர்ச்சி இரண்டு ஆண்டு காலத்திலே மிகக் குறைந்திருக்கிறது. அதனால், வாங்குகிற சக்தி என்பது குறைந்துவிட்டது. அதனால் Sales Tax வருவதற்கும் வாய்ப்பில்லை. பத்திரப் பதிவில் வருவாய் வருவதற்கும் வாய்ப்பில்லை. இன்றைக்குக் ஏற்பட்டிருக்கின்ற பொருளாதார மந்த நிலையின் காரணமாக (குறுக்கீடு) . . .

பிற்பகல் 12–15

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. பி.வி. ரமணா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2012–2013 வணிக வரித் துறையினுடைய இலக்கு மொத்தம் 48,500 கோடி ரூபாய். கடந்த பிப்ரவரி மாதம் வரையில் மாண்புமிகு அம்மாவினுடைய தலைமையிலான அரசு கிட்டத்தட்ட 43,000 கோடி ரூபாய் வரையில் வரி வசூல் செய்து சாதனை படைத்துள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) மார்ச் மாதம் 5,000 கோடி ரூபாய் இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டு இருக்கிறது. மார்ச் 31–க்குள்ளேயே நிச்சயமாக அந்த இலக்கு எய்தப்படும் என்பதை இந்த நேரத்தில் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாகத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பத்திரப் பதிவுத் துறை சார்பாக கடந்த ஆண்டு 8,500 கோடி ரூபாய் இலக்கு நிர்ணயிக்கப்பட்டது. ஆனால், உங்களுடைய ஆட்சிக் காலத்தில் 2007 ஆம் ஆண்டு வழிகாட்டி மதிப்பீட்டை உயர்த்துவதற்காக ஒரு குழு நியமிக்கப்பட்டு, 2012 ஆம் ஆண்டு அந்த வழிகாட்டி மதிப்பீடு அமல்படுத்தப்பட்டது. அதன் காரணமாக, பத்திரப் பதிவின் மூலமாக அரசுக்கு வர வேண்டிய வருவாயின் அளவு குறைந்திருக்கிறது. ஆனாலும், வருகின்ற 2013–2014 காலக்கட்டத்தில் கிட்டத்தட்ட 9,874 கோடி ரூபாய் வருவாய் ஈட்ட வேண்டுமென்று இலக்கு நிர்ணயிக்கப் பட்டிருக்கிறது. மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு அந்த இலக்கை நிச்சயமாக எய்தும்.

வணிக வரித் துறையிலே, அடுத்த ஆண்டிற்கான இலக்கு 56 ஆயிரத்து 25 கோடி ரூபாய் நிர்ணயம் செய்யப்பட்டிருக்கிறது.



அது கிட்டத்தட்ட 15 சதவிகிதம் கூடுதலாக நிர்ணயம் செய்யப்பட்டிருக்கிறது. அவ்வாறு நிர்ணயம் செய்த அந்தத் தொகையை நிச்சயமாக எட்ட முடியும் என்று மாண்புமிகு அம்மா அவர்களுடைய தலைமையிலான அரசு நம்புகிறது என்பதை இந்த நேரத்தில் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாகத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எ.வ. வேலு அவர்கள்.

**திரு. எ.வ. வேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாங்குகிற சக்தி குறைந்து இருக்கிறது என்று நான் சொல்வதற்குக் காரணம் உங்களுடைய நிதிநிலை அறிக்கையிலேதான், இன்றைக்கு பொருளாதாரத்தினுடைய நிலை. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. எ.வ. வேலு அவர்கள் பேசுகின்றபொழுது, “2012–2013 ஆம் ஆண்டிற்கான திருத்த மதிப்பீட்டின்படி மாநில அரசினுடைய சொந்த வரி வருவாய் 73,560.17 கோடி ரூபாய் ஆகும் என்று சொல்லப்பட்டு இருக்கிறது; 2013–2014 ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்ட மதிப்பீட்டின்படி அது ரூ. 86,065.40 கோடியாக அதிகரிக்கும் என மதிப்பீடு செய்யப்பட்டிருக்கிறது” என்பதை இங்கே ஆச்சரியமாகச் சொன்னார்கள். உண்மைதான். மாண்புமிகு அம்மா அவர்கள் பதவி ஏற்ற 2011–லிருந்து இன்று வரை ஆட்சி செய்கின்ற நடைமுறை, நிதி நிருவாகத்தினுடைய சீரமைப்பு, மேலாண்மை, இவற்றையெல்லாம் மாண்புமிகு உறுப்பினர் திரு. எ.வ. வேலு அவர்கள் கூர்ந்து கவனித்திருந்தாலே அது தெரியும். ஆட்சி செய்கின்ற இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி மாண்புமிகு அம்மா அவர்கள் எவ்வாறு அறிவார்ந்த, புத்தி கூர்மையுடன், மிகவும் ஆழ்ந்து நிருவாகத்தை கவனித்துக் கொண்டு வருகிறார்கள் என்பதனை நீங்கள் உணர வேண்டும் என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்கின்றேன்.

இந்திய அளவில் ஏற்பட்டிருக்கின்ற பொருளாதார மந்த நிலை, மத்திய அரசினுடைய தவறான பொருளாதாரக் கொள்கையினால் இந்திய அளவில் இருக்கின்ற பொருளாதாரம் எவ்வளவு கீழ் நிலைக்குக், சென்று கொண்டிருக்கிறது என்பதனையும், இதனால் அனைத்து மாநிலங்களும் வெகுவாக பாதிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன என்பதையும் தெரிந்துகொள்ள வேண்டும். ஆனால், மாண்புமிகு அம்மா அவர்களின் மிகச் சிறந்த நிருவாகத்தின் காரணமாக, நிதி மேலாண்மை மூலமாக செலவுகளைக் கட்டுப்படுத்தி, ஆடம்பரம் இல்லாத, ஊதாரித்தனம் இல்லாத, செலவுகளைக் கட்டுப்படுத்தி, நிதிச் சீரமைப்பை மேம்படுத்தியதன் காரணமாகவே இந்த அதிகப்படியான வருவாய் வருவதற்கு, வரி இல்லாமல் நம்முடைய மாநிலத்தின் சொந்த வரி வருவாய் வருவதற்கு, மாண்புமிகு அம்மா அவர்களுடைய நல்லாட்சியில், அதிகப்படியான வரி இல்லாமல், வரி இல்லாத பட்ஜெட்மூலமாக இந்த இலக்கு எட்டப்படும் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது.

நீங்கள் அடுத்த ஆண்டு ஏப்ரல் 2014 இல் இதே சட்டமன்றத்திற்கு வரும்பொழுது, இந்த இலக்கு எட்டப்படும் என்பதனை நான் இங்கு தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எ.வ. வேலு அவர்கள்.

பிற்பகல் 12–20

**திரு. எ.வ. வேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் ஒரு விளக்கம் தந்தார்கள். அதை நான் மறுக்கவில்லை. ஆனால், எனக்கு இருக்கிற பயம் எல்லாம் இப்பொழுது நிதிநிலை அறிக்கையிலே நீங்கள் வரியே போடவில்லை. நிதிநிலை அறிக்கையிலே வரியே போடாமல் போனமுறை பின்னால் போடுவதற்கு வாய்ப்பு இருக்குமோ என்ற நிலையில்தான் நிதிநிலை அறிக்கையை அளிப்பதற்கு முன்பு 11–7–2011 இல் வாட் வரி என்ற முறையிலே 4,200 கோடி ரூபாய், பிறகு ஒரு 1,200 கோடி ரூபாய் என்று ஏற்கெனவே நீங்கள் போட்டீர்கள் என்பதை உங்களிடத்திலே தெரியப்படுத்த விரும்புகிறேன். அதோடுமட்டுமல்ல, எனக்கிருக்கிற இன்னொரு பயமெல்லாம், பொதுவாக திட்டங்களைப் போடுகிறீர்கள், திட்டங்களைப் போட்டுவிட்டு தொடர்ந்து மக்கள் தலையிலே வரியை வைப்பது என்பதோடு மட்டுமல்லாமல், அதே நேரத்திலே திட்டங்களை முழுமைப்படுத்தாமல் விட்டு விடுகிறீர்கள். அறிவிக்கப்பட்ட திட்டங்களுக்கு ஒதுக்கப்படும் நிதி முழுமையடையாமல் குறைத்துக்கொள்வதற்கும் வாய்ப்பிருக்கிறது என்று உங்களுடைய நிதிநிலை அறிக்கையிலே சொல்லியிருக்கிறீர்கள். உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்றால், சென்ற இரண்டு ஆண்டுகளுக்கான உங்களுடைய நிதிநிலை அறிக்கையிலே ஆண்டொன்றுக்கு 3,000 பேருந்துகள் வாங்குவதாக அறிவித்து மொத்தம் 6,000 புதிய பேருந்துகள் 1,026 கோடி ரூபாயில் வாங்கப்படுமெனக் கூறியிருந்தீர்கள். ஆனால், நீங்களே 6,000 பேருந்துகள் நாங்கள் வாங்கவில்லை. 2,855 பேருந்துகள் மட்டும்தான் வாங்கியிருக்கிறோம் என்று சொல்கிறபோது அறிவிக்கப்பட்ட திட்டம் முழுமையடையவில்லை. அதன்மூலமாக நீங்கள் அறிவிக்கின்ற திட்டங்கள் நிறைவேறாமல் போய்விடுமோ. . .



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு பழமொழி சொல்வார்கள், ஆடு நனைகிறது என்று ஓநாய் அழுததாம். (மேசையைத் தட்டும் ஒலி) மத்திய அரசு டீசல் விலையில் இரட்டைக் கொள்முதல் விலையை நடைமுறைக்குக் கொண்டுவந்தபொழுது மத்திய அரசிலே அங்கம் வகித்திருந்தவர்கள், ஆட்சியிலே அங்கம் வகித்துக் கொண்டிருந்தவர்கள் அதை வேடிக்கை பார்த்தார்கள். ஐந்தாண்டுகாலம் மாநிலத்தில் ஆட்சியில் இருந்தவர்கள், அரசுப் போக்குவரத்துக் கழகத்திற்கு 6,150 கோடி ரூபாய் கடனை ஏற்படுத்திவிட்டுச் சென்றவர்கள் 6,000 புதிய பேருந்துகள் வாங்குவதாகச் சொன்னீர்கள், வாங்கவில்லையே என்று கேட்கிறார்கள். 2,855 புதிய பேருந்துகள் மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் திருக்கரங்களால் கொடி அசைத்துத் துவக்கி வைக்கப்பட்டன. குறிப்பாக, இந்த இரண்டு ஆண்டுகளில் மட்டும் 1,353 புதிய வழித்தடங்களில் மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) இந்தப் பேருந்துகளை இயக்கி வைத்து மக்களுடைய பயன்பாட்டிற்கு வழங்கியிருக்கின்றார்கள். அடுத்து 3,000 புதிய

பேருந்துகளுக்குண்டான tender விடும் பணிகள் முடிக்கப்பட்டு கொள்முதலுக்குண்டான உத்தரவுகள் வழங்கப்பட்டிருக்கின்றன. பேருந்துகள் கொள்முதல் செய்யப்பட்டவுடன் மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் திருக்கரங்களால் மக்களுடைய பயன்பாட்டிற்கு வழங்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவரின்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. எ.வ. வேலு, உரையை முடியுங்கள்.*

**திரு. எ.வ. வேலு:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் இப்போதுதான் பேசவே ஆரம்பித்திருக்கிறேன். உரையை முடியுங்கள் என்று சொன்னால் எப்படி? (குறுக்கீடு)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. எ.வ. வேலு, உரையை முடியுங்கள். நிறைய நேரமாகிவிட்டது. நீங்கள் பேச ஆரம்பித்து 15 நிமிடங்களாகிவிட்டன. பேசி முடியுங்கள்.*

**திரு. எ.வ. வேலு:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் பட்டுக்கோட்டைக்குத் தான் வழியைக் கேட்டேன்; கொட்டைப் பாக்கின் விலையைக் கேட்கவில்லை. காரணம் என்னவென்று சொன்னால் 6,000 பஸ்கள் வாங்குவதாக நீங்கள்தான் சொன்னீர்கள். குறைத்திருக்கிறீர்களே! திட்டம் முழுமையடையவில்லை என்பதுதான் என்னுடைய குற்றச்சாட்டு. வேறு ஒன்றும் அல்ல.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 6,000* புதிய பேருந்துகள் கொள்முதல் செய்ய திட்டமிட்டிருக்கிறோம். 2,855 பேருந்துகள் மக்களுடைய பயன்பாட்டிற்கு வந்திருக்கின்றன. இப்போது மீதமுள்ள பேருந்துகளுக்கான அடிச்சட்டம் கொள்முதல் செய்வதற்கான உத்தரவுகள் சம்பந்தப்பட்ட கம்பெனிகளுக்கு வழங்கப்பட்டிருக்கின்றன. அடிச்சட்டங்கள் கொள்முதல் செய்யப்பட்டவுடன் புதிய கூண்டுகள் கட்டப்பட்டு பேருந்துகள்



மக்கள் பயன்பாட்டிற்கு வழங்கப்படும். இன்னுமொரு கருத்தை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவிக்கின்றேன். மத்திய அரசு டீசல் விலையில் இரட்டைக் கொள்முதல் விலையைக் கொண்டுவருகின்றபோது மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் நீதிமன்றத்தை நாடி, இந்தியாவில் இருக்கின்ற மற்ற மாநிலங்களுக்கெல்லாம் முன்னுதாரணமாகத் தடையாணை பெற்று *(மேசையைத் தட்டும் ஒலி)* சில்லறை வணிகர்களுக்கு எந்த விலைக்கு டீசல் வழங்கப்பட வேண்டுமோ அதே விலைக்கு இன்று அரசுப் போக்குவரத்துக் கழகங்களால் கொள்முதல் செய்யப்படுகின்றன என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவரின்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. எ.வ. வேலு, ஒரு நிமிடத்தில் உரையை முடியுங்கள்.*

**திரு. எ.வ. வேலு:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்னும் பேசவேயில்லை. . . (குறுக்கீடு)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *நீங்கள் பேசிக்கொண்டுதான் இருக்கிறீர்கள். விரைவில் உரையை முடியுங்கள்.*

**திரு. எ.வ. வேலு:** *அமைச்சர்கள் பேசிக் கொண்டேயிருந்தால் நான் என்ன செய்ய முடியும்?*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. எ.வ. வேலு, நீங்கள் பேச ஆரம்பித்து 20 நிமிடங்களாகி விட்டன. உரையை நிறைவு செய்யுங்கள்.*

**திரு. எ.வ. வேலு:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,— இந்த ஆட்சி வருகிறபொழுது, 'இருண்ட தமிழகம் ஒளி பெற தடையில்லாத மின்சாரம்' என்று சொல்லித்தான் வந்தது. 2012-2013 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் பக்கம் 42-ல்கூட இருண்ட தமிழகம் ஒளிபெற தடையில்லா மின்சாரம் வழங்கப்படும் என்று சொல்லப்பட்டிருந்தது. காரணம், நாங்கள் ஆட்சியில் இருக்கிறபோது இரண்டு மணி நேரம் மின்வெட்டு இருந்ததை நாங்களே ஒத்துக்கொள்கிறோம். ஆனால், இரண்டு மணி நேரம் மின்வெட்டு இல்லாமல் நாங்கள் தடையில்லாத மின்சாரத்தைக் கொடுக்கிறோம் என்று சொன்னீர்கள். இதே நம்முடைய 2011–2012–ல் (குறுக்கீடு) நான் பேசவேயில்லையே. . .*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

*பிற்பகல் 12–25*

***மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராமத்திலே ஒரு பழமொழி சொல்வார்கள். அதாவது, திருவிழா கூட்டத்தில்... (குறுக்கீடுகள்) நீங்கள் கேட்பதற்கு பதில் சொல்லக்கூடாதா? அவர் எழுப்பிய பிரச்சினைக்கு பதில் சொல்கிறேன். அவ்வளவுதான். நான் பதில் சொல்லக்கூடாதா?(குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் அனைவரும் இப்படி எழுந்து நின்று பேசக்கூடாது. அனுமதி கொடுக்காமல் நீங்கள் எழுந்து நின்று இப்படிப் பேசக்கூடாது. (குறுக்கீடுகள்) உங்கள் கட்சி உறுப்பினர்தான் பேசிக்கொண்டிருக்கிறார். (குறுக்கீடுகள்) மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மின்வெட்டுப் பிரச்சினை பற்றிப் பேசுவதற்கு, குறைசொல்வதற்கு முதலில் அவர்களுக்கு எந்தவிதத்திலும் தகுதியே இல்லை. (மேசையைத் தட்டும் ஒலி) ஏனென்று கேட்டால், இன்றைக்கு ஏற்பட்டிருக்கின்ற இந்தத் தற்காலிகப் பின்னடைவுக்கு நூறு சதவிகிதம் முழுமுதற்காரணம் கடந்தகால ஆட்சிதான். அது உற்பத்தியாக இருந்தாலும் சரி, நிதிநிலையாக இருந்தாலும் சரி, மின்சார வாரியத்திற்கு அவர்களுடைய 5 ஆண்டு கால ஆட்சியிலே ஒரு காசு, இரண்டு காசு இல்லை, 45,000 கோடி ரூபாயை கடன் சுமையாக வைத்துவிட்டு, அதற்கு வட்டிகூட கட்டமுடியாத இக்கட்டான சூழ்நிலையில், நிதிநிலையிலும் மிகப்பெரிய பின்னடைவை ஏற்படுத்திவிட்டு, மிகப்பெரிய நஷ்டத்தை ஏற்படுத்திவிட்டு, எந்தவொரு புதிய உற்பத்தித் திட்டத்தையும் தொடங்காமல், அவர்கள் பேப்பர் அளவில் தொடங்கிய ஓரிரு திட்டங்களைக்கூட அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் முடிக்கமுடியாமல், அதற்கு வேண்டிய நிதி ஒதுக்கீடும் செய்யாமல் சென்றுவிட்டார்கள். அவர்களுடைய நிருவாகத் திறமையின்மையின் காரணமாக சட்டமன்றத்தில் சொல்லமுடியாத இன்னும் பல்வேறு காரணங்களால், அவர்கள் கொண்டுவந்த குறைந்தபட்ச திட்டங்களைக்கூட அவர்களால் செயல்படுத்த



முடியவில்லை. மாறாக ஒருசில திட்டங்கள், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கொண்டுவந்த வல்லூர் மின் திட்டம், உடன்குடி மின் திட்டம் போன்றவை எல்லாம், புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கொண்டு வந்த திட்டங்கள். (குறுக்கீடுகள்) சொல்கிறேன் கேளுங்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்கார்ந்துகொண்டு பேசக்கூடாது. (குறுக்கீடுகள்) உட்கார்ந்துகொண்டு பேசக்கூடாது.

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களாலே புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் போடப்பட்டு (குறுக்கீடுகள்) நீங்கள் எப்படியெல்லாம் முடக்கினீர்கள் என்பதற்கு உதாரணம் சொல்ல வேண்டாமா? தேசிய அனல்மின் கழகத்தோடு தமிழ்நாடு மின்சார வாரியம் வல்லூரில் புதிய மின் திட்டத்தைத் தொடங்குவதற்காக ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம் போட்டு, பணிகளைத் தொடங்கியது. அதுபோல், தூத்துக்குடியில் நெய்வேலி லிக்னைட் கார்ப்பரேஷன் நிறுவனத்தோடு தமிழ்நாடு மின்சார வாரியம் ஒருங்கிணைந்து ஒரு புதிய மின் உற்பத்தித் திட்டத்திற்கான புரிந்துணர்வு ஒப்பந்தமும் மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சியில் போடப்பட்டது. அதற்காக உப்புத் துறைக்குச் சொந்தமான ஆயிரம் ஏக்கர் நிலத்தினை தேசிய அனல்மின் கழகத்திற்கு வழங்கி, அதற்கு வேண்டிய ஆயத்தப் பணிகளும், அடிப்படைப் பணிகளும் அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் தொடங்கப்பட்டன. ஆனால், அதற்குப் பின்பு, துரதிருஷ்டவசமாக வரக்கூடாத ஆட்சி, அரசியல் விபத்தின் காரணத்தினால் வந்துவிட்ட அவர்களுடைய மைனாரிட்டி ஆட்சியில், புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தொடங்கிய திட்டம் என்பதால், அதில் சில திருத்தங்கள் செய்கிறோம் என்று சொல்லி, அதையும் கிடப்பிலே போட்டு, காலங்கடத்தினீர்கள். அம்மா அவர்கள் தொடங்கிய திட்டத்தைத் தொடர்ந்து நடத்தியிருந்தால் உங்களுடைய ஆட்சியிலேயே அந்த மின் உற்பத்தி தொடங்கியிருக்கும். தமிழகத்திலே இன்றைக்கு இவ்வளவு பெரிய இக்கட்டான நிலை வந்திருக்காது. ஆக, எல்லாவற்றிற்கும் காரணமே நீங்கள்தான். அதுமட்டுமல்ல, ஐந்தாண்டு காலத்தில் நீங்கள் உற்பத்தி செய்தது வெறும் 206 மெகாவாட்தான். (குறுக்கீடுகள்) உங்கள் தி.மு.க. ஆட்சிக் காலத்தில் நீங்கள் உற்பத்தி செய்தது வெறும் 206 மெகாவாட்தான். (குறுக்கீடுகள்) வேறு யார்

வேண்டுமானாலும் குறை சொல்லலாம். ஆனால், தி.மு.க. விற்கு அந்தத் தகுதியே இல்லை. (குறுக்கீடுகள்) மின்வெட்டுப் பிரச்சினைப் பற்றி பேசுவதற்கு எந்தவிதத்திலும் உங்களுக்குத் தகுதியே இல்லை என்பதை மீண்டும் ஒரு முறை தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். அமைச்சர் விளக்கம் சொல்வதைத் தடுக்க முடியாது. (குறுக்கீடுகள்) அமைச்சர் விளக்கம் சொல்கிறார். உட்காருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. எ.வ. வேலு அவர்கள் கேள்வி மேல் கேள்வி கேட்டுக்கொண்டிருக்கிறார். (குறுக்கீடுகள்) பொறுமையாக இருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். அவர்தான் பேசுகிறார். நீங்கள் எழுந்து நின்று பேசினால் எப்படி? உட்காருங்கள். திரு. நா. இராமகிருஷ்ணன். (குறுக்கீடுகள்) மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.

பிற்பகல் 12–30

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர் கேள்விகளுக்கெல்லாம் தக்க பதிலை மாண்புமிகு மின் துறை அமைச்சர் அவர்கள் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். (குறுக்கீடுகள்) நான் சொல்வதைக் கேளுங்கள். உட்காருங்கள். நான் பேசி முடித்துவிடுகிறேன். மாண்புமிகு மின் துறை அமைச்சர் அவர்கள் கேட்கின்ற எதிர் கேள்விகளுக்கு அவர் பேசி முடித்த பிறகு நீங்கள் பதில் சொல்லலாம். அதுவரை நீங்கள் பொறுமையாக இருங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எ.வ. வேலு அவர்கள். (குறுக்கீடு) திரு. மு.க. ஸ்டாலின், பேசுங்கள்.

**திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. எ.வ. வேலு அவர்கள் கேட்ட கேள்வி, தேர்தலுக்கு முன்பு உங்களுடைய தேர்தல்



அறிக்கையில் நாங்கள் ஆட்சிக்கு வந்த 3 மாத காலத்திற்குள் தமிழகத்தினை மின்வெட்டு இல்லாத மாநிலமாக மாற்றுவோம் என்று உறுதிமொழி தந்திருக்கிறீர்கள். இது உண்டா, இல்லையா? இப்போது ஆட்சிக்கு வந்து 2 ஆண்டுகாலம் ஆகப்போகிறது. மின் வெட்டைப் பற்றிப் பேசுவதற்கு உங்களுக்குத் தகுதியே இல்லை, இல்லை என்று திரும்பத் திரும்பச் சொல்கிறார். அந்தத் தகுதியில்லை என்று சொல்கின்ற தகுதி உங்களுக்கு இல்லை. அதுதான் முக்கியம். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஒன்றும் சொல்லவில்லை. உங்கள் ஆட்சிக் காலத்திலே மின் துறை அமைச்சராக இருந்த திரு. ஆற்காடு வீராசாமி அவர்களே, ஒருவேளை நாங்கள் தேர்தலிலே தோற்றால் அதற்குக் காரணமே இந்த மின் வெட்டுப் பிரச்சினைதான் என்று ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தது ஒன்றே போதாதா? நீங்கள் மின்சாரப் பிரச்சினையிலே எதுவுமே செய்யவில்லை என்பதற்கு ஆற்காடு வீராசாமி அவர்கள் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலமே சான்று என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்தப்படியாகச் சொல்கிறேன். ஆனாலும் ஒன்றை. . . (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சர் பேசிக்கொண்டிருக்கிறார். கொஞ்சம் பொறுங்கள். மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திராவிட முன்னேற்றக் கழக சட்டமன்றக் கட்சித் தலைவர் சொன்னதற்கு மற்றொரு விளக்கம் சொல்ல விரும்புகிறேன். மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பிற்கு வந்த பின்பு மூன்று மாதத்திற்குள் மின்வெட்டுப் பிரச்சினையைத் தீர்ப்போம் என்று ஒருபோதும் சொன்னதில்லை. நீங்களாக கற்பனை செய்து கொண்டு பேசக்கூடாது. மின்வெட்டுப் பிரச்சினையைப் பொறுத்தவரையில், மாண்புமிகு புரட்சித் தலைவி

அம்மா அவர்கள் சொன்னது, கடந்த மைனாரிட்டி தி.மு.க.வினால் ஏற்படுத்தப்பட்டுவிட்ட மின்வெட்டுப் பிரச்சினையை நாங்கள் ஆட்சிப் பொறுப்பிற்கு வந்ததற்குப் பின்பு அதனை எவ்வளவு விரைவாக முடியுமோ அவ்வளவு விரைவாக முடிப்போம் என்றுதான் சொல்லியிருக்கிறார்கள். ஓரிரு ஆண்டிற்குள் அதற்குத் தீர்வு காண்போம் என்றுதான் சொல்லியிருக்கிறார்களே தவிர, அம்மா அவர்கள் உங்களைப் போன்று விவரம் தெரியாதவர்கள் அல்ல. அம்மா அவர்களுக்கு எல்லா விவரமும் தெரியும். மின்வெட்டுப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு, மின்சாரத்தை உற்பத்திச் செய்வதற்கு எவ்வளவு கால அவகாசம் ஆகும்; குறைந்தபட்சம் கொள்முதல் செய்வதற்குக்கூட எவ்வளவு கால அவகாசம் ஆகும் என்கிற விவரம் எல்லாம் உங்களைவிட அம்மா அவர்களுக்கு நன்றாகத் தெரியும் என்பதால், அவர்கள் ஒன்றும் சாத்தியமில்லாத ஒன்றைச் சொல்லமாட்டார்.

'எண்ணித் துணிக கருமம் துணிந்தபின்
எண்ணுவம் என்பது இழுக்கு'

என்ற வள்ளுவன் வாக்கிற்கு நடைமுறை உதாரணமாக இருப்பவர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். ஒன்றைச் சொல்வதற்கு முன்பு அது சாத்தியமா; இல்லையா என்று சிந்தித்துவிட்டுத்தான் சொல்வார்கள். சொன்னதற்குப் பின்னாலே அதைச் செய்யாமல் விடமாட்டார்கள். அந்த வகையில் அம்மா அவர்கள் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். இந்த மின்வெட்டுப் பிரச்சினைக்கு என்னுடைய அரசோ, நாங்களோ காரணம் இல்லை என்றாலும்கூட, இந்த மின்வெட்டுப் பிரச்சினைக்கு முழுக்க முழுக்க கடந்த மைனாரிட்டி தி.மு.க. ஆட்சிதான் காரணம் என்று சொன்னாலும்கூட, பிரச்சினையை நாங்கள் தட்டிக்கழிக்க விரும்பவில்லை. இதற்கு உங்கள் தி.மு.க. ஆட்சிமீது பழியைபோட்டுவிட்டு நாங்கள் தப்பித்துக்கொள்ள விரும்பவில்லை. மாறாக, அவர்களுடைய ஆட்சிக் காலத்திலே தீர்வு காண முடியாத அந்தப் பிரச்சினைக்கு என்னுடைய ஆட்சிக் காலத்திலே நான் தீர்வு காண்பேன் என்று இங்கே சூளுரையேற்று, அதற்காக இங்கே பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். தட்டிக் கழிக்கவில்லை. இந்தப் பிரச்சினைக்குத் தி.மு.க.-தான் காரணம் என்று சொல்லிவிட்டு அந்தப் பிரச்சினையிலிருந்து நழுவ விரும்பவில்லை. அவர்கள்தான் காரணம் என்றாலும்கூட, நான் அதைச் சரிசெய்து காட்டுகிறேன் என்றுதான் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் சொல்லியிருக்கிறார்கள்.



சொன்னதைச் சொன்னபடி செய்கின்ற ஆற்றல் படைத்த தலைவி என்பதால், இன்றைக்குப் புயல் வேகத்தில் பணிகள் நடைபெற்றுக்கொண்டு வருகின்றன. ஆகவேதான், வெகு விரைவிலே தமிழகத்தை மின்வெட்டே இல்லாத மாநிலமாக உருவாக்க இருக்கிறார்கள். தமிழகத்தில் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலம் எப்பொழுதெல்லாம் இருந்ததோ, அப்பொழுதெல்லாம் தமிழகம் ஒளிமயமான தமிழகமாகத்தான் இருந்தது. எப்பொழுதெல்லாம் உங்களுடைய ஆட்சி தமிழகத்திலே இருந்ததோ, அப்பொழுதெல்லாம் தமிழகம் இருளிலேதான் மூழ்கியது. ஆகவேதான், உங்களுக்கு இந்தப் பிரச்சினையைப் பற்றிப் பேசுவதற்கு எந்தவிதத்திலும் தகுதி இல்லை என்பதை மீண்டும் பதிவு செய்ய விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விவாதம் வேண்டாம். உங்கள் கட்சி உறுப்பினர்தான் பேசிக்கொண்டிருக்கிறார். மேலும் விவாதம் வேண்டாம். (குறுக்கீடு) மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் சொன்ன கருத்துக்கு பதில் கருத்தாக தகுதியில்லை என்ற கருத்தை முன்வைத்து, தகுதியில்லை என்று சொல்வதற்கு உங்களுக்குத் தகுதியில்லை என்று கூறியிருக்கின்றார். உங்களுக்குத் தகுதியில்லாத காரணத்தினால்தான், நடந்து முடிந்த சட்டமன்றத் தேர்தலில் மக்கள் தகுதியற்றவர்களை வெளியேற்றிவிட்டு, தகுதியுள்ள தலைவர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை நாட்டினுடைய முதலமைச்சராக ஆக்கியிருக்கின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) எனவே, தகுதி உள்ள தலைமை ஆட்சிப் பொறுப்பில் இருக்கின்ற காரணத்தினால், தகுதி இல்லாதவர்களிடத்திலே, உங்களுக்குத் தகுதி இல்லையென்று சொல்வதற்கு எங்களுக்கு உரிமை இருக்கிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*பிற்பகல் 12–35*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எ.வ. வேலு, உரையை முடியுங்கள். நீங்கள் ஒரு நிமிடத்தில் உரையை முடியுங்கள். உட்காருங்கள். (குறுக்கீடு) திரு. ஜெ. அன்பழகன், நீங்கள் என்ன எழுந்து பேசிக்கொண்டிருக்கிறீர்கள்? நான் அனுமதி தரவில்லை, நீங்கள் உட்காருங்கள். திரு. எ.வ.வேலு, நீங்கள் உரையை முடியுங்கள்.

**திரு. எ.வ. வேலு:** அவர் ஒரு கேள்வி கேட்டிருக்கிறார். அதற்கு பதில் சொல்ல வேண்டாமா? மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய சட்டமன்றக் கட்சியினுடைய தலைவர் கேட்கின்றபோது அப்படி நாங்கள் சொல்லவே இல்லையென்று மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள். அவர்கள் ஏற்கெனவே (குறுக்கீடு) என்னைப் பேசவிடுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** இல்லாத ஒன்றை மீண்டும் மீண்டும் பதிவு செய்யக்கூடாது. மூன்று மாதத்தில் செய்து கொடுக்கிறேன் என்று யாரும் சொல்லமாட்டார்கள். உங்களைப்போல விவரம் இல்லாதவர்கள்தான் சொல்வார்களே தவிர, மாண்புமிகு அம்மா அவர்கள் விவரம் உள்ளவர்கள், அதனால் அதுமாதிரி சொல்லியிருக்கமாட்டார்கள். சாத்தியப்படுவதைத்தான் சொல்வார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எ.வ. வேலு, நீங்கள் வேறு சப்ஜெக்ட்டில் பேசி, உரையை முடிப்பதாக இருந்தால், பேசி முடியுங்கள். இல்லையென்றால் வேறு ஒருவரைக் கூப்பிட வேண்டியிருக்கும். நேரம் ஆகிவிட்டது. நீங்கள் ஒரு நிமிடத்தில் பேசி முடியுங்கள்.

**திரு. எ.வ. வேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2011–2012 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையிலே நீங்கள் என்ன சொல்லியிருக்கிறீர்கள். தமிழ்நாட்டில் ஆகஸ்டு மாதத்திற்குள் மின்வெட்டுப் பிரச்சினை தீர்க்கப்பட்டுவிடும் மின்வெட்டுப் பிரச்சினை இருக்காது என்று சொல்லியிருக்கிறீர்கள். 2011–2012 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் இருக்கிறது. இல்லையென்றால் நான் ஏன் சொல்லப் போகிறேன். நீங்கள் சொன்னதைத்தான்



நான் சொல்கிறேன். நாங்கள் ஒன்றும் புதியதாகச் சொல்லவில்லையே! அதோடுமட்டுமல்லாமல்—இன்னும் ஒன்றே ஒன்றைச் சொல்லிவிடுகிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஐந்தாண்டு காலம் நாங்கள் ஆட்சியில் இருக்கும்போது ஒன்றுமே செய்யவில்லை என்று சொல்கிறீர்கள். இப்போது நீங்கள் ஐந்தாண்டு காலம் வாக்குறுதி கொடுக்கிறீர்கள், பாருங்கள். இன்னும் நான்கைந்து தினங்களில் ஏப்ரல் மாதம் வரப் போகிறது. மார்ச் மாதத்திற்குள் முடிக்கிறோம் என்று சொல்கிறீர்கள் பாருங்கள். எங்களுடைய ஆட்சியில் ரூ.11 ஆயிரத்து 28 கோடி ரூபாய் செலவு செய்திருக்கிறோம். அதனால். . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பொறுமை காக்கவேண்டும். பொறுமையாகக் கேளுங்கள்; எந்தக் கருத்தையும் சொல்லுங்கள்; நாங்கள் பதில் சொல்வதற்குத் தயாராக இருக்கிறோம். ஏனென்றால், எந்தவிதச் சரக்குமே இல்லாத உங்களுக்கே இவ்வளவு வேகம் இருக்கிறது என்று சொன்னால், எல்லாத் தகுதியும் எங்களுக்கு இருக்கும்போது, நாங்கள் எவ்வளவு தயாராக இருப்போம். எதற்காக அதைச் சொல்கிறேன் என்றால்— நான் ஒரே ஒரு கேள்வியைக் கேட்கிறேன். ஒரு ஆட்சிக்கு ஐந்தாண்டுக் காலம் என்பது, எந்த ஒரு பிரச்சினையையும் தீர்ப்பதற்குப் போதுமான காலம்தான். அதற்காகத்தான் அந்தக் காலத்திலே ஜனநாயக முறையில் ஒரு ஆட்சிக்கு ஐந்தாண்டுக் காலம் அவகாசம் கொடுத்து சட்டமே இயற்றி இருக்கிறார்கள். ஆகவே, ஐந்தாண்டுக் காலத்தில் நீங்கள் நினைத்திருந்தால் தமிழகத்தில் மின்வெட்டுப் பிரச்சினையைத் தீர்த்திருக்கமுடியும். ஆனால், பாவம் உங்களைச் சொல்லி என்ன குறை. ஏனென்றால், உங்களுக்குச் சொந்தப் பிரச்சினை, குடும்பப் பிரச்சினை, உட்கட்சிப் பிரச்சினை. இவற்றைத் தீர்ப்பதற்குத்தான் உங்களுக்கு நேரம் இருந்ததே தவிர, மக்களுடைய பிரச்சினையைத் தீர்ப்பதற்கு உங்களுக்கு நேரம் இல்லை. அதனால் பிரச்சினையைத் தட்டிக் கழிப்பதற்காக நீங்கள் செய்த குற்றங்களிலிருந்து உங்களை விடுவித்துக் கொள்வதற்காக அல்லது அதிலிருந்து தப்பித்துக் கொள்வதற்காக அடுத்தவர்கள்மீது பழியைப் போட்டு, உங்களுடைய பழி பாவங்களை தீர்த்துக்கொள்ளவே முடியாது. முதலில் அந்த வழிமுறையை விட்டுவிடுங்கள். ஆனால், இப்போது

[திரு. நத்தம் ஆர். விசுவநாதன்] [2013 மார்ச் 26

சொல்கிறேன்; உங்களுடைய ஐந்தாண்டுக் கால ஆட்சியில் தீர்க்கமுடியாத இந்தப் பிரச்சினையை அம்மா அவர்கள் தீர்ப்பார்கள். அம்மாவினுடைய ஆட்சி வரும்போதெல்லாம் தமிழகம் எப்படி ஒளிமயமான தமிழகமாக இருந்ததோ, அதைப்போல, இந்த 5 ஆண்டுக் கால அம்மாவினுடைய ஆட்சிக் காலத்திலே மின் உற்பத்தியிலே சாதனை படைத்து, தமிழகத்தை மீண்டும் மின் மிகை மாநிலமாக ஆக்கிக் காட்டுகிறார்களா இல்லையா என்பதைப் பார்த்துவிட்டு பிறகு சொல்லுங்கள். பொறுத்திருந்து பாருங்கள். (மேசையைத் தட்டும் ஒலி) எங்களுடைய ஐந்தாண்டுக் காலத்திற்குப் பின்பு நாங்கள் சொன்னதைச் செய்தோமா இல்லையா என்பதைச் சொல்லுங்கள்.

**திரு. எ.வ. வேலு:** இதோ முடித்து விடுகிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்கள் கட்சி உறுப்பினர்தானே பேசுகிறார். ஆளாளுக்கு இப்படிப் பேசினால் நான் எப்படி அனுமதிக்க முடியும்? நான் சபையை நடத்த வேண்டும் இல்லையா? (குறுக்கீடுகள்)

**திரு. எ.வ. வேலு:** அத்தனை அமைச்சர்கள் பேசும்போது, எங்கள் சட்டமன்ற கட்சித் தலைவர் பேசுவதற்கு அனுமதி இல்லையா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்கள் உறுப்பினர்தான் பேசுகிறார். அவரும் பேசி, நீங்களும் பேச வேண்டுமென்றால் நான் எப்படி அனுமதிக்க முடியும்? நேரம் இல்லை, உட்காருங்கள். அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.எஸ். ரமணீதரன், பேசுங்கள்.

**திரு. எஸ்.எஸ். ரமணீதரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வைரவிழா கண்ட தமிழ்நாட்டு சிறப்புமிக்க மாமன்றத்தின் . . . (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் உட்காருங்கள். நீங்கள் எழுந்திருக்கும்போதெல்லாம் அனுமதிக்க முடியாது.

*பிற்பகல் 12–40*

*(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் அவையிலிருந்து வெளியேற முற்பட்டனர்.)*



2013 மார்ச் 26]

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** சட்டப் பேரவைத் தலைவர் அவர்கள் பேசுவதற்கு அனுமதி அளித்தும், நீங்கள் வெளியே போகிறீர்கள் என்று சொன்னால், எப்படியாவது வெளியே போகவேண்டும் என்ற நோக்கத்தோடு வருகிறீர்கள். (குறுக்கீடுகள்) அவையிலே உட்கார்ந்து பிரச்சினையை எதிர்கொள்ளுங்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, . . .

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** அவரைப் பேசச் சொல்லுங்கள். மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களே, அவர்கள் வருகின்றனர்.

*(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் இருக்கைகளுக்குத் திரும்பினர்.)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, பேசுங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. எ.வ. வேலு அவர்கள் பேசிக் கொண்டிருக்கிறார்கள். இடைமறித்து ஏதோ சில கருத்துகளை மாண்புமிகு உறுப்பினர் திரு. ஸ்டாலின் அவர்கள் பேசுவதற்கு எழுந்தார்கள். (குறுக்கீடுகள்) இல்லை. ஏன் குறுக்கிடுகிறீர்கள்? உட்காருங்கள். (குறுக்கீடுகள்)

*(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர் திரு. ஜெ. அன்பழகன் தனது இருக்கையை விட்டு முன்வரிசைக்கு வந்தார்.)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜெ. அன்பழகன், உங்கள் இருக்கையில் இல்லாமல் இவ்வாறு முன்வரிசைக்கு வந்து பேசுவது நியாயமா?

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** திரு. ஜெ. அன்பழகன், உங்கள் இருக்கையில் உட்காருங்கள். (குறுக்கீடு) அவரை, அவரது இருக்கையில் உட்காரச் சொல்லுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜெ. அன்பழகன், உங்கள் இருக்கையை விட்டு விட்டு, இங்கே வந்து நின்று, பேசுவது நியாயமில்லை. நான் நடவடிக்கை எடுக்க வேண்டியிருக்கும்.

(குறுக்கீடுகள்) இப்படியெல்லாம் செய்யக்கூடாது. (குறுக்கீடுகள்) திரு. ஜெ. அன்பழகன், முதலில் உங்கள் இருக்கைக்குச் சென்று அமருங்கள். (குறுக்கீடுகள்) உங்கள் இருக்கைக்குச் செல்லுங்கள். இல்லையென்றால், நான் உங்களை வெளியேற்ற வேண்டி வரும்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** திரு. ஜெ. அன்பழகன், வேறோர் இருக்கை காலியாக உள்ளது. 'அங்கேதான் உட்காருவேன்' என்கிறார், இதில் என்ன நியாயம் இருக்கிறது? மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு . . . (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அன்பழகன், உங்கள் தலைவரும் பேச வேண்டும் என்று சொல்கிறார்; நீங்களும் பேசுகிறீர்கள்; திரு. எ.வ. வேலு அவர்களும் பேசுகிறார். அப்படியென்றால், நான் யாரைத்தான் பேச அனுமதிக்க முடியும்? (குறுக்கீடுகள்) இது முறையல்ல. இதற்குமேல், நீங்கள் பேசுவீர்களென்றால், நான் உங்கள்மீது நடவடிக்கை எடுக்க வேண்டியிருக்கும். மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஸ்டாலின் அவர்கள் எழுந்து நிற்கின்றபோது, நீங்கள் அனைவரும் எழுந்து நின்று ஒரே கோரஸாக வாய்ப்புக் கேட்கின்றபோது, யாருக்குப் பேச வாய்ப்புக் கொடுக்கமுடியும்? (குறுக்கீடுகள்) நான் சொல்வதைக் கேளுங்கள். நாங்கள் அவரைப் பேசச் சொல்லிக்கொண்டிருக்கிறோம். நீங்களாகவே பேசி, சண்டை போட்டு, நீங்களாகவே வெளியே போகிறீர்கள். (குறுக்கீடுகள்) அவரைப் பேசச் சொல்லுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.க. ஸ்டாலின், பேசுங்கள்.

**திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சபாநாயகர் அவர்கள் வேறு ஒரு உறுப்பினரை அழைத்ததற்குப் பிறகுதான், நாங்கள் வெளிநடப்புச் செய்கிற முயற்சியிலே ஈடுபட்டோமே தவிர, வேறு எந்த உள்நோக்கத்தோடும் அல்ல. இருந்தாலும், மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள், பேசுவதற்கு வாய்ப்புத் தந்த சூழ்நிலையில், முதலில் நான் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



இங்கே நம்முடைய மாண்புமிகு மின் துறை அமைச்சர் அவர்கள், எங்களுடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. எ.வ. வேலு அவர்கள் கேட்ட கேள்விக்குப் பதில் சொல்லாமல், வேறு எது எதற்கோ பதில் சொல்லிக் கொண்டிருக்கிறார். எனவே, அந்தப் பிரச்சினைக்குள் நான் அதிகம் செல்ல விரும்பவில்லை. இருந்தாலும் அவர் கேட்ட கேள்வி, 'நாங்கள் ஆட்சிக்கு வந்தால் மின் தட்டுப்பாடு இல்லாத மாநிலமாகத் தமிழகத்தை மாற்றுவோம்' என்று நீங்கள் சொன்னது, தேர்தல் நேரத்திலே மட்டுமல்ல; தேர்தல் முடிந்து நீங்கள் ஆட்சிக்கு வந்து முதல் நிதிநிலை அறிக்கை இதே அவையிலே சமர்ப்பிக்கப்பட்டது; அந்த அறிக்கையிலேகூட தெளிவாக நீங்கள் குறிப்பிட்டிருக்கிறீர்கள். '2012 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்திற்குள் மின்வெட்டு இல்லாத மாநிலமாகத் தமிழகத்தை மாற்றுவோம்' என்று அதிலே தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறீர்கள். சந்தேகம் இருந்தால், தயவுசெய்து அதை வாங்கிப் படித்துப் பாருங்கள். பக்கம் 42–ல் உள்ளது. (குறுக்கீடுகள்) எனவே, அதற்குத்தான் நாங்கள் விளக்கம் கேட்டோமே தவிர, வேறு ஒன்றுமில்லை.

எதற்கெடுத்தாலும், மைனாரிட்டி ஆட்சி, மைனாரிட்டி ஆட்சி என்று சொல்கிறார்கள். (குறுக்கீடுகள்) ஆக, மைனாரிட்டி ஆட்சிதான். நான், அதை இல்லையென்று மறுக்கவில்லை. ஆனால், அந்த மைனாரிட்டி ஆட்சியிலே 2 மணி நேரம், 3 மணி நேரம்தான் மின்வெட்டு இருந்தது. ஆனால், உங்கள் மெஜாரிட்டி ஆட்சியில் 16 மணி நேரம், 18 மணி நேரம் மின்வெட்டு இருக்கிறது. (குறுக்கீடுகள்) வெட்கப்பட வேண்டாமா? அதைத்தான் எங்களுடைய உறுப்பினர் கேட்கிறார். (குறுக்கீடுகள்) எனவே, உறுதிமொழி தந்தீர்களே, அது என்னவாயிற்று? அதற்கு விளக்கம்தான் நாங்கள் கேட்கிறோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு திராவிட முன்னேற்றக் கழக சட்டமன்றக் கட்சித் தலைவர் அவர்களுக்கு இந்த நேரத்திலே நான் மீண்டும் ஒரு முறை விளக்கமாகச் சொல்ல விரும்புகின்றேன். மீண்டும், அவர் சரியாகப் புரிந்துகொள்ளவில்லையோ என்ற காரணத்தினால், புரிந்துகொள்கின்ற வகையிலே சொல்ல விரும்புகின்றேன். இப்பொழுதும், நான் சொல்வது, எந்தவொரு

[திரு. நத்தம் ஆர். விசுவநாதன்] [2013 மார்ச் 26

பிரச்சினையையும் தீர்ப்பதற்கு ஐந்தாண்டுக் காலம் என்பது போதுமான காலம் ஆகும். ஆனால், உங்களால் அந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண இயலவில்லை. அந்தச் சக்தியும், திறமையும் உங்களிடம் இல்லை. (குறுக்கீடு) முழுவதுமாகச் சொல்லிவிடுகிறேன். ஆனால், புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் இப்பொழுது மின்வெட்டுப் பிரச்சினையைத் தீர்ப்பதற்காகப் புயல் வேகத்தில் பணிகள் நடைபெற்று வருகின்றன. நிச்சயமாக உங்களுடைய ஆட்சிக் காலத்திலே தீர்வு காண முடியாத மின்வெட்டுப் பிரச்சினைக்கு அம்மா அவர்கள் உறுதியாகத் தீர்வு காண்பார்கள். நிச்சயமாக அதற்கு வேண்டிய காலம் கனிந்து வருகிறது. அதற்கு வேண்டிய அத்தனை நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிருக்கின்றன. தி.மு.க. தான் காரணம் என்று சொல்லிவிட்டு உங்களைப்போல பிரச்சினையைத் தட்டிக் கழித்துவிட்டு நாங்கள் அடுத்தப் பிரச்சினைக்குச் செல்லவில்லை. இதற்கு தார்மீகமாகப் பொறுப்பேற்றுக்கொண்டு, சொன்னதைச் சொன்னபடி செய்கின்ற ஆற்றல் படைத்த தலைவியாக புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இருப்பதால், நிச்சயமாக இந்த 2013–க்குள்ளேயே இந்தப் பிரச்சினை தீர்ந்துவிடும். 2013–க்குப் பின்னால் நீங்கள் இந்தப் பிரச்சினையைப் பேசமுடியாது. இந்த ஒரு பிரச்சினையைத்தான் இப்போது பேசிக்கொண்டே இருக்கிறீர்கள். அதற்குப் பின்னால் உங்களுக்குப் பேசுவதற்கும், அரசியல் பண்ணுவதற்கும் வழியே இல்லை.

பிற்பகல் 12–45

இன்னொன்றையும் சொல்லிக்கொள்கிறேன். ஏறத்தாழ 15 ஆண்டுக் காலம் மத்தியில் ஆட்சிப் பொறுப்பிலே இருந்தவர்கள் நீங்கள். மின்சாரப் பிரச்சினையிலே உங்களுக்குப் போதிய அனுபவமோ, ஈடுபாடோ இல்லை. அதுபற்றி முழுமையாக செய்திகளை உங்களால் தெரிந்துகொள்ள முடியவில்லை. உங்களுடைய அறியாமையை வெளிப்படுத்துவதற்காக நான் ஒரு உதாரணத்தைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

வட இந்தியாவில் சில மாநிலங்களிலே மின்சாரம் அதிகமாகக் கிடைக்கிறது. தென் இந்தியாவிலே சில மாநிலங்களிலே மின்சாரம் பற்றாக்குறையாக இருக்கிறது. இந்த இரண்டு பகுதிகளிலும் மின்சாரம் அதிகளவில் உற்பத்தியாகின்ற பகுதிகளிலிருந்து மின்சாரத்தைப் பற்றாக்குறை பகுதிக்குக் கொண்டு வருவதற்கு



2013 மார்ச் 26] [திரு. நத்தம் ஆர். விசுவநாதன்]

ஒரு மின் பாதை அமைக்க வேண்டும்; அதாவது transmission line அமைக்க வேண்டும். அந்த transmission line அமைக்க வேண்டும் என்ற எண்ணம்கூட 15 ஆண்டுக் காலம் மத்தியிலே ஆட்சிப் பொறுப்பிலே இருக்கின்ற உங்களுக்கு வந்ததா? உதித்ததா? நான் கேட்கின்றேன். அப்பொழுது நீங்கள் குறைந்தபட்சம் மின் உற்பத்தியைக்கூட செய்திருக்க வேண்டாம். உங்களுடைய செல்வாக்கைப் பயன்படுத்தி, எது எதற்கோ வளம் கொழிக்கும் துறைக்காக அங்கே சண்டை போடுகிற நீங்கள், மத்திய அரசிலே பதவிக்காக சண்டைபோட்டு போராடிய நீங்கள், ஒரு transmission line அமைப்பதற்குப் போராடியிருக்கக் கூடாதா அல்லது ஒரு புதிய மின்வழித் தடத்தை உருவாக்கியிருந்தால், இங்கே மின் உற்பத்தியைப் பெருக்கவில்லையென்றாலும், மின்சாரம் கிடைக்கின்ற இடத்திலிருந்தாவது கொண்டு வந்திருக்க முடியும். குறைந்தபட்சம் அதைக்கூட உங்களால் செய்ய முடியவில்லை. இந்த மின் உற்பத்திக்குத் தடையாக இருப்பது அல்லது உற்பத்தியாகின்ற இடத்திலிருந்து கொண்டு வருவதற்குத் தடையாக இருக்கின்ற பிரச்சினைகளையெல்லாம் அம்மா அவர்கள் தனது மதிநுட்பத்தால் கண்டறிந்து, ஆட்சிப் பொறுப்புக்கு வந்தவுடனேயே பிரதம மந்திரியிடம் நேரடியாகவும், கடிதம் மூலமாகவும் தெரிவித்திருக்கிறார். இப்பொழுது புதிய மின் வழித்தடங்களை உருவாக்க வேண்டும். வட இந்தியாவில் கிடைக்கின்ற கூடுதல் மின்சாரத்தைத் தமிழகத்திற்குக் கொண்டு வருவதற்கு மின்பாதை அமைக்க வேண்டும் என்று சொன்னால், மத்திய அரசினுடைய Grid Corporation–தான் அதைச் செய்ய வேண்டும். ஆகவே, அந்தப் பணிகளைச் செய்ய வேண்டும் என்று அம்மா அவர்கள் மத்திய அரசைத் தொடர்ந்து வலியுறுத்தியதன் காரணமாக, தூங்கிக் கொண்டிருந்த மத்திய அரசை, அம்மா அவர்கள் தட்டி எழுப்பியதன் விளைவாக, இப்பொழுதுதான் மத்திய அரசு அந்தப் பணிகளைத் தொடங்கியிருக்கிறது. அந்தப் பணிகள் 2014 மார்ச், ஜூன் மாதத்தில் முடிவடையும். அப்போது இன்னும்கூட வட இந்தியாவிலிருந்து குறைந்த விலையில் கொள்முதல் மூலமாகவும் மின்சாரத்தைக் கொண்டு வந்து ஈடுசெய்ய முடியும். இப்படிப்பட்ட அடிப்படைப் பணிகளையெல்லாம் அம்மா அவர்களுடைய அரசுதான் செய்து வருகிறது. நீங்கள் செய்யவில்லை என்பதை மீண்டும் ஒரு முறை தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) ஒரேயொரு உதாரணம். இந்த மின்சாரப் பிரச்சினையிலே 5 முறை முதலமைச்சராக இருந்தவருக்கு மின்சாரச் சட்டத்தினுடைய வழிமுறைகள்,

செயல்முறைகள், விதிமுறைகள் தெரியாமல்கூட அவர் இங்கே அறிக்கை விட்டார். *(குறுக்கீடுகள்)*

நான் சொன்னபிறகு அதற்குப் பதில் சொல்லுங்கள். உதாரணத்திற்குச் சொல்லவேண்டுமென்று சொன்னால், மின்சாரக் கொள்முதல் ஒப்பந்தத்தைச் செய்து முடித்ததற்குப் பின்பு, அந்த ஒப்பந்த நகலோடு, ஆதாரத்தோடுதான் அங்கே மின்பாதை அமைப்பதற்கு விண்ணப்பிக்க வேண்டும். அது கொடுப்பார்களா, லைன் கிடைக்குமா, கிடைக்காதா என்பது இரண்டாவதுதான். ஆனால், அதற்கு விண்ணப்பிப்பதற்கே தகுதி என்னவென்று சொன்னால், அந்தக் கொள்முதல் ஒப்பந்தம் வேண்டும். ஆனால், உங்களுடைய தலைவர் இப்போது ஒரு அறிக்கை விட்டார். குஜராத்திலிருந்து மின் கொள்முதல் செய்தோம்;. ஆனால், கொள்முதல் செய்த மின்சாரத்தைக் கொண்டுவருவதற்கு வழித்தடம் கிடைக்கவில்லை என்று, அம்மா அவர்கள் சொன்னதைக் குறை சொல்லி, ஏன் வழித்தடமே இல்லை என்று தெரிந்ததற்குப் பின்னால், நீங்கள் ஏன் கொள்முதல் செய்தீர்கள் என்று ஓர் அறிக்கை விட்டு, தன்னுடைய அறியாமையை இப்படி பட்டவர்த்தனமாக வெளிப்படுத்திக்கொண்ட ஒரு முதலமைச்சரை நான் பார்க்கவே இல்லை. ஏனென்று சொன்னால், கொள்முதல் ஒப்பந்தம் செய்ததற்குப் பின்புதான் வழித்தடத்திற்கே விண்ணப்பிக்க முடியும் என்ற விதிமுறைகளைக்கூடத் தெரிந்து கொள்ளமல் 5 ஆண்டுக் காலம் ஆட்சி நடத்தியிருக்கிறீர்கள் என்றால் மின்சாரப் பிரச்சினையை எப்படி நீங்கள் தீர்த்திருக்க முடியும்? எல்லா வகைகளிலும் நீங்கள் செய்யத் தவறியதை அம்மா அவர்கள் செய்து காட்டுவார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எ.வ. வேலு அவர்களும் பேசியிருக்கிறார், நீங்களும் பேசியிருக்கிறீர்கள். (குறுக்கீடு) பேசி முடியுங்கள். இப்படி விவாதம் நீண்டுகொண்டே போனால், மற்ற உறுப்பினர்கள் எல்லோரும் பேசி முடிக்க வேண்டும் அல்லவா?

*பிற்பகல் 12–50*

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீங்கள் அனுமதித்தால் ஒரே ஒரு கேள்வியை மட்டும் கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, பேசுங்கள்.



**திரு. துரைமுருகன்:** நாங்கள் மின்சாரத்தைப்பற்றி தேர்தல் அறிக்கையிலோ அல்லது வேறு இடங்களிலோ, தமிழகத்தில் முற்றிலும் மின்சாரத் தட்டுப்பாடு இல்லாமல் செய்ய முடியும் என்று கூறவில்லை. அப்படிக் கூறியிருந்தால் உங்களைப் போன்ற விவரம் தெரியாதவர்கள்தான் சொல்லியிருப்பார்கள் என்று அவர் சொன்னார். அவர் மிகவும் விவரம் அறிந்தவர், நான் அதில் குறுக்கிட விரும்பவில்லை. நான் ஒன்று கேட்கிறேன்; நிதிநிலை அறிக்கை 2011–2012 இல், பக்கம் 42 இல் என்ன சொல்லப்பட்டிருக்கிறது என்றால், "ஊரக, நகர்ப்புறப் பகுதிகளில் மூன்று மணி நேரமாக இருந்த மின்வெட்டு 1–7–2011 முதல் இரண்டு மணி நேரமாகக் குறைக்கப்பட்டுள்ளது. மின்சக்தியின் உற்பத்திக்கேற்ப இந்த மின்வெட்டு படிப்படியாகத் தளர்த்தப்பட்டு, 2012 ஆகஸ்ட் மாதத்திற்குள் மாநிலம் முழுவதும் முற்றிலுமாக நீக்கப்படும்" என்று சொல்லியிருக்கிறீர்களே, நீங்கள் மிகவும் விவரமானவர்களா? மிகவும் தெளிவானவர்களா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஐந்து வருட காலத்திற்குள் நீங்கள் செய்ய முடியாததை நாங்கள் இரண்டு வருடத்திற்குள் செய்ய வேண்டும் என்று எப்படி எதிர்பார்க்கிறீர்கள்? மூன்று வருடத்திற்குள்ளாகவாவது நிச்சயம் செய்து முடிப்போம். சில தவிர்க்க முடியாத காரணங்களினால், மூன்று மாதம், ஆறு மாதம் முன்பின் ஆகலாம். நிருவாகத்தில் இருந்த உங்களுக்குத் தெரியாத விஷயம் இல்லை. ஆனால், ஒட்டுமொத்தமாகப் பிரச்சினையைத் தீர்க்க முடியாமல் வெளியேறுவதைவிட, வேறு அவமானம் எதுவுமே இருக்க முடியாது. ஒரு திட்டம் போடுகிறோம் என்றால், அந்தத் திட்டத்தைச் செயல்படுத்துவதற்குரிய கால அவகாசத்தைப் போடுகிறோம். அதிலே 10 சதவிகிதம் அல்லது 15 சதவிகிதம் error இருக்கலாம், காலதாமதம் இருக்கலாம். ஆறு மாதம், ஒரு வருடம்கூட காலதாமதம் ஏற்படலாம். ஆனால், ஐந்தாண்டுக் கால காலதாமதம் என்பதை எப்படி ஏற்றுக்கொள்ள முடியும்? ஏதாவது இயற்கை இடர்ப்பாடுகள் காரணமாகவோ அல்லது மத்திய அரசாங்கத்திலிருந்து கிடைக்க வேண்டிய அனுமதிகளின் காரணமாகவோகூட, சில நேரங்களில் தவிர்க்க முடியாத காரணத்தினால், திட்ட அவகாசம் ஒரு ஆறு மாதம் முன்பின்

[திரு. நத்தம் ஆர். விசுவநாதன்] [2013 மார்ச் 26

ஆவது பிரச்சினையில்லை. ஒட்டுமொத்தமாகப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு நடவடிக்கை எடுத்துவருகிறதா இல்லையா என்பது நாட்டு மக்களுக்கும் தெரியும், உங்களுக்கும் தெரியும். ஆனால், நீங்கள் அரசியல் காரணத்திற்காகச் சொல்ல மறுக்கிறீர்கள். நாம் செய்ய முடியாததை அம்மா அவர்கள் செய்கிறார்கள் என்பது உங்கள் மனசாட்சிக்கு நன்றாகவே தெரியும். மின்சக்தி உற்பத்திக்கேற்ப இந்த மின்வெட்டு படிப்படியாகத் தளர்த்தப்பட்டு, 2013 ஆம் ஆண்டிற்குள் முடியும் என்று சொல்லியிருக்கிறோம். இன்னொரு காரணத்தையும் சொல்கிறேன். மின் சக்தியின் உற்பத்திக்கேற்ப உற்பத்தியைப் பெருக்கி வருகிறோம்; அப்படிச் செய்கின்றபோது, எதிர்பாராத இடையூறுகள் ஏற்படுவது இயற்கைதான். உதாரணத்திற்குச் சொல்லவேண்டுமென்று சொன்னால், (குறுக்கீடு) நீங்கள் முயற்சியே எடுக்கவில்லை, நாங்கள் எடுத்திருக்கும் முயற்சியில் சில நேரங்களில் பின்னடைவு, தடை ஏற்பட்டாலும் அதை வெற்றிகரமாகச் சமாளித்து மீண்டும்—ஆறு மாதம் தாமதம் ஏற்பட்டாலும், மீண்டும் கொண்டு வந்துவிடுவோம். ஆனால், உங்களால் கொண்டுவர முடியவில்லை. அதுதான் குற்றச்சாட்டு. இன்னும் சொல்லப்போனால், படிப்படியாக (குறுக்கீடு) நான் முழுமையாகச் சொல்லி முடித்துவிடுகிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்கார்ந்துகொண்டே பேசினால் எப்படி? மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** மின் உற்பத்தி படிப்படியாக அதிகரிக்கப்படும் என்று சொல்லியிருக்கிறோம். (குறுக்கீடு) ஒரே ஒரு நிமிடம். உண்மையாக இன்றைக்கு இருக்கின்ற சூழ்நிலையில், புள்ளிவிவரத்தின் அடிப்படையில் சொல்கிறேன், உங்கள் ஆட்சி முடிகின்றபோது, ஒரு நாளைக்கு மின் விநியோகம் 180 மில்லியன் யூனிட்தான் உங்கள் ஆட்சியில் செய்யப்பட்டது. இன்றைக்குப் படிப்படியாக மின் உற்பத்தி அதிகரிக்கப்பட்டு இன்றைய நிலையிலே அம்மா அவர்களின் ஆட்சிக் காலத்திலே நாள் ஒன்றுக்கு 40 மில்லியன் யூனிட் கூடுதலாக உற்பத்தி செய்யப்பட்டு, இன்றைக்குக் கிட்டத்தட்ட 220 மில்லியன் யூனிட் தினந்தோறும் வழங்கப்படுகிறது. 40 மில்லியன் யூனிட் மின் உற்பத்தி இன்றைக்குக் கூடியிருக்கிறது. இருந்தாலும்கூட, தேவையும் கூடிவருவதால் அதையும் அனுசரித்து பல புதிய திட்டங்களைச்



2013 மார்ச் 26] [திரு. நத்தம் ஆர். விசுவநாதன்]

செயல்படுத்தி ஒட்டுமொத்தமாகப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்து வருகிறோம். ஆனால், நீங்கள் இந்த மாதிரி ஒரு பிரச்சினை இருக்கிறது என்பதையே மறந்துவிட்டு, உங்கள் குடும்பப் பிரச்சினையைப் பார்த்துவிட்டு, இப்போது வந்து குறைசொன்னால் எப்படி? அதற்காகத்தான் மீண்டும், மீண்டும் சொல்கிறேன்; மின்வெட்டுப் பிரச்சினைப்பற்றிப் பேசுவதற்கு உங்களுக்கு எந்தவித தார்மீக தகுதியும் இல்லையென்று.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.எஸ். ரமணீதரன் அவர்கள். (குறுக்கீடுகள்) நன்றி சொல்லி முடிப்பதாக இருந்தால் அனுமதிக்கிறேன். உங்கள் விருப்பத்திற்கேற்ப புதிய சப்ஜெக்ட்டுக்குச் செல்வதாக இருந்தால் அனுமதியில்லை. நன்றி சொல்லிவிட்டு அமருங்கள்.

**திரு. எ.வ. வேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்களுக்கு ஒரே ஒரு பதிலைச் சொல்லிவிட்டு நான் continue பண்ணுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நன்றி சொல்லிவிட்டு உட்காருங்கள். நேரமில்லை. ஏறக்குறைய 45 நிமிடங்களாகப் பேசிக் கொண்டிருக்கிறீர்கள்.

**திரு. எ.வ. வேலு:** நாங்கள் ஒன்றுமே செய்யவில்லை என்று அமைச்சர் சொல்கிறாரே, ஐந்தாண்டுக் காலம் 11 ஆயிரத்து 78 கோடி ரூபாயைச் செலவு செய்திருக்கிறோம்; அதற்கு வேண்டிய ஏற்பாடுகளையும் செய்திருக்கிறோம் என்பதையும் நீங்கள் பதிவு செய்துகொள்ளுங்கள்.

பிற்பகல் 12–55

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. வேலு அவர்கள் சொன்னதில் ஒரு திருத்தம் செய்துகொள்ளும்படி கேட்டுக்கொள்கிறேன். உங்கள் ஆட்சிக் காலத்தில் 2 மணி நேரம்தான் மின்சாரம் இருந்தது என்று சொன்னதை, தி.மு.க. ஆட்சிக் காலத்தில் 2 மணி நேரம்தான் மின்சாரம் இருந்தது என்று திருத்திக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. துரைமுருகன்:** மின் வெட்டைவிட அதிகமாகப் பேசிவிடுவார். எனவே, நீங்கள் வேறு சப்ஜெக்ட்டுக்குப் போங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நன்றி சொல்லி, உங்கள் உரையை முடியுங்கள்.

**திரு. எ.வ. வேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு நாட்டிலே கட்டுமானப் பொருட்களின் விலை ஏறியிருக்கிறது. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** புதிய சப்ஜெக்ட்டுக்குப் போங்கள். இன்னும் நிறைய உறுப்பினர்கள் பேச வேண்டியிருக்கிறது.

**திரு. எ.வ. வேலு:** சரி. சரி. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் திருவண்ணாமலை மாவட்டம் பெரும்பான்மையான விவசாயிகள் வாழுகின்ற மாவட்டம். விவசாயத்தைப் பொறுத்த அளவிற்கு, கரும்பு விவசாயிகளுக்கு சரியான விலை கிடைக்கவில்லை. இந்த நிதிநிலை அறிக்கையிலே அதைப்பற்றி சொல்லவில்லையே என்ற வருத்தம் எங்களுடைய மாவட்ட விவசாயிகளுக்கு இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, உட்காருங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள். முக்கால் மணி நேரத்திற்கு மேலே நீங்களே பேசிக்கொண்டிருந்தால் எப்படி? மற்ற உறுப்பினர்கள் எல்லாம் பேச வேண்டும் இல்லையா? (குறுக்கீடு) திரு. எ.வ. வேலு, உட்காருங்கள். அவ்வளவுதான். மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு)

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குற்றச்சாட்டு சொல்லியிருக்கிறீர்கள். அதற்குப் பதில் சொல்ல வேண்டாமா?

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகின்றபோது, திருவண்ணாமலை மாவட்டத்தில் வறட்சியின் காரணமாக கரும்புக்கு சரியான விலை அறிவிக்கவில்லை என்கின்றார்கள். கடந்த ஆண்டுதான் மத்திய அரசு அறிவித்த விலைக்குமேல் மாண்புமிகு அம்மா அவர்கள் 250 ரூபாய் கூடுதலாக அறிவித்து, 2,350 ரூபாய் என்று அறிவித்திருக்கின்றார்கள். வருகின்ற ஆண்டில்தான் மேற்கொண்டு அதற்கான விலையை அறிவிப்பார்கள் என்பது அமைச்சராக



இருந்த மாண்புமிகு உறுப்பினர் திரு. வேலு அவர்களுக்கு நன்றாகத் தெரியும். இந்த அவையில் வேண்டுமென்றே ஒரு கேள்வி கேட்க வேண்டுமென்பதற்காக, இந்தக் கேள்வியைக் கேட்டிருக்கின்றாரேயொழிய, வேறொன்றுமில்லை மாண்புமிகு அம்மா அவர்களைப் பொறுத்தவரை, விவசாயிகளுக்காக உங்களைவிட பல மடங்கு சலுகைகள் செய்து கொண்டிருக்கிறார் என்பது இந்த நாட்டு மக்களுக்கு நன்றாகத் தெரியும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.எஸ். ரமணீதரன் அவர்கள். (குறுக்கீடு) உட்காருங்கள். நேரம் அதிகமாகிக் கொண்டிருக்கிறது. உட்காருங்கள்.

**திரு. எஸ்.எஸ். ரமணீதரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வைரவிழா கண்ட வரலாற்றுச் சிறப்புமிக்க இம்மாமன்றத்தில், இணையில்லா இதய தெய்வம் தமிழக முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு எனது பணிவான வணக்கத்தைச் சமர்ப்பிக்கின்றேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் பேச ஆரம்பித்துவிட்டார். (குறுக்கீடு) உட்காருங்கள். அப்புறம் பேசலாம் உட்காருங்கள். (குறுக்கீடு) அப்புறம் வாய்ப்பு வரும்போது பேசலாம் உட்காருங்கள்.

**திரு. எஸ்.எஸ். ரமணீதரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஆதிப் பரம்பொருளின் ஊக்கம் – அதை
அன்னை எனப்பணிதல் ஆக்கம்
சூதில்லை காணுமிந்த நாட்டீர்! மற்ற
தொல்லை மதங்கள் செய்யும் துக்கம்
மூலப்பரம் பொருளின் நாட்டம் – இந்த
மூன்று புவியுமதன் ஆட்டம்
நேர்த்தி திகழும் அந்த ஒளியை – எந்த
நேரமும் போற்று அன்னை என்று
எடுத்த காரியம் யாவினும் வெற்றி
எங்கு நோக்கினும் வெற்றி மற்றங்கே
விடுத்த வாய்மொழிக் கெங்கனும் வெற்றி
வேண்டினேனுக் கருளினள் அன்னை

என்ற மகாகவி பாரதியாரின் பாட்டுக்கு ஒப்ப தனது நேர்மையான ஆட்சியை . . . (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். உங்களைப் பேச அனுமதிக்க முடியாது. உட்காருங்கள். நான் கூப்பிட்டேன், அவர் பேசிக்கொண்டிருக்கிறார். எனவே, நீங்கள் உட்காருங்கள்.

**திரு. எஸ்.எஸ். ரமணீதரன்:** யார்க்கும் எதற்கும் அஞ்சாத துணிவு, எடுத்த செயல்கள் அனைத்திலும் வெற்றி, சொல்லுகின்ற சொற்கள் எல்லாம் வேத வாக்காய், (மேசையைத் தட்டும் ஒலி) தன் நாட்டு மக்களின் முழு நலனே தன் மூச்சுக் காற்றாய் புயலாகவும், தென்றலாகவும் செயல்படும் மாண்புமிகு அம்மா அவர்களின் செயல் திட்டங்கள் பற்றி இந்த நிதிநிலை அறிக்கையிலே பேசுவதற்கு வாய்ப்பு கொடுத்த மாண்புமிகு அம்மா அவர்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொண்டு உரையைத் தொடங்குகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

“இயற்றலும் ஈட்டலும் காத்தலும் காத்த
வகுத்தலும் வல்லது அரசு”

நாட்டுக்குத் தேவையான பொருள் வருவாயைப் பெருக்கியும், தோற்றுவித்தும், அதனைக் காத்தலும், காத்த செல்வத்தைத் தகுந்தமுறையில் தன் குடிமக்களுக்கு வழங்குதலுமே நல்ல அரசு என்ற தெய்வப் புலவன் வள்ளுவனின் திருவாக்கிற்கு இணங்க, மாண்புமிகு அம்மா அவர்களின் சீரிய திட்டங்கள் அடங்கிய இந்த வரியில்லா நிதிநிலை அறிக்கையைப் படித்தவர்கள், பத்திரிகைகள், விவசாயிகள், மாணவர் சமுதாயம் உள்ளிட்ட அனைத்துத் தரப்பினரும் பாராட்டுகிறார்கள் என்பதைப் பெருமையோடு சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயம் என்பது ஒரு நாட்டினுடைய முதுகெலும்பு என்று கூறுவார்கள். ஒரு நாட்டின் Per–capita Income என்று சொல்லக்கூடிய வருவாயில் விவசாயம் ஒரு முக்கியப் பங்கு வகிக்கின்றது என்று சொன்னால், அது மிகையாகாது. இத்தகைய விவசாயத் துறையைச் செம்மைப்படுத்த மாண்புமிகு அம்மா அவர்கள், விவசாயிகளுக்கு தரமான விதை, தட்டுப்பாடு இல்லாத உரம், மானிய விலையில் வேளாண் கருவிகள், இலவச சொட்டுநீர்ப் பாசனக் கருவிகள், உற்பத்தித் திறனைப் பெருக்குதல், விவசாயிகள் தாங்கள் விளைவித்த பொருட்களைச் சேமித்து வைக்க சேமிப்புக்



கிடங்குகள், குளிர்பதனக் கிடங்குகள், இப்படிப் பல்வேறு திட்டங்களுக்கு இதுவரை இல்லாத அளவில் ரூ.5,189.15 கோடியை ஒதுக்கி, இரண்டாம் பசுமைப் புரட்சியை உருவாக்கும் பெருமை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களையேச் சாரும் என்பதைச் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

பிற்பகல் 1–00

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உலகிலேயே இரண்டு புனிதமான இடம் என்று எடுத்துக்கொண்டால், ஒன்று தாயின் கருவறை; மற்றொன்று பள்ளியின் வகுப்பறை. தாயின் கருவறையில் வளரும் குழந்தையின் ஆரோக்கிய வளர்ச்சிக்கு எண்ணற்ற திட்டங்கள்மூலம் பல கோடி ரூபாய் ஒதுக்கி, வெளியுலகை பார்த்த அந்தப் புதிய வரவை மனிதனாக்கும் வகுப்பறைக்கு, பள்ளிக் கல்வித் துறைக்கு வேறு எந்தத் துறைக்கும் இல்லாத அளவு 16,965.30 கோடி ரூபாய் நிதியை ஒதுக்கி, மாண்புமிகு அம்மா அவர்கள் படிக்கின்ற மாணவ மாணவியருக்கு, காலணி முதல் கணினி வரை கொடுத்து, மேலும் காற்றோட்டமான வகுப்பறைகள், குடிநீர் வசதி, கழிப்பறை வசதிகள், புதியதாக அனைத்துப் பள்ளிகளிலும் ஆசிரியர் பணி நியமனம் செய்தும், பள்ளிகளைத் தரம் உயர்த்தியும், மாணவர்களுக்குச் சிறப்பு ஊக்கத் தொகை வழங்கியும், இப்படி கல்வித் துறைக்கு எண்ணற்ற திட்டங்களைக் கொடுத்த மாண்புமிகு அம்மா அவர்களுக்கு மாணவர் சமுதாயத்தினர் என்றென்றும் நன்றிக் கடன்பட்டவர்களாக உள்ளனர் என்பதைப் பெருமையோடு சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டம் ஒழுங்கைப் பேணிக் காத்து காவல் துறையை நவீனப்படுத்தியும், புதிய காவலர்களைத் தேர்வு செய்தும் காவல் துறை விரைந்து செயல்படும் வகையில், புதிய வாகனங்கள் மற்றும் உபகரணங்கள் வழங்கியும், எல்லா காவல் நிலையங்களுக்கும் சொந்தக் கட்டடம் கட்டியும், காவலர்களுக்குச் சொந்த இல்லத் திட்டம் இப்படி பல்வேறு திட்டங்களுக்கு 4,706.17 கோடி ரூபாய் ஒதுக்கி தமிழகத்தை அமைதிப் பூங்காவாக ஆட்சி செய்யும் மாண்புமிகு அம்மா அவர்களைத் தமிழக மக்கள் நெஞ்சாரப் பாராட்டுகிறார்கள்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 2001 ஆம் ஆண்டு முதல்வராகப், பொறுப்பேற்ற பொழுது கடுமையான வறட்சி. வறட்சி இருந்தாலும்கூட, மின்வெட்டே இல்லாத மாநிலமாக உருவாக்கிக் காட்டிய பெருமை மாண்புமிகு அம்மா அவர்களையேச் சாரும். மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சியில் தமிழ்நாடு மின் மிகை மாநிலமாக இருந்தது. அதற்குப் பின்னர் வந்த மைனாரிட்டி திராவிட முன்னேற்றக் கழக அரசு, தொலைநோக்குத் திட்டங்களை வகுக்காமலும், மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு கொடுத்த திட்டத்தை வேண்டுமென்றே நிறைவேற்றாத காரணத்தினாலும், தமிழ்நாட்டில் கடுமையான மின்வெட்டை உருவாக்கிவிட்டுச் சென்றார்கள் என்பதைச் சுட்டிக்காட்டக் கடமைப் பட்டிருக்கின்றேன். அதற்குப் பின்னால் மாண்புமிகு அம்மா அவர்கள் பொறுப்பேற்றுக்கொண்டவுடன், தன்னுடைய சீரிய திட்டங்களினால் பெரும்பாலான மின்வெட்டைக் குறைத்தார்கள். மேலும், பல விரிவாக்கத் திட்டங்களுக்கு ரூ. 21,000 கோடியை ஒதுக்கி, தமிழ்நாட்டை மீண்டும் மிகை மின் மாநிலமாக உருவாக்கிக் காட்டிய பெருமை மாண்புமிகு அம்மா அவர்களையேச் சாரும் என்பதைச் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரு காலத்தில் மிட்டா மிராசுதாரர்களிடம் ஆடு மாடுகளை மேய்த்துக்கொண்டிருந்த ஏழை மக்கள், தாங்களும் சொந்தமாக ஆடு, மாடுகளை வாங்க முடியுமா என்று ஏங்கிய நிலையை மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு மாற்றி, ஏழை மக்களுக்கு இதுவரை 24,000 கறவைப் பசுக்களும், 10 இலட்சம் வெள்ளாடுகளும் மாநிலமெங்கும் கொடுத்திருக்கிறது. மேலும் 2013–2014 ஆம் ஆண்டில் 12,000 கறவைப் பசுக்களும், 6 இலட்சம் ஆடுகளும் வழங்க ரூ.250 கோடி நிதி ஒதுக்கியுள்ளது கிராமப்புற மக்களின் பொருளாதாரத்தை ஊக்குவிக்கும் அம்மா அவர்களின் மகத்தான திட்டம் என்று எல்லோரும் பாராட்டுகிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பொங்கித் ததும்பி குதித்து வந்த பொன்னியின் வேகத்தைத் தடுத்த, அண்டை மாநில ஆதிக்கச் சக்தியின் அடாவடித்தனத்திற்கும், நடுவண் அரசின் நாகரிகமற்ற ஒருதலைபட்ச நடவடிக்கைக்கும் முடிவுகட்டி, தமிழகத்தின் ஜீவாதார உரிமையைப் பெற்றே தீருவேனென்று சூளுரையேற்று, உச்ச நீதிமன்றத்தை அணுகி, காவேரி நடுவர்



மன்றத்தின் இறுதி ஆணையை இந்திய அரசிதழில் பதிய வைத்து வெற்றி கண்ட பொன்னியின் புதல்வியான காவேரி கண்ட கற்பக விருட்சமாக மாண்புமிகு அம்மா அவர்களைத் தரணியெல்லாம் போற்றுவார்கள் என்பதைப் பெருமையாக சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வாழ்க்கையே அலைகளோடு போராடுவதுதான் என்ற நிலையில் உள்ள தமிழக மீனவர்களுக்காக, மானிய விலையில் எரிபொருள், நிவாரண உதவித் தொகை, மானிய விலையில் ஆழ்கடல் டியூனா மீன்பிடிப் படகுகள், மேலும் கட்டமைப்பு வசதி, மீன் பதப்படுத்தும் பூங்காக்கள் என்று பல்வேறு திட்டங்களுக்காக ரூ.200 கோடி ஒதுக்கி, மீனவர்களின் நலன் காக்கும் அரசாக மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு இருக்கிறது என்பதைப் பெருமையோடு சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

பிற்பகல் 1–05

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டு மக்கள் அனைவரும் உடல் நலத்தோடு இருக்க வேண்டும் என்று மாண்புமிகு அம்மா அவர்களின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தின்கீழ் 2.84.228 பயனாளிகள் மருத்துவ சிகிச்சையைப் பெற்றுள்ளனர். இத்திட்டம் கிராமப்புற மக்களுக்கு ஒரு வரப்பிரசாதம் என்று சொன்னால், உண்மையிலேயே அது மிகையாகாது. இத்திட்டத்திற்காக மாண்புமிகு அம்மா அவர்கள் அரசு இந்த நிதியாண்டில் 750 கோடி ரூபாய் ஒதுக்கியிருப்பது ஏழைகளின் உடற்பிணியைப் போக்கும் அற்புதமான திட்டம் என்பதை நான் இந்த நேரத்திலே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டம் பற்றிக் குறிப்பிடும்பொழுது, ஒரு நிகழ்வை நான் குறிப்பிடக் கடமைப்பட்டிருக்கின்றேன். எனது பகுதியிலே இரண்டு மாதங்களுக்கு முன்னால் மாண்புமிகு அம்மா அவர்களின் மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தின்கீழ் காது கேளாதோர் மருத்துவ முகாம் நடைபெற்றது. அந்த முகாமில் சுமார் 350 காது கேளாத ஆண்களும், பெண்களும் கலந்துகொண்டனர். அனைவர் முகத்திலும் ஒரு சோகம். காது இருந்தும் கேட்க முடியவில்லையே, தங்கள் குழந்தைகளோடு உரையாட முடியவில்லையே, தன் பேரக்

குழந்தைகளின் கொஞ்சு மொழியைக் கேட்க முடியவில்லையே என்ற ஏக்கப் பார்வையோடு அமர்ந்திருந்தனர். மருத்துவ முகாம் தொடங்கிய உடனேயே மருத்துவர்கள் ஒவ்வொருவராக பரிசோதித்து, மாண்புமிகு அம்மா அவர்களின் திட்டத்தின்கீழ் வெளிச் சந்தையில் 14,000 ரூபாய் மதிப்புள்ள காது கேட்கும் கருவியை அவர்களுக்குப் பொருத்தினார்கள். பொருத்திய ஒரு சில நிமிடங்களிலேயே அனைவருடைய முகத்திலும் ஒரு பரபரப்பு, ஒருவித மகிழ்ச்சி. நான் ஒரு தாயிடம் சென்று காது கேட்கிறதா என்று கேட்டவுடனேயே, அவர்கள் சொன்னார்கள்; எல்லாம் அந்த மகராசி புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய திட்டத்தினால் காது நன்றாகக் கேட்கிறது, தம்பி! (மேசையைத் தட்டும் ஒலி) என்று கூறினார்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதை நான் ஏன் இங்கு குறிப்பிடுகிறேன் என்று சொன்னால், 'ஏழையின் சிரிப்பில் இறைவனையே கண்டுகொண்டிருக்கின்ற' எங்கள் தாய் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அற்புதமான திட்டம் இது (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை இந்த நேரத்தில் நான் பெருமையோடு சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 'தனியொரு மனிதனுக்கு உணவில்லையெனில், ஜகத்தினை அழித்திடுவோம்' என்றான் பாரதி. இந்த நிதிநிலை அறிக்கையில் உணவு மானியத்திற்காக மாபெரும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 4,900 கோடி ரூபாயை ஒதுக்கி அதில் 7 புதிய நவீன அரிசி ஆலைகளைத் தோற்றுவிக்க 32.6 கோடி ரூபாயை ஒதுக்கியுள்ளது; விலைவாசியைக் கட்டுப்பாட்டில் கொண்டுவருவதற்காக உயர் ரக அரிசியை 20 ரூபாய்க்கு பெறும் வகையில், புதிய திட்டம்; தாய்மார்களின் ஏக்கத்தைக் குறைக்கும் வகையில் காய்கறி விலையைக் கட்டுப்பாட்டில் கொண்டுவர பண்ணைப் பசுமை நுகர்வோர் கடைகள் அமைப்பது பசுமையான திட்டமாகும் என்பதை இந்த நேரத்தில் இந்த அவையில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, A Leader is a one who knows the way, goes the way and shows the way என்ற ஜான் சி. மேக்ஸ்வெல் என்ற மேலைநாட்டு அறிஞனின் கூற்றுக்கிணங்க, மாண்புமிகு அம்மா அவர்கள் தலைவர்களுக்கெல்லாம் தலைசிறந்த தலைவராக, தமிழகத்தின்



வளர்ச்சிப் பணிகளுக்கு திட்டங்களைத் தீட்டி, அத்திட்டங்களை முனைப்புடன் செயல்படுத்தி, தமிழகத்தை மட்டுமல்ல; இந்திய தேசத்தையே வழிநடத்திச் செல்கின்ற காலம் வெகு தொலைவில் இல்லை (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை இந்த அவையில் பெருமையோடு சுட்டிக்காட்டி, இந்த நிதிநிலை அறிக்கையில் எனக்குப் பேச வாய்ப்பளித்த எங்கள் இதய தெய்வம் தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும், பேரவைத் தலைவர் அவர்களுக்கும் நன்றி கூறி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. தங்கவேல் அவர்கள்.

**திரு. கே. தங்கவேல்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 2013–2014 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையின்மீதான விவாதத்தில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியின் சார்பில் பேச அனுமதி அளித்ததற்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். புதிய வரிகள் இல்லாத நிதிநிலை அறிக்கையை மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்துள்ளதை வரவேற்கிறேன். மத்திய அரசின் கொள்கையினால் டீசல், பெட்ரோல் விலை உயர்வினால் கடுமையான விலையேற்றம் ஒருபக்கம் இருக்கையில், பொருளாதார வளர்ச்சி குறைந்து, முதலீடுகளில் நம்பிக்கை குன்றியுள்ள இன்றைய கடுமையான தேசிய பொருளாதாரச் சூழலில், இந்த நிதிநிலை அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது என்பதை சரியாகவே சுட்டிக்காட்டியுள்ளார்கள். அதேபோல், பொருளாதார வீழ்ச்சியின் தாக்கத்தை, குறைந்துவரும் வளர்ச்சியின்மூலம் மாநில அரசு ஏற்கெனவே உணரத் தொடங்கியுள்ளது என்பதை ஏற்றுள்ளீர்கள். மாநிலத்தில் மொத்த உற்பத்தியில், பொருளாதார வளர்ச்சி விகிதம் 4.61 சதவீதம் மட்டுமே இருக்கும். மேலும், கடுமையான வறட்சி, காவேரிப் பாசனப் பகுதியில் பயிர் பாதிப்பு ஆகியவற்றால் முதன்மைத் துறையான வேளாண்மைத் துறையின் வளர்ச்சி பாதிக்கப்பட்டுள்ளதுடன், சேவைத் துறையின் வளர்ச்சியும் பாதிக்கப்பட்டுள்ளது. தேசிய பொருளாதாரத்தில் ஏற்பட்டுள்ள மந்த நிலை, மின் தட்டுப்பாடு ஆகியவற்றால் உற்பத்தித் துறையின் வளர்ச்சியும் பாதிப்படைந்துள்ளதை சரியாக சுட்டிக்காட்டியுள்ளீர்கள்.

தமிழகத்தில் விலையில்லா அரிசி திட்டம் தொடருவதும், ரேஷன் கடைகள் மூலம் மலிவு விலையில் பருப்பு வகைகள் விற்கப்படுவது தொடருவதும், கூட்டுறவுக் கடைகளின்மூலம் ரூ. 20/–க்கு அரிசி விற்கப்படும் என்ற அறிவிப்பும் வரவேற்கத்தக்கது. பருப்பு வகைகள், எண்ணெய் வகைகள் உள்ளிட்ட காய்கறி விலையைக் கட்டுப்படுத்த நகர்ப்புறப் பகுதிகளில் கூட்டுறவு அமைப்புகளின்மூலம், தோட்டக்கலைத் துறையின்மூலம் விவசாயிகளுடன் நுகர்வோரை நேரடியாக இணைக்கக்கூடிய பண்ணைப் பசுமை நுகர்வோர் கடைகள் திறக்கப்படும் என்ற அறிவிப்பும் வரவேற்கத்தக்கது.

பிற்பகல் 1–10

உணவுப் பாதுகாப்புக்காக மானியமாக ரூ.4,900 கோடி ஒதுக்கியிருப்பதை வரவேற்கிறோம். இதை அதிகரிக்க வேண்டும். அதேசமயத்தில், ரேஷன் கார்டுகள் புதுப்பிக்கும் பணியும், உள் தாள் ஒட்டும் பணியும் விரைவுபடுத்தப்பட வேண்டும். விண்ணப்பம் செய்பவர்களுக்கு புதிய ரேஷன் கார்டு வழங்க வேண்டும். பகுதி நேரக் கடைகளுக்கு விதிக்கப்பட்டுள்ள கட்டுப்பாடுகளைத் தளர்த்தி, பகுதி நேரக் கடைகளை அதிகரிக்க வேண்டும்.

சட்டம்–ஒழுங்குப் பிரச்சினையைத் திறம்படக் கையாளத் தேவையான வசதிகளை காவல் துறைக்கு இந்த அரசு அளித்துள்ளபோதிலும், நாளுக்கு நாள் கொலை, கொள்ளை, வழிப்பறி, பாலியல் வன்முறைச் சம்பவங்கள் அதிகரித்துக்கொண்டே வருகின்றன. இவை பத்திரிகைகளில் அன்றாடச் செய்திகளாக மாறியுள்ளன. இதுபோன்ற சம்பவங்களில் ஈடுபடும் குற்றவாளிகளை உடனடியாகக் கைது செய்வதோடு, உரிய தண்டனை வழங்குவதிலும் கூடுதலான கவனமும், அரசின் தலையீடும் தேவைப்படுகிறது.

அதேநேரத்தில் மாநிலத்தில் வறட்சியால் பயிர் சாகுபடி பொய்த்த நிலையில், நாடு முழுவதும் பொதுவான பொருளாதார மந்த நிலை, கடுமையான மின் வெட்டு ஆகிய சூழலில் இந்த பட்ஜெட் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மத்திய அரசு தனது வரி வருவாயின் இலக்கை உயர்த்தத் தவறியதால், மாநில அரசுக்குக் கிடைக்க வேண்டிய பங்கு குறைந்திருக்கிறதென்பதை சரியாக எடுத்துக்காட்டியுள்ளது. இருப்பினும், தொடர்ந்து மாநில உரிமைகளில் கை வைக்கிற மத்திய அரசின் தொடர்



நடவடிக்கையைக் கண்டித்து இன்னும் அழுத்தமாகச் சொல்லியிருக்க வேண்டும்.

ஒரு பக்கம் டெல்டா பகுதிகளில் வறட்சி நிவாரணம் அளிக்கப்பட்டு வந்தாலும், அது மாநிலத்தின் பிற பகுதிகளுக்கும் விஸ்தரிக்கப்பட வேண்டும். மேலும், விவசாயத் தொழிலாளர்களுக்கு, குத்தகை விவசாயிகளுக்கு நிவாரணம் அளிக்க வேண்டும். தொழில் முன்னேற்றத்தில் பின்தங்கியுள்ள தென் மாவட்டங்களில் முதலீடு செய்வதை ஊக்குவிக்க புதிய சலுகைத் தொகுப்பு அறிவிக்கப்பட்டுள்ளது. மாநிலத்தில் மேலும் பல தொழிற்சாலைகளைக் கவரும் வகையில், சிப்காட் நிறுவனம் மூலம் 25,000 ஏக்கர் நிலப்பரப்பு கொண்ட நில வங்கியை இந்த அரசு ஏற்படுத்தும் என்பதும், தூத்துக்குடியில் புதிய கப்பல் கட்டும் தளம் அமைக்கப்படும் என்கிற அறிவிப்பும் வரவேற்கத்தக்கது.

விவசாயிகளின் நிலங்கள் பாதிக்காமல் நிலம் கையகப்படுத்தப்பட வேண்டும். விவசாயிகளுக்கும் உரிய நஷ்ட ஈடு வழங்கப்பட வேண்டும். அதேசமயம் திருப்பூர், ஈரோடு, நாமக்கல், கரூர் ஆகிய மாவட்டங்களில் சிறு, குறு தொழில்கள், எஞ்சினியரிங் சம்பந்தப்பட்ட பனியன், பவர்லூம், கைத்தறி, கார்மென்ட்ஸ் ஆகிய தொழில்கள் மின் வெட்டாலும், மத்திய அரசின் கொள்கையாலும் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளன. குறிப்பாக, பஞ்சு நூல், ஏற்றுமதி, இறக்குமதிக் கொள்கையினால் இலட்சக்கணக்கான தொழிலாளர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளது. சிறு, குறு தொழில், தொழிலாளர்களின் வாழ்வாதாரத்தைப் பாதுகாக்க, அதனை ஈடுகட்டும் வகையில் ஜெனரேட்டர்கள்மூலம் மின் உற்பத்தியைத் தொடங்க, ஓரளவு பாதிப்பைக் குறைக்க, டீசலுக்கு மானியம் வழங்க வேண்டும்.

அரசுப் பள்ளிகளில் இலவச மடிக் கணினி, பாடப் புத்தகங்கள் போன்றவை அளிக்கப்பட்டாலும், பயிலும் மாணவர்களின் எண்ணிக்கை குறைந்து வருகிறது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ப. மோகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு, குறு, சிறு, நடுத்தரத் தொழில்கள் பாதிக்கப்படாமல் இருக்க, பல்வேறு நடவடிக்கைகளை எடுத்திருக்கிறது. மின்னாக்கிகள் திறன்

125 கே.வி. என்பதை 320 கே.வி. ஆக மாற்றவும், உதவித் தொகையை 1½ இலட்சம் ரூபாயிலிருந்து 5 இலட்சம் ரூபாயாக அதிகரிக்கவும் அம்மா அவர்களுடைய அரசு ஆணையிட்டிருக்கிறது என்பதை நான் இந்த நேரத்தில் பதிவு செய்ய விரும்புகிறேன். அதேபோன்று, மின்னாக்கிகளின்மீது தற்போது விதிக்கப்பட்டுள்ள 14.5 விழுக்காடு மதிப்புக் கூட்டு வரி 5 விழுக்காடாகக் குறைக்கப்பட்டுள்ளது. அதேபோன்று, தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம்மூலம் கடன் பெற்று, மின்னாக்கிகள் வாங்கும் தொழில் முனைவோர்கள் தற்போது செலுத்த வேண்டிய 20 விழுக்காடு பங்குத் தொகை 10 விழுக்காடாகக் குறைக்கப்பட்டுள்ளது. மேலும், தொழிற்சாலைகளால் மின்னாக்கிகளில் பயன்படுத்தப்படும் எரியுலை எண்ணெய்க்கு விதிக்கப்பட்டிருக்கிற மதிப்புக் கூட்டு வரியைக் குறைத்து மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு நடவடிக்கை எடுத்திருக்கிறது என்பதையும் நான் இந்த நேரத்திலே தங்கள்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. தங்கவேல் அவர்கள்.

**திரு. கே. தங்கவேல்:** மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய விளக்கத்திற்கு நன்றி. மாணவர்களுடைய எண்ணிக்கை கணிசமாகக் குறைந்து வருவது கவலையளிப்பதாக உள்ளது. எனவே, இப்பள்ளிகளின் கல்வித் தரத்தை மேம்படுத்த. . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

பிற்பகல் 1–15

***மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாணவர்களுடைய எண்ணிக்கை குறைந்து வருகிறது என்று எந்தக் கணக்கின் அடிப்படையில் உறுப்பினர் அவர்கள் சொல்கிறார்கள் என்பது எனக்குப் புரியவில்லை. (குறுக்கீடு) இல்லை, எந்தக் கல்வியாக இருந்தால் என்ன? மாணவர்களுடைய எண்ணிக்கை குறைந்து வருவதாகச் சொல்லியிருக்கிறார்கள். மாணவர்களினுடைய எண்ணிக்கை விகிதங்களை அதிகரிக்க, அது பள்ளிக் கல்வியாக இருந்தாலும் அதற்கு incentive—ஊக்கத் தொகை கொடுத்து மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. அது



கல்லூரிப் படிப்பாக இருந்தால் அவர்களுக்கு விலையில்லாமல் லேப்—டாப் கொடுப்பது, புதிய கல்லூரிகளை உருவாக்குவது இதுபோன்ற நல்ல பல நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. இப்பேர்ப்பட்ட சூழ்நிலையில், ஏற்கெனவே மாண்புமிகு எதிர்க்கட்சி உறுப்பினர்கள் மாணவர்களுடைய எண்ணிக்கை உயர்ந்து வருகின்றது என்று சொன்னார்கள். ஆனால், திடீரென்று மாணவர்களுடைய எண்ணிக்கை குறைந்து வருகிறது என்று சொல்வதற்கு அடிப்படை காரணம் என்ன என்று தெரியவில்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன் அவர்கள்.

**திரு. சு. குணசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் தொடர்ந்து அரசு தொடக்கப் பள்ளிகளில் ஆரம்பக் கல்விப் பயிலும் மாணவர்களின் சேர்க்கை என்பது குறைந்து வந்து கொண்டிருக்கிறது. அதன் காரணமாக ஆண்டுக்காண்டு பல பள்ளிகள் மூடப்படக்கூடிய ஒரு நிலையும் நீடித்துக் கொண்டிருக்கிறது. அதற்கு அடிப்படையான காரணம் எல்.கே.ஜி.—யிலிருந்து ஐந்தாம் வகுப்புவரை தனியார் பள்ளிகளில் ஆங்கில வழிக் கல்வியில் தங்கள் பிள்ளைகளை படிக்க வைக்க வேண்டுமென்ற ஆங்கில வழிக் கல்வி மேல் ஏற்பட்டிருக்கிற மோகம். இதன் காரணமாக தனியார் பள்ளிகளில் குழந்தைகளுடைய சேர்க்கை விகிதம் அதிகரித்து, அரசு ஆரம்பப் பள்ளிகளில் இருக்கக்கூடிய சேர்க்கை விகிதம் தொடர்ந்து குறைந்து கொண்டு வருவதை மத்திய, மாநில அரசுகளுடைய ஆய்வு அறிக்கைகளே சுட்டிக்காட்டியிருக்கின்றன. எனவே, அத்தகைய போக்கு எதிர்காலத்தில் தாய் மொழிக் கல்விக்கும், தமிழ்நாட்டினுடைய ஆரம்பக் கல்விக்கும் உகந்ததாக. . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. சு. குணசேகரன், நீங்கள் சொல்ல வேண்டியதைச் சொல்லிவிட்டீர்கள். அதற்கு அமைச்சர் பதில் சொல்கிறார். (குறுக்கீடு) சரி, திரு. சு. குணசேகரனுக்கு மைக் கொடுங்கள்.

**திரு. சு. குணசேகரன்:** அது தாய் வழிக் கல்விக்கும், அதைப்போல தமிழ்நாட்டினுடைய ஆரம்பக் கல்விக்கும். . . (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து நீங்கள்தானே பேசப் போகிறீர்கள்? அப்பொழுது விளக்கமாகப் பேசுங்கள்.

**திரு. சு. குணசேகரன்:** அது கேடு விளைவிக்கக்கூடிய ஒரு நிலை. எனவே, அந்த அடிப்படையில் அதைப் பற்றிய கூடுதலான கவனத்தை நமது தமிழக அரசு எடுக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு முனைவர் வைகைச்செல்வன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இந்திய கம்யூனிஸ்டு கட்சியினுடைய உறுப்பினர் அவர்கள் இந்த அவையிலே ஒரு கேள்வியை எழுப்பியிருக்கிறார்கள். அதாவது அரசுப் பள்ளிகளில், குறிப்பாக ஆரம்பப் பள்ளிகளில், மாணவர்களுடைய எண்ணிக்கை குறைந்து வருவதாக ஒரு கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள். ஆனால், தனியார் பள்ளிகளைவிட அரசுப் பள்ளிகளில் அதிக எண்ணிக்கையில் மாணவர்கள் பயின்று வருகிறார்கள் என்பதை ஆதாரப்பூர்வமாக இந்த அவைக்கு சுட்டிக்காட்ட விழைகிறேன்.

தொடக்கப் பள்ளிகளிலே 14 இலட்சத்து 63 ஆயிரத்து 767 மாணவர்களும், நடுநிலைப் பள்ளிகளிலே 13 இலட்சத்து 83 ஆயிரத்து 756 மாணவர்களும், உயர்நிலைப் பள்ளிகளைப் பொறுத்தமாத்திரத்தில் 7 இலட்சத்து 20 ஆயிரத்து 381 மாணவர்களும், மேல்நிலைப் பள்ளிகளிலே படிக்கக்கூடிய மாணவர்களாக 22 இலட்சத்து 84 ஆயிரத்து 992 மாணவர்களும் ஆக மொத்தம் அரசுப் பள்ளிகளிலே 58 இலட்சத்து 52 ஆயிரத்து 896 மாணவச் செல்வங்கள் பயின்று வருகிறார்கள் என்பதை இந்த அவையில் நான் பதிவு செய்ய விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அவற்றோடு மாத்திரமல்லாமல், இங்கு மாண்புமிகு இந்திய கம்யூனிஸ்டு கட்சியினுடைய உறுப்பினர் இன்னொரு கருத்தையும் முன் வைத்தார்கள். ஆனால், மாணவர்களுடைய எண்ணிக்கை தனியார் பள்ளிகளைவிட அரசுப் பள்ளிகளில்தான் ஒவ்வொரு ஆண்டும் கூடுதலாக இருக்கிறது என்பதை நான் பணிவோடு சுட்டிக்காட்ட விரும்புகிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாணவர்களுடைய எண்ணிக்கை



பள்ளிக் கல்வித் துறையில் எவ்வாறெல்லாம் மாண்புமிகு அம்மா அவர்களுடைய நல்லாட்சியில் உயர்த்தப்பட்டு இருக்கிறது என்பதனை மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் இங்கே விரிவாக எடுத்துச் சொன்னார்கள். உயர் கல்வியைப் பொறுத்தமட்டிலும், 2010–2011 ஆம் ஆண்டில் 6 இலட்சத்து 9 ஆயிரத்து 915 ஆக இருந்த உயர் கல்வி பயில்கின்ற மாணவர்களுடைய எண்ணிக்கை, மாண்புமிகு அம்மா அவர்களுடைய இந்த இரண்டு ஆண்டுக்கால நல்லாட்சியில் 2012–2013 ஆம் ஆண்டில் 6 இலட்சத்து 51 ஆயிரத்து 807 ஆக உயர்ந்துள்ளது என்பதனை நான் இங்கே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) ஆக, பள்ளிக் கல்வித் துறையில் சீரான வளர்ச்சி இருந்தால்தான், உயர் கல்வித் துறையிலும் சீரான வளர்ச்சி இருக்கும். அது மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சியில் நிரூபிக்கப்பட்டு இருக்கின்றது என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. தங்கவேல், பேசுங்கள். (குறுக்கீடு) நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) திரு. கே. தங்கவேல், நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள் அம்மா, நேரம் இல்லை. இன்னும் 3 உறுப்பினர்கள் பேச வேண்டும். (குறுக்கீடு) திரு. கே. தங்கவேல், பேசுங்கள்.

**திரு. கே. தங்கவேல்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பள்ளிக் கல்வித் தரத்தை மேம்படுத்த குறிப்பாக திட்டம் தேவைப்படுகிறது. 2012 ஜூன், ஆகஸ்டு மாதத்தில் ஆசிரியர் தேர்வில் வெற்றி பெற்ற. . . (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி, சுருக்கமாகப் பேசுங்கள்.

***திருமதி எஸ். விஜயதரணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எங்கள் கன்னியாகுமரி மாவட்டத்தில் தேரூர் போன்ற இடங்களிலெல்லாம் தொடக்கப் பள்ளிகள் மூடப்பட்டிருக்கின்றன. பல ஆண்டுகளுக்கு முன்னால் மூடப்பட்டிருந்தும்கூட, இன்னும் நிறைய இடங்களில் 22 பள்ளிகள் மூடிக் கிடக்கின்றன. இவையெல்லாம் முழுமையாகத் தமிழ் வழிக் கல்வியாக இருப்பதால் ஒருவேளை மூடியிருக்கிறதோ என்று நான் நினைக்கிறேன். அந்த அடிப்படையில் அரசாங்கம் ஏற்கெனவே

அறிவித்த திட்டம், அரசுப் பள்ளிகளில் ஆங்கிலக் கல்வி படிப்படியாகப் புகுத்தப்படும் என்பது; இப்பொழுது அது நடைமுறையில் இருக்கிறது. சென்ற பட்ஜெட் கூட்டத் தொடரில் நான் வைத்த கோரிக்கையையும் அரசாங்கம் ஏற்றுக்கொண்டது. அந்த அடிப்படையில் இந்தப் பள்ளிகள் எல்லாம் திறக்கப்பட்டு, ஆங்கில வழிக் கல்வியும் அதில் புகுத்தப்படுமேயானால் நிச்சயமாக மாணவர்களின் strength என்பது ஒரு விஷயமே கிடையாது. அரசுப் பள்ளிகள் எல்லாம் full strength–உடன் இயங்கும். ஆகையால் அதற்குண்டான நடவடிக்கைகளை எடுக்கவேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 1–20

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு முனைவர் வைகைச்செல்வன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, புள்ளிவிவரங்களுடைய அடிப்படையிலே பார்த்தால், தனியார் பள்ளிகளில் 43,51,054 மாணவர்கள் பயின்று வருகிறார்கள். அரசுப் பள்ளிகளையும், தனியார் பள்ளிகளையும் ஒப்பீடு செய்து பார்க்கும்போது, சற்றேறக்குறைய 20 இலட்சம் மாணவர்கள் அதிகமாக நம்முடைய அரசுப் பள்ளிகளில்தான் பயின்று வருகிறார்கள் என்பதை இந்த அவைக்குப் பணிவோடு சுட்டிக்காட்ட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. தங்கவேல், பேசுங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாலகிருஷ்ணன் அவர்கள்.

***திரு. க. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் நம்முடைய அரசு மற்றும் தனியார் பள்ளிகளில் மாணவர்களுடைய எண்ணிக்கை விவரத்தைச் சொன்னார்கள். இயங்குகிற தனியார் பள்ளிகள் எத்தனை, இயங்குகிற அரசுப் பள்ளிகள் எத்தனை என்று சேர்த்துச் சொன்னால்தான், எதிலே அதிகமான விழுக்காடு மாணவர்கள்



சேருகிறார்கள் என்ற விவரத்தைப் புரிந்துகொள்ளமுடியும். ஏனென்று சொன்னால், அரசுப் பள்ளிகள் மிக அதிகமாக இருக்கின்றன. தனியார் பள்ளிகளின் எண்ணிக்கை குறைவாக அதாவது அதில் சரிபாதி குறைவாக இருக்கிறது. ஆகவே, அதைத் தெளிவுபடுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பள்ளிக் கல்வித் துறை மானியக் கோரிக்கையின்போது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விவரமாகச் சொல்வார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. தங்கவேல் அவர்கள்.

**திரு. கே. தங்கவேல்:** மாணவர்களுடைய எண்ணிக்கை பொதுவாகக் குறைந்து வருகிறது. பல்வேறு உறுப்பினர்கள் அதனுடைய விவரங்களைச் சொன்னார்கள். பள்ளிக் கல்வித் தரத்தை மேம்படுத்தவேண்டும். மதுரை மாநகராட்சியில் சில ஆரம்பப் பள்ளிகளை மூடுவதற்கான நடவடிக்கைகளை எடுத்துக்கொண்டு இருக்கிறார்கள். உடுமலைப்பேட்டை சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்டிருக்கிற பகுதிகளில்கூட அப்படிப்பட்ட நிலை இருப்பதாகச் சொன்னார்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உடுமலைப்பேட்டை தொகுதியில் எந்த ஊரில் அப்படிப்பட்ட நிலை இருக்கிறது?

**திரு. கே. தங்கவேல்:** 2012 ஜூன், ஆகஸ்ட் மாதத்தில் ஆசிரியர் தகுதித் தேர்வில் வெற்றிபெற்ற 657 பேர்களுக்கு ஆசிரியர் பணியிடங்கள் கிடைக்கப்படாமல் உள்ளது அவர்களுக்கு கணினி, அறிவியல் மற்றும் இதர பட்டதாரி ஆசிரியர்கள் பணி கிடைக்க அரசு ஆவன செய்யவேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன்.

தமிழகத்தில் கடந்த ஆண்டு 1 இலட்சத்து 27 ஆயிரம் பேருக்கு வீட்டுமனைப் பட்டா வழங்கியுள்ளீர்கள். இவ்வாண்டு 2 இலட்சம் பேருக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளதை வரவேற்கிறோம். அதேசமயத்தில் தமிழகத்தில் வீட்டுமனைப் பட்டா கேட்டு சுமார் 35 இலட்சம் பேருக்குமேல் விண்ணப்பித்திருக்கும் நிலையில், இவ்வறிவிப்பு என்பது மிகக் குறைவே. இதில் நிலம் வகை மாற்றம் செய்யாமல் அதிகரிக்கமுடியாது. எனவே வகை மாற்றம் செய்து, தமிழகத்திலுள்ள வீடற்ற ஏழையெளிய மக்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்கிட நடவடிக்கை எடுத்திட வேண்டும். மாநகராட்சி,

நகராட்சி மற்றும் சில பகுதிகளில் பட்டா கொடுக்க மாவட்ட நிருவாகம் மறுத்துவரும் நிலையில் உள்ளது. இதில் அரசு உத்தரவு இருப்பதாகவும் சொல்லப்படுகிறது.

இதுபோல் கோயில் நிலங்களில் பல தலைமுறைகளாக குடியிருப்போருக்கு உள்ள பிரச்சினைகளில் நிரந்தரத் தீர்வு கண்டு, அவர்கள் குடியிருக்க அனுமதி வழங்க வேண்டும். மேலும், மாநிலத்தில் பல இடங்களில் வீட்டுவசதி மேம்பாட்டுக்காக. . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** ஒரு நிமிடத்தில் உரையை முடியுங்கள். 16 நிமிடங்கள் ஆகிவிட்டன.

**திரு. கே. தங்கவேல்:** குறுக்கீடு கொஞ்சம் அதிகமாக இருந்தது. நிறைய பேரை பேச அனுமதித்துவிட்டீர்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நீங்கள் கேட்ட கேள்விக்கு விளக்கம் சொன்னார்கள். ஒரு நிமிடத்தில் உரையை முடியுங்கள். இன்னும் மூன்று பேர் பேசவேண்டும்.

**திரு. கே. தங்கவேல்:** பல இடங்களில் வீட்டு வசதி மேம்பாட்டுக்கென அறிவிக்கப்பட்டவைமீது எந்த மேல்நடவடிக்கையும் இல்லாமல் அறிவிப்போடு நின்றுள்ளது. இது தெரியாமல் ஆயிரக்கணக்கானவர்கள் மனை வாங்கி, கடன் பெற்று, வீடு கட்டியுள்ளார்கள். நகர்ப்புற நில உச்சவரம்பு சட்டத்தின்கீழ் அவை உள்ளன என்பதை அறியாமல் வீட்டுமனை வாங்கி அவதிப்படுகிறவர்கள் பல ஆயிரக்கணக்கில் உள்ளார்கள். இவற்றைக் கண்டறிந்து முறைப்படுத்தவேண்டும். உள்ளாட்சி அமைப்புகளுக்கு மாநில நிதி வருவாயில் 10 சதவிகிதம் அறிவித்துள்ளீர்கள். இதனை 30 சதவிகிதமாக அதிகரித்து உள்ளாட்சி அமைப்புகளுக்குக் கூடுதல் அதிகாரம் வழங்கவேண்டும்.

அடுத்து, நெடுஞ்சாலைத் துறை தன்வசமுள்ள சாலைகளில் ஒரு பகுதியைப் பராமரிக்கும் பொறுப்பைத் தனியாருக்கு ஒப்படைப்பதும், அதனை விரிவுபடுத்துவது என்ற அறிவிப்பும் சரியல்ல. இதனால் சாதாரண மக்கள் பெரும் பாதிப்புக்குள்ளாவார்கள். பொதுவாகவே சுகாதாரம், கல்வி, சாலைகள் போன்ற மக்கள் சார்ந்த பணிகள். . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நன்றி சொல்லி உரையை முடியுங்கள். உங்களுக்குக் கொடுத்த ஒரு நிமிடம் முடிந்துவிட்டது.



**திரு. கே. தங்கவேல்:** ஒரேயொரு கருத்தைச் சொல்லி முடித்து விடுகிறேன். அரசும், தனியாரும் சேர்ந்து செய்தது, தனியாருக்கே பயனளிக்கிறது. மாறாக மக்களுக்கு பயனளிக்கவில்லை. இதுபோன்ற பணிகளை அரசே செயல்படுத்தவேண்டும். விவசாய நிலங்களில் எரிவாயு குழாய் பதிக்கும் GAIL நிறுவனத்தின் திட்டத்தைக் கைவிடவேண்டி, போராடிய 7 மாவட்ட விவசாயிகள்மீது தொடரப்பட்ட வழக்குகளைத் திரும்பப்பெற நடவடிக்கைகளை எடுக்கவேண்டுமென்று மாநில முதல்வர் அறிவித்த அறிவிப்பை வரவேற்கிறோம். அதேசமயம், உளுந்தூர்பேட்டை–சேலம் வரையில். . .

பிற்பகல் 1–25

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சீக்கிரம் உரையை முடியுங்கள். இன்னும் மூன்று உறுப்பினர்கள் பேச வேண்டியிருக்கிறது.

**திரு. கே. தங்கவேல்:** ஒரே ஒரு நிமிடத்தில் முடித்துவிடுகிறேன். உளுந்தூர்பேட்டை N.H. 68–ல் நான்கு வழிப் பாதை அமைப்பதற்காக ரிலையன்ஸ் கம்பெனி, நிலம் ஆர்ஜிதம் செய்து, அடிமாட்டு விலைக்கு இழப்பீட்டுத் தொகையை தீர்மானித்துள்ளது. ஏழை விவசாயிகளின் வயிற்றில் அடித்துள்ளார்கள். இதனால், விவசாயிகளின் வாழ்நிலை பாதிக்கப்பட்டு பல்லாயிரம் கோடி ரூபாய் நஷ்டம் ஏற்பட்டுள்ளது. இப்பிரச்சினையில் அரசு அதிகாரிகள் தலையிடுகிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன். (குறுக்கீடு) உறுப்பினர், நீங்கள் நன்றி சொல்லி உரையை முடியுங்கள். (குறுக்கீடு) நேரம் இல்லை. நன்றி சொல்லி உரையை முடியுங்கள். இன்னும் மூன்று உறுப்பினர்கள் பேச வேண்டியிருக்கிறது. நீங்கள் 18 நிமிடங்கள் பேசியிருக்கிறீர்கள்.

**திரு. கே. தங்கவேல்:** மாற்றுத் திறனாளிகள் பிரச்சினையில் கொஞ்சம் கவனம் செலுத்த வேண்டும். மாற்றுத் திறனாளிகள் உதவித் தொகை பெறுவதற்கான விதிமுறைகளில் சில மாற்றங்கள் செய்ய வேண்டுமென்று கேட்டு, எனது உரையை நிறைவு செய்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நன்றி. அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன் அவர்கள்.

**திரு. சு. குணசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மூன்றாவது முறையாக மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களால் இந்த அவையில் சமர்ப்பிக்கப்பட்ட 2013–2014 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையினை இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பில் வரவேற்கிறேன்.

பொதுவாக, நிதிநிலை அறிக்கையிலும், ஆளுநர் உரையிலும் அரசு பல மக்கள் நலத் திட்டங்களை அறிவித்திருக்கிற அதை ஒரு சட்டமன்ற உறுப்பினர் என்ற அடிப்படையில், எதிர்க்கட்சி என்ற அடிப்படையில், பாராட்டுகிற இடத்தில் பாராட்ட வேண்டிய அவசியம் இருக்கிறது, கோரிக்கைகளையும் முன்வைக்க வேண்டிய அவசியம் இருக்கிறது. எனவே, பாராட்டுதலையும், கோரிக்கைகளையும் முன்வைத்தால், நீங்கள் கொடுக்கிற நேரம் போதாது என்பதைத் தாங்கள் தெரிந்துகொண்டு, கொஞ்சம் கூடுதலாக நேரம் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பாராட்டு மட்டும் வைத்துக்கொள்ளுங்கள்.

**திரு. சு. குணசேகரன்:** பாராட்டிவிட்டு மட்டும் நின்றுவிட முடியாது, கோரிக்கையையும் வைக்க வேண்டும், அதற்குக் கொஞ்சம் நேரம் வேண்டும். உலகம் முழுவதும் ஏற்பட்டுள்ள பொருளாதார மந்த நிலை மட்டுமல்லாமல், மத்திய காங்கிரஸ் அரசு பின்பற்றிவரும் உலகப் பொருளாதாரக் கொள்கை, அன்னிய முதலீட்டாளர்களுக்கு கொடுக்கப்பட்டுள்ள சலுகைகள், இப்படிப்பட்ட காரணங்களால் இந்தியாவில் ஏற்படுத்தியிருக்கக்கூடிய இந்தவிளைவுகளை பணவீக்கம், விலைவாசி உயர்வு, இதுபோன்ற கடுமையான இந்த நெருக்கடியான நேரத்தில், தமிழகத்தை ஒரு மாற்றாந்தாய் மனப்பான்மையோடு மத்திய அரசு பார்க்கிற இந்த நிலையில், இந்த நிதிநிலை அறிக்கை தமிழகத்திலே சிறப்பாக முன்வைக்கப்பட்டிருக்கிறது.

இந்த நிதிநிலை அறிக்கையைப் பொறுத்தவரை வரியில்லாத, அதேசமயம் வரியில் எந்தவிதமான மாற்றங்களும் செய்யாத ஓர் உபரி பட்ஜெட்டாக வைத்திருப்பதை இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பில் நாங்கள் மனதாரப் பாராட்டுகிறோம், வரவேற்கிறோம். குறிப்பாக, இந்த நெருக்கடியான நேரத்தில்கூட மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் புதிதாக இன்றைக்கு அறிவிக்கப்பட்டிருக்கிற பல நலத் திட்டங்களுக்காக 44,000 கோடி



ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருப்பதையும் இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பில் நான் மனதாரப் பாராட்டுகிறேன்.

குறிப்பாக, இந்த பட்ஜெட்டைப் பாராட்டி, இந்திய கம்யூனிஸ்டு கட்சியினுடைய மாநிலச் செயலாளர், எங்கள் தலைவர் தோழர் தா. பாண்டியன் அவர்கள் இந்த பட்ஜெட் வெளிவந்தவுடன் ஒரு விரிவான அறிக்கையை ஜனசக்தி நாளிதழில் வெளியிட்டிருக்கிறார். பட்ஜெட்டில் கொடுக்கப்பட்டிருக்கிற மக்கள் நலத் திட்டங்கள், அதற்கு ஒதுக்கப்பட்டிருக்கிற நிதிகள், அது தமிழக மக்களுக்கு ஏற்படுத்தக்கூடிய விளைவுகள் இவற்றையெல்லாம் சுட்டிக்காட்டி, இந்த நலத் திட்டங்கள் அறிவித்திருப்பதை வரவேற்றிருக்கிற அதேநேரத்தில், இதை முழுமையாக எந்த நோக்கத்திற்காக நமது மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் அறிவித்திருக்கிறார்களோ அந்த நோக்கம் நிறைவேறுகிற வகையில், அதன் பலன்கள் உரிய பயனாளிகளுக்குக் கிடைப்பதற்கேதுவாக நிருவாக அமைப்பு முறைகளையும் கண்காணித்துச் செயலாற்ற வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். அந்த அடிப்படையில் எதிர்காலத்தில் இந்த நலத் திட்டங்களைச் செயல்படுத்துவதற்கான நடவடிக்கையை எடுக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல இந்த நிதி நெருக்கடியிலும் மத்திய அரசு உணவுப் பாதுகாப்புச் சட்டத்தைக் கொண்டுவர மறுக்கிற நேரத்தில், இங்கே இருக்கக்கூடிய சாதாரண மக்களுக்கு விலையில்லாமல் 20 கிலோ அரிசியை வழங்குகிற ஒரு நல்ல திட்டத்தைத் தொடர்ந்து கடைப்பிடிப்பதையும், அதைப்போல வெளியிலே இருக்கக்கூடிய விலைவாசி ஏற்றத்தை, அரிசி விலை உயர்வைக் கட்டுப்படுத்துவதற்கு ஒரு இலட்சம் மெட்ரிக் டன் அரிசியைக் கொள்முதல் செய்து, அதை நியாய விலைக் கடைகளின் மூலமாக விநியோகம் செய்யும் ஒரு திட்டத்தை அறிவித்திருப்பதையும் இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பில் வரவேற்கிறோம். ஆனால், அதேநேரத்தில் நமது மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் முன்வைத்திருக்கிற. . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்

திட்டங்களை வரவேற்கிறார், மகிழ்ச்சி. ஆனால், நியாய விலைக் கடையிலே கிடையாது. (குறுக்கீடு) இல்லை, இல்லை. Primary store, wholesale store இந்த மாதிரி 400 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு விற்பனை நிலையங்களில்தான் அந்த அரிசி விநியோகம் செய்யப்படுகிறது. ஏனென்றால், ரேஷன் கடையில் வைத்தால், அந்த அரிசியைக் கொடுக்கிறார்கள், இந்த அரிசியைக் கொடுக்கிறார்கள் என்று பிரச்சினை வரும். அதனால், நியாய விலைக் கடையில் கிடையாது. அதுகுறித்து அம்மா அவர்கள் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். இந்த விவரங்களை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 1–30

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன் அவர்கள்.

**திரு. சு. குணசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கூட்டுறவுத் துறையின்கீழ் இயங்கும் அங்காடிகள் மூலமாக என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதைப்போல, மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் முன்வைத்திருக்கின்ற இந்த நிதிநிலை அறிக்கையில் 2013–2014 ஆம் ஆண்டுக்கான நிதிப் பற்றாக்குறை 22,938 கோடி ரூபாய் என்றும், இதற்கு மாநில அரசு நிகரக் கடனாக 21,142 கோடி ரூபாய் கடன் வாங்குவதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த நிலையில், அறிக்கையில் குறிப்பிட்டுள்ளவாறு 31–3–2014ல் மொத்த கடன் ரூ.1,55,129.62 கோடியாக வரும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இப்படி, இந்தக் கடன் ஆண்டுக்காண்டு கூடிக்கொண்டே இருப்பது, தமிழகத்தில் மிகப் பெரிய கடன் சுமையும், அந்தக் கடனுக்கான வட்டிச் சுமையும் அதிகரித்து, எதிர்காலத்தில் பல நலத் திட்டங்களையும், கட்டமைப்புகளையும் உருவாக்குவதற்கு மிகப் பெரிய பாதிப்பை ஏற்படுத்தக்கூடும் என்ற ஐயம் ஏற்பட்டிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்றதற்குப் பின்னால், வாங்கப்படுகின்ற கடனின்



அளவும் குறிப்பிட்ட அளவிற்குள் நிலைநிறுத்தப்பட்டிருக்கின்றது. வாங்கப்படுகின்ற கடன் தொகையை மூலதனச் செலவுகளுக்காகத்தான் நாம் செலவு செய்து கொண்டிருக்கிறோம். எதற்காகக் கடன் வாங்குகிறோமோ, அந்தக் கடன் முழுவதும் மூலதனச் செலவுகளுக்காக மட்டுமே செலவிடப்படுகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே, இதில் அரசினுடைய போக்கு நிலைநிறுத்தப்பட்டிருக்கிறது. அதாவது, பதின்மூன்றாவது நிதிக் குழுவின் வரைவு அறிக்கைக்கு உட்பட்டே இது அமைந்திருக்கிறது என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன் அவர்கள்.

**திரு. சு. குணசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நமது மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் பதிலுக்கு நன்றி. ஆனால், ஒன்றை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அது மூலதனத்திற்கான கடனாக இருந்தாலும், வட்டி என்பது 13,000 கோடி ரூபாயைத் தாண்டுவதாகச் சிலர் சொல்கிறார்கள். எனவே, ஒவ்வோர் ஆண்டும் 13,000 கோடி ரூபாய்க்கு மேலே வட்டிக்கு மட்டுமே கட்டுவது என்பது எதிர்காலத் தமிழகத்திற்கு எப்படிச் சரியாக அமையும் என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மத்திய அரசினுடைய 2003 ஆம் ஆண்டு நிதிநிலை பொறுப்புடைமைச் சட்டத்தின் வரைவு அறிக்கைக்கு உட்பட்டுத்தான் கடன் வாங்கப்பட்டிருக்கிறது. அந்த அளவிற்கு கட்டுப்பட்டுத்தான் நிதிநிலை அறிக்கை இங்கே சமர்ப்பிக்கப்பட்டிருக்கிறது. இது, மாண்புமிகு அம்மா அவர்களின் 2011–2012, 2012–2013 ஆம் ஆண்டிலும் இருக்கும், வருகின்ற 2013–2014 ஆம் ஆண்டிலும் இது தொடரும். நிதிநிலை பொறுப்புடைமைச் சட்டத்தின் வரைவு அறிக்கைக்கு உட்பட்டுத்தான் இருக்கும். இதில் எந்த ஐயப்பாட்டிற்கும் இடமில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன் அவர்கள்.

**திரு. சு. குணசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கடன் வாங்குவதைக் குறையாகச் சொல்லவில்லை. நான் என்ன சொல்லவருகிறேன் என்றால், இப்படிப்பட்ட நிலை நீடிக்கிறது. எனவே மத்திய அரசு பட்ஜெட்டில் அந்நிய நிறுவனங்களுக்கும், ஏற்றுமதி, இறக்குமதி நிறுவனங்களுக்கும் நிறைய வரிச் சலுகை, வட்டிச் சலுகை, கடன் தள்ளுபடி என பல அறிவிப்புகளைச் செய்கிறது. எனவே, இது தமிழ்நாட்டிற்கு மட்டுமல்ல, இந்தியாவிலுள்ள பெரிய மாநிலங்கள் வளர்ச்சிக்காக முதலீடு செய்வதில் ஏகப்பட்ட கடனும், அதைப்போல வட்டியும் அதிகரித்துக் கொண்டிருக்கிறது. எப்படி மேற்கு வங்காளத்தில் கடனுக்கான வட்டியைத் தள்ளுபடி செய்ய சிறப்பு நிதி கேட்கிறார்களோ, அதைப்போல தமிழகத்திற்கும் இப்படி இருக்கக்கூடிய இனங்களுக்கான வட்டியை மத்திய அரசே ஏற்றுக்கொள்ளச் செய்வதற்கும், கடனை மத்திய அரசு ஏற்றுக்கொள்வதற்கான ஒரு வாய்ப்பையும் உருவாக்க வேண்டும். அதற்கான முயற்சிகளை நமது தமிழக அரசு எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மத்திய அரசு நமக்கு கொடுக்கவேண்டிய நியாயமான பங்கீட்டுத் தொகையை கொடுத்தாலே போதுமானதாக இருக்கும் என்ற சூழ்நிலை இப்போது உருவாகியிருக்கிறது. சென்ற வருடம் மத்திய அரசு கொடுத்ததைக் காட்டிலும் இந்த வருடம் 500 கோடி ரூபாய் மத்திய அரசின் வரி வருவாய்த் தொகுப்பிலிருந்து குறைக்கப்பட்டிருக்கிறது. நமக்கு வரவேண்டிய மானியம் சென்ற வருடத்தைக் காட்டிலும் இந்த வருடம் 1,500 கோடி ரூபாய் குறைக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, இந்த வருடம் மட்டும், சென்ற வருடத்தைக் காட்டிலும் மத்திய அரசின் வரி வருவாயிலிருந்து நமது மாநிலத்திற்கு அளிக்க வேண்டிய நிதிப் பங்கீட்டையும், மானியத்தையும் சேர்த்து 2,000 கோடி ரூபாயைக் குறைத்திருக்கின்றார்கள். இப்போது எங்கே போய் மாநில அரசின்



கடனையெல்லாம் ஏற்றுக்கொள்ளவேண்டும் என்று மத்திய அரசிடம் சொல்வது? அது நடக்கக்கூடியதாகத் தெரியவில்லை. அதை மாண்புமிகு காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் உரையாற்றும்போது விளக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள். (குறுக்கீடு) அவர் நிறைய தடவை வாய்ப்பு கேட்டிருக்கிறார்.

**திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு) நான் பேசிவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அவர் கேட்டுவிட்டார். திரு. ஜே.ஜி. பிரின்ஸ், பேசுங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. பிரின்ஸ் பேசுகிறீர்களா? இல்லையா? (குறுக்கீடு) அம்மா, அவர் இரண்டு, மூன்று முறை பேச வாய்ப்புக் கேட்டுவிட்டார். (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி அவர்கள். (குறுக்கீடு) சுருக்கமாகப் பேசுங்கள்.

*பிற்பகல் 1–35*

**திருமதி எஸ். விஜயதரணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் வட்டியை அதிகம் கொடுக்கவேண்டும்; எனவே மத்திய அரசிடமிருந்து நிதியைக் கூடுதலாகக் கேட்கவேண்டும் என்று சொல்கிறார். மேற்கு வங்காளம், பீகார் போன்ற மாநிலங்கள் எல்லாம் Backward State–ஆக declare செய்யச் சொல்லிக் கேட்கிறார்கள். அதுமாதிரி தமிழ்நாட்டை Backward State–ஆக declare செய்யச் சொல்லிக் கேளுங்கள். ஒருவேளை அது நடந்தால், நமக்கு அதிகமாக நிதி கிடைக்க வாய்ப்பு இருக்கும். அதுதான் என்னுடைய suggestion. அதை சொல்லத்தான் நான் முன்வந்தேன். நன்றி.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள்.

**திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அன்புக்குரிய. . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திருமதி விஜயதரணி அவர்கள் நடைமுறைக்கு ஒவ்வாத கருத்தை இங்கே பதிய வைத்துக்கொண்டிருக்கிறார். அது தவறு. நடைமுறையில் மத்திய அரசு சென்ற ஆண்டு கொடுத்த நிதியின் அளவைவிட குறைத்திருக்கிறது. சென்ற ஆண்டு மத்திய வரி வருவாய்த் தொகுப்பிலிருந்து நமக்கு அளிக்க வேண்டிய மாநிலத்தினுடைய பங்கீட்டிலிருந்து 500 கோடி ரூபாயைக் குறைத்திருக்கிறார்கள். சென்ற வருடம் நமது மாநிலத்திற்கு நியாயமாகக் கொடுக்க வேண்டிய மானியத்திலிருந்து 1,500 கோடி ரூபாயை குறைத்திருக்கின்றார்கள். இந்த ஒரு வருடத்தில் மட்டும் 2,000 கோடி ரூபாய் நமக்கு உரிய உரிமையை—உரிய பங்கீட்டினை மத்திய அரசு குறைத்திருக்கின்றது. அதைத்தான் நான் இங்கே சொல்ல விரும்புகிறேன். அதை மட்டும் நீங்கள் குறைக்காமல் வாங்கிக் கொடுத்தால் உங்களுக்கு நன்றி சொல்ல நாங்கள் கடமைப்பட்டிருக்கின்றோம்.*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன் அவர்கள்.*

***திரு. அ. சவுந்தரராசன்:** *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு மத்திய நிதி அமைச்சர் திரு. ப. சிதம்பரம் அவர்கள் தமிழ்நாட்டைச் சார்ந்தவர். மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி அவர்கள், மத்திய அமைச்சரிடம் சொல்லி, எங்களுடைய மாநிலத்திற்கு நீங்கள் கூடுதலாக நிதி தர வேண்டும் அல்லது தர வேண்டிய நிதியையாவது குறைக்காமல் தர வேண்டும். வேண்டுமானால், நீங்கள் தமிழ்நாட்டைப் பின்தங்கிய மாநிலம் என்றோ அல்லது மிகவும் பின்தங்கிய மாநிலம் என்றோ எப்படி வேண்டுமானாலும் அறிவித்துக் கொள்ளுங்கள். எதையாவது செய்து எங்களுக்குப் பணம் கொடுங்கள், என்று காங்கிரஸ் உறுப்பினர்கள் மத்திய அரசிடமிருந்து நிதியை வாங்கித் தமிழ்நாட்டிற்குத் தர வேண்டுமென்று தங்கள் மூலமாக நான் கேட்டுக்கொள்கிறேன்.*

*(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன் அவர்கள்.*



**திரு. சு. குணசேகரன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய நிதி அமைச்சர் வேண்டுமானால் தமிழகத்தைச் சார்ந்தவராக இருக்கலாம். அவருடைய சிந்தனை முழுக்க அமெரிக்க கம்பெனிகளைச் சார்ந்தது என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இன்றையதினம், நமது வருவாய்த் துறை மூலமாக மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுடைய ஆணைக்கிணங்க* Assured Maximum Service to Marginal People in all villages *என்ற திட்டத்தின் அடிப்படையில். . . (குறுக்கீடு)*

**திருமதி எஸ். விஜயதரணி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் ஒரு கமென்ட் சொல்லியிருக்கிறார். அதற்கு பதில் சொல்ல வாய்ப்புக் கொடுங்கள். (குறுக்கீடு)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *சரி, பேசுங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள், பிறகு பேசலாம். (குறுக்கீடு)* He is not yielding. *(குறுக்கீடு) சரி, சொல்லுங்கள்.*

**திருமதி எஸ். விஜயதரணி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய நிதி அமைச்சர் அவர்களைப் பற்றி ஒரு கருத்தை மாண்புமிகு உறுப்பினர் சொல்லியிருக்கிறார். நிச்சயமாக தமிழகத்திற்குக் கிடைக்கப்பெற வேண்டியது எதுவாக இருந்தாலும், அவரும் கண்ணும் கருத்துமாகக் கொடுத்து வருகிறார் என்பதை நீங்கள் புரிந்துகொள்ள வேண்டும். குறிப்பாக, தமிழகத்திற்கு 14 இரயில்கள் ஒதுக்கப்பட்டிருக்கின்றன. 7,500 கோடி ரூபாய் நிதி தூத்துக்குடி துறைமுக மேம்பாட்டிற்காக ஒதுக்கப்பட்டிருக்கிறது.* Chennai Bangalore Industrial Corridor *உருவாக்கப்படுகிறது. இவையெல்லாம் மத்திய அரசு தராததா? அதுமட்டுமல்ல, சென்ற ஐந்தாண்டுத் திட்டத்தில் தமிழகத்திற்கு 32,000 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டிருந்தது. இப்பொழுது அது 83,000 கோடி ரூபாயாக உயர்த்தி ஒதுக்கப்பட்டிருக்கிறது என்பதை நாம் மறந்துவிடக் கூடாது. 250 சதவிகிதம் மத்திய அரசு தமிழகத்திற்கு நிதியை அதிகமாக வழங்கியிருக்கிறது என்பதை நான் இந்த நேரத்தில் பதிவு செய்ய விரும்புகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி அவர்களுக்கு நான் ஒரு கருத்தைச் சொல்ல விழைகிறேன். ஏற்கெனவே நிதிநிலை அறிக்கையில் சொல்லியிருக்கிறேன். இருந்தாலும் இப்பொழுது உங்களுடைய ஞாபகத்திற்குக் கொண்டுவர விரும்புகின்றேன். இந்திய அரசியலமைப்புச் சட்டப் பிரிவு 289—ல் மாநில அரசுகளின் வருவாய்மீது அனுமதிக்கப்பட்டுள்ள மத்திய அரசின் வரி விலக்குக்கு எதிராக அமைந்துள்ளது. எது எதிராக அமைந்துள்ளது என்று சொன்னால், மத்திய அரசின் 2013—2014 ஆம் ஆண்டு வரவு—செலவுத் திட்டத்தில் அறிமுகம் செய்யப்பட்டுள்ள 2013 ஆம் ஆண்டு நிதிநிலைச் சட்ட வரைவில் மிகவும் பிற்போக்கான, கூட்டாட்சித் தத்துவத்திற்கு எதிரான பிரிவுகள் கொண்டுவரப்பட்டுள்ளன.

பிற்பகல் 1—40

மாநில அரசின் பொதுத் துறை நிறுவனங்களின் வருவாயிலிருந்து மாநில அரசு பெறக்கூடிய சட்டப்பூர்வமான கட்டணங்களை மத்திய அரசின் வருமான வரி விதிவிலக்கில் கழித்துக்கொள்ள இயலாது என மத்திய அரசின் 2013 ஆம் ஆண்டு நிதிநிலைச் சட்டவரைவு பிரிவு 7—ன்கீழ் கூறப்பட்டுள்ளது. இதனால், மாநிலத்திற்கு நியாயபூர்வமாகக் கிடைக்கும் வரி மற்றும் வரியல்லாத வருவாயைக் குறைத்து, மத்திய அரசு தனது வருமானத்தினைப் பெருக்கக் கருதியுள்ளது. இச்செயல் மாநில அரசுகளின் வருவாயின்மேல் விதிக்கப்படும் மறைமுக வரி விதிப்பாகவே அமைந்துள்ளதால், ஏற்கெனவே இந்திய அரசியலமைப்புச் சட்டப் பிரிவு 289—ல், மாநில அரசுகளின் வருவாய்மீது அனுமதிக்கப்பட்டுள்ள—மத்திய அரசின் வரி விலக்கிற்கு, சமீபத்தில் மத்திய அரசினுடைய நிதிநிலை அறிக்கையில் கொண்டுவரப்பட்ட இந்தச் சட்டம் எதிராக உள்ளது. நீங்கள் உங்களுடைய செல்வாக்கைப் பயன்படுத்தி, இதனைத் திரும்பப் பெற்றுக் கொள்ளும்படி, மத்திய அரசை வலியுறுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன் அவர்கள்.



**திரு. சு. குணசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது வருவாய்த் துறையின் மூலமாக, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுடைய ஆலோசனையின் அடிப்படையில் Assured Maximum service to Marginal people of All villages என்ற ஒரு சிறப்பான திட்டத்தைத் தீட்டி, இன்றைக்கு செவ்வாய்க்கிழமை தமிழகம் முழுவதும் அந்தத் திட்டம் சிறப்பாகச் செயல்படத் தொடங்கியிருப்பதை, இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பில் வரவேற்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இதுவரையில் வீட்டுமனைப் பட்டா, முதியோர் உதவித் தொகை போன்ற பல்வேறு திட்டங்களுக்கு அதிகாரிகளைத் தேடி வந்த காலம் போய், ஒவ்வொரு செவ்வாய்க்கிழமை அன்றும், அரசு அதிகாரிகள், வட்டாட்சியரிலிருந்து, எல்லா துறை அதிகாரிகளும் ஒவ்வொரு ஊராட்சியாகத் தொடர்ந்து சென்று, அந்த மனுக்களைப் பெற்று, அவர்களுக்கான கோரிக்கைகளை நிறைவேற்றுகிறவகையில், அரசு நிருவாகம் மக்களைத் தேடிச் செல்கின்ற ஒரு புதிய நடைமுறையை உருவாக்கியிருப்பதை இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பில் மனதாரப் பாராட்டுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இன்றைக்குத் தமிழ்நாடு முழுவதும் கடுமையான வறட்சி ஏற்பட்டிருக்கிற நிலையில்கூட, வேளாண்மைத் தொழிலுக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்து, 5 ஆயிரம் கோடி ரூபாய்க்கு மேலாக நிதி ஒதுக்கீடு செய்திருப்பதை இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பில் வரவேற்கிறேன். அதிலும் குறிப்பாக, தமிழகத்தினுடைய நெற்களஞ்சியமாக இருக்கக்கூடிய 22 இலட்சம் ஏக்கர் பாசனப் பரப்பைக் கொண்டிருக்கக்கூடிய காவேரி நதிநீர்ப் பிரச்சினை, இரண்டு மாநில மக்களுக்கிடையிலான ஒரு மிகப் பெரிய மோதலாக, ஒரு நீண்ட நெடிய பிரச்சினையாக இருந்த நிலையில், இன்றைக்கு நமது மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் உச்ச நீதிமன்றத்தை அணுகி, நடுவர்மன்றத் தீர்ப்பை அரசிதழில் வெளியிடச் செய்வதற்கு உறுதியான சட்ட வழிமுறைகளைச் செய்து, அதன்மூலமாக இன்றைக்கு நடுவர்மன்றத் தீர்ப்பு அரசிதழில் வெளியிடப்பட்டிருக்கிற ஒரு நல்ல மகிழ்ச்சியான தருணத்தில் நாம் நின்று கொண்டிருக்கிறோம்.

அந்த நிலையில், கடந்த கூட்டத் தொடரின்போதே, காவேரி டெல்டா பகுதி விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்கும் வகையில் நஷ்ட ஈடு போன்றவற்றைச் சிறப்பாக அறிவித்திருந்தார்கள்.

ஆனாலும், அந்த நிவாரணத் தொகை வழங்குவதை நடைமுறைப்படுத்துவதில் அந்த மாவட்டங்களில் பல பிரச்சினைகள் இருக்கின்றன. அதை நமது மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் கவனத்தில் எடுத்துக்கொண்டு, அங்கே ஏற்கெனவே நிவாரணம் கிடைக்காத விவசாயிகளுக்கு, நிவாரணம் கிடைப்பதற்கான ஒரு உறுதியான நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும். குறிப்பாக, தஞ்சாவூர் மாவட்டம் முழுவதும் யாருக்கும் இந்த நிவாரணம் கிடைக்கவில்லை என்ற ஒரு பிரச்சினை எழுந்திருக்கிறது. அதையும் கவனத்தில் கொள்ள வேண்டுமென்று இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

*__மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:__ மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உண்மையிலேயே 50 சதவிகிதத்திற்கு மேல் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் கிடைத்திருக்கிறது; யாருக்கும் கிடைக்கவில்லை என்று சொல்லமுடியாது. எல்லோருக்கும் கிடைக்கவேண்டும்; 50 சதவிகிதத்திற்கும்கீழ் விவசாயத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கும் கிடைக்க வேண்டும் என்ற ஒரு நினைப்பில் சிலர் பேசுகிறார்கள். உண்மையில் பாதிக்கப்பட்ட அனைவருக்கும் நிவாரணம் கிடைத்திருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக வறட்சி ஏற்படுகின்ற சூழ்நிலையில், எந்த அளவிற்குப் பயிர் பாதிப்பு ஏற்பட்டிருக்கிறதோ, அந்த அளவிற்குத்தான் வறட்சி நிவாரணத் தொகுப்பு வழங்கப்படும். இதுதான் இதுவரை நடைமுறையில் இருந்துவந்த ஒரு செயல். ஆனால், மாண்புமிகு அம்மா அவர்கள் இன்றைக்கு நிவாரணத்தை முழுமையாகக் கொடுத்திருக்கின்றார்கள். 50 சதவிகிதத்திற்கும் மேல் பாதிக்கப்பட்டிருந்தால்—50, 60, 70, 80, 90, 100 – இப்படி 50 சதவிகிதத்திலிருந்து 100 சதவிகிதம் வரையில், இடைப்பட்ட நிலையில் யாராக இருந்தாலும், முழுமையாக வறட்சி நிவாரணத் தொகை வழங்கப்பட்டிருக்கின்றது. அதிலும்,



இந்தப் பயிர்க் காப்பீட்டுத் திட்டம் என்பது, அந்த Group Insurance–ல் உட்படுத்தப்பட்டிருக்கிறது. ஒரு பிர்க்கா அளவிற்கு எடுத்து, அந்த பிர்க்கா அளவிலே எந்த அளவிற்குப் பயிர் உற்பத்தி, இந்த வறட்சி நேரத்தில் பாதிக்கப்பட்டு, உற்பத்தியினுடைய அளவு குறைந்திருக்கிறது என்கின்ற அளவினை வைத்துக் கணக்கிட்டு, அந்த சராசரியின் அடிப்படையில் எல்லா விவசாயிகளுக்கும் கொடுக்கின்ற வகையில்தான் நிவாரணம் வழங்கப்பட்டு வந்தது; அதுதான் இதுவரை இருந்து வந்த நிலை. ஆகவே, ஒவ்வொரு விவசாயிக்கும், பாதிப்புகளின் அடிப்படையில், 2,000 ரூபாய், 3,000 ரூபாய் எனத் தொடங்கி, முழுமையாகப் பாதிக்கப்பட்டிருந்தால், அவர்களுக்கு உற்பத்தி ஏதுமில்லாமல் இருந்தால், ஏக்கருக்கு 8,692 ரூபாய் கிடைக்கும். ஆனால், உற்பத்திக்குத் தகுந்தாற்போல், ரூ.2,000 கிடைக்கும்; ரூ. 2,500 கிடைக்கும்; ரூ.3,000 கிடைக்கும்; ரூ.4,000 கிடைக்கும். ஆனால், மாண்புமிகு அம்மா அவர்கள், 50 சதவிகிதத்திற்கும் மேல் பாதிக்கப்பட்ட அனைவருக்குமே 8,692 ரூபாய் நிவாரணத்தை முழுமையாகத் தந்திருக்கின்றார்கள். இது இந்தியாவிலேயே, எந்த மாநிலத்திலும், யாராலும் வழங்கப்படாத ஒரு நிவாரணம். (மேசையைத் தட்டும் ஒலி) இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், இதனை சிறப்பினமாகக் கருதி, ஏக்கர் ஒன்றுக்கு 15,000 ரூபாய் என்று நிவாரணத் தொகையினை வழங்கியிருக்கின்றார்கள். இந்தியாவிலே, எந்த மாநிலத்திலும் தராத உச்சபட்ச வறட்சி நிவாரண நிதி உதவி இது என்பதனை மாண்புமிகு உறுப்பினர்கள் புரிந்துகொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கின்றேன்.

பிற்பகல் 1–45

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன், சீக்கிரம் பேசி முடியுங்கள். (குறுக்கீடு) நேரமாகிவிட்டது. இன்னும் இரண்டு உறுப்பினர்கள் பேச வேண்டும்.

**திரு. சு. குணசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தத் திட்ட அறிவிப்பை நாங்கள் குறை சொல்லவில்லை; ஒரு நல்ல திட்டம், நல்ல அறிவிப்பு. ஆனால், நடைமுறைப்படுத்துவதில் சில குறைபாடுகள் இருக்கின்றன. அதைக் கண்காணித்து, சரி செய்ய வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

சென்னை மாவட்டம் நீங்கலாக, மற்ற மாவட்டங்களை வறட்சி மாவட்டங்களாக அறிவித்ததை நாங்கள் வரவேற்கிறோம்; நில வரித் தள்ளுபடியை நாங்கள் வரவேற்கிறோம். ஆனால், அதேநேரத்தில் அதற்கான அறிவிப்புகள் விரைவில் வெளியிடப்படும் என்று நிதிநிலை அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டிருக்கிறது. அந்த அடிப்படையில், தென் மாவட்டங்கள், மற்ற மாவட்டங்களைப் பொறுத்தவரையில், புஞ்சை தானியங்கள் என்பது கூடுதலாக இருக்கின்றது. எனவே, புஞ்சை தானியங்களுக்கான நிவாரணத்தையும் ஏக்கர் ஒன்றுக்கு ரூ. 10 ஆயிரம் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

குடி தண்ணீருக்கான சிறப்பு நிதிகளை ஒதுக்குவதற்கான நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டும்.

தொடர்ந்து வறட்சிக்கு இலக்காகக்கூடிய சிவகங்கை, இராமநாதபுரம் போன்ற மாவட்டங்களில், வறட்சிக்கு மாற்றாக அதிக அளவிலே பண்ணைக் குட்டைகளை வெட்டுகிற திட்டத்தை அறிவித்து, ஒவ்வொரு கண்மாயிலும் ஒரு ஆழ்குழாய் கிணறுகளை, ஒவ்வொரு மடைக்கும் அமைத்துக் கொடுக்கிற நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும்.

விவசாயிகளுடைய நிவாரணம் என்ற அடிப்படையில் கூட்டுறவுக் கடன் முழுவதும் ஒத்தி வைக்கிற ஒரு நிலையை அறிவித்திருக்கிறார்கள். ஆனால், எங்களைப் பொறுத்தளவில், கூட்டுறவுக் கடன் முழுவதையும் தள்ளுபடி செய்ய வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன். இப்போது ஒத்தி வைத்திருக்கிற அந்தக் கடனுக்கும் 10.50 சதவீதம் வட்டி என்ற முறையிலே கணக்கீடு செய்யப்படுகிறது. அதை மாற்றியமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்கு காப்பீட்டுத் திட்டத்திற்காக கணக்கிடப்படுவதில் பல குறைபாடுகள் இருக்கின்றன. எப்படி காவேரி டெல்டா பகுதியிலுள்ள விவசாயிகளுக்கு முழு அளவில் காப்பீட்டுத் தொகை கிடைக்க நடவடிக்கை எடுத்திருக்கிறீர்களோ, அதேபோன்று காப்பீட்டுத் திட்டத்தில் கணக்கெடுக்கிற முறையிலே உள்ள குறைபாடுகளை நீக்கி, மற்ற மாநிலங்களைப்போல அனைத்து விவசாயிகளுக்கும் முழுமையான நிவாரணம் கிடைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



இந்த நிதிநிலை அறிக்கையில் ஆண்டுக்கு 2 இலட்சம் அளவில் வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்படும் என்று அறிவிப்பு வெளியிடப்பட்டிருக்கிறது; அதை வரவேற்கிறோம். (மணியடிக்கப்பெற்றது) இன்னும் ஐந்து நிமிடங்கள் கொடுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் பேச ஆரம்பித்து 20 நிமிடங்கள் ஆகிவிட்டன.

**திரு. சு. குணசேகரன்**: ஆனால், நீர்நிலைப் புறம்போக்குப் பகுதிகளில் வீட்டுமனைப் பட்டா கொடுப்பதில் பிரச்சினை நீடித்துக் கொண்டிருக்கிறது; அதை சரி செய்ய வேண்டும். உச்ச நீதிமன்றத் தீர்ப்பை மட்டும் காரணமாகச் சொல்லக் கூடாது.

50, 60 ஆண்டுகளுக்கு மேலாக கோயில் நிலங்களில் குடியிருப்பவர்களுக்கான பிரச்சினை நீடித்துக் கொண்டிருக்கிறது. அந்தப் பிரச்சினையையும் தீர்ப்பதற்கான நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

One time settlement என்ற அடிப்படையில் பட்டா கொடுக்கக்கூடிய திட்டம் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது. அதை உடனடியாக நீட்டித்து, one time settlement–ல் பட்டா கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தமிழகத்தில் வீட்டுமனைப் பட்டா கொடுப்பதற்கு அரசு மதிப்பீடு என்பதும், அதற்காக நிலங்களை விலைக்கு வாங்கும்போது அந்த நிலத்திற்கு செய்யப்படும் மதிப்பீடு என்பதும், ஒதுக்கக்கூடிய பணமும் மிகவும் குறைவாக இருக்கின்றது. எனவே, நில மதிப்பு கூடி இருக்கின்ற நிலையில், ஆக்கப்பூர்வமாக வீட்டுமனைப் பட்டா கொடுப்பதற்கு, அந்த நிதியையும் கூடுதலாக, வீட்டுமனை மதிப்பீடுகளையும் கூடுதலாகக் கொடுக்க வேண்டும். அதேபோல, இன்றைக்கு சில பிரச்சினைகளை முன்வைக்க விரும்புகிறேன். செம்மண் அள்ளுவதிலே. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. என்.டி. வெங்கடாச்சலம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வீட்டுமனைப் பட்டா வழங்கும் திட்டத்தின்கீழ் செயல்பட்டு வந்த 'ஒருமுறை வரன்முறைப்படுத்துகின்ற திட்டம்' காலாவதியாகிவிட்டதால்,

[திரு. என்.டி. வெங்கடாச்சலம்] [2013 மார்ச் 26

அதை மீண்டும் நடைமுறைப்படுத்த வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே குறிப்பிட்டுக் காட்டினார்கள். ஆனால், ஒருமுறை வரன்முறைப்படுத்தக்கூடிய அந்தத் திட்டம் இன்றைக்கு நடைமுறையிலே இல்லாவிட்டாலும்கூட, இந்த ஒரு வருட காலத்தில் மட்டும் 1 இலட்சத்து 21 ஆயிரம் பட்டாக்களை வழங்கி மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு சாதனை படைத்திருக்கிறது என்பதை நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

நீர்நிலைகளிலுள்ள நிலங்களுக்குப் பட்டா வழங்குவதற்குண்டான வழிவகைகளை அரசாங்கம் செய்ய வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே குறிப்பிட்டார்கள். நீர்நிலைப் புறம்போக்குகளில் பட்டா வழங்கக்கூடிய அந்தத் திட்டத்திற்கு உச்ச நீதிமன்றத்தினுடைய தடையாணை இருக்கின்ற காரணத்தினாலே, அந்த இடங்களில் பட்டா வழங்குவதற்குண்டான நடவடிக்கையைத் தொடர முடியாத நிலை இருக்கின்றது. ஆகவே, உச்ச நீதிமன்றம் தன்னுடைய தடையாணையை விலக்கிக்கொள்கின்றபோது, நீர்நிலைப் புறம்போக்கு இடங்களில் வசிப்பவர்களுக்குப் பட்டா வழங்குவதற்குண்டான நடவடிக்கைகள் உரிய விதிப்படி எடுக்கப்படும் என்பதையும் நான் இந்த நேரத்திலே பணிவோடு சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

பிற்பகல் 1–50

அதுமட்டுமல்ல, வறட்சி பாதித்த மாவட்டங்களில், தஞ்சாவூர் மாவட்டத்திற்கு முழுமையாக வறட்சி நிவாரணம் வழங்கப்படவில்லை என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறினார்கள். இந்த நேரத்திலே நான் ஒன்றைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், வறட்சி பாதித்த மாவட்டங்களில் ஆய்வு செய்ய மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களுடைய தலைமையிலே ஒரு உயர்மட்டக் குழுவை அமைத்தது. அந்தக் குழு 30 நாட்களுக்குள் டெல்டா மாவட்ட விவசாயிகளுடைய பாசனப் பகுதிகளை ஆய்வு செய்து, உடனடியாக அந்த அறிக்கையை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களிடம் சமர்ப்பித்தது. சென்னையைத் தவிர, அனைத்து மாவட்டங்களையும் வறட்சி பாதித்த மாவட்டங்களாக



2013 மார்ச் 26] [திரு. என்.டி. வெங்கடாச்சலம்]

அறிவித்து, அதனடிப்படையில் 541 கோடியே 50 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டு 20 நாட்களுக்குள் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு ஏக்கர் ஒன்றுக்கு 15 ஆயிரம் ரூபாய் என்ற அடிப்படையில் நிவாரண நிதி வருவாய்த் துறை மற்றும் கூட்டுறவுத் துறையின் மூலமாக உடனடியாக வழங்கப்பட்டிருக்கிறது என்பதையும் நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

நான் இன்னொன்றையும் இந்த நேரத்திலே மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இன்றைக்கு இந்தியாவை எடுத்துக்கொண்டால், பல்வேறு மாநிலங்களில் அரசு கொண்டுவரக்கூடிய திட்டங்களை வேகமாகச் செயல்படுத்துவதற்கு இயலாத காரணத்தினால், பல்வேறு மாநிலங்களில் அரசு கொடுத்த தொகையை திரும்பப் பெறக்கூடிய நிலை உருவாகியிருப்பது இன்றைக்கு மத்திய அரசினுடைய கணக்காயருடைய தீர்ப்பிலே குறிப்பிட்டுக் காட்டப்பட்டிருக்கின்றது. பல மாநிலங்களில் அரசு கொடுக்கக்கூடிய, குறிப்பாக, விவசாயத் துறைக்கு அரசு கொடுத்த நலத் திட்டங்களையெல்லாம் அந்தத் துறை செயல்படுத்த முடியாத காரணத்தினாலே, திரும்பி அந்த அரசுக்கே திரும்பக்கூடிய சூழ்நிலையெல்லாம் இருந்துகொண்டிருக்கின்றது. ஆனால், தமிழ்நாட்டைப் பொறுத்தவரையிலே, 30 நாட்களுக்குள் வறட்சி பாதித்த மாவட்டங்களை ஆய்வு செய்து, கிட்டத்தட்ட 3 இலட்சத்து 61 ஆயிரம் விவசாயிகளுக்கு 541 கோடியே 50 இலட்சம் ரூபாயை 20 நாட்களுக்குள் விவசாயிகளுக்கு ஒப்படைத்து வருவாய்த் துறை இன்றைக்கு தமிழகத்திலே ஒரு மிகப் பெரிய சாதனையைச் செய்திருக்கிறது என்பதை நான் பணிவோடு கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன். நாங்கள் எந்த அளவுக்கு நிதியைக் கொடுத்தால் நீங்கள் திருப்தி அடைவீர்கள் என்று கம்யூனிஸ்டு கட்சியினுடைய மாண்புமிகு உறுப்பினர்களைக் கேட்க விரும்புகிறேன். எதிலும் அவர்கள் திருப்தியே அடைவதில்லையே. திட்டங்களைப் பாராட்டுகிறார்கள். ஆனால், அதை முழுமையாக ஏற்றுக்கொள்ள மறுத்துக்கொண்டிருக்கின்றார்கள் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த நேரத்திலே மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தாயுள்ளத்தோடு இவ்வளவு பெரிய தொகையை வழங்கியிருக்கிறார்கள். இந்தியாவிலேயே எந்த ஒரு மாநிலத்திலேயும் வறட்சிக்காக ஏக்கருக்கு 15 ஆயிரம் ரூபாய் வழங்கப்பட்டதாக சரித்திரமே இல்லை என்பதையும், கம்யூனிஸ்டு

கட்சிகள் ஆட்சி புரிகிற மாநிலங்களிலேகூட வறட்சிக்கு இவ்வளவு பெரிய தொகை வழங்கப்படவில்லை என்பதையும் இந்த நேரத்திலே நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன், உரையை முடியுங்கள்.

**திரு. சு. குணசேகரன்:** மாண்புமிகு அமைச்சருடைய நீண்ட விளக்கத்திற்கு நன்றி. எங்களுக்கு திருப்தி இருக்கிறதா, இல்லையா என்பது முக்கியமல்ல. மக்களுடைய கோரிக்கைகளை உங்கள் முன்னால் வைக்கிறோம், அவ்வளவுதான். எங்களுடைய திருப்தியை கணக்கிட வேண்டாம்.

அடுத்து, இப்பொழுது நடைபெற்ற ப்ளஸ் 2 தேர்வில் கணிதம், பௌதிகம் இரண்டு பாடங்களிலிருந்துமே Out of syllabus–லேயிருந்து கேள்விகள் கேட்கப்பட்டதால், பதில் அளிப்பதற்கு மிகவும் கஷ்டமாக இருந்தது என்று மாணவர்கள் சொல்லியிருக்கிறார்கள். எனவே, நமது மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் அதைக் கணக்கிலே எடுத்து, வினாத் தாள்கள் திருத்துகிற நேரத்தில் அதற்கு ஒரு grace mark கொடுத்து, அந்த மாணவர்கள் வெற்றி பெறுவதற்கும், கூடுதல் மதிப்பெண் பெறுவதற்குமான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, இன்றைக்குத் தமிழகம் முழுவதும் இருக்கக்கூடிய குளம், குட்டைகளில், . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சீக்கிரம் பேசி முடியுங்கள்.

**திரு. சு. குணசேகரன்:** குளம், குட்டைகளில் மண் அள்ளுகிற ஒரு பிரச்சினை கடுமையான பாதிப்பை ஏற்படுத்தியிருக்கிறது. காரணம், வீடு கட்டுபவர்கள்கூட தங்களுடைய சொந்த பட்டா இடத்திலிருந்து மண்ணை அள்ளி, வீட்டிற்கான அந்த இடத்தை நிரப்புவதற்கும் அல்லது சொந்தமாக ஏதாவது பண்ணை குட்டைகள் போன்றவற்றைக் கட்டி, அந்த மண்ணை எடுத்து அடுத்த வயலில் நிரப்புவதற்கும்கூட இன்றைக்கு அனுமதி பெற வேண்டிய ஒரு மோசமான நிலை நீடிக்கிறது. இல்லை என்று சொன்னால், திடீர் என்று காவல் துறையினர் நடவடிக்கை எடுத்து, பல இலட்சம் ரூபாய் அபராதம் விதிக்கிறார்கள். இந்தப் போக்கால் இன்றைக்கு. . .



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் விவசாயத்திற்குத் தேவையான மண்ணை எடுப்பதற்கு அனுமதி பெற வேண்டும் என்று இங்கே ஒரு கருத்தைச் சொல்லி இருக்கிறார்கள். அவ்வாறு அனுமதி பெற வேண்டியதில்லை. விவசாயிகள் என்றால் எந்த அனுமதியையும் பெற வேண்டியதில்லை என்பதை தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன், உரையை முடியுங்கள்.

**திரு. சு. குணசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவல் துறையினர் இன்றும் நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். அதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கண்காணிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொன்று, சொந்த பட்டா இடங்களிலே பண்ணைக் குட்டை வெட்டுகிற நேரத்தில், அவர்கள் அந்தக் குளங்களை நீராதாரத்திற்காக வெட்டுகிற நேரத்தில் அந்த மண்ணை அப்புறப்படுத்துவதற்கும், இன்றைக்கு காவல் துறையினர் தடையாக இருக்கிறார்கள் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு செல்ல விரும்புகிறேன்.

அதேபோல, ஆதி திராவிடர்களுக்கு வேலைவாய்ப்புக்கு வயது வரம்பு இப்பொழுது 40 என்று சட்டப்படி இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உரையை முடியுங்கள்.

**திரு. சு. குணசேகரன்:** ஆனால், இன்றைக்கு பல துறைகளில் 35 வயதாகக் குறைக்கப்பட்டு . . .

பிற்பகல் 1–55

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகின்றபொழுது,

சொந்த பட்டா நிலங்களிலிருந்து மண் எடுப்பதற்குகூட காவல் துறை தடையாக இருக்கிறது என்று சொன்னார்கள். காவல் துறை தடையாக இல்லை. உச்ச நீதிமன்றம் சுற்றுப்புற சுகாதாரத் துறையினுடைய அனுமதியைப் பெற்றுதான் மண் எடுக்க வேண்டுமென்று ஆணையிட்டிருக்கின்றது. அந்த ஆணை, மத்திய அரசுக்குச் சென்று, மத்திய அரசு மாநில அரசுகளுக்கு அனுப்பி, அதைக் கடைப்பிடிக்க வேண்டுமென்று ஆணையிட்டிருக்கின்றார்கள். அதன் வாயிலாகத்தான் சுற்றுப்புற சுகாதாரத் துறைக்கு அதிகாரிகளை அனுப்பி, அங்கு அனுமதியை வாங்க வேண்டுமென்று ஆணையிட்டிருக்கின்றார்கள். அந்த வகையில்தான், ஆணை பெற்றவர்கள் எல்லாம் இப்போது மண் எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆணையில்லாமல் மண் எடுப்பவர்களைத்தான் தடுத்து இருப்பார்களேயொழிய, அதுவும்கூட சட்டத்திற்குட்பட்டு எடுக்கிறவர்கள் யாருக்கும் தடையில்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மண் அள்ளத் தடை இருக்கிறது என்று திரும்பத் திரும்ப சொல்லிக் கொண்டு இருக்கிறார்கள். உண்மையில், மாநில அரசினால், மாண்புமிகு அம்மாவினுடைய அரசு யாருக்கும் மண் அள்ளத் தடை விதிக்கவில்லை என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும். உச்ச நீதிமன்றத்தின் ஆணையினால்தான் மண் அள்ளத் தடை விதிக்கப்பட்டிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன் சீக்கிரம் நன்றி சொல்லி உரையை முடித்துவிடுங்கள்.

**திரு. சு. குணசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதி திராவிடர்களுக்கு வேலை வாய்ப்பிற்கான வயது வரம்பு 40 என்று சட்டம் இருக்கிறது. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. துரைக்கண்ணு அவர்கள். (குறுக்கீடு) திரு. சு. குணசேகரன், புதிய சப்ஜெக்ட்டுக்குள் போகாதீர்கள். நன்றி சொல்லி உரையை முடித்துவிடுங்கள். அவையை எப்போது முடிப்பது? (குறுக்கீடு) இல்லை, உரையை சீக்கிரம் முடித்து விடுங்கள்.

**திரு. சு. குணசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சீக்கிரம் உரையை முடித்து விடுகிறேன். ஆதி திராவிட மக்களுக்கு வேலைவாய்ப்பிற்கான வயது வரம்பு 40 என்பது



சட்டப்பூர்வமானதாகும். ஆனால், தமிழக அரசு இப்போது வருவாய்த் துறை மற்றும் பல இடங்களில் பணி நியமனத்திற்காக 35 வயது என்று குறைத்து ஆணை பிறப்பித்ததால் பல நபர்களுக்கு வேலைவாய்ப்பில் இழப்பு ஏற்பட்டிருக்கிறது. அதை உடனடியாக நிவர்த்திசெய்து, 40 வயது வரையில் உள்ளவர்களுக்கான வேலைவாய்ப்பை உறுதிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இன்றைக்கு இலவச வேட்டி, சேலைகள் 50 முதல் 60 விழுக்காடு வரைதான் தமிழகம் முழுவதும் கொடுக்கப்பட்டிருக்கின்றன. பல இடங்களில் அவற்றை விநியோகிக்க முடியாததால், கிராம நிருவாக அலுவலரின் அலுவலகத்தில் தேங்கிக் கிடக்கின்றன. அதனால் பல பிரச்சினைகள் ஏற்படுகின்றன. உடனடியாக முழு அளவில் இலவச வேட்டி, சேலைகளை எல்லோருக்கும் விநியோகம் செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. துரைக்கண்ணு அவர்கள்.

**திரு. இரா. துரைக்கண்ணு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வணக்கம். தமிழகத்தின் காவல் தெய்வமே! வாழும் வள்ளலே! எங்கள் குல தெய்வமே! (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன், சீக்கிரம் உங்கள் உரையை நன்றி சொல்லி முடித்துவிடுங்கள்.

**திரு. சு. குணசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உங்களுக்கும், எனக்கும், எல்லா சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் சேர்த்து ஒரே ஒரு கோரிக்கை, இந்த நிதிநிலை அறிக்கையில் சட்டமன்ற உறுப்பினர்களுக்கான தொகுதி மேம்பாட்டு நிதி என்பது 2 கோடி ரூபாய் என்று மீண்டும் அறிவித்து இருக்கிறார்கள். கண்டிப்பாக இன்றைக்கு சட்டமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் தொகுதி மேம்பாட்டு நிதி என்பது, உருப்படியான பணிகளுக்குப் பயன்படுத்தப்படுகிறது. எனவே, இன்றைக்கு ஏற்பட்டுள்ள விலைவாசி உயர்வைக் கணக்கில் கொண்டு, மாண்புமிகு நிதி அமைச்சர், அவர்கள் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு

சென்று, இந்த ஆண்டு அதை 4 கோடி ரூபாயாக உயர்த்தித் தர வேண்டுமென்று உங்களை அன்போடு, என் சார்பில், உங்கள் சார்பில், எல்லோர் சார்பிலும் நான் அந்தக் கோரிக்கையை முன் வைக்க விரும்புகிறேன். எனவே, நான்கு கோடி ரூபாயாக உயர்த்தித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. துரைக்கண்ணு, ஐந்து நிமிடத்தில் உங்கள் உரையை முடித்துவிடுங்கள்.

**திரு. இரா. துரைக்கண்ணு:** 20 நிமிடம் வேண்டாம், ஒரு பத்து நிமிடங்களாவது கொடுங்கள். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு வணக்கம். தமிழகத்தின் காவல் தெய்வமே! வாழும் வள்ளலே, எங்கள் குல தெய்வமே! ஏழையெளிய மக்களின் நம்பிக்கை நட்சத்திரமே! காவேரி நடுவர்மன்ற உரிமை பெற பல நாட்கள் உண்ணா நோன்பு இருந்து, சுமார் 22 ஆண்டுக்காலம் போராடி, நீதியின் துணையால், நியாயத்தை மீட்டு, சட்டத்தின் துணையால், சரித்திரம் படைத்து, காவேரி நடுவர் மன்ற இறுதித் தீர்ப்பின் ஆணையை மத்திய அரசை வெளியிடச் செய்து, தமிழகத்தின் காவிரி டெல்டா விவசாயிகளுக்கு மட்டுமல்லாமல் மனித குலம் வாழ்வதற்கு அடிப்படையாக, தமிழகத்திற்கு உயிர் நீர் கிடைத்திட இரவு, பகல் பாராமல் போராடி வெற்றி கொண்ட வீராங்கனையே! தமிழகத்தின் தவப்பயனே! இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதங்களில் பல்லாயிரம் கோடி நன்றி மலர்களை காணிக்கையாக்கி வணங்குகின்றேன். வாழ்த்துகிறேன். வாழ்த்த வயதில்லை. தகுதியில்லை.

இறைவா! எங்கள் குல தெய்வத்தை வையகம் உள்ளவரை வாழ்வதற்கு வாழ அருள இறைவனை கையேந்துகிறேன். எங்கள் குல தெய்வத்தை மீண்டும் வணங்குகின்றேன். எங்கேயோ குக்கிராமத்தில் சாதாரண ஏழை விவசாய குடும்பத்தில் பிறந்த இந்த உண்மைத் தொண்டனுக்கு இரண்டாம் முறையாக பாபநாசம் சட்டமன்றத் தொகுதியில் போட்டியிட வாய்ப்புத் தந்து, தேர்தலில் வெற்றிப் பெறச் செய்த மாண்புமிகு அம்மா அவர்களுக்கு நான் மட்டும் அல்ல, என் குலமும், என் சந்ததியினரும் என்றென்றும் நன்றிக் கடன் பட்டவர்களாக இருப்போம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன் அம்மா!



நெற்களஞ்சியமாக விளங்கி வந்த காவேரி டெல்டா, பஞ்சம் மிகுந்த பூமியாக மாறி விடுமோ என்ற அச்சத்தில் இருந்த மக்களின் கவலையைப் போக்கி, வறண்டு போய் இருந்த காவேரியை மீட்டெடுத்து, பால் வார்த்திட்ட காவேரித் தாயே! காவல் தெய்வமே! பொன்னியின் செல்வியே! புரட்சித் தலைவி அம்மா! தமிழக மக்களின் சார்பில் குறிப்பாக காவேரி டெல்டா பாசனப் பகுதியைச் சேர்ந்த தஞ்சை மாவட்ட மக்களின் சார்பில் நன்றி மலர்களைக் காணிக்கையாக்கி, வணங்குகின்றேன் அம்மா! காவேரி பிரச்சினையில் வரலாறு படைத்திட்ட உங்களுக்குத் தஞ்சை காவேரி டெல்டா மக்கள் சார்பில் நடந்த நன்றி தெரிவிக்கும் கூட்டத்தில், பல இலட்சம் மக்கள் பங்கேற்று உங்கள் திருவுருவம் கண்டு, மகிழ்ந்தார்கள். அதுமட்டுமல்லாமல் ஒவ்வொருவர் அடிவயிற்றிலிருந்தும், நன்றியுணர்வோடும், அம்மா வாழ்க! அம்மா வாழ்க! காவேரியைப் பெற்றுத் தந்த தெய்வமே வாழ்க! என்று கூறுவதைக் காண முடிந்தது.

பிற்பகல் 2–00

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன்னனுமதியுடன் பேரவையின் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. துரைக்கண்ணு அவர்கள்.

**திரு. இரா. துரைக்கண்ணு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவேரியைப் பெற்றுத் தந்த தெய்வம் வாழ்க என்றும், புரட்சித் தலைவி அம்மா ஒரு சகாப்தம், சமூக நீதி காத்த வீராங்கனை, ஒரு வீர வரலாற்று சாதனை படைத்த ஒரு வீரத் தலைவி, நினைத்ததை முடிக்கும் சரித்திர நாயகி, எதையும் எதிர்கொண்டு நின்று வெற்றி கண்ட வீரத் திருமகள் அம்மா! அதையெல்லாம் விட நீங்கள் உலக அதிசயம், உலக வரலாற்றில் தெய்வத் திருவுருவம் தாங்கள். அம்மா தாங்கள் தஞ்சைத் தரணிக்கு வரும் இரண்டு நாளைக்கு முன்பு வறண்டு கிடந்த தஞ்சை மக்கள் தாகம் தீர்க்க வான்மழை கொட்டித் தீர்த்தது. அம்மா அவர்களின் பொற்பாதம் தஞ்சை மண்ணில் படும்போது பூமி குளிர்ந்தது. பல இலட்சம் மக்கள் மனம் மகிழ்ந்தது. தெய்வம் வீதி உலா வரும்போது வீட்டிற்கு தண்ணீர் தெளித்து, வாசலிலே பெருக்கி கோலமிட்டு தரிசனம் செய்வார்கள். அதுபோல, தெய்வீகப் பிறவியான புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வருவதையொட்டி வானம் மழைநீர் பொழிந்து வரவேற்கிறது என்று ஆனந்தக் கண்ணீர் மல்க, நமது மாண்புமிகு அமைச்சர் பெருமக்களும்,

விவசாயத் தலைவர்களும் நெஞ்சமெல்லாம் நெகிழ்ந்திடக் கூறினார்கள். அன்று திரண்டிருந்த மக்கள் வெள்ளம் கும்பமேளாவைவிட பன்மடங்கு அதிகம். கல்லணை கட்டிய கரிகால் சோழனுக்கு மணிமண்டபம் அமைத்ததற்கும், காவேரித் தாய்க்கு கோடானுகோடி நன்றிகளை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அம்மா, மக்களைத் தேடி அரசு என்று புதிய சகாப்தத்தை ஏற்படுத்தி, எதிலும் வரலாற்று சாதனை படைத்து வெற்றி கண்டு, இன்று 2013–2014 ஆம் ஆண்டின் நிதிநிலை அறிக்கையினை இந்த அவையில் சமர்ப்பித்தீர்கள். ஏழையெளிய மக்கள், தாய்மார்கள், மாணவர்கள், விவசாயிகள், வியாபாரப் பெருமக்கள், ஆதரவற்றோர், மாற்றுத் திறனாளிகள், வேலைவாய்ப்பற்றோர் என தமிழகத்தைச் சார்ந்த அனைத்து பிரிவினரும் இந்த நிதிநிலை அறிக்கையினால் பயன் அடைந்திருக்கிறார்கள். தாங்கள் சீரிய சிந்தனையோடு, உயரிய நோக்கத்தோடு, நாட்டையே தன் உயிராகக் கருதி, உண்ணாமல், உறங்காமல் எப்போதும் நாட்டையும், நாட்டு மக்களையும் சிந்தித்துத் தயாரித்த இந்த நிதிநிலை அறிக்கையின் ஒவ்வொரு வரியும் பொன்னான வரவேற்பைப் பெறும். அம்மா, தாங்கள் நாட்டைத் தங்கள் நாடாகவும், மக்களைத் தன் மக்களாகவும் எண்ணி உழைத்திருக்கிறீர்கள். ஆனால், இதற்கு முன்பு ஆண்டவர்கள், ஆண்டு முடிந்து போனவர்கள் தன் வீட்டையும், தன் குடும்பத்திலிருந்த மனைவி, மகன், மகள், பேரன், பேத்தி இவர்களுக்காகத்தான் ஆட்சிபுரிந்தார்களே தவிர, நாட்டைப் பற்றி கவலைப்படவில்லை. (குறுக்கீடுகள்) அன்றைக்கு தமிழ் மக்களை, தொப்புள் கொடி உறவுகளை கொத்துகொத்தாக, குவியல் குவியலாக கொன்று குவித்த கொடியவன் ராஜபக்ஷேவிற்கு பட்டுக் கம்பளம் விரித்து வரவேற்பு நடத்தி கூட்டணி ஆட்சி நடத்தியவர்கள், குழு குழுவாக கொழும்பு சென்று பரிசுப் பொருட்கள் வாங்கிவந்து (குறுக்கீடுகள்) ** இன்று மக்களை ஏமாற்ற திசை திருப்ப டெசோ மாநாடு, கூட்டணி அரசிலிருந்து விலகுகிறோம் (குறுக்கீடுகள்) என்று நாடகமாடுகின்றார்கள். புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் அன்றே பாடி வைத்துள்ளார்கள். . .

*(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் எழுந்து நின்றனர்.)*

---

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. துரைக்கண்ணு அவர்கள் வேறு சப்ஜெக்ட்டுக்குப் போய்விட்டார். உட்காருங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. துரைக்கண்ணு, நீங்கள் பேசுங்கள்.

**திரு. இரா. துரைக்கண்ணு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் அன்றே பாடியிருக்கிறார்கள்.

"எத்தனை காலம்தான் ஏமாற்றுவார் இந்த நாட்டிலே
(மேசையைத் தட்டும் ஒலி)
இன்னும் எத்தனை காலம்தான் ஏமாற்றுவார் இந்த நாட்டிலே
இன்னும் எத்தனை காலம்தான் ஏமாற்றுவார் இந்த நாட்டிலே,
சொந்த நாட்டிலே, நம் நாட்டிலே,
சத்தியம் தவறாத உத்தமர்போலவே நடிக்கிறார்
(மேசையைத் தட்டும் ஒலி)
சத்தியம் தவறாத உத்தமர்போலவே நடிக்கிறார்
சமயம் பார்த்து பலவகையிலும் கொள்ளை அடிக்கிறார்
பக்தனைப் போலவே பகல் வேஷம் காட்டி
பாமர மக்களை வலையினில் மாட்டி
இன்னும் எத்தனை காலம்தான் ஏமாற்றுவார் இந்த நாட்டிலே!"

என்ற பாடல் நினைவுக்கு வருகிறது. வானத்தில் பருந்து எதற்காக வட்டமிடுகிறது என்பதை அம்மா, தாங்கள் உண்மையாக அறிந்து (குறுக்கீடு) பாகிஸ்தான், சீனா ஊடுருவலாகட்டும், அன்னிய நாட்டு முதலீடாகட்டும், நாட்டில். . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பாட்டுதானே பாடுகிறார்? வேறு சப்ஜெக்ட்டுக்குப் போய்விட்டார், விடுங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. துரைக்கண்ணு, நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. அர. சக்கரபாணி அவர்கள்.

**திரு. அர. சக்கரபாணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இலங்கைத் தமிழர் பிரச்சினை பற்றி இங்கே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசினார்கள். **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

---

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எந்த ஆதாரமும் இல்லாமல் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே பேசக்கூடாது. (குறுக்கீடு) அப்படியெல்லாம் பேசவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அர. சக்கரபாணி அவர்கள், நீங்கள் பேசுவது அவைக் குறிப்பில் ஏறாது. (குறுக்கீடு) அப்படியெல்லாம் பேச வேண்டாம். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. துரைக்கண்ணு, நீங்கள் வேறு சப்ஜெக்ட் பற்றிப் பேசுங்கள்.

**திரு. இரா. துரைக்கண்ணு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாகிஸ்தான், சீனா ஊடுருவலாகட்டும், அன்னிய நாட்டு முதலீட்டால் நாடு சீரழிவு பற்றியும் முன்பே அறிந்து விழிப்புணர்வை ஏற்படுத்தி அவற்றை முறியடித்தவர் அம்மா அவர்கள். அதுமட்டுமல்ல, ராஜபக்ஷே ஒரு போர்க் குற்றவாளி, . . .

(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் எழுந்து நின்றனர்.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. துரைக்கண்ணு அவர்கள் வேறு சப்ஜெக்ட்டுக்குப் போய்விட்டார். (குறுக்கீடு) உட்காருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. துரைக்கண்ணு நீங்கள் பேசுங்கள்.

**திரு. இரா. துரைக்கண்ணு:** ராஜபக்ஷே ஒரு போர்க் குற்றவாளி, அந்நாட்டிற்கு பொருளாதாரத் தடை விதிக்க வேண்டும் என்று அன்றே கண்டன அறிக்கை வெளியிட்டவர் அம்மா அவர்கள். . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் வேறு சப்ஜெக்ட்டுக்குப் போய்விட்டார். (குறுக்கீடுகள்) நீங்கள் ஏதேதோ பேசுகிறீர்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். திரு. சக்கரபாணி, உட்காருங்கள். அனுமதி இல்லாமல் இவ்வாறு பேசாதீர்கள். உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. துரைக்கண்ணு நீங்கள் பேசுங்கள்.



பிற்பகல் 2—05

**திரு. இரா. துரைக்கண்ணு:** மத்தியில் காங்கிரஸ் கூட்டணி ஆட்சியில் இருந்தபோது, எதைப் பற்றியும் கவலைப்படாமல், 2ஜி ஸ்பெக்ட்ரம் ஊழலிலிருந்து தப்பிக்கவும், திகார் ஜெயிலிலிருந்த தன் மகளைப் பார்க்கவும்தான் நேரம் இருந்ததே தவிர, எல்லாம் முடிந்தபிறகு ஞானம் பிறந்தது. இதனைத் தமிழக மக்கள் ஒருபோதும் ஏற்க மாட்டார்கள். இனி ஏமாறமாட்டார்கள். சாப்பாட்டுப் பந்தியில் உட்கார்ந்து நன்றாக மூக்குப்பிடிக்க சாப்பிட்டுவிட்டு கடைசியில் எழுந்திருக்கும்போது ஊறுகாய் வைக்கவில்லை, நான் சாப்பிடமாட்டேன் என்று சொன்னதுபோல் உள்ளது தி.மு.க. வினரின் இந்தச் செயல். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சக்கரபாணி, உட்காருங்கள். பிறகு பார்க்கலாம். பேசச் சொன்னால் தேவையில்லாமல் ஏதேதோ பேசுகிறீர்கள் (குறுக்கீடுகள்) தேவையில்லாமல் குறுக்கிட்டால் எப்படி?

**திரு. இரா. துரைக்கண்ணு:** உண்மையிலேயே ஒன்று சொல்லவேண்டும் என்று சொன்னால், அம்மா என்றைக்குமே கருணை மனம் கொண்டவர்கள். தெய்வத்தாய். சும்மா கிடந்தவர்களுக்கெல்லாம் அங்கீகாரம் வாங்கித்தந்து அவர்களை அடையாளம் காட்டிய பிறகு, அம்மாவால் அங்கீகாரம் பெற்றவர்கள் எல்லாம், தன் நிலை மறந்து, தன் தகுதியை உணராமல் இன்றைக்கு நாங்கள்தான் ஆட்சியைத் தாங்கப்போகிறோம் என்று உலவிக்கொண்டு வருகிறார்கள். உள்ளதும் போச்சுடா நொள்ளக் கண்ணா என்ற நிலைக்குப் போகப்போகிறார்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. துரைக்கண்ணு பேசியதில் ஒரு objection சொல்லியிருக்கிறார். அவைக் குறிப்பினை வாங்கிப் பார்த்துவிட்டு அதுகுறித்து முடிவு எடுக்கிறேன். உட்காருங்கள்.

**திரு. இரா. துரைக்கண்ணு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம் நாட்டிலுள்ள மக்கள் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களைப் பாசத்தோடு, உள்ள உணர்வோடு பெற்ற தாயாக நினைத்து அம்மா, அம்மா என்று அழைக்கின்றார்கள்.

[திரு. இரா. துரைக்கண்ணு] [2013 மார்ச் 26

ஜெனீவா நாட்டிலுள்ள ஐ.நா. உறுப்பினர்களும் அன்புடனும், மரியாதையுடனும் அம்மா, அம்மா என்று கூறி அம்மா அவர்களைப்பற்றி பேசினார்கள் என்பதைக் கேட்கும்போது, நமது தமிழ்நாட்டிற்கு மட்டுமல்ல, இந்தியாவிற்கே பெருமை. இதய தெய்வம் அம்மா அவர்களின் திறமையால், உழைப்பால், நுண்ணறிவால், அறிவாற்றலால், ஆட்சியின் சிறப்பால், நாட்டு மக்களைத் தன் மக்கள்போல் பாவித்து காத்துவரும் காவல் தெய்வம், இந்திய அரசின் தலைமைப் பொறுப்பேற்று உலக அரங்கில் இதய தெய்வம் அம்மாவின் புகழ் கொடிகட்டிப் பறக்கும் நாள் விரைவில் வர உள்ளது. சீனப் போரின்போது போர்க்கால நிதியாக வைரம், பவளம், நவரத்தினம், ஆபரணங்கள் மற்றும் தனது சொந்த நிதியினை வெள்ளித் தட்டில் வைத்து பாரதப் பிரதமரிடம் வாரி வழங்கியவர் நம்முடைய புரட்சித் தலைவி அம்மா அவர்கள். இது எதைக் காட்டுகிறது என்று சொன்னால், தேசியப் பற்றையும், நாட்டுப் பற்றையும், தேசிய உணர்வையும் காட்டுகிறது. ஆனால், மத்தியில் கூட்டணி ஆட்சியில் இருந்த தி.மு.க.-வோ நாட்டையே கூறுபோட்டு விற்றுவருகின்ற 2ஜி ஸ்பெக்ட்ரம் போன்ற துரோகச் செயலைத்தான் செய்து வந்தது. தி.மு.க. என்றாலே ஊழல் என்றுதான் அர்த்தம். உலகளாவிய 2ஜி ஊழல் இந்திய நாட்டிற்கே பெருத்த அவமானத்தினை ஏற்படுத்தியது. (குறுக்கீடுகள்) இதனைப் போக்க இதய தெய்வம் அம்மா அவர்களைப் பாரதத்தின் காவலராக, உலக அரங்கில் இந்தியாவை வல்லரசாக்க, இந்திய நாட்டின் தலைமைப் பொறுப்பேற்க. . . (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) திரு. இரா. துரைக்கண்ணு, நிதிநிலை அறிக்கைமீது பேசுங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள், நீங்கள் உட்காருங்கள் நான் அவரை பட்ஜெட்மீது பேசச் சொல்கிறேன். (குறுக்கீடுகள்) பேசச் சொல்லிவிட்டேன். உட்காருங்கள். (குறுக்கீடுகள்) மாறி மாறிப் பேசக்கூடாது. (குறுக்கீடுகள்) நான் அவைக் குறிப்பினை வாங்கிப் பார்த்துவிட்டுச் சொல்கிறேன். உட்காருங்கள். அவைக் குறிப்பினை வாங்கிப் பார்த்துவிட்டு சொல்கிறேன் என்று சொன்னேன் அல்லவா? அவைக் குறிப்பை வாங்கிப் பார்க்கிறேன். உட்காருங்கள். (குறுக்கீடுகள்) அவைக் குறிப்பினை வாங்கிப் பார்த்துவிட்டு, அது objectionable–ஆக இருந்தால் நடவடிக்கை எடுக்கப்படும். (குறுக்கீடுகள்)



2013 மார்ச் 26]

**திரு. இரா. துரைக்கண்ணு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசின் மாற்றாந்தாய் போக்காலும், கர்நாடகம் நமக்குத் தர வேண்டிய நீரை தர மறுத்ததாலும், இயற்கை பொய்த்த காரணத்தினாலும், காவேரி டெல்டா விவசாயம் பாதிக்கப்பட்ட நிலையில், 'தாயாக நான் இருக்கிறேன்' என்று ஓடோடி வந்து, சென்னை தவிர அனைத்து மாவட்டங்களையும் வறட்சியால் பாதிக்கப்பட்ட மாவட்டமாக அறிவித்து. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள். (குறுக்கீடுகள்) நான்தான் அவ்வாறு இருந்தால் நீக்கி விடுகிறேன் என்று சொன்னேன் அல்லவா? வாங்கிப் படிக்க வேண்டும். அதை நான் இன்னும் பார்க்கவில்லை. (குறுக்கீடுகள்) வாங்கிப் பார்க்கிறேன்.

*****மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. துரைக்கண்ணு அவர்கள் நிதிநிலை அறிக்கையின்மீது தனது விவாதத்தைத் தொடரும்படி கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவைக் குறிப்பைப் பார்த்துவிட்டு நான் சொல்கிறேன் என்று சொன்னேன் அல்லவா? (குறுக்கீடுகள்) திரு. சக்கரபாணி, அவைக் குறிப்பினை வாங்கிப் பார்த்துவிட்டு நான் விளக்கம் சொல்கிறேன். (குறுக்கீடுகள்) இப்படிச் செய்தால் எப்படி சபையை நடத்துவது? (குறுக்கீடுகள்) நான் அவைக் குறிப்பை வாங்கிப் பார்த்துவிட்டுச் சொல்கிறேன். உட்காருங்கள்.

**திரு. இரா. துரைக்கண்ணு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நில வரியினை இரத்து செய்து, 50 சதவிகிதத்திற்கு மேல் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு ஏக்கர் ஒன்றுக்கு ரூ. 15,000/- நிவாரணமாகவும், விவசாயப் பயிர்க் காப்பீட்டுக் கட்டணத்தையும். . . (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அண்ணன் திரு. இராமகிருஷ்ணன் அவர்கள் சில வார்த்தைகளை இங்கே மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களிடம்

சொல்லியிருக்கிறார்கள். அந்த வார்த்தைகள் அவைக் குறிப்பில் இடம் பெற்றிருந்தால் அவற்றைத் தாங்கள் நீக்கலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவைக் குறிப்பை வாங்கிப் பார்த்துவிட்டு, நீங்கள் சொல்வதுபோல் இருந்தால் நீக்கப்படும். (குறுக்கீடுகள்) அதுமாதிரி இருந்தால் அது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படும். உட்காருங்கள். திரு. இரா. துரைக்கண்ணு, நிதிநிலை அறிக்கைமீது பேசி முடியுங்கள். வேறு சப்ஜெக்ட்டுக்குள் போகாதீர்கள்.

**திரு. இரா. துரைக்கண்ணு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிதிநிலை அறிக்கைமீதுதான் பேசுகிறேன். மரியாதைக்குரிய மாண்புமிகு உறுப்பினர் திரு. கம்பம் இராமகிருஷ்ணன் அவர்கள் சென்ற முறை சட்டமன்ற உறுப்பினராக இருந்தபோது எவ்வாறு பேசினார் என்பது அவருக்கே தெரியும். அவர் இப்போது மனசாட்சியை மறந்து பேசிக் கொண்டிருக்கிறார். அதற்குள் நான் நுழையவில்லை.

பிற்பகல் 2–10

இன்றைக்கு ஏக்கருக்கு ரூ.15,000/- நிவாரணமாகவும், பயிர் காப்பீட்டுக் கட்டணத்தை அரசே ஏற்றுக்கொள்ளும் என்றும் அம்மா அவர்கள் அறிவித்துள்ளார்கள். வேலை உறுதியளிப்பு திட்டத்தின்கீழ் வழங்கப்பட்டுவந்த 100 நாட்கள் வேலைவாய்ப்பை 150 நாட்களாக உயர்த்தியும், தினக்கூலியை ரூபாய் 132 இலிருந்து 148 ரூபாயாக உயர்த்தியும் அம்மா அவர்கள் ஆணையிட்டிருக்கிறார்கள். காவேரி டெல்டா பகுதியில் உள்ள பண்ணைக் குட்டைகளை மேம்படுத்தவும், கால்நடைகளின் தீவனத்திற்காக ரூபாய் 17.85 கோடியை மாண்புமிகு அம்மா அவர்கள் ஒதுக்கீடு செய்திருக்கிறார்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இப்படி நீங்கள் வார்த்தைக்கு வார்த்தை குறுக்கிட்டால் நான் எப்படி சபையை நடத்துவது? அவைக் குறிப்பைப் பார்த்துவிட்டுச் சொல்கிறேன் என்று நான் ஏற்கெனவே சொல்லியிருக்கிறேன். உட்காருங்கள்.

**திரு. இரா. துரைக்கண்ணு:** முதன்மைத் துறையான மின் உற்பத்தி, சாலை இணைப்புகள், குறிப்பாக, தென் மாவட்டங்களில் சமச்சீரான தொழில் வளர்ச்சியினை ஊக்குவிக்கக் கூடுதல் சிறப்புச்



சலுகைகள் அளித்தல், தரமான நகர்ப்புற கட்டமைப்புகளை ஏற்படுத்த அதிக நிதியொதுக்கீடு, வயதான ஆதரவற்றோர் ஆகியோருக்கான சமூகப் பாதுகாப்பை வலுப்படுத்தும் வகையில் கருவறையிலிருந்து கல்லறை வரையிலும் அனைத்துத் திட்டங்களையும் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அரசு நிறைவேற்றி வருகிறது. கல்வி, சுகாதாரம், ஊட்டச்சத்து போன்ற சமூக மேம்பாட்டு திட்டங்களுக்கான நிதியை அதிகப்படுத்தி புரட்சித் தலைவி அம்மா அவர்கள் . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. துரைக்கண்ணு, உங்களிடமுள்ள குறிப்பினைக் கொடுங்கள். நான் அவைக் குறிப்பில் ஏற்றிக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். நேரம் ஆகிவிட்டது. தொகுதிப் பிரச்சினைகளை அவைக் குறிப்பில் ஏற்றிக்கொள்கிறேன். உட்காருங்கள். (குறுக்கீடு)

**திரு. இரா. துரைக்கண்ணு:** அம்மா அவர்களுடைய அரசு இன்றைக்கு தமிழகத்தை வாழ வைத்துக் கொண்டிருக்கிறது. இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய சீரிய சிந்தனையில் உருவான இந்த வரவு–செலவுத் திட்டத்தில் புதிய வரி விதிப்போ, நடைமுறையில் உள்ள வரி விகிதத்தினை உயர்த்துவதோ தேவையில்லை, தமிழக மக்களின் நல்வாழ்வே குறிக்கோள் என மக்களுக்கான திட்டங்களை உள்ளடக்கிய இந்த பட்ஜெட்டை அளித்து வரலாறு படைத்திட்ட இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதங்களை வணங்கி, தமிழகத்தில் நல்லாட்சியை நடத்திக் கொண்டு வரும் இதய தெய்வம் தங்கத் தாரகை, காவேரித் தாய், பொன்னியின் செல்வி, புரட்சித் தலைவி அம்மா அவர்கள் நீண்ட ஆயுளையும், ஓங்கிய புகழையும், நீடித்த வெற்றியைப் பெற்றிடவும், இந்தியாவிலேயே முதல் மாநிலமாகத் தமிழகத்தை மாற்றுவதற்கு எடுக்கும் எல்லா முயற்சிகளிலும் ஈடற்ற வெற்றிகளைப் பெற வேண்டியும், எதிர்கால இந்தியாவை தலைமையேற்கும் மகா சக்தியாக விளங்கிடவும் எல்லாம் வல்ல இறைவனை வணங்கி, இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பொற்பாதங்களில் பல ஆயிரம் கோடி நன்றி பூக்களை காணிக்கையாக்கி வணங்குகின்றேன் தாயே, அம்மா! இப்போது எனது தொகுதி கோரிக்கைகளைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்கி எனது பாபநாசம் சட்டமன்றத் தொகுதி (தஞ்சாவூர் மாவட்டம்) வளர்ச்சிப் பணிகளை நிறைவேற்றித் தர பணிவுடன் வேண்டுகிறேன்.

பாபநாசம் தொகுதி, பாபநாசம் ஒன்றியத்தில், அண்டகுடிக்கும், சுந்தரபெருமாள் கோவிலுக்கும் இடையே காவேரி, அரசலாறு, குடமுருட்டியில் பாலம் கட்டித்தர வேண்டுகிறேன்.

கபிஸ்தலம் காவல் நிலையம் வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகின்றது. அதற்கு புதிய கட்டடம் கட்டித்தர வேண்டுகிறேன். பாபநாசம் பேரூராட்சியில் திருமண மண்டபம் கட்டித்தர வேண்டுகிறேன். பாபநாசம் பகுதியில் அரசு பாலிடெக்னிக் கல்லூரி ஒன்று அமைத்துத்தர வேண்டுகிறேன்.

பாபநாசம் தொகுதி, அம்மாபேட்டை ஒன்றியத்தில் களக்குடிக்கும் வெண்ணுகுடிக்கும் இடையில் உள்ள வெண்ணாற்றில் பாலம் அமைத்துத்தர வேண்டுகிறேன். அம்மாபேட்டை அரசு மருத்துவமனைக்குப் புதிய கட்டடங்கள் கட்டித்தர வேண்டுகிறேன்.

அம்மாபேட்டையில் இயங்கி வந்த பத்திரப் பதிவு அலுவலகத்தை மீண்டும் செயல்படுத்த வேண்டும். சாலியமங்கலம் ஆரம்ப சுகாதார நிலைய கட்டடம் மிகவும் பழுதடைந்துள்ளது. அதைப் புதியதாகக் கட்டித்தர வேண்டுகிறேன்.

கம்பர்நத்தம் அல்லது அக்கரை நெடுந்தெரு வடவாறு பாலம் மிகவும் பழுதடைந்துள்ளது. அதைப் புதுப்பித்துத்தர வேண்டுகிறேன்.

பாபநாசம் தொகுதி, கும்பகோணம் ஒன்றியம், சுவாமிமலையில் தீயணைப்பு நிலையம் ஏற்படுத்தித் தரவேண்டுகிறேன். சுவாமிமலை கோயில் அருகில் பேருந்து நிலையம் அமைத்துத்தர வேண்டுகிறேன்.

சுவாமிமலையில் வாடகைக் கட்டடத்தில் இயங்கி வரும் தொடக்கப் பள்ளிக்கு அரசு கட்டடங்கள் கட்டித்தர வேண்டுகிறேன். சுவாமிமலை அரசு மேல்நிலைப் பள்ளி இட நெருக்கடியில் உள்ளது. ஆண்கள், பெண்கள் என தனியாக பள்ளி அமைத்துத்தர வேண்டுகிறேன். (அல்லது) 6, 7, 8 ஆம் வகுப்புகள் தனியாக இயங்கவும் 9, 10, 11, 12 ஆம் வகுப்புகள் தனியாக



இரண்டு இடங்களில் செயல்பட அனுமதி வழங்கிட வேண்டுகிறேன்.

மேற்கண்ட வளர்ச்சிப் பணிகளை எனது பாபநாசம் சட்டமன்றத் தொகுதிக்கு நிறைவேற்றித்தர இதய தெய்வம் புரட்சித் தலைவி தமிழக முதல்வர் அம்மா அவர்களின் மலர்ப் பாதம் பணிந்து வணங்கி வணக்கத்துடன் வேண்டுகிறேன்.

எங்கம்மா மகராசி, எல்லாமே உன் முகராசி, மத்தியில் ஆளப் போவது புரட்சித் தலைவியின் பொன்னான பொற்கால ஆட்சி என்று கூறி, பேச வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன், நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. கலை அரசு அவர்கள்.

**திரு. ம. கலை அரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2013–2014 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையின் விவாதத்தில் பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பில் பேச வாய்ப்பளித்த தங்களுக்கும், சமூக நீதிக் காவலர் மருத்துவர் ஐயா அவர்களுக்கும், சின்ன ஐயா அவர்களுக்கும் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

காவேரி நடுவர் நீதிமன்றம் அமைக்கப்பட்டு 22 ஆண்டுகள் ஆன பின்னர் நடுவர் நீதிமன்றத்தின் இறுதி ஆணையினை இந்திய அரசிதழில் வெளியிட வேண்டிய கடமை மத்திய அரசுக்கு இருந்தும்கூட, அதைச் செய்யாமல் காலம் தாழ்த்தியதைக் கண்டித்து, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் உச்ச நீதிமன்றத்தை அணுகி, சட்டப் போராட்டத்தை நடத்தி, தமிழக விவசாயிகளின் உரிமையை நிலைநாட்டுகின்ற வகையில், நடுவர் மன்ற இறுதி ஆணையினை மத்திய அரசிதழில் வெளியிட வேண்டுமென்ற தீர்ப்பினை பெற்று மகத்தான சாதனை புரிந்த முதல்வர் அவர்களுக்கு பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பில் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம். (மேசையைத் தட்டும் ஒலி)

தமிழ்நாட்டில் கடுமையான வறட்சி. இதை உணர்ந்த மாண்புமிகு முதல்வர் அவர்கள் சென்னை நீங்கலாக மற்ற மாவட்டங்களை வறட்சி மாவட்டங்களாக அறிவித்திருப்பது

மகிழ்ச்சிக்குரியது. அதேநேரத்தில், நில வரியை இரத்து செய்வதாகவும் ஆணையிட்டிருக்கிறார்கள். நில வரியை இரத்து செய்வது மட்டும் போதாது. பயிரிழப்பு ஏற்பட்ட விவசாயிகளுக்கு 30,000 ரூபாய் நிவாரணம் வழங்க வேண்டுமென்று பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பில் கேட்டுக்கொள்கின்றேன்.

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதியளிப்புத் திட்டத்தின்கீழ் 181 கோடி ரூபாயில் 15,000 பண்ணைக் குட்டைகளை ஏற்படுத்தப் போவதாக நிதிநிலை அறிக்கையில் கூறியிருக்கிறீர்கள். மகிழ்ச்சி. ஆனால், அந்தப் பண்ணைக் குட்டைகளையெல்லாம் சாதாரண மக்களை வைத்துக்கொண்டு அமைப்பது என்பது இயலாத காரியம். காரணம், இயந்திரங்களை வைத்து அவற்றை அமைத்தால்தான் ஆழமாகவும், பாசனத்திற்கு ஏற்றதாகவும் இருக்குமென்ற காரணத்தால் அவற்றை இயந்திரம் கொண்டு வடிவமைப்பதற்கு அரசு ஆவன செய்யவேண்டும். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நல்ல ஆலோசனை வழங்கியிருக்கிறார்கள். ஆலோசனை வழங்குவதற்கு முன்பாக அந்தத் திட்டம் எப்படி செயல்படவேண்டும் என்ற ஒரு சட்ட திட்டம் வரையறுக்கப்பட்டு அரசு நிதி வழங்கிக்கொண்டிருக்கிறது. அதன் அடிப்படையிலே மகாத்மா காந்தி வேலை அளிப்பு உறுதித் திட்டத்தின் வாயிலாக மனித உழைப்பிற்குத்தான் முன்னுரிமை வழங்கப்படுகிறது. அதன் அடிப்படையிலேதான் இந்தத் திட்டமே தொடங்கப்பட்டிருக்கிறது. எனவே, அதில் இயந்திரத்தைப் பயன்படுத்த முடியாது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 2–15

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. கலை அரசு அவர்கள்.



**திரு. ம. கலை அரசு:** மக்களுக்காகத்தான் திட்டமே ஒழிய திட்டத்திற்காக மக்கள் அல்ல என்பதை இந்த நேரத்திலே நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். காரணம், மகாத்மா காந்தி. . . (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாம் என்ன கருத்தைச் சொல்லிக்கொண்டிருக்கிறோமோ அந்தக் கருத்திற்கு ஒத்து வருகின்ற சூழ்நிலையிலே அவருடைய கருத்தைச் சொல்லி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அதைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். காலையில்கூட மாண்புமிகு அமைச்சர் அவர்களும், மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்களும் சொன்னார்கள். அவர் சொல்லுகின்ற கருத்திற்கு அந்த எடுத்துக்காட்டு சரியாக இருந்தது. ஆனால், இப்போது நீங்கள் சொல்லுகின்ற கருத்து இதற்கு சரிவரவில்லை. தயவுசெய்து இதைத் தவிர்த்து, அடுத்த நிகழ்ச்சிக்குச் செல்ல வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. கலை அரசு அவர்கள். (குறுக்கீடு) திரு. க. பாலகிருஷ்ணன் இப்போது நேரமில்லை. இரண்டு பேர் எழுந்து நின்றால் எப்படி? ஆளாளுக்குக் கையைத் தூக்கிக்கொண்டு இருந்தால் எப்படி? உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. கலை அரசு அவர்கள். (குறுக்கீடு) சரி, மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாலகிருஷ்ணன் அவர்கள்.

***திரு. க. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பண்ணைக் குட்டைத் திட்டத்தை இயந்திரத்தின் மூலமாக நிறைவேற்றவேண்டுமென்று சொன்னார்கள். மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் தமிழகம் முழுவதும் வறட்சி பாதித்திருக்கின்ற காரணத்தினால் கிராமப்புறங்களில் வேலைவாய்ப்பு இல்லாமல் விவசாயத் தொழிலாளிகள், ஏழை விவசாயிகள் கடுமையாகப் பாதிக்கப்படுவார்கள் என்பதை உணர்ந்துதான் அவர்களுக்கு வேலைவாய்ப்பும் அளிக்க வேண்டும்; அதேநேரத்தில் அது சமூகத்திற்குப் பயன்பட வேண்டுமென்ற அடிப்படையில்தான்

இந்தத் திட்டமே அறிவிக்கப்பட்டிருக்கிறது. இயந்திரங்களைப் பயன்படுத்தினால் காண்ட்ராக்டர்கள் அல்லது மற்றவர்களுக்குத்தான் அது பயன்படுமே தவிர, ஏழையெளிய மக்களுக்குப் பயன்படாது. ஆகவே, ஏற்கெனவே அரசு அறிவித்திருக்கின்ற முறையிலே அந்தத் திட்டத்தைத் தொடர வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. கலை அரசு அவர்கள்.

**திரு. ம. கலை அரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் சொல்ல வந்தது ஊரக வேலைவாய்ப்புத் திட்டத்தில் வேலை செய்யக்கூடியவர்கள் தினமும் ஒரு மணிநேரம்தான் வேலை செய்கிறார்கள். மனசாட்சிப்படி பார்த்தால் அந்தப் பணி என்னுடைய தொகுதியிலேயும்கூட துத்திக்காடு ஊராட்சிக்குட்பட்ட ரங்காபுரத்தில் மலையில் இருந்து வரக்கூடிய கானாற்றில் தூர் வாருகிறார்கள். அதே கானாற்றில் மீண்டும் சாலையும் அமைக்கிறார்கள். இது எந்த வகையில் நியாயம் என்பதுதான் புரியவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தான் சொன்ன கருத்திற்கு வலு சேர்க்க வேண்டும் என்பதற்காக தயவுசெய்து பாதை மாறி சென்று விடக்கூடாது. ஏனென்று சொன்னால், தமிழகம் முழுவதும் வறட்சியால் பாதிக்கப்பட்டிருக்கிறது என்று மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், சென்னை நீங்கலாக 31 மாவட்டங்களையும் வறட்சி மாவட்டங்களாக அறிவித்து, அறிவித்ததன் பயனாகத்தான் 100 நாள் வேலைவாய்ப்புத் திட்டத்தை 150 நாட்களாக உயர்த்தி ஏழை விவசாயத் தொழிலாளர்களுக்கு வாழ்வாதாரம் கிடைப்பதற்காகத்தான் இந்தத் திட்டத்தை வேகப்படுத்தியிருக்கிறார்கள். இதை இங்கு எடுத்துச்சென்று, இதையும் வாரிவிட்டு மீண்டும் இப்படியே திரும்பி வருவார்கள் என்று சொல்வது உகந்ததாக இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். அதோடுமட்டுமல்லாமல், ஊரக வேலைவாய்ப்புத் திட்டத்தில் ஒரு நாள் ஊதியம் ரூ. 132/- என்று இருந்ததை, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தாயுள்ளத்தோடு ரூ.148/- ஆக உயர்த்திக் கொடுத்திருக்கிறார்கள் என்பதையும் மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. கலை அரசு அவர்கள்.

**திரு. ம. கலை அரசு:** கரும்புக்கு டன் ஒன்றுக்கு ரூபாய் மூவாயிரம் தரவேண்டுமென்றும், அதேபோல் நெல்லுக்கு குவிண்டால் ஒன்றுக்கு இரண்டாயிரம் ரூபாய் தரவேண்டுமென்றும் நான் கேட்டுக்கொள்கிறேன். இன்றைக்கு விவசாயத்திற்கு இடுபொருள், உரம், கூலி போன்ற இடர்ப்பாடுகளால் விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்படுகிறார்கள். எனவே, கரும்புக்கு வெட்டுக் கூலி, லாரி வாடகை போன்றவற்றை அரசே ஏற்க வேண்டுமென்று பாட்டாளி மக்கள் கட்சி சார்பில் வற்புறுத்துகின்றோம்.

இன்றைக்கு தமிழகத்தில் மிகப் பெரிய பிரச்சினையாக இருப்பது மதுவிலக்குப் பிரச்சினை. மதுவிலக்கை அமலில் வைத்துக்கொண்டு, அதில் சிறிய மாற்றத்தையும் செய்து, மதுவை விற்பது மிகவும் வேதனைக்குரிய செய்தியாக இருக்கிறது. மதுவினால் எத்தனை கோடி ரூபாய் வருமானம் வந்தாலும், அது தேவையில்லை என்கின்ற உணர்வு நம்முடைய மனதில் வரவேண்டும். அதிலும், இன்றைக்கு 13 வயதிலேயே மது அருந்த ஆரம்பிக்கின்றார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஆரம்பிக்கும்போதே நினைத்தேன். என்ன இன்னும் மதுவிலக்கைப் பற்றி பேசவில்லையே என்று. ஒவ்வொரு முறையும் மதுவிலக்கைப் பற்றி தவறாமல் பேசி வருகிறார். நாங்கள் உங்களுக்கு ஒவ்வொரு முறையும் பதில் சொல்லிக்கொண்டுதான் இருக்கின்றோம். மதுவிலக்கை அமல்படுத்தவேண்டும் என்பதில் மற்றவர்களைவிட மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா

அவர்களுக்கு அதிலே ஆழ்ந்த உடன்பாடு உண்டு. ஆனால், நடைமுறையில் அது சாத்தியமில்லை என்ற ஒரே காரணத்திற்காகவும், அந்த வருவாய் சமூக விரோதிகளின் கையிலே போய்விடக்கூடாது என்ற காரணத்திற்காகவும், அந்த வருவாய் அரசு கஜனாவிற்கே வரவேண்டுமென்ற நல்லெண்ணத்திலேயும்தான் அதைப் பயன்படுத்துகிறார்களே தவிர—மதுவிலக்குக் கொள்கை—மதுவை ஊக்கப்படுத்த வேண்டுமென்று எந்தவிதத்திலும் அம்மா அவர்கள் ஊக்கப்படுத்தவும் இல்லை.

*பிற்பகல் 2–20*

உதாரணத்திற்கு சொல்லவேண்டுமென்று சொன்னால், எல்லா மாநிலங்களிலும்—சுற்றியுள்ள பிற மாநிலங்களிலெல்லாம் மதுவிலக்கை அமல்படுத்தட்டும். பிறகு நமது மாநிலத்திலும் மதுவிலக்கை அமல்படுத்துவது எளிமை. ஆனால், நமது மாநிலம் மட்டும் மதுவிலக்கை அமல்படுத்தினால், மற்ற கள்ளச்சாராய வியாபாரிகளுக்கு, சமூக விரோதிகளுக்கு, தமிழ்நாடு ஒரு களமாக அமைந்துவிடும்; சந்தையாக அமைந்துவிடும் என்ற ஒரு காரணத்திற்காகவும், சமூக விரோதிகளை ஊக்கப்படுத்தக்கூடாது என்பதற்காகவும்தான் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதே சமயத்தில் அவர்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்துவதிலும் அரசு இன்றைக்கு பல்வேறு விளம்பரங்களை எல்லாம் செய்து வருகிறது. அந்த வகையிலே, மதுவிலக்கை அமல்படுத்த வேண்டுமென்ற கொள்கைகளைச் சொல்கின்ற நீங்கள், உங்களுடைய தலைவர் சொன்னால், உங்களுடைய தொண்டர்கள் எல்லாம் கட்டுப்படுவார்களா இல்லையா? (குறுக்கீடு) நான் கேட்பதற்கு மட்டும் பதில் சொல்லுங்கள். கட்டுப்படுவார்களா இல்லையா? (குறுக்கீடு) கட்டுப்படுவார்களா, இல்லையா என்பதை மட்டும் சொல்லுங்கள். (குறுக்கீடு) கட்டுப்படுவார்கள் அல்லவா? அப்படியென்றால், ஒரேயொரு உதாரணம் சொல்கிறேன். உங்களுடைய கட்சித் தொண்டர்களை முதலில் மதுவைத் தொட வேண்டாம் என்று அவர்களுக்கு கொஞ்சம் பயிற்சி கொடுங்கள். அவர்கள் மத்தியிலே ஒரு தாக்கத்தை ஏற்படுத்துங்கள்.

அடுத்தபடியாக சொல்கிறேன், நான் சொல்வதை தவறாக எடுத்துக்கொள்ளக்கூடாது. ஒரு நிலையைச் சொல்கிறேன். எது யதார்த்த நிலைமை இன்றைக்கு இருக்கிறது என்பதை நீங்கள் புரிந்துகொள்ள வேண்டும் என்பதற்காகச் சொல்கிறேன். நீங்கள்



ஆண்டுதோறும் மகாபலிபுரத்திலே 'சித்ரா பௌர்ணமி விழா' என்று ஒரு விழாவை நடத்துகிறீர்கள். சென்ற ஆண்டு அந்த விழா அந்த இடத்திலே—அந்த ஒருநாள் மட்டும் அங்கே மது விற்பனை 50 இலட்சம் ரூபாய் கூடுதலாக விற்றிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) அப்படியென்றால், நீங்கள் முதலில் நாட்டை திருத்துவதற்கு முன்னால், குறைந்தபட்சம் உங்கள் கட்சித் தொண்டர்களைத் திருத்துகின்ற முயற்சியிலாவது ஈடுபடும்படி கேட்டுக்கொள்கிறேன். அதன்மூலமாக இந்த மதுவிலக்குக் கொள்கைக்கு வலிமை சேர்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர்தானே பேசுகிறார். (குறுக்கீடுகள்) நேரமில்லை, உட்காருங்கள். (குறுக்கீடுகள்) திரு. கலை அரசு, பேசுங்கள்.

**திரு. ம. கலை அரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுவினால் வரக்கூடிய தீமை அதிகம் என்பதை மாண்புமிகு முதல்வர் அவர்கள் உணர்ந்திருக்கிறார்கள் என்பதற்காக நான் நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

மாண்புமிகு முதல்வர் அவர்கள் தேசிய வளர்ச்சி மன்றக் கூட்டத்திலே, தங்களுடைய கருத்தை ஆணித்தரமாகப் பதிவு செய்ய வேண்டுமென்று எண்ணுகின்றபோது, வாய்ப்பு மறுக்கின்றபோது, அவையை விட்டு வெளியேறினார்கள் என்கின்ற துணிச்சல் நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு இருக்கிறது. அப்படிப்பட்ட முதல்வரை பெற்றிருக்கின்ற நாம், மது வேண்டாம் என்பதை உறுதிப்படுத்த வேண்டும். காரணம், குஜராத் மாநிலத்திலே பார்ப்பீர்களேயானால், அங்கு சட்டம்–ஒழுங்கு சரியில்லையா? கள்ளச்சாராயம் காய்ச்சுபவர்களை ஒடுக்கவில்லையா? இவற்றையெல்லாம் நாம் தயவு செய்து கருத்தில் கொண்டு மக்களுக்குப் பிரச்சினைகளை ஏற்படுத்துகின்ற . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** இந்தியாவில் குஜராத் மாநிலத்தைத் தவிர, எந்தவொரு மாநிலத்திலும் மதுவிலக்கு அமல்படுத்தப்படவில்லை. அனைத்து மாநிலங்களிலும் இன்றைக்கு மதுவிலக்கு அமல்படுத்தப்படவில்லை. மாறாக, குஜராத்திலேகூட, அது மறு சிந்தனை ஏற்படுத்திக்கொண்டிருக்கிறது என்பதை

உங்களுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன். ஏனென்று சொன்னால் அங்கும் மது தாராளமாகத்தான் கிடைக்கிறது. சட்டப்படி அங்கே அந்தக் கொள்கை இருந்தாலும்கூட, குஜராத் மாநிலத்தைச் சேர்ந்த ஓர் அதிகாரிகூட, இங்கே எங்களிடம் சொன்னார். “இங்கு நமது மாநிலத்திலே வேண்டுமானால், மதுவிலக்கு தளர்த்தப்பட்டிருக்கின்ற இடத்திலே, consumers—அந்த பயனாளிகள் வேண்டுமென்று சொன்னால் கடைக்குப்போய் வாங்க வேண்டும். ஆனால், எங்கள் மாநிலத்திலே – குஜராத்திலே, போன் செய்தால், வீட்டுக்கு டோர் டெலிவரி கிடைக்கும்” என்று சொன்னார். அதுதான் மதுவிலக்கிலே இருக்கின்ற யதார்த்த நிலை என்பதை அந்த அதிகாரியே சுட்டிக்காட்டினார் என்பதைத் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

அதற்காக நான் அதை குறை சொல்ல விரும்பவில்லை. ஒன்றேயொன்றுதான். அடிக்கடி இதனை விளக்கமாக சொல்லியிருக்கிறோம். மத்திய அரசு வேண்டுமானால் எல்லா மாநிலங்களிலும் ஒட்டுமொத்தமாக, இந்தியா முழுவதும் மதுவிலக்கை அமல்படுத்திவிட்டு, அதனால் ஏற்படுகின்ற வருவாய் இழப்பை மத்திய அரசே மாநிலங்களுக்கு ஈடுசெய்துவிட்டு, ஒட்டுமொத்தமாக இந்தியா முழுவதும் தடை செய்தால் தவிர, ஒவ்வொரு மாநிலமும் தன்னிச்சையாக செய்ய முடியாது. பக்கத்திலே இருக்கின்ற பாண்டிச்சேரியிலே, “நாங்கள் மதுவிலக்கை அமல்படுத்துவோம்” என்று உங்கள் பாட்டாளி மக்கள் கட்சி சொல்லி, நீங்கள் தேர்தலிலே ஓட்டு வாங்கிவிட்டு வாருங்கள், பார்ப்போம். உங்கள் தலைவர் பக்கத்திலே இருக்கிறார். நீங்கள் அங்கே போய் சொல்லமாட்டீர்களே, ஏன்? அப்போது, நீங்கள், அந்த மதுவிலக்குக் கொள்கை சந்தர்ப்பவாதத்திற்குத் தகுந்தாற்போல் பயன்படுத்துகிறீர்களோ என்றுதான் நான் அச்சப்படுகிறேன்; இங்கே சந்தேகப்படுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. கலை அரசு, ஒரு நிமிடத்தில் உரையை முடியுங்கள். (குறுக்கீடுகள்) நேரமில்லை. இன்னொரு உறுப்பினர் பேச வேண்டும். திரு. கலை அரசு, ஒரு நிமிடத்தில் உரையை முடியுங்கள்.

**திரு. ம. கலை அரசு:** இன்றைக்கு மின்வெட்டுப் பிரச்சினை பெரிய பிரச்சினையாக தமிழ்நாட்டிலே இருக்கிறது. நாங்கள் கேட்கின்றபோது, இதையே திரும்பத் திரும்ப உறுப்பினர்கள்



கேட்கிறார்கள் என்கின்ற ஒரு பதிலை மாண்புமிகு அமைச்சர்கள் சொல்லிவிடக்கூடாது. இன்றைக்கு மாணவர்கள், விவசாயிகள், வியாபாரிகள், மருத்துவமனைகள் என்று பலதரப்பட்ட மக்களையும் பாதிக்கின்ற பிரச்சினை மின்வெட்டுப் பிரச்சினை. (குறுக்கீடுகள்) நீங்கள் மின்சாரத்தைக் கொடுத்துவிட்டால் நாங்கள் பேச வேண்டிய அவசியமே இருக்காதே?

*பிற்பகல் 2–25*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. கலை அரசு, உரையை சீக்கிரம் முடியுங்கள்.

**திரு. ம. கலை அரசு:** ஆகவே, இன்றைக்கு மக்களுடைய நலனில் அக்கறை கொண்டு இருக்கக்கூடிய அரசு என்று சொல்லக்கூடிய நீங்கள், தயவுசெய்து மக்கள் பிரச்சினையாக இருக்கக்கூடிய மின்சாரத்தை, 18 மணி நேரம் மின் வெட்டு இருக்கிறது என்னுடைய பகுதியிலே. மாணவர்கள் படிக்க முடியவில்லை, குழந்தைகள் தூங்க முடியவில்லை. மருத்துவமனைகளில் operation கூட சில நேரங்களில் செய்ய முடியாத சூழ்நிலை எல்லாம் உருவாகிக் கொண்டிருக்கிறது. எனவே, இனியும் காலம் தாழ்த்தாமல் திட்டம் போடுகிறீர்கள் என்று சொல்கிறீர்கள் மகிழ்ச்சி. தமிழகத்தை மின் மிகை மாநிலமாக அறிவிக்க இருக்கிறீர்கள் மகிழ்ச்சி. ஆனால், தற்போது ஏற்பட்டிருக்கக்கூடிய இந்தப் பிரச்சினைக்கு என்ன தீர்வு காண இருக்கிறீர்கள் என்பதை நாங்கள் தெரிந்துகொள்ள விரும்புகின்றோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எந்த ஒரு பொருளாக இருந்தாலும் பற்றாக்குறை இருந்தால் ஒரு லாரியில் ஏற்றிக்கொண்டு வரலாம், பர்ச்சேஸ் பண்ணி, சிலவற்றை Goods train–ல் ஏற்றிக்கொண்டு வரலாம்; கப்பலில் ஏற்றிக்கொண்டு வரலாம்; இருந்தாலும்கூட மின்சாரத்தை கம்பி வழியாகத்தான் கொண்டு வரவேண்டும். அதற்கு சில நடைமுறைகள் இருக்கின்றன. மின்சாரம் கொள்முதல் செய்வதிலும் சில பிரச்சினைகள் இருக்கின்றன. மின்சார வழித்தடங்களை இதுவரை இருந்த அரசுகள், மத்திய அரசும் ஏற்படுத்தவில்லை, மாநில அரசும் ஏற்படுத்தவில்லை. ஆனால்,

இப்பொழுது அந்த பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு வேண்டிய அவகாசம் தேவைப்படுகிறது. ஒவ்வொன்றும் இங்கே புயல் வேகத்தில் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இருந்தாலும் ஒவ்வொன்றிற்கும் அவகாசம் இருக்கிறது.

நீங்கள் ஒரு மாகன்றை நட்டுவிட்டு, அது பலன் தரவேண்டும் என்று சொன்னால்கூட செடியை நட்டுவிட்டு அடுத்ததாக ஒரு வாரத்தில் மாங்காய் கொடு என்றால் வருமா? ஒவ்வொன்றிற்கும் ஓர் அவகாசம் உண்டு. ஒரு திட்டத்தை நிறைவேற்ற வேண்டுமென்றால்கூட அதற்கு வேண்டிய குறைந்தபட்ச அவகாசம் வேண்டும். ஆனால், நாங்கள் பல தடவை சொன்ன விளக்கத்தின்படி இன்றைக்கும் அந்தப் பிரச்சினையை அம்மா அவர்களுடைய அரசு தட்டிக் கழிக்கவில்லை. அதை பொறுப்பேற்றுக்கொண்டு, சொன்னதை சொன்னபடி செய்கின்ற ஆற்றல் படைத்த தலைவியாக இருக்கின்ற புரட்சித் தலைவி அம்மா அவர்கள், இந்த மின்சாரப் பிரச்சினைக்கும் மிக விரைவிலே நிச்சயமாக நிரந்தரத் தீர்வு காண்பார். அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் நிச்சயமாக தமிழகம் மீண்டும் ஒளிமயமான தமிழகமாகத் திகழும் என்பதை மீண்டும் உறுதியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. கலை அரசு, உரையை சீக்கிரம் முடியுங்கள்.

**திரு. ம. கலை அரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 20th Asian Games தமிழ்நாட்டில் நடத்த விடமாட்டோம் என்று அறிவித்திருக்கக்கூடிய முதல்வர் அவர்களுக்கு எங்களுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம். இலங்கைப் பிரச்சினையில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் எடுக்கக்கூடிய அத்தனை நடவடிக்கைகளும் ஒட்டுமொத்தத் தமிழர்களின் நலனில் அக்கறை கொண்டதாக இருக்கின்ற காரணத்தினால் நாங்கள் அதை வரவேற்கின்றோம்.

அதேபோல் தமிழ்நாடு மாநில நெடுஞ்சாலை ஆணையம் அமைக்க இருப்பது மகிழ்ச்சிக்குரிய செய்தி. இன்றைக்கு தமிழ்நாட்டிலே இருக்கக்கூடிய நம்முடைய tolgate எல்லாம் பல்வேறு பிரச்சினைகளை உருவாக்கிக் கொண்டிருக்கின்றன. பல இடங்களில் மேம்பாலம் அமைக்க முடியாமல் மக்கள் மிகப் பெரிய அவதிக்கு ஆளாக்கப்பட்டு இருக்கிறார்கள். தமிழ்நாடு



நெடுஞ்சாலை ஆணையம் அமைக்க இருக்கக்கூடிய சாலைகளில் எங்கெல்லாம் மேம்பாலங்கள் தேவையோ அங்கெல்லாம் மேம்பாலங்கள் கட்டித் தருமாறும் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. கலை அரசு, உரையை சீக்கிரம் முடியுங்கள்.

**திரு. ம. கலை அரசு:** அதேநேரத்தில் சுங்க வரிகளை வசூலிக்கக்கூடாது என்கின்ற ஒரு எண்ணத்தையும் அரசு ஏற்படுத்திக்கொள்ள வேண்டுமென்று இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்கின்றேன்.

கல்விக்காக அரசு செலவழித்து இருக்கக்கூடிய பணம் எவ்வளவாக இருந்தாலும் அதை பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பில் வரவேற்கிறோம். காரணம் ஒரு சமுதாயத்தைச் சீர்திருத்தக்கூடிய ஒரேயொரு ஆயுதம் என்று சொன்னால் அது கல்வி மட்டும்தான். ஆகவே, கல்விக்கும், சுகாதாரத்திற்கும், விவசாயத்திற்கும் இந்த அரசு செய்திருக்கக்கூடிய. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. கலை அரசு, உரையை சீக்கிரம் முடியுங்கள்.

**திரு. ம. கலை அரசு:** இந்த அரசு செலவிடக்கூடிய தொகையை நாங்கள் வரவேற்கின்றோம். அப்பொழுதுதான் பொருளாதார ரீதியாகவும், எல்லா நிலைகளிலும் நாடு வளரும் என்பதற்காக இதை நாங்கள் வரவேற்கின்றோம்.

அதேநேரத்தில் பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பில் இன்றைக்கு கூட்டுறவுத் தேர்தல் நடைபெற இருக்கக்கூடிய ஒரு சூழ்நிலையில், கூட்டுறவுத் தேர்தல் நியாயமாகவும், நேர்மையாகவும், ஜனநாயக ரீதியாகவும் நடைபெறுவதற்கு அரசு வழிவகை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ஜாண் ஜேக்கப் அவர்கள்.

**திரு. எஸ். ஜாண் ஜேக்கப்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2013–2014 ஆம் ஆண்டிற்கான தமிழக நிதிநிலை அறிக்கையின்மீது நடைபெற்றுக்கொண்டிருக்கும் விவாதத்தில் கலந்துகொண்டு தமிழக காங்கிரஸ் கட்சியின் உள்ள

உணர்வுகளையும், தொகுதி மக்களின் எண்ணங்களையும், ஏக்கங்களையும் எடுத்துரைப்பதிலும், நிறைவேற்றித் தரக் கேட்பதிலும் பெருமகிழ்ச்சியடைகிறேன்.

*பிற்பகல் 2–30*

இந்த நிதிநிலை அறிக்கையிலே புதிய வரிகள் இல்லை என்கிறபோது எனக்கு பெருமகிழ்ச்சிதான். ஆனால், போதிய வளர்ச்சித் திட்டங்களையோ, தமிழக மக்கள் சுமந்து கொண்டிருக்கிறதுமான தமிழகத்தின் கடன்களைத் தீர்க்கவும், மாநிலம் தன்னிறைவு பெறுவதற்கு அரசு என்னென்ன திட்டங்கள் கையில் வைத்திருக்கிறது என்பதை எங்கேயும் காணவில்லை என்ற ஆதங்கத்தையும், வருத்தத்தையும் இங்கே பதிவு செய்ய விரும்புகிறேன். அதுபோல், தமிழகத்திற்கு மத்திய அரசு தரும் திட்டங்கள் பற்றியோ அல்லது தமிழகத்தில் செய்து வரும் மத்திய அரசின் மேம்பாட்டுப் பணிகளுக்கு நன்றி தெரிவித்து ஒரு வரிகூட இடம் பெறாதது பற்றி மக்களே சிந்திக்கின்றனர். குறிப்பாக, 2011–2012 ஆம் நிதியாண்டில் மத்திய பட்ஜெட்டில் தமிழகத்திற்குப் பல்வேறு துறைகளில் 24 ஆயிரம் கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டு பணிகள் நடந்துள்ளன. மேலும், 14 திட்டங்களுக்கு 18 ஆயிரம் கோடி ரூபாய் கொடுத்துள்ளது. இதுதவிர, நெய்வேலி மின் விரிவாக்கத் திட்டம், தூத்துக்குடி துறைமுக மேம்பாட்டுத் திட்டம் நான்கு வழிச்சாலை ஆகியவற்றுக்காக 85 ஆயிரம் கோடி ரூபாய் ஒதுக்கீடுச் செய்துள்ளது. அன்று மத்திய பட்ஜெட்டில் தூத்துக்குடி துறைமுக விரிவாக்கத் திட்டத்திற்காக 7,500 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இவற்றை நாம் ஓரிரு வார்த்தையிலாவது பாராட்டியிருக்கலாம்.

தமிழகத்தில் 2 இலட்சம் பேருக்கு வீட்டுமனைப் பட்டா வழங்கியிருப்பதாக கூறியிருக்கிறீர்கள். இதை நான் மனமாரப் பாராட்டுகிறேன். இதை அனைத்து மாவட்டங்களிலும் நடைமுறைப்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஆனால், அரசியல் தலையீடு இன்றி உண்மையான ஏழைகளுக்குக் கிடைப்பதாக இருந்தால் அதை மனதாரப் பாராட்டுவேன். பள்ளிக் கல்வி துறைக்கு 17 ஆயிரம் கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்திருப்பதாகக் கூறியிருப்பதை வரவேற்கிறேன். ஆனால், தமிழகத்தின் நலன் கருதியும், படித்து முடித்துவிட்டு வேலைக்காக காத்திருக்கும் ஆசிரியர்களின் நலன் கருதியும் முந்தைய



காலங்களில் நடைமுறையில் இருந்தது போன்று பதிவு மூப்பு அடிப்படையில் வேலை வழங்கலாம். ஒருவேளை, அரசு சொல்லலாம் மத்திய அரசு திட்டம்தானே என்று. மத்திய அரசின் திட்டங்கள் அனைத்தையும் நாம் முழுமையாகப் பின்பற்றிவிடவில்லை. ஏன், காங்கிரஸ் ஆளும் வட இந்திய மாநிலங்கள் சிலவற்றிலும், மாற்றுக் கட்சியினர் ஆளும் ஒடிசா, பீகார், மிசோரம் போன்ற மாநிலங்களிலும் ஆசிரியர் பயிற்சி பெறாதவர்களுக்குப் ஆசிரியர்களாகப் பணியாற்றுகின்றனர். தமிழகத்தில் ஆசிரியர் பயிற்சி பெற்றவர்களுக்கும் பதிவு மூப்பு அடிப்படையில் வேலைவாய்ப்பு வழங்க வேலையில்லா ஆசிரியர்கள் சார்பில் கேட்டுக்கொள்கிறேன். தற்போதைய நடைமுறை தமிழகத்தில் பின்பற்றப்பட்டால் அனைத்து அரசு உதவிபெறும் தனியார் பள்ளிகள் விரைவில் மூடுவிழா காண வேண்டிவரும் என்பதை வருத்தத்தோடுத் தெரிவிக்கிறேன். ஏழையெளிய மாணவர்களுக்கு கல்வி எட்டாக் கனியாகிவிடும் என்பதையும் அரசின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

அடுத்ததாக, என்னுடைய கிள்ளியூர் சட்டமன்றத் தொகுதி, தொலையாவட்டம் ஊரில் உள்ள அன்னை வேளாங்கண்ணி கலை அறிவியல் கல்லூரி அருகிலும், பஸ் நிறுத்தம் முன்பும் டாஸ்மாக் மதுக்கடை உள்ளது. அதனருகில் வழிபாட்டுத் தலம் உள்ளது. இக்கடையை அகற்ற வேண்டுமென்று கேட்டு கடந்த மாதம் 27–2–2013 அன்று அமைதியான முறையில் கல்லூரி மாணவர்கள் சாலை மறியல் போராட்டம் நடத்தினார்கள். மதுவுக்கு எதிராக மாணவர்கள் கிளர்ந்து எழுந்தது எனக்கு மிகுந்த மன மகிழ்வைத் தந்தது. அமைதியான முறையில் போராடிய இந்த மாணவர்கள், ஆதரவு அளித்த இக்கல்லூரி தாளாளர் அருட்தந்தை டாக்டர் சேவியர் பெனடிக்ட் அடிகளார், கல்லூரி முதல்வர், பேராசிரியர்கள் உட்பட இன்னும் சமூக ஆர்வலர்கள், மாணவர்கள் என 1,450 பேர்மீது போலீசார் வழக்குப் பதிவு செய்திருக்கிறார்கள். நல்லெண்ணம் கொண்ட மாண்புமிகு முதல்வர் அவர்கள் இதில் தனிக் கவனம் செலுத்தி இந்த மதுக் கடையை உடனடியாக மாற்ற வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அத்துடன் இந்த 1,450 பேர்மீதான வழக்குகளையும் வாபஸ் பெற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இந்த நல்ல நேரத்தில் மாண்புமிகு முதல்வர் அவர்களிடம் இதற்குச் சாதகமான மகிழ்ச்சிக்குரிய பதிலையும் எதிர்பார்க்கிறேன்.

[திரு. எஸ். ஜாண் ஜேக்கப்] [2013 மார்ச் 26

மேலும், டாஸ்மாக் கடையைக் கொண்டு வந்த மாண்புமிகு முதல்வர் அவர்கள் படிப்படியாக இதை மூட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்ததாக, தமிழகம் முழுமையும் பெரும் வறட்சியும், குடிநீர்த் தட்டுப்பாடும் ஏற்பட்டு வருகிறது என்பதையும் இதற்கு உடனடி தீர்வு காண நடவடிக்கை எடுக்க வேண்டுகிறேன். நீர்நிலைகள். . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போதுதான் இதைப் பற்றித் தெரிவித்தேன். டாஸ்மாக் கடையை படிப்படியாகக் குறைக்க வேண்டுமென்று சொல்கிறீர்கள். உங்களுடைய ஆலோசனையைப் பக்கத்தில் இருக்கின்ற கேரளாவில் சொல்லுங்கள், பக்கத்தில் இருக்கிற ஆந்திராவில் உங்கள் ஆட்சிதான், மகாராஷ்டிராவில் உங்களுடைய கூட்டணி ஆட்சிதான், ராஜஸ்தானிலும் உங்கள் ஆட்சிதான், டில்லியிலும் உங்கள் ஆட்சிதான். மேற்கண்ட மாநிலங்களில் ஏதாவது ஒரு மாநிலத்தில் முன்னுதாரணமாக மதுவிலக்கை அமல்படுத்திவிட்டு எங்களுக்கு ஆலோசனை சொல்லுங்கள் முதலில் உங்களைத் திருத்திக்கொண்டுவிட்டு அடுத்தவர்களுக்கு ஆலோசனை சொல்லுங்கள்.

**திரு. எஸ். ஜாண் ஜேக்கப்:** மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றி. நீர்நிலைகள் தண்ணீர் இன்றி வறண்டு காணப்படுகின்றன. நிலத்தடி நீர் மட்டம் வெகுவாகக் குறைந்து குடிநீர்த் தட்டுப்பாடு தலைவிரித்தாடுகிறது. இதற்கு முக்கிய காரணங்களில் ஒன்று ** இதுபற்றி கடந்த சட்டமன்றக் கூட்டத் தொடரிலேயே வலியுறுத்தியிருந்தேன். சட்டத் திட்டத்திற்கு உட்பட்டு ஏரி, குளம், குட்டைகளை இலவசமாக வண்டல் மண் எடுக்க அனுமதித்தாலே குளம் குட்டைகள் இலவசமாக ஆழப்படுத்தப்படும். மழைக் காலங்களில் மழைநீர் வீணாக கடலுக்குச் செல்வது தடுக்கப்படும். நிலத்தடி நீர் மட்டம் உயரும். இதனால் ஆயிரத்திற்கும் மேற்பட்ட

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன



2013 மார்ச் 26] [திரு. எஸ். ஜாண் ஜேக்கப்]

கோடிக்கணக்கான ரூபாய்கள் அரசுக்கு மிச்சப்படும். இலவசமாக திட்டமும் நிறைவேறும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

பிற்பகல் 2–35

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த முறை இதேபோல் பேசுகின்றபோது நான் சொன்னேன், போகிற போக்கில் அப்படியே பேசிவிட்டு போகலாம் என்று சட்டமன்ற உறுப்பினர் பேசுகிறார் என்று. மீண்டும் அதே கருத்தைச் சொல்லியிருக்கின்றார். ** என்னிடத்தில் புகாராகக் கொடுத்தால் நிச்சயமாக மாண்புமிகு அம்மாவினுடைய அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதைப் பலமுறை சொல்லியிருக்கின்றேன். நீங்கள் பொத்தாம் பொதுவாக ** என்று ஓர் ஆதாரத்தை கொடுத்துவிட்டு பேசுமாறு மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ். ஜாண் ஜேக்கப், ஆதாரத்தோடு பேசுங்கள். உங்கள் பேச்சை உடனே முடியுங்கள்.

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** அவர் சொன்ன அந்த வார்த்தையை அவைக் குறிப்பிலிருந்து நீக்குமாறு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களைக் கேட்டுக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் பேசிய அந்த வார்த்தைகள் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன. நீங்கள், ஆதாரத்தைக் கொடுத்துவிட்டுப் பேசினால் பரவாயில்லை.

**திரு. எஸ். ஜாண் ஜேக்கப்:** ஆதாரம் இருக்கிறது சார்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஆதாரம் கொடுத்துவிட்டுப் பேசுங்கள்.

**திரு. எஸ். ஜாண் ஜேக்கப்:** இலங்கைக் கடற்படையினரால் தமிழக மீனவர்கள் தாக்கப்படுவதும், கொல்லப்பட்டு வருவதும், நமது மீனவர்களின் மீன்பிடி உபகரணங்கள் படகுகள் சேதப்படுத்தப்பட்டு வருவதும், மீன்கள் திருடப்படுவதும் பெரும்

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

கவலைக்கும் வேதனைக்கும் உரியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்கள் பேச்சை முடியுங்கள்.

**திரு. எஸ். ஜாண் ஜேக்கப்:** இதுவரை தமிழ்நாட்டைச் சேர்ந்த 526 இந்திய பிரஜைகளை இலங்கை இராணுவத்தினர் படுகொலை செய்திருக்கிறார்கள். இக்கொலைகளுக்கு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள இந்திய அரசை வலியுறுத்துவோம். இத்தாலி வீரர்கள்மீது இந்திய அரசு எடுக்கின்ற நடவடிக்கைகளை தமிழ்நாட்டைச் சேர்ந்த நம் சகோதரர்களை கொலை செய்யும் இலங்கை இராணுவத்தினர்மீதும் நடவடிக்கை மேற்கொள்ள வலியுறுத்துவோம். தயவுசெய்து உங்கள் கட்சிதானே மத்தியில் ஆட்சி செய்கிறது என்று கூறி இந்த விவகாரத்திலிருந்து யாரும் நழுவ வேண்டாம். நான் சார்ந்திருக்கின்ற அரசியல் இயக்கத்தைத் தூற்றவும் வேண்டாம் என மிகுந்த பணிவோடு கேட்டுக்கொள்வதோடு, தமிழகத்தைச் சேர்ந்த நம் சகோதரர்கள் ஒருவருடைய உயிரையும் நாம் இனி இழக்கக்கூடாது. அவ்வாறு செய்தால் கேரளாவின் பாணியை நாம் பின்பற்றுவோம். இந்தத் துயரத்தில் தமிழக காங்கிரஸ் கட்சியும், காங்கிரஸ் சட்டமன்ற உறுப்பினர்களும் பங்கேற்போம் என்பதையும் கூறி கேரள மாநிலம், கொச்சி அருகே கடலில் மீன் பிடித்த இரு மீனவர்களை இத்தாலிய கப்பலிலிருந்த இரு கடற்படை வீரர்கள் சுட்டுக் கொன்றதாக, இத்தாலி நாட்டுக் கடற்படை வீரர்களை கைது செய்து, நம் நாட்டு சட்டப்படி தண்டனை வழங்க நடவடிக்கை மேற்கொண்டு வருவதுபோல, தமிழக மீனவர்கள் இனி தாக்கப்பட்டால், தாக்கியவர்களை கைது செய்து அதிகபட்ச தண்டனை வழங்க வேண்டுமென்று தீர்மானம் நிறைவேற்றி அதை மத்திய அரசுக்கு அனுப்புவோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ். ஜாண் ஜேக்கப், இன்னொரு சந்தர்ப்பத்தில் பேசலாம்.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (27–3–2013) புதன்கிழமை காலை 10–00 மணிக்குக் கூடும். வணக்கம்.

*பின்னர், பேரவை பிற்பகல் 2–37 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.*



## 6. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### (அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

— ஏதுமில்லை —

### (ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

57. அவை உரிமைக் குழுவின் அறிக்கை.